ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்

அருளிச்செய்த

பதினொரு
சில்லரை ரஹஸ்யங்கள்.

(இரண்டாம் பாகம்)

விரோதபரிஹாரம் முதலியனவும்
பரமபதஸோபாநமும்.

A. ஸ்ரீநிவாஸராகவன், M.A.,
மஹாராஜா காலேஜ்
புதுக்கோட்டை.

கும்பகோணம் கவர்ன்மெண்டு வக்கீல் உபயவே
ஸ்ரீநிவாஸய்யங்கார் குமாரத்தி ரங்கம்மாளின்
பூர்ண பொருளுதவியைக் கொண்டு
அச்சிடப்பட்டது.

1937

விலை ரூ. 1—8—0

PRINTED AT THE
Sri Janardana Printing Works, Ltd.,
Town High School Road,
KUMBAKONAM.

விஷய ஸூசிகை.

பக்கங்கள்.

முன்னுரை 3

பாடபேதங்கள் 7

முகவுரை 9

i ஸ்ரீதேசிகனின் 32 ரஹஸ்யங்கள் 10

ii. தத்வபதவீ முதலியவற்றின் விஷயஸங்க்ரஹம் 13

iii. ஸாரஸாரம் முதலியவற்றின் விஷயஸங்க்ரஹம் 15

iv. விரோதபரிஹாரம் முதலியவற்றின் விஷயஸங்க்ரஹம்.

1. விரோதபரிஹாரம். (இருபத்தேழாவது ரஹஸ்யம்) 249-324

i. மூலமந்த்ராதிகாரம் 249—305

ப்ரணவத்தில் அகாரார்த்தத்தில் வரும் சங்கைகளுக்குப் பரிஹாரங்கள் 250—251

சதுர்த்தியின் ...ல் 251—253

உகாரார்த்தத்தில் 254—255

மகாரார்த்தத்தில் 256—278

நமஸ்ஸில் 278—285

நாராயண பதத்...ில் 285—305

அதில் நாரபதம் 285—295

அயநபதம் 295—297

சதுர்த்யர்த்தம் 297—305

ii. த்வயாதிகாரம் 306—311

பூர்வகண்டம் 306—310

உத்தரகண்டம் 310, 311

iii. சரமச்லோகாதிகாரம் 312—317

பூர்வார்த்தம் 312—314

உத்தரார்த்தம் 314—317

iv. நிகமநாதிகாரம் 318—324

2. முநிவாஹநபோகம் (இருபத்தெட்டாவது ரஹஸ்யம்) 325—371

1. அமலனாதிபிரான் 327
2. உவந்த உள்ளத்தனாய் 337
3. மந்திபாய் வட 341
4. சதிரமாமதிள் சூழ் 345
5. பாரமாய பழவினை 350
6. துண்டவெண்பிறை 353
7. கையினார் சுரிசங்கு 357
8. பரியனாகி வந்த 360
9. ஆலமாமரத்தின் 363
10. கொண்டல் வண்ணனை 365

3. மதுரகவிஹ்ருதயம் (இருபத்தொன்பதாவது ரஹஸ்யம்) 372
(கிடைக்கவில்லை).

4. ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் (முப்பத்திரண்டாவது ரஹஸ்யம்) 373—392

ப்ரஹ்மாவின் தபஸ் 373—377
ப்ரஹ்மா ஹஸ்திகிரிக்கு வருதல் 378, 379
அவர் அஶ்வமேதம் செய்வதும் ஸரஸ்வதீ நதியாகப் பெருகிக் கலைத்தலும் 380—382
பகவான் ஆவிர்ப்பவித்தல் 383
தேவர்கள் செய்த ஸ்துதி 384—386
ப்ரஹ்மாவின் ஸ்துதி 387—389
ப்ரஹ்மா வரம் பெற்றது 390—392.

ஸ்ரீ:

முன்னுரை.

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனுடைய ஸாரஸாரம் முதலான பதினொரு ரஹஸ்யங்கள் வெளிவந்து இப்போது பல வருஷங்களாகி விட்டபடியால், அவைகள் துர்லபமாக இருப்பதாலும், பல பெரியோர்களும் இந்த கிரந்தத்தை அவச்யம் பிரசுரிக்க வேண்டும் என்று நியமித்தபடியாலும் இப்போது அவற்றைப் பதிப்பிக்கும் கைங்கர்யத்தில் அந்வயித்திருக்கிறேன். தவிரவும், நாலைந்து வருஷங்களுக்கு முன், ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ. உ. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமி ஸந்நிதியில் சில ஸஹ்ருத்துக்களோடு அடியேனும் மற்ற கிரந்தங்களைப்போல 'ஸம்பிரதாய பரிசுத்தி' முதலான பதினேழு ரஹஸ்யங்களையும், 'ஸார ஸாரம்' முதலான பதினொரு ரஹஸ்யங்களையும் காலக்ஷேபம் செய்தபோது, ஸ்ரீதேசிகனின் ரஹஸ்ய க்ரந்தங்களுக்கு ஒரு புதிய பதிப்பு மிகவும் அவச்யம் என்பது தோன்றிற்று. ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமியின் திருவுள்ளமும் அப்படியே இருந்தது. ஆகையால் காலக்ஷேப ஸமயத்திலேயே ஸ்ரீ ஸ்வாமி கையில் வைத்திருந்த பரிஷ்க்ருதமான ஓலையேட்டின் சுத்தமான பாடங்களை அனுஸரித்து ஸ்வாமி நியமித்தபடி அவ்வப்போதே இந்த ரஹஸ்யங்களையெல்லாம் சோதித்து வைத்தேன். அவற்றுள் ஸார ஸாரம் முதலான உத்தர ரஹஸ்யங்கள் பதினொன்றையும் பதிப்பிக்கும் பாக்கியம், ஆசார்யர்களுடைய அநுக்ரஹத்தால் இப்போது அடியேனுக்கு எதிர்பாராதபடி கிடைத்திருக்கிறது.

இந்த கிரந்தத்தின் பெருமையையும், இது துர்லபமாயிருப்பதையும் பார்த்து, கும்பகோணம் கவர்ன்மேண்டு வக்கீல் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் குமாரத்தியான ரங்கத்தம்மாள், இதை சுத்தமாகவும் நன்றாகவும் பதிப்பிக்கும்படி அடியேனிடம்சொல்லி அதற்கு வேண்டிய த்ரவ்யம் முழுவதும் தானே கொடுத்து ஸஹாயம் செய்திருக்கிறார்கள். இந்த சிரேஷ்டமான கிரந்தத்தை சோதித்துப் பதிப்பிப்பது என்கிற கைங்கர்யத்தை எனக்குக் கொடுத்து என்னை க்ருதார்த்தனாக்கினதற்கு நான் அவர்கள்

விஷயத்தில் மிகவும் க்ருதஜ்ஞதை யுள்ளவனுயிருக்கிறேன். அவ்விதமே அவர்களுடைய ஆசார்ய பக்தியையும் ஔதார்யத்தையும் கண்டு ஸ்ரீ வைஷ்ணவ உலகமே அவர்களைக் கொண்டாடுவதோடு, இப்படி நம் ஸம்பிரதாய க்ரந்தம் பரவும்படி செய்த பரமோபகாரத்திற்கு நன்றி பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறது. நம் நாட்டிலுள்ள உதாரர்களான தனிகர்கள் ஜ்ஞான விகாஸ ஹேதுவான பூர்வாசார்ய க்ரந்தங்களை, எல்லோரும் வாங்கி ஸேவிக்கும்பொருட்டு, ப்ரசுரம் செய்யும் விஷயத்தில் இவர்களின் வழியைப் பின்பற்றுவார்களானல், நம் ஸம்பிரதாயம் தழைத்து ஓங்கும் என்பதில் ஸந்தேஹமே யில்லை.

இந்தப் பதிப்பு வெளிவருவதில் ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி செய்தருளின ஸஹாயத்திற்கு அளவே இல்லை. இதில் சிலாகிக்கத்தகுந்த அம்சம் இருக்குமேயானல் அதற்குக் காரணம் ஸ்ரீ ஸ்வாமியே. பிழைகளெல்லாம் அடியேனுடைய அனுபவ மின்மையாலும், ஞானக் குறைவினுலும் ஏற்பட்டவையே. அச்சுக்குப் போவதற்கு முன் மாத்ருகைகளை யெல்லாம் சோதித்து, பல பிரமாணங்களுக்கு ஆகரங்கள் தேடிக் கொடுத்ததற்கு மேல், அச்சான பிறகும் ஒரு முறை சோதித்து, *பிறகு கிடைத்த உத்தமமான பாடங்களை எழுதி அனுப்பி இந்த கிரந்தத்தை அழகு பெறச் செய்து, அல்பமான ஞான சக்திகளையுடைய அடியேனுடைய பிரயத்னத்தை ஸபலமாகச் செய்ததற்கு ஸ்ரீ ஸ்வாமியின் திருமுன்பே ப்ரணமங்களோடு இந்த கிரந்தத்தை ஸமர்ப்பிப்பதுதவிர அநந்ய ப்ரயோஜநரான அவர்களுக்கு அடியேன் செய்யக்கூடியது வேறில்லை.

இதைப் பதிப்பிக்கும் விஷயத்தில் உபயோகிக்கப்பட்ட கிரந்தங்கள்:

1. திருக்கோட்டியூர் ஸ்ரீ உ. வே. ஸௌம்யநாராயணசார்ய ஸ்வாமி திருமாளிகையில் அவர்கள் காலக்ஷேபத்தில்

* அச்சானபிறகு ஸ்ரீ ஸ்வாமியிடமிருந்து கிடைத்த பாடங்கள் 'பாடபேதங்கள்' என்ற தலைப்பின் கீழ் இந்த முன்னுரைக்குப் பின் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

உபயோகிக்கும் தாளபத்ர ஸ்ரீகோசம் (ஓலையேடு). இதுவே ப்ரதானமாகக்கொண்டு மூலத்தில் பாடமாகப் போடப்பட்டிருக்கிறது.

பாடபேதங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை.

2. கண்டப்பாளையம் ஸ்ரீ அ. ரா. திருவேங்கடாச்சாரியாரால் 1911-௵ (விரோதிகிருது-௵) பாகவதவர்த்தனி முத்ராக்ஷர சாலையில் பதிப்பிக்கப்பட்டது. இதின் பாடங்கள் 'க' என்று கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

3. கொந்தமூர் ஸ்ரீமத் ராகவாசாரியாரால் பரிஷ்கரிக்கப்பட்டு, திருக்குடந்தை தட்டை கிருஷ்ணமாச்சாரியாரால் (சித்திரபானு-௵ தை-௴) (1900) சென்னை கலாநிதி அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. இது 'வெ' என்று காட்டப்பட்டுள்ளது.

4. தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்டது. இது 'ஶ' என்று காட்டப்பட்டுள்ளது.

இந்த மூன்றின் (2,3,4,) பாடங்கள் பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருக்கின்றன.

5. திருக்கோட்டியூர் ஸ்ரீ உ. வே. ஸ்ரீராம தேசிகாச்சார் ஸ்வாமி திருமாளிகையிலுள்ள தாளபத்ரகோசம். இதன் பாடங்கள் 'ஷ' என்று காட்டப்பட்டிருக்கிறன.

6. ஸ்ரீ பவுண்டரீகபுரம் ஸ்வாமியின் ஆச்ரமத்தில் இருந்த ஸ்ரீகோசம் ஒன்று அங்கங்கு ஒத்துப் பார்க்கப்பட்டிருக்கிறது.

7. திருக்கோட்டியூர் ஸ்ரீ ஸ்வாமியிடம் மாம்பாக்கத்திலிருக்கும் மற்றொரு ஏடு.

இவை தவிர தனியாக அச்சிடப்பட்ட ஸாரஸாரமும், அபயப்ரதானஸாரமும், சேட்லூர் ஸ்ரீஉ.வே. நரஸிம்மாச்சார் ஸ்வாமி வ்யாக்யானத்தோடு கூடிய ஹயக்ரீவ மாஹாத்ம்யமும், பரமபத ஸோபானமும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

மேற்கண்ட க்ரந்தங்களை யெல்லாம் கொடுத்து உதவின மஹான்களுக்கும், ஸுஹ்ருத்துக்களுக்கும் அடியேனுடைய க்ருதஜ்ஞதை என்றும் உரித்தானது.

இந்தப் பதிப்பில் எழுத்துக்கள் பெரியதாக இருப்பதாலும், மூலத்தில் உதாஹரிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு ஆகரங்களும், அங்கங்கு பாடபேதங்களும் குறிக்கப்பட்டிருப்பதாலும், கிரந்தம் பெரிதாகிவிட்டது. அதனால் ஸாரஸாரம் முதல், ஸார ஸங்கிரஹம் வரையிலுள்ள ரஹஸ்யங்களை முதற்பாகமாக வெளியிட்டு, விரோத பரிஹாரம், முநிவாஹநபோகம் இவற்றோடு ஹஸ்திகிரி மாஹாத்ம்யம், பரமபதஸோபானம் இரண்டையும் சேர்த்து இரண்டாம் பாகமாக வெளியிடுகிறேன். சில கடின பதங்களுக்கும் 'அமலனாதிபிரான்' பத்துப் பாசுரங்களுக்கும் தெரிந்த வரையில் அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறது.

ரஹஸ்யங்களில் முன்னும் பின்னுமுள்ள ஸ்ரீதேசிகனுடைய பாசுரங்களுக்கும் ஶ்லோகங்களுக்கும், உதாஹரிக்கப்பட்ட ப்ரமாணங்களுக்கும் அர்த்தம் எழுத முதலில் உத்தேசித்திருந்தது. தாமதத்திற்கும் விரிவுக்கும் அஞ்சி நிறுத்தப்பட்டது. இப்போது அவற்றை ஒரு அநுபந்தமாக வெளியிட நினைத்திருக்கிறேன். ஶரண்யன் மனோரதத்தை பூர்த்திசெய்து வைப்பாராக.

24—11—1937. ஶ்ரீவாஸராகவன்.

—:0:—

*பாடபேதங்கள்.

பக்கம்	வரி	
251	20	என்கிற ந்யாயமும் (?)†
253	18	இத்யாதிகள் கர்மபாரதந்த்ர்யம் (?)
254	8	ஸாத்வ்யகவ்ரான
260	6	ஹமவஜாவெஶமில்லாதார்க்கும் அகப்பட
262	14	ஸெஜகஂரான (?)
265	10	வாக்காணுநின்றேமே யென்னில்
265	1,2	ஷாவ்ருத்திக்தமவனுக்கு இவ்விஶேஷண
	12	பற்றுவார்க்கே அநந்யஜந
266	17	ஜ்ஞாநஸ்வரூபவஜத்ஜநிஜமும்
271	9,10	இவனுக்கு ஸ்வாமீ என்று பேர்பெற்ற விபரீத
284	15	இத்தாரதம்யம் விடாதொழிந்தாலும்
290	16	தன்னுடைய ஐஶ்வர்யவெஶித்வமடியாக
295	9	குற்றங்களுக்குப் ஸஹம்
297	20	ஸ்வதஜ்ஞாதாஸிஜாநிக்கு
298	9	அஶெஷவ்யெஷவா வதநஶெஹதஃ
		அஶேஷ்யஶேஷவை பதநஹேது
301	9	பரமபதத்திலுள்ள ஸாயுஜ்யத்திலே
315	21	ப்ராமாதிகத்திலும் நேரா நிற்கும்
317	14	கோலின ஸஹத்தைப்பற்ற (?)
325	3	ஜாதிதஜாகாதவி ஶொகித (?)
328	14	நிரபேக்ஷனவனுடைய
329	20	அவதாரணமும் இங்கே
331	10	ஈச்வரத்வச்சுணையாகிற
339	13	சரணாகதராகச் சக்ரவர்த்தித்திருமகனைய்
340	16	இவன் திருவடிகளைப்பற்றி என்னுலும்

* புஸ்தகம் அச்சான பிறகு திருக்கோட்டியூர் ஸ்ரீஸ்வாமிக்கு அனுப்பப்பட்டபோது, இந்தப் பாடங்களெல்லாம் அவர்களால் தேடி எடுத்து அனுப்பப்பட்டவை. இவை சிறந்தவைகளாக இருப்ப தால் இவற்றை மூலத்தில் கொண்டு, இப்போது மூலத்திலிருப்ப வற்றை பாடபேதங்களாகக் கொள்ளவேண்டும்.—ஸ்ரீ.

† (?) இப்படிப் பாடங்கள் கிடைக்குமானால் சிலாக்யம்—ஸ்ரீ.

344	18	க்ஷுத்ரத்வத்தையும்
353	7	உபாயத்வத்திற் குப் பிரதானமான
369	15	ஐசெ ஹ்ய நிக்ராஹா॰ணாஸ்வ
377	7	தன்மையிதென்றிடம்
384	21	திருபரிதியிசைந்த
392	16	ஸுஷிதஷிதி வொகடெயஸகவி:

முகவுரை.

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட இப் பூவுலகிலுள்ள ஸகல ஜீவராசிகளும் ஸுகத்தையே விரும்புகின்றன என்பது எல்லோருக்கும் ப்ரத்யக்ஷம். அவற்றுள், பகுத்தறிவைப் பெற்றிருப்பதால் உயர்ந்தவர்களாகக் கருதப்படும் மானிடர்கள் விரும்பும் விஷயங்களே புருஷார்த்தங்கள் என்றும், அவைதான் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று நால்வகை என்றும் பிரித்துப் பேசினார்கள். இந் நால் வகைப் பயனுள், முதல் மூன்றும் அல்பமாயும், அநித்யமாயும், அனுபவிக்கும்போதும் அதற்கு முன்னும் பின்னும் துக்கம் கலந்ததாயும் இருப்பதால் அவற்றை விட்டு, அந்தமில் பேரின்பமான மோக்ஷத்தைப் பெற முயற்சிப்பதே விவேக முள்ளார் செய்யத்தக்கது என்பது ஸகல சாஸ்திரங்களின் துணிபு.

'ஒருவன் இந்த மோக்ஷமாகிற பரம புருஷார்த்தத்தைப் பெறுவதற்குத் தான் வல்லதொரு உபாயத்தை அநுஷ்டிக்கவேண்டும். அதற்கு தத்வஜ்ஞானம் அவச்யம். அந்த ஞானத்தை, சாஸ்திரங்களை ஓதி உணர்ந்து அநுஷ்டித்துப் போருகிற ஆசார்யனிடமிருந்தே அடையவேண்டும்' என்று சாஸ்திரங்கள் நிர்ணயித்தன. அப்படி சாஸ்த்ர வச்யனான ஆசார்யன் உபதேசிக்கும் தத்வஹித புருஷார்த்தங்களைப் பற்றிய ஸாரமான விஷயமாவது: 'சரீரம், இந்திரியம் முதலான அசேதன வஸ்துவைக் காட்டிலும் வேறுபட்டவனாய், நித்யனாய் இருப்பானொரு ஆத்மா உண்டு; இச்சேதனாசேதநங்கள் இரண்டுமொழிய இவற்றுக்கு அந்தர்யாமியாய் சேஷியாயிருப்பானொரு பரமாத்மா உண்டு; இப்பரமாத்மாவை யொழிய இவ்வாத்மாவுக்குத் தானும் பிறரும் ரக்ஷகராக மாட்டார்' என்பதே தத்வம். உபயவிபூதி விசிஷ்டனான ஸ்ரீய: பதியை இடைவிடாமல் அனுபவித்து, அவனுக்குக் கைங்கர்யம் செய்வதே பரமபுருஷார்த்தம்; அப்புருஷார்த்தத்தைப் பெறு

வதற்கு ஸாதனம் ஸித்தோபாயம் எனப்படும் அந்த ஸ்ரீய: பதியே. அவனை வசீகரிப்பதற்கு பக்தி, ப்ரபத்தி என்று இரண்டு வழிகள். அதில் பக்தியோகத்தை அநுஷ்டிக்க முடியாதவர்களுக்கு 'அடியேனுக்கு இனியொரு ஸம்ஸாரதுக்கம் வராதபடி திருவடிகளைத் தந்து ரக்ஷிக்க வேண்டும்' என்று ஆசார்யன் ப்ரஸாதித்த குருபரம்பரா பூர்வக த்வயத்தாலே ஸ்ரீமானை நாராயணன் திருவடிகளைச் சரணமாகப்பற்றி, ஆத்மாத்மீயங்களையும் அவற்றைப்பற்ற வரும் சுமைகளையும் அங்கே ஸமர்ப்பிப்பது என்கிற ப்ரபத்தியே பரமஹிதம்' என்பதே.

ஸ்ரீ தேசிகனின் முப்பத்திரண்டு ரஹஸ்யங்கள்

இவ்வர்த்தங்களையே ஸ்ரீ தேசிகன் அந்தந்த அதிகாரிகளுடைய யோக்யதைக் கேற்ப சுருங்கவும் பரக்கவும் தன்னுடைய முப்பத்திரண்டு ரஹஸ்யங்களில் நிரூபித்துள்ளார். அவற்றுள் ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரம், பரமபதஸோபாநம் பரமதபங்கம் ஹஸ்திகிரி மாஹாத்ம்யம், என்ற நான்கைத் தவிர மற்ற இருபத்தெட்டும் சில்லரை ரஹஸ்யங்கள் எனக் கூறப்படுகின்றன.

ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம் முப்பத்திரண்டு அதிகாரங்களில் எல்லா விஷயங்களையும் ப்ரமாணம், ஸம்பிரதாயம், யுக்தி முதலியவற்றைக்கொண்டு விஸ்தாரமாக நிரூபிக்கிறது. மற்ற முப்பத்தொரு ரஹஸ்யங்களும் இவ்வர்த்தங்களில் ஒவ்வொன்றைப் பிரதானமாகக்கொண்டு ப்ரவிருத்தித்திருக்கின்றன. சில ரஹஸ்யங்கள் சிதசிதீச்வரரூபமான தத்வங்களைப்பற்றியும், சில ப்ரபத்தி என்னும் உபாயத்தைப் பற்றியும், வேறு சில ஈச்வரனுடைய ஸௌசீல்யாதி குணங்களைப்பற்றியும், மற்றும் சில ரஹஸ்யத்ரயம் என்னும் மூன்று மந்திரங்களின் அர்த்தங்களைப்பற்றியும் பேசுகின்றன. இவற்றின் விஷய ஸங்கிரஹம் இக்கிரந்தத்தின் முதற் பாகத்தின் முகவுரையில் சுருங்க உரைக்கப்பட்டிருக்கிறது.

இந்த முப்பத்தொரு ரஹஸ்யங்களையே அவற்றில் ப்ரதானமாகக் கூறப்படும் விஷயங்களையிட்டு நால்வகையாகப் பிரிக்கலாம்.

i மோக்ஷத்திற்கு அவச்யம் வேண்டிய தத்வஜ்ஞானத்தை உபதேசிக்கும் ஆசார்யனையும் அந்த ஆசார்ய பரம்பரையையும் பற்றியவை.

ii சேதனம், அசேதனம், பரமாத்மா என்றும் மூன்று தத்வங்களைப் பற்றியவை.

iii பரதத்வ—பரமஹித—பரமபுருஷார்த்த விஷயமான அர்த்தங்களைப் பிரகாசிப்பிக்கிற ரஹஸ்யத்ரயத்தின் பதவாக்ய யோஜனைகளைக் காட்டுமவை.

iv மிகவும் ஸூக்ஷ்மமான சாஸ்த்ரார்த்தங்களைக் கசடற அறிய சக்தியற்றவர்களாய் பரமாஸ்திகர்களாயிருப்பார்க்கு ஆசார்யோபதேசமே போதியதாயிருந்தாலும், ஞானவான்கள் தாங்கள் தெளிகைக்காகவும், குதர்க்கங்களாலே கலங்குவாரைத் தெளிவிக்கைக்காகவும் ஸமீசீநயுக்திகளோடே கேட்கவேண்டியிருப்பதால், அவ்வித அதிகாரிகளுக்குத் தக்கவாறு பரமத நிராஸபூர்வகமாக ஸ்வமதத்தை ஸ்தாபிக்கும் ரஹஸ்யங்கள்.

இவ்விதமான பிரிவு ஸ்ரீதேசிகனுக்கும் அபிமதம் என்பதை அவரே தன் ரஹஸ்யத்ரயஸாரத்தை இப்படிப் பிரித்திருப்பதிலிருந்து உணரலாம்.

i அர்த்தாநுசாஸநபாகம்—(1—22 அதிகாரங்கள்): தத்வ—ஹித—புருஷார்த்த விஷயமான மூன்று பேடிகைகள் கொண்டது.

ii ஸ்திரீகரணபாகம் (23—26): முன்பிரிவில் கூறப்பட்ட விஷயங்களில் வரும் சங்கைகளைப் பரிஹரித்து, ஸ்வஸித்தாந்தத்தை ஸ்தாபிப்பது.

iii பத—வாக்ய-யோஜநா பாகம் (27—29): மூலமந்த்ரம் த்வயம், சரமச்லோகம் என்னும் ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தங்களைப்பற்றியவை.

iv ஸம்பிரதாயப்ரக்ரியா பாகம்(30-32): சிஷ்யர்களுடைய லக்ஷணத்தையும், உபதேச ச்ரவண முறைகளையும் பற்றியவை.

(முதலில் இருக்கும் குருபரம்பராஸாராதிகாரமானது உபதேசிக்கும் ஆசார்யனுடைய ஞானம் வந்த வழியான (ஸர்வேச்வரன் முதலாக வருகிற) ஆசார்ய பரம்பரையைப் பற்றியது).

தத்வபதவீ முதலியவற்றின் விஷய ஸங்கிரஹம்.

இனி இம்முறையில் ரஹஸ்யங்களைப் பிரித்து எண்ணுவோம்.

1 முதலாவதான அர்த்தாநுஶாஸந பாகத்தில் கூறப்பட்டபடி தத்வஹித புருஷார்த்தங்களைப் பற்றியவை பதினேழு. அவையாவன: இருபத்தெட்டு சில்லறை ரஹஸ்யங்களில் முதல் பதினேழான அம்ருதரஞ்ஜநீ ரஹஸ்யங்களுள் தத்வபதவீ, தத்வநவநீதம், தத்வமாத்ருகை, தத்வஸந்தேஶம், தத்வரத்நாவளி, தத்வரத்நாவளி ப்ரதிபாத்ய ஸங்கிரஹம், தத்வத்ரய சுளகம்; இவை ஏழும் சேதனம், அசேதனம், ஈச்வரன் என்ற தத்வங்களையும் அவற்றின் பிரிவுகளையும் எண்ணுகிறது.

பதினொரு ரஹஸ்யங்களின் விஷய ஸங்க்ரஹம்.

அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்கள் என்ற அடுத்த பதினொரு ரஹஸ்யங்களில் அபயப்ரதாநஸாரம், தத்வசிகாமணி, ரஹஸ்ய சிகாமணி, அஞ்ஜலிவைபவம், ப்ரதாநஶதகம், உபகார ஸங்க்ரஹம், ஸாரஸங்க்ரஹம், முநிவாஹநபோகம் என்ற எட்டு. இவ்வெட்டு ரஹஸ்யங்களுள் பரதத்வத்தைப் பற்றியவை ஹுப்தமான தத்வசிகாமணியும், (ஸர்வேச்வரன் நமக்கு அநாதிகாலமாய்ச் செய்து வந்ததும் இனிச் செய்யப்போவதுமான உபகாரங்களைக் கூறும்) உபகாரஸங்கிரஹமும்.

உபாயத்தைப்பற்றியது அபயப்ரதாநஸாரம், ரஹஸ்ய சிகாமணி, அஞ்ஜலிவைபவம் என்ற மூன்றும். இவற்றுள் அபயப்ரதாநஸாரத்தில் ஐந்து அங்கங்களோடுகூடிய உபாயமான ப்ரபத்தியின் ஸ்வரூபமும், இவற்றைப் பிரமாணங்களில் அநுஸந்திக்கும் முறையும் காட்டப்படுகின்றன. ரஹஸ்ய சிகாமணியில் மோக்ஷோபாய நிஷ்டர்களுக்கு சாஸ்த்ரங்களில் கர்த்தவ்யமாக

விதிக்கப்பட்ட அந்திமஸ்ம்ருதியை ப்ரபந்நன் ஸ்வ-ப்ரயத்நத்தால் ஸாதிக்கவேண்டாம்; அவன் அநுஷ்டித்த ப்ரபத்தியால் ப்ரஸந்நனாய் ஸகல பாபத்தையும் போக்கி மோக்ஷத்தைத் தர விரைகின்ற ஸர்வேச்வரன் தானே அந்நினைவையும் செய்கிறான்' என்று ப்ரபத்தியினுடைய பெருமை காட்டப்படுகிறது.

அஞ்ஜலி வைபவத்தில், 'ப்ரபத்தி மிகவும் ஸுகரம், இதற்குக் கால நியமம் முதலிய ஒன்றும் கிடையாது; இது ஒரு முறை அநுஷ்டித்தாலே வேறொன்றை எதிர்பாராதபடி ஸகல புருஷார்த்தங்களையும் கொடுக்கும்' என்று ப்ரபத்தியின் மஹிமை வர்ணிக்கப்படுகிறது.

முநிவாஹநபோகமும் ஹஸ்திகிரி மாஹாத்ம்யமும் புருஷார்த்தத்தைப் பற்றியவை. அவற்றுள் ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் முமுக்ஷுவான ஒருவன் சரீரம் விடுமளவும் இங்கே வஸிப்பதற்கு போக்யமான ஸத்வோத்தர தேசத்தில் இருக்கவேண்டும் என்பதைக் காட்டுவதற்காக அவ்விதமான திவ்ய தேசங்களுக்கு த்ருஷ்டாந்தமாக ஸத்யவ்ரதக்ஷேத்ரத்தின் பெருமையைக்காட்டி, அம்முகத்தாலே ப்ராப்யனான பகவானின் பெருமையையும் காட்டுகிறது.

முநிவாஹநபோகத்தில், ஸதாதர்சநம் பண்ணும் நித்யர்கள் எம்பெருமானை வைகுண்டத்தில் அநுபவிப்பதுபோல் ஜீவாத்மாவும் முக்தனாய் அங்குபோய் அநுபவிக்கும் பிரகாரத்தை பூலோக வைகுண்டமென்னும் ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டருளும் பெரியபெருமாளை திருவடிமுதல் திருமுடிவரையில் அநுபவித்த திருப்பாணாழ்வாரின் அமலனாதிபிரானை வ்யாக்யானம் செய்வதால் எடுத்துக்காட்டியருளுகிறார். ப்ரதாநசதகமும் ஸாரஸங்க்ரஹமும் ஸாரதமமான அர்த்தங்களை ஸுலபமாய் அநுஸந்திக்கும் பொருட்டு ஸங்கிரஹமாக எண்ணிக் கொடுக்கின்றன.

ii இரண்டாவதான ஸ்திரீகரணபாகத்தில் சொல்லப்படும் விஷயங்கள் பரமதபங்கத்திலும் விரோதபரிஹாரத்திலும் நிரூபிக்கப்படுகின்றன. அதில் பரமதபங்கத்தில் வேதத்தைப்

பிரமாணமாக ஒப்புக்கொள்ளாதவர்களும், அதை ஒப்புக்கொண்டு விபரீதார்த்தம் செய்கிறவர்களுமான பாஹ்ய—குத்ருஷ்டி மதங்களையெல்லாம் நிராகரிக்கிறார். மற்ற மதஸ்தர்கள் தங்கள் தங்கள் மதத்திற்கு அநுகூலமாகச் சொல்லும் யுக்திகளையெல்லாம் எடுத்துப் பரிஹரித்து, தன் மதத்தை ஸ்தாபிக்கிறார்.

பதினொரு சில்லறை ரஹஸ்யங்களில் ஒன்றான விரோத பரிஹாரத்தில் முமுக்ஷுவான ஒருவன் ரஹஸ்யத்ரயத்தில் அவச்யம் அறியவேண்டிய விஷயங்களில் தோற்றின விரோதங்களைப் பரிஹரிக்கிறார்.

iii மூன்றாவதான பதவாக்யயோஜநாபாகத்தில் விஸ்தாரமாக கூறப்பட்ட அர்த்தங்களெல்லாம் பலபடியாகப் பத்து சில்லறை ரஹஸ்யங்களில் நிரூபிக்கப்படுகின்றன. அவையாவன: ரஹஸ்யபதவீ, ரஹஸ்ய நவநீதம், ரஹஸ்ய மாத்ருகை, ரஹஸ்ய ஸந்தேசம், ரஹஸ்யஸந்தேச விவரணம், ரஹஸ்யரத்நாவளி, ரஹஸ்யரத்நாவளி ஹ்ருதயம், ரஹஸ்யத்ரய சுளகம் என்னும் ஸாரஸங்க்ஷேபம், ஸாரதீபம், ஸாரஸாரம்.

இவற்றுள் ஸாரதீபம் லுப்தமாயிருந்தாலும், அதை இந்தப் பகுதியில் சேர்ப்பதற்கு வேண்டிய காரணங்கள் உண்டு. ஸாரஸங்க்ஷேபத்தின் கடைசியிலுள்ள சுலோகத்தில் ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தங்களையெல்லாம் பின்னால் விஸ்தாரமாக நிரூபிக்கப் போவதாக(வ்யாஸத: வ்யாகரிஷ்யே என்று) கூறியிருக்கிறார். நமக்குக் கிடைக்கும் ரஹஸ்யங்களில் ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம் தான் இவ்வர்த்தங்களை விஸ்தாரமாகக் கூறுவது.

இந்த ரஹஸ்யத்ரயஸாரத்தின் அபராத பரிஹாராதிகாரத்தின் நிகமனசுலோகத்தை இந்தஸாரஸங்க்ஷேபத்தினுடைய சரம சுலோகாதிகாரத்தில் 'ஸர்வபாப'சப்த வ்யாக்யானத்தில்('[illegible]' என்ற சுலோகத்தை இங்கே படிப்பது என்று) எடுத்திருப்பதால், ரஹஸ்யத்ரய ஸாரம் இதற்குப் பின் இருக்கமுடியாது. இதற்குப் பின்னால் எண்ணப்படுகிற ஸாரஸாரமும் குறிப்பிட்டபடி இவ்வர்த்தங்களை விஸ்தாரமாகக்

காட்டவில்லை. ஆகையால் இப்தமாகச் சொல்லப்படும் ஸார தீபமே அதுவாக இருக்கவேண்டும் என்று நிச்சயிக்கப்படுகிறது. இந்த ஸாரதீபமும் ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தங்களையே கூறலாம் என்பதை அதன் பெயரைக்கொண்டும் ஒருவாறு ஊஹிக்கலாம். அதற்கு முன்னும் பின்னுமுள்ள ஸாரஸங்க்ஷேபமும் ஸாரஸார மும் ரஹஸ்யத்ர விவரணமாயிருப்பதே அதற்குப் போதிய காரணம். ஆக இல்லறை ரஹஸ்யங்களில் சேர்ந்த இந்தப் பத்தும் ரஹஸ்யத்ரயங்களின் பதவாக்ய யோஜனைகளை நிரூபிப் பதற்காகப் பிரவிருத்தித்திருக்கின்றன.

iv கடைசியான ஸம்பிரதாயப்ரக்ரியாபாகத்தில் கூறப் பட்ட அர்த்தங்கள் ஸம்பிரதாய பரிசுத்தியிலும், ரஹஸ்யத்ரய ஸாரத்தின் ஆரம்பத்திலுள்ள குருபரம்பராஸாரத்திலும், மதுர கவிஹ்ருதயத்திலும் நிரூபிக்கப்படுகின்றன.

மதுரகவிஹ்ருதயம் லுப்தம். இருந்தபோதிலும், இது மதுரகவியாழ்வார் செய்தருளின கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் ப்ரபந்தத்திற்கு வ்யாக்யானம் எனப்படுவதாலும், அதில் அவ்வாழ்வார் அவருக்கு ஆசார்யரும் அருமறைகள் தமிழ் செய்தவருமான நம்மாழ்வாரையே தாரகபோஷக போக்யமாய்க் கருதினார் என்றிருப்பதாலும், அதற்கு வ்யாக்யானமான மதுர கவிஹ்ருதயம் ஆசார்ய மஹிமையையே கூறவேண்டும் என்று இந்த வருப்பில் சேர்க்கப்படுகிறது.

இப்படிப் பலபடியாக வகுத்தும் தொகுத்தும் வெளியிட்ட அர்த்தங்களையெல்லாம் ப்ரமாண—ஸம்பிரதாய—தர்க்கங்களோடு திரள வெளியிடுகிறது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்.

விரோதபரிஹாரம் முதலியவற்றின் விஷயஸங்க்ரஹம்.

இனி இவ்விரண்டாம் பாகத்தில் சேர்ந்த விரோதபரிஹாரம், முநிவாஹநபோகம், ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் என்ற ரஹஸ்யங் களின் விஷயத்தை ஸங்கிரஹிப்போம்.

விரோதபரிஹாரம்—மோக்ஷத்தில் ஆசையுடைய ஒருவன் பரதத்வ பரமஹித பரமபுருஷார்த்தங்களை அறிந்துகொள்வது போலவே, அவற்றில் தோன்றும் விரோதங்களையும் பரிஹரித்துக் கொள்ளவேண்டியது அவச்யம் என்று நிரூபித்து, பிறகு அஷ்டாக்ஷரம், த்வயம், சரமச்லோகம் என்கிற மூன்று ரஹஸ்யங்களிலும் (மந்த்ரங்களிலும்) வரக்கூடிய சங்கைகளை முறையே மூல மந்த்ராதிகாரம், த்வயாதிகாரம், சரமச்லோகாதிகாரம் என்னும் மூன்று அதிகாரங்களில் பரிஹரித்துவிட்டு, நாலாவதான நிகமநாதிகாரத்தில் மூன்று மந்திரங்களும் வேண்டும் என்பது முதலான விஷயங்களைக் கூறி முடிக்கிறார்.

இந்தப் பரிஹாரங்களெல்லாம் சாஸ்த்ரத்தை அநுஸரித்தும் யுக்திக்குப் பொருந்துமாறும் இருக்கின்றன.

முதலாவதான மூலமந்த்ராதிகாரத்தில் திருவஷ்டாக்ஷரத்தின் ப்ரணவத்திலுள்ள மூன்று அக்ஷரங்கள், நமஸ், நாராயண சப்தம், அதன் இறுதியிலுள்ள சதுர்த்தி இவற்றின் அர்த்தங்களைப்பற்றி வரும் எண்பது ஆக்ஷேபங்களுக்குப் பரிஹாரங்கள் கூறப்படுகின்றன. இக்காலத்தில் எழும் பல கேள்விகளும் அநுவதித்து பரிஹரிக்கப்படுகின்றன. உதாஹரணமாக, ஈச்வரன் நித்யனும் நம்மெல்லோரையும் ரக்ஷிப்பவனுகவும் இருந்தால், நாம் ஏன் இன்னும் ஸம்ஸாரத்தில் கிடந்து உழலுகின்றோம்? (1). ஈச்வரனுக்குக் காருண்யமிருந்தால், இவ்வுலகில் இவ்வளவு துன்பங்களை ஏன் வைத்திருக்கிறான்? (98). ஈச்வரன் ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தனுமிருந்தால், அவனுக்கு அஜ்ஞானம் துக்கம் முதலியவை எப்படி வருகின்றன? (15). 'ஈச்வரன் ஒருவனே' என்று சாஸ்திரங்கள் கூற, லக்ஷ்மியையும் கூட்டி இருவரும் ஜகத்திற்கு சேஷிகள் என்று எவ்விதம் கூறலாம்? (34). பகவானுக்கு அடியார்களாக இருப்பவர்கள் மற்றவர்களுக்கு எப்படி தாஸர்களாக ஆகலாம்? (32). ப்ரபத்தியும் செய்து பரமைகாந்தியாகவும் இருக்கும் ஒருவன் ஸர்வேச்வரனைத்தவிர மற்ற தேவதைகளையும் மற்ற விபரீத ஜனங்களையும் ஸேவிக்கலாமா? ஸேவிக்கவேண்டிய அவச்யமேற்பட்டால்

என் செய்வது ? (24, 33). ஆத்மஸ்வரூபத்தில் ப்ராஹ்மணாதி ஜாதிகள் இல்லாவிடில், வர்ணாச்ரமாதி தர்மாநுஷ்டானத்தை ஒருவன் ஏன் அநுஷ்டிக்கவேண்டும் ? (22). க்ருதயுகத்திற்காக ஏற்பட்ட பரமைகாந்தி தர்மம் கலியுகத்திற்கு எப்படிப் பொருந்தும் ? (36). ஆசார்யன் தர்மத்திலிருந்து தவறினால் அவர்விஷயத்தில், ஒரு சிஷ்யன் எப்படி நடந்துகொள்ளவேண்டியது? (38) அடிமைத்தனம் இழிவானதாயிருக்க, பகவானுக்குக் கைங்கர்யம் செய்வதே பரம புருஷார்த்தம் என்று எப்படிக் கூறலாம் ? (65). சேதனனாக ஒருவன் இருந்தால், தன்னிஷ்டப்படி போலவும் தன் ப்ரயோஜனத்திற்காகவும் கார்யம் செய்வானே யொழிய, பகவானுக்காகவே என்று எப்படிச் செய்வான் ? (80).

இவ்விதமாக ஸர்வேச்வரனுடைய ரக்ஷகத்வம், காருண்யம், சேஷித்வம் முதலான குணங்களைப்பற்றியும், ஜீவாத்மாவின் ஸ்வரூபம் தர்மபூதஜ்ஞானம், ஸம்ஸாரத்தில் அவனுடைய நிலைமை, முக்தனானால் வரும் மாறுபாடுகள் இவற்றைப்பற்றியும், நித்யவிபூதி, லீலாவிபூதி இவற்றைப்பற்றியும், பக்தி ப்ரபத்தி என்கிற உபாயங்களைப்பற்றியும், அதனால் அடையவேண்டிய புருஷார்த்தத்தைப் பற்றியும் வரும் சங்கைகளுக்கெல்லாம் விஸ்தாரமாக பரிஹாரங்கள் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன.

அப்படியே பத்து விஷயங்களைக் கூறும் த்வயாதிகாரத்தில் 'பிராட்டியை புருஷகாரமாகப் பற்றவேண்டியது ஏன்? மோக்ஷாநுபவம் எப்படி?' இது முதலான விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

மூன்றாவதான சரமச்லோகாதிகாரத்தில் பத்து சங்கைகள் பரிஹரிக்கப்படுகின்றன. சாஸ்த்ரங்கள் விதித்த தர்மத்தை எப்படி விடச்சொல்லலாம்? (91). ப்ரபத்தி உபாயமா? ஈச்வரன் உபாயமா ? (92). கீதையில் ப்ரபத்தியை பக்தியோகத்திற்கு அங்கமாகக் கூறியிருக்க, அது ஸ்வதந்த்ரமாக மோக்ஷத்தை எப்படிக் கொடுக்கும் ? (93). ப்ரபத்தி ஸர்வ பாபத்தையும் போக்கும் என்றால், இந்த சரீரம் உள்ளளவும் ஒருவித துக்க

மில்லாமல் ஸுகமாக இருக்கவேண்டும் என்று ஒருவன் ப்ரபத்தி பண்ணினால், அவனுக்கு அது பலிக்குமா? இது முதலியன.

நாலாவது நிகமநாதிகாரத்தில் ஒன்பது வாக்யங்களால் இந்த மூன்று மந்திரங்களும் அவச்யம் என்பதற்கும், இவற்றுள் ஒன்றையும் குறைக்கமுடியாதென்றும், இதைத் தவிர மற்றவை இவ்வளவு முக்யமல்லவென்றும், 'இவ்வளவுவிஷயங்கள் தெரிந்து கொண்டால் போதுமா? இன்னும் ஸந்தேஹங்கள் வந்தால் செய்வதென்' என்கிற கேள்விகளுக்கு உத்தரமும் அருளிச் செய்யப்படுகிறது.

ஆக 109 ஆக்ஷேபங்களுக்குப் பரிஹாரங்கள் இருக்கின்றன.

அடுத்த ரஹஸ்யமான முனிவாஹனபோகம் திருப்பாணாழ்வாரின் அமலனாதி பிரான் என்னும் ப்ரபந்தத்தின் பத்து பாசுரங்களுக்கும் வ்யாக்யானமாயிருக்கிறது. முனிவாஹன போகம்' என்றால் (லோகஸாரங்கள் என்னும்) முனிச்ரேஷ்டரை வாஹனமாகக்கொண்டு (பெருமாள் திருவடிகளளவும் சென்று பெரிய பெருமாளைத் திருவடி முதல் திருமுடிவரை) அனுபவித்த திருப்பாணாழ்வாரின் அநுபவம் என்று அர்த்தம். இதனாலேயே இவ்வாழ்வாரின் பெருமையும் இப்பிரபந்தத்தின் சீர்மையும் விளங்கும்.

இவ்வாழ்வார் உறையூரில் கார்த்திகைமாதம் ரோஹிணீ நக்ஷத்திரத்தில் நெற்பயிரிடையே அவதரித்து, பகவத்பக்தி நிறைந்தவனும், பஞ்சம ஜாதியில் பாணர்குலத்துப் பிறந்தவனுமான ஒருவனால் வளர்க்கப்பட்டு வந்தார். குலத்திற்கேற்ப யாழ் வாசிப்பதில் தேர்ச்சிபெற்று, தினமும் விடியற்காலையில் காவிரியாற்றின் கரையில் பெரியபெருமாள் பள்ளிகொண்டருளும் திசைநோக்கி யாழிசையுடன் அநேக திவ்ய கீதங்களை பக்தியுடன் பாடி, யாவரும் வருமுன்பே தம் இடம் செல்வார். ஒரு நாள் பக்தியில் ஆழ்ந்து மெய்மறந்து விடிந்தும் பாடிக் கொண்டு நிற்க, எம்பெருமானுக்குத் திருமஞ்சனம் கொண்டு செல்லவந்தவர்கள் அவரைக் கூப்பிட்டும் அறியாமலிருப்பதைப் பார்த்து, சிறு கற்களை எறிந்தனர். ஸமாதி கலைந்து, ஆழ்வார்

விலகினார். அப்போதே பெரியபெருமாள் திருவுள்ளமும் திருநெற்றியும் புண்பட்டு, அன்றிரவே லோகஸாரங்கர் என்னும் அந்தணரின் கனவில் தோன்றி, "நம் பாடுவானை அழைத்துக் கொண்டு வாரும்" என்று நியமிக்க, அவரும் திருப்பாணாழ்வாரைத் தேடிச்சென்று 'அருள்பாடு' 'அருள்பாடு' என்று சொல்ல, ஆழ்வாரும் 'அடிப்பாணன், அடிப்பாணன் (=ஹீநன்) என்று இருக்க, அவரும் விடாதே தோள்மேலே எழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டுபோக, வழியிலே ஒன்பது பாட்டுப்பாடி திருப்பிரம்புக்குள்ளே நின்று "அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்று பத்தாவது பாட்டைப் பாடி, தாம் சொன்னபடியே வேறொன்றைக் காணவேண்டியிராமல் பெரியபெருமாள் திருமேனியில் அந்தர்ப்பவித்தருளினார்.

இவற்றுள் முதல் மூன்று பாட்டால் ப்ரணவத்தின் அர்த்தத்தைக் காட்டி; நாலாம்பாட்டில் 'நானும் என்னுடையதன்று; மற்றும் என்னுடையதாவன ஒன்றுமில்லை' என்கிற நமஸ்ஸின் அர்த்தத்தை மறைபொருளாக அநுஸந்தித்து; ஐந்து, ஆறு இரண்டிலும் நாராயண சப்தார்த்தத்தை அநுஸந்தித்து; கடைசி நாலு பாட்டாலே சதுர்த்தியில் ப்ரார்த்தநீயமான கைங்கர்யத்திற்குப் பிரஸ்தாவகமான அநுபவம் தம்மை இப்போது பரவசமாக்கினபடியைப் பேசுகிறார். ஆதலால் இந்தப் பத்துப் பாசுரங்களும் திருவஷ்டாக்ஷரத்தினர்த்தத்தை வெளியிடுகின்றன. "காண்பனவும் உரைப்பனவும் மற்றொன்றின்றிக் கண்ணனையே கண்டு உரைத்த கடிய காதல் பாண்பெருமாள் அருள்செய்த பாடல் பத்தும் பழமறையின் பொருள்" என்று ஸ்ரீ தேசிகன் 'முநிவாஹந போகம்' என்ற தம் ரஹஸ்யத்தில் நிரூபித்திருக்கிறார்.

இதில் சேர்ந்த இருபத்தொன்பதாவதான மதுரகவி ஹ்ருதயம் கிடைக்கவில்லை. மதுரகவியாழ்வார் தம் ஆசார்யரான நம்மாழ்வாரிடத்தில் பக்தி மிகுந்து தேவுமற்றறியாது இருந்து

அவர் விஷயமாக அருளிச்செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பு என்னும் பிரபந்தத்திற்கு வ்யாக்யானமாக இருக்கலாம் என்று ஊஹிக்கப்படுகிறது.

ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் முப்பத்திரண்டாவது எனப்படுகிறது. இதில் ப்ரஹ்மாண்ட புராணத்தில் ஸத்யவ்ரத க்ஷேத்ர மாஹாத்ம்ய முகத்தாலே வெளியிடப்பட்ட பேரருளாளன் என்னும் ஸ்ரீகாஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் வரதராஜனின் பெருமையை பண்ணும்இசையும் திகழப் பாடுகின்றார்.

முன்னொரு காலத்தில் சதுர்முகன் ஸர்வஜகத்காரணனை ஸர்வேச்வரனை அவனனுக்ரஹமில்லாமல் தன் ஸமாதியாலேயே ஸாக்ஷாத்கரிக்க முயன்று கடோரமான தபஸ்ஸைச் செய்தார். அதனால் தன் மனோரதம் நிறைவேறாதது கண்டு வருந்தி, ஒரு அசரீரிவாக்குச் சொன்னபடியே அளவற்ற மஹிமையுடைய ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திலே ஸர்வேச்வரனை அச்வமேதத்தாலே ஆராதிக்க நிச்சயித்தான். பத்னியான ஸரஸ்வதீ வராதவளவிலே, ஸாவித்ரீ முதலானவர்களைக்கொண்டு யஜ்ஞத்தை ஆரம்பித்தான். ஸரஸ்வதீ கோபித்துக்கொண்டு வேகவதியென்ற நதியாகப் பெருகி யஜ்ஞத்தைக் கலைக்க முடல, ஸர்வேச்வரன் ஒரு அணையாக இருந்து யஜ்ஞத்தை ரக்ஷித்தான். அப்போது தேவர்கள், ரிஷிகள், ப்ரஹ்மா எல்லோரும் வேதாந்தார்த்தங்கள் நிரம்பின வாக்யங்களால் துதித்தார்கள். பிறகு ப்ரஹ்மாவின் வேண்டுகோளின்படி இன்றும் ஹஸ்திகிரியில் சோதியநந்தன் கவியில் தொழுதெழ நின்றருளுகிறார் என்று முடிக்கிறார்.

இந்த சில்லறை ரஹஸ்யங்கள் பதினொன்றையும் ஸ்ரீ உ. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமி ஸாதித்தபடியே தெரிந்த வரையில் சோதித்து வெளியிட்டிருக்கிறேன். இதிலுள்ள குற்றங்களை நீக்கி, ஸர்வேச்வரனும் அவனடியார்களும் இதை ஏற்று உகந்து அடியேனைக் கிருதார்த்தனாக்குவார்களாக.

புதுக்கோட்டை,
10—12—1937.

ஸ்ரீநிவாஸராகவன்.

ஶுத்த ॥ ஶுத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
249	11	மறைகெளல்லாம்	மறைகளெல்லாம்
253	2	ஓர்ஜீ	ஓர்
254	15	ஶ்ரவ்ரதமாகா	ஶ்ரவ்ரத்தமாகா (ப்ரயுக்த-பா)
262	22	கண்டிலோமோயென்னில்	கண்டிலோமோவென்னில்
275	5	வ்ருவிஷயங்களிற்	வ்ருவிவிஷயங்களிற்
287	8	அவஸாஷாயி	அவஸ-ஷாயி
292	7	ஷ்லநிஷ்டவஷ்டவாக	ஷ்லநிஷ்டவஷ்டவாக
294	14	அதிஶயங்களும்	§அதிஶயங்களும்
298	14	ளுளக்கிகெவ்ரஶ	ளுளக்கிகெவஶ
303	16	முன் பன்றிக்கே	முன்பன்றிக்கே
304	15	அப்பிள்ளார்	அப்புள்ளார்
313	17	அயிரகர	அயிகார
315	6	ஶ்ராரவு	ஶ்ராரவூ
321	7	முக்தாக	†முக்தாக
327	10	வொக்கின்றதே	வொக்கின்றவே
353	1	ஸவரூபாநுரூப	ஸ்வரூபாநுரூப
361	16	எனக்கே	எனக்கு
363	25	திருமேனி என்	திருமேனியும் என்
365	4	அடியேன	அடியேன்
366	13	வெண்ணெய்	வெண்ணெயை
368	4	தொடந்து	தொடர்ந்து
373	10	வாசத்தோர்	வாசகத்தோர்
373	19	உவஷ்த்தாலே	உவத்தாலே
376	21	கவிவஹு	கவிவவு
379	10	உநஷ்ராஜீ	உநாஷ்ராஜீ
386	25	தோனற	தோன்ற

ஸ்ரீ: ||

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த ரஹஸ்யங்களில் 27-வது ரஹஸ்யமான விரோதபரிஹார:

[ஸ்ரீமாந் வேங்கட..................|..............ஸதா ஹ்ருதி ||
ராமாநுஜதயாபாத்ரம்......|......வேதாந்ததேசிகம் ||]

ஸ்ரீமந்நாராயண: ஸ்வாமீ ஸர்வஜ்ஞ: ஸர்வதேஹிநாம் |
ஸ்வயாஜ்ஞாவர்த்திநாம் ஸாக்ஷாத் விரோதிவிநிவாரக: ||

உசிதம் ஸர்வத: பாபாத் ஔஷதாதிப்ரஸீதத: |
ஔஷதம் சேதஸா ஸேவ்யம் ஸர்வாநர்த்தநிவாரிணாம் ||

ப்ரபந்நஜநே விக்நாஸேதே ப்ரதிஷ்டிதசேதஸ:
ப்ரதிபந்திஷு ப்ரஜ்ஞாதாயம் சிக்ஷா தயாந்விதா: |
ஸம்ஸாரஸாகரப்ராப்தசேதஸாதிநிவாரண-
ஸுசரித ப்ருஹஸ்பதிஸமா ஸ்ரீதேசிகா: ||

பரவும் மறைகளெல் லாம்பதம்
சேர்ந்தோல் ற நின்றபிரான்
இரவன் றிரவியின் காலத்(து)
அழைத்த எழில்படையோன்
அரவும் கருடனும் அன்புடன்
ஏந்தும் அடியிரண்டும்
தரஎந் தமக்(கு)அரு ளால்தளரா
மனம் தந்தனனே. 32.

ஸ்ரீமந்நாராயண:—ஜ.

முமுக்ஷுவுக்கு அவஶ்யம் ஜ்ஞாதவ்யங்களான விஷயங்களில் *தோன்றிய விரோதங்களை ஶமிப்பியாதொழியில், [1]"ஜ்ஞாநேந ஹீநா: பஶுபி: ஸமாநா:" என்கிற தஶையாம். விரோதங்கள்போல் *தோன்றின அர்த்தங்களை அப்ரமாணங்கள் என்று விடுதல், †ஒன்றை இட்டு ஒன்றை பாதிப்பதல் செய்யில், ஶாக்யாதிகள் படியாம். விரோதமாய்த் தோற்றின கட்டளையிலே இசைந்தால் ஹைதுகஹைதுகவாதிகள்படியாம். ஆனபின்பு ரஹஸ்யத்ரயத்தில் அபேக்ஷிதங்களான அர்த்தங்களில் தோற்றின விரோதங்களை ஶாஸ்த்ரநிர்ணாயக ந்யாயங்களாலே ஶமிப்பித்து ஸாரதமங்களான தத்த்வ-ஹித-புருஷார்த்தங்களைத் ‡தெளிந்து வல்லதொரு மோக்ஷோபாயத்தை அவலம்பித்து §ஸ்வநிஷ்டாநுரூப நிரபாயவ்ருத்தியோடே நடப்பார்கள் ஸாத்விகர்கள்.

அவ்விடத்திலே முற்பட [2]"ஸர்வபூதோ ரக்ஷா ஜுஷ்டம்" என்னும்படி ¶ஸர்வாயஸர்வஜ்ஞஸமான ப்ரபந்தத்தில் அபராதஸஹநசீலருக்கு தண்ணீர்த் துரும்பு போலே வரும் ஶங்கைகளைப் பரிஹரிக்கிறோம்.

அநாதிகாலம் க்ஷேத்ரஜ்ஞர்கள் க்லேஶப்படப் பார்த்திருக்கிற ஸர்வஜ்ஞனை ஈஶ்வரன் ஸர்வரக்ஷகன் என்கிற இவ்வர்த்தம் கூடுமோ என்னில்—ஈஶ்வரனுடைய ரக்ஷகத்வம் இரண்டுபடியாயிருக்கும்; எங்ஙனே என்னில்: ஸர்வருக்கும் ஸத்தாதிகள் குலையாதபடி

[1] நா. ப. 16. 13. [2] நா. க [illegible]. 1. 9. * தோற்றிய, தோ [illegible] ர—க. † ஒன்றைவிட்டு—க. ‡ [illegible] ஶங்கைகளை—க. [[illegible] —க § ஸ்வநிஷ்டாநுரூப—க ¶ ஸர்வஸாரஸம்[illegible]

பண்ணுகிற ரக்ஷகர்களும் நிரபேக்ஷர்; ஸம்ஸாரிகள் திறத்தில் அநிஷ்டநிவாரணாதிரூபமான ரக்ஷணமும் இவர்கள் பக்கலிலே ஸாபேக்ஷமாய் இருப்பதேத்தனுமொரு வ்யாஜத்தை அபேக்ஷித்து இருக்குமாகையாலே, ஸர்வக்ஷேத்ரஜ்ஞர்விஷயத்திலும் அநிஷ்டநிவாரணாதிரூபமான ரக்ஷணத்திற்கு யோக்யதை கையாலும், $மேல் பெறப்புகுகிற பரமபுருஷார்த்தத்திற்கு உறுப்பான ஸத்த்வாதிகள் குலையாதே நித்யமாக ரக்ஷிக்கையாலும், ஸர்வரக்ஷகன் என்கிறது. 1.

இப்படி ஸர்வரக்ஷகனை ஈஶ்வரன் ஸர்வஶேஷியாம்போது, தன்னை ஒழிந்த நித்யாநித்யஸர்வபதார்த்தங்களாலும் தனக்கு உபகாரம் உண்டாகவேண்டும். இப்படியானால் ஸ்வதஸ்ஸித்தத்ருப்தியன் என்கை கூடுமோ என்னில், இது கூடும்: ஸர்வரூபன் ஆபரணம் பூண்டாற்போலே ஸ்வதஸ்ஸித்தமான ஜ்ஞாநஶக்த்யாநந்தாதிகளை உடையவன் தன் ஶேஷவிபூதிகளாலும் அலங்க்ருதனாய்த் த்ருப்தியனாகை விரோதமன்றிறே. 1“ஸ்வயா த்ருப்த்யா த்ருப்தம் ஹவிஷி ஹவிஷா ந விகுணம் ந கர்ணஸ்வாதுத்வம் பவதி ச ந ஸாந்த்ராஹிதகுணம்” என்கிற ந்யாயம் இங்கே கண்டு கொள்வது. 2.

‘ஸகலன் ஸ்வத்ருப்திகஸகலஶேஷீ’ என்று ஶாஸ்த்ரம் சொல்லாநிற்க, 2“உபயாயிஷாநாம் தைவதம் ஶேஷிகம்” என்று சொல்லுகிற அர்த்தம் கூடுமோ என்னில், லோகத்தில் பதிக்கும் பத்நிக்கும் ஸ்வக்ஷேத்ராதிகளெல்லாம் ஶேஷமாயிருக்குமாப் போலே, இங்கும் இருவரையும் ஒழிந்தவையெல்லாம் 3“தேவஸ்ய ச ஶேஷம் ஸி

---

1 ஸ்ரீகுண. கோ. 31. 2 ஷடர்த்த. ஸ. 3 விஷ்வ. ஸ.

$மேன்மேலும் பரமபுருஷார்த்தத்திற்கு—க.

விஹ்ருதிர்ஹயாத்ரிகா” என்கிறபடியே இருவருக்கும் பொதுவான ஶேஷமாயிருக்க, பதிவ்ரத - பத்நீவ்ரத - ந்யாய வைஷம்யாலே ஒருவன் ஸர்வஶேஷியாக நிற்கை விருத்தமன்று. 3.

இப்படி ஸர்வேஶ்வரன் ஸர்வஶேஷியாய் நிற்க, [1]“பரிஜநபரிபர்ஹா பூஷணாந்யாயுதாநி” இத்யாதிகளில் தானும் ஆஶ்ரிதருக்கு ஶேஷமாய் நிற்கிறான் என்கை ஸங்கதிக்குமோ என்னில், ஆகாரபேதத்தாலே இரண்டும் ஸங்கதிக்கும்: [2]“உபாத்தே ஸத்தாஸ்திதிநியமநாத்யை: சிதசிதௌ ஸ்வமுத்திஶ்ய ஶ்ரீமாந்” என்கிறபடியே எல்லாவற்றையும் தனக்காக உபாதாநம் பண்ணி வைக்கையாலே, தான் ஸர்வஶேஷியானான்; ஆஶ்ரிதர் திறத்தில் தனக்கொரு உபகாரத்தைக் கடாக்ஷியாதே உபகரிக்கையாலே, அவர்களுக்கு ஶேஷமாகிறான். இப்படி ஶேஷமாயிருக்கிற இது [3]“தாஸ்யமைஶ்வர்யவாதேந ஜ்ஞாதீநாம் ச கரோம்யஹம்” [4]“ஜநஸ்ய ஸம்ஶ்ரிதாநாம் கிங்கரஸ்ய ஸமவஸ்திதா:” [5]“அயஸஸ்ய ஸஹாயோ ஸாரத்யே விநியுக்த:” என்கிற இடங்கள்போலே குணக்ருதமாய் ஸ்வாதந்த்ர்யஹேதுவாகையாலே தோஷமன்று. 4.

ஜீவனுக்கு ஶேஷத்வம் ஸ்வாபாவிகமாகையாலே நித்யமாயிருக்கிறதென்னில், ஶாஸ்த்ரத்தில் சொன்ன பாரவஶ்யம் கூடுமோ? ஆகையால் மோக்ஷம் பெறு

---

1 ஆஜ்ஞாப்யோஹம் தவாஸ்மீதி என்கிறபடியே ஆஶ்ரிதருக்குத் தான் சேஷமாய் இருக்கிறான் என்கை—அ. [1]வரத ஸ்த. 63. [2]ஸ்ரீரங் ஸ்த. 2. 87. [3] [4]ரா. பா. 31. 4. [5]பார. உத். பகவத்யாந. 1. 10.

மளவும் இவன் ஶேஷமாமத்தனையன்றோ என்னில், தாம்ராயஸங்களான ஸ்வர்ணபாஷாணங்களுக்கு* ஓர்ஷதி ஸம்ஸ்காரத்தாலே ஸாம்யம் சொல்லுமாப்போலே முக்தனுக்குச் சொன்ன ஸாம்யத்தை [1]“போகமாத்ரஸாம்யலிங்காச்ச” என்று ஜ்ஞாநாநந்தங்களிலே †வ்யவஸ்திதமாக்குகையாலும், [2]“ஜகத்வ்யாபாரவர்ஜம்” என்றதும் மற்றுமுள்ள லக்ஷணங்களுக்கு நிதர்சநமாகையாலும், முக்ததசையிலும் ஶேஷத்வம் இவனுக்கு அநுவர்த்திக்கக் குறையில்லை. 5.

இப்படி முக்தனுக்கு ஶேஷத்வம் நின்றபோதே அத்தோடு ‡துல்யந்யாயத்தாலே பாரதந்த்ர்யமும் கழியாமையாலே, முக்தனை ஸ்வதந்த்ரன் என்று விசேஷித்துச் சொல்லுகிற ஶ்ருதிஸ்ம்ருதிகளோடே விரோதம் வாராதோ என்னில், கர்மாதீநஶரீரமாக ஶ்ருதிஸித்தனான ஜீவனுக்கு முக்ததசையிலும் கர்மாதீநதையைப் பற்ற பாரதந்த்ர்யம் கழிய விரகில்லை. ஆனபின்பு [3]“ஸ்வதந்த்ரஸ்தம் ப்ராப்ய தேநைவ ஸஹ மோததே” இத்யாதிகளில் கர்மபாரதந்த்ர்யம் கழிந்த முக்ததசையில், அபிமதகைங்கர்யங்களில் ஸ்வாவிகாதமில்லாதபடியைச் சொல்லுகிறது. 6.

இப்படி ஶேஷத்வபாரதந்த்ர்யங்கள் நித்யமாகையும், [4]“தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:” என்கிற இடம் ப்ரமாணாதிஸித்தத்வ ஔசித்யமும் காட்டுகைக்காக உபந்யஸித்ததாமத்தனையன்றோ? ஸோ

[1] சா. ஸூ. 4. 4. 21. [2] சா. ஸூ. 4. 4. 17. [3] பாரமே. [4] மந்த்ரராஜ.
* பாஷாணங்களுக்கு-ஸ. † வ்யவஸ்திதங்களாகையாலும்-க. வ்யவஸ்திதமாகச் சொல்லுகையாலும்—ஸ. ‡ துல்யந்யாயமான-க.

கத்தில் ஸாரதம்ய ஶேஷத்வங்களை உடையாரான ஸர்வ ஜீவாத்மாக்களை 'தாஸர்கள்' என்று சொல்லக் காண்கிறோம். இங்கு த்யஜ்ய ஸம்ஸாரிகள் முதலான ஸர்வாத்மாக்களையும் 'தாஸபூதர்' என்றன்றோ சொல்லுகிறது என்னில், ஒரு சேதநனைக் குறித்து தன் ஶேஷத்வத்தை அநுஸந்திக்கைக்கு யோக்யனான சேதநனை லோகத்திலும் 'தாஸன்' என்கிறதாகையாலே, இங்கு ஸர்வஜ்ஞரான ஸர்வாத்மாக்களுக்கும் ஶரீராத்மத்திலே இந்த யோக்யதை வெளிப்படுமாகையாலே எல்லாரையும் 'தாஸபூதர்' என்கைக்குக் குறையில்லை. லோகத்தில் ஸ்வாமிகளுக்கு அந்த ஸ்வாமித்வத்தோடு அநுஸந்தாநம் கூடாமையாலும், ஶரீராத்மத்தில் அந்த சேதநனைக் குறித்து ஶேஷமாகையில் நியமம் இல்லாமையாலும் தாஸத்வம் உபசரிதமாகாதொழிகிறது. 7.

சேதநாசேதநங்கள் ஸர்வருக்கும் கர்மவிஶேஷங்களாலும், முக்தருக்கும் நித்யருக்கும் *ஸ்வபாவநியதி விஶேஷங்களாலும் சில காலம் அந்யமாகவும், சில நித்யமாகவும் ஶேஷமாய் நிற்கிற நிலை பொய் என்னவொண்ணாதிருக்க, இவற்றுக்கு பரமாத்மாவைப் பற்ற அநந்யார்ஹஶேஷத்வம் ஸ்வாபாவிகமாமோ என்னில்; கர்மாதிகள் உபாதியாக வரும் அந்யஶேஷத்வமும், நிருபாதிக ஸம்பந்தத்தாலே வரும் அநந்யார்ஹஶேஷத்வமும் விருத்தமன்று. ஸ்ரீயபதியை ஒழிந்தார்க்கு ஒன்றும் நிருபாதிகஶேஷமன்று என்கையிலே அவதாரணத்திற்குத் தாத்பர்யம். 8.

$ஶேஷத்வவிஶேஷத்தை- -க. அநுஸந்திப்பிக்கைக்கு—க.

* பகவதபிமதவிசேஷ—க.

இச்சேஷத்வாவதாரணத்தாலே சரீராத்மபாவம் ஸித்திக்கும் என்னுமிடம் கூடுமோ? அல்லாத த்ரவ்யங்களைப் போலன்றிக்கே சரீரத்தை வேறொருத்தனுக்கு சரீரமாக்கவொண்ணாது என்கிற விசேஷம் இல்லையோ என்னில், பத்நியையும் வேறொருத்தனுக்கு பத்நியாக்கவொண்ணாதென்கிற விசேஷமுண்டு. இவளை *ஓரோர் ஆகாரங்களாலே பரசேஷமாக்க ஶக்யமென்றால், தன் சரீரத்தையும் தாநவிக்ரயாதிகளாலே பரசேஷமாக்க ஶக்யமாயிராநின்றது. சரீரத்தை வேறொருத்தருக்கு சரீரமாக்க வொண்ணாதென்கிற ஸ்வபாவமும் வ்யாப்திவிரஹம்: ஈஶ்வரன் தன் சரீரமான †ஸமஸ்தப்ரபஞ்சத்தை ஜீவர்களுக்கு சரீரமாக்கக் காணாநின்றோமிறே. ஆகையால் சேஷத்வாவதாரணம் கொண்டு சரீரத்வம் சொல்லவொண்ணாதென்னில், அவதாரணம் அயோகவ்யவச்சேதமென்றும், அந்யயோகவ்யவச்சேதமென்றும் இரண்டுபடியாயிருக்கும். அதில் ஸ்வரூபப்ராப்தியில் தோற்றின சேஷத்வத்திற்கு உபாதி யில்லாமையாலே அயோகவ்யவச்சேதம் ஸித்திக்கையாலே அவ்வழியாலே சரீரத்வம் ஸித்திக்கிறது. சரீரமாவது ஒரு சேதனனுக்கு ஸ்வசேஷமல்லாதபடி பண்ணவொண்ணாத த்ரவ்யம். இவ்வர்த்தம் இங்கு அயோகவ்யவச்சேதத்தாலே ஸித்திக்கையால், சரீரத்வம் ஸித்தம். அந்யயோகவ்யவச்சேதமாகிற இது தனக்கு உபாதியாலே பிறந்த அந்யசேஷத்வத்தைப் பற்ற நிவர்த்தனமாய், அவ்வுபாதியைக் கழிக்கும் விரகிலே முயலுகைக்கு உறுப்பாம். இப்படி

---

* ஓர் ஆகாரங்களாலே—க. †விசிஷ்டப்ரபஞ்சத்தை—க.

ப்ரத்யக்ஷத்தில் ஸஹிக்கிற உபாயாதிகாரியான உபேக்ஷையைப் பற்ற ப்ரத்யவேக்ஷத்திலே உபாயம் உதிக்கிறது. 9.

ஜீவனுக்கும் ஈஶ்வரனுக்கும் ஒக்க அணுத்வமும் வ்யாபித்வமும் ஶாஸ்த்ரஸித்தமாயிருக்கச் செய்தே, ஜீவனுக்கு அணுத்வத்தை நிலைநிறுத்தி வ்யாபித்வவசனத்திற்கு அந்யாபதேஶம் சொல்லக் கடவதானால், ஈஶ்வரனுக்கும் ஸ்வரூபம் அணுவாய், வ்யாபித்வம் வேறொருரூபத்தாலேயானாலோவென்னில், இது அணுத்வவிஷயங்களைவிட்டு ஜீவபரவிஷயம் சொல்லுகிற *ஶ்ருதிவாக்யங்களாலும், [1]"மயா ததமிதம் ஸர்வம்" [2]"யோ லோகத்ரயமாவிஶ்ய" [3]"யதா ஸர்வகதோ விஷ்ணு:" இத்யாதி வசனங்களாலும் ஸித்தம். இப்பிரிவு [4]"நாணுரதச்ச்ருதே: இதி சேந்நேதராதிகாராத்" இத்யாதி ஸூத்ரங்களாலே ஸமர்த்திக்கப்பட்டது. ஈஶ்வரனுக்கு அணுத்வப்ரதேஶம் உபாஸநார்த்தம் ஹ்ருதயாதி நிவேஶநம் என்னுமிடம் ப்ரகரணாதிஸித்தம். 10.

தன் சரீரத்தில் பாணிபாதாதிகளில் எங்கும் தனக்கு ஸர்வத:ஸம்வேதனமுண்டாயிருக்க, தன்னை அணுபரிமாணன் என்னில், இது ஸர்வருக்கும் அநுபவஸித்தமாகையாலே, இவனை 'அணு' என்றவிடம் அந்யபரமாக வேண்டாவோ வென்னில், இவனை விபுவாகவாதல், தேஹபரிமாணனாகவாதல் கொண்டாலும், அவ்வோ ப்ரதேஶங்களில் †ஸ்வரூபஸ்திதஜ்ஞாந

[1] கீதை. 9.4. [2] கீதை. 15.17. [3] வி. பு. 1.8.17. [4] சா. ஸூ. 2.3.22.

*ச்ருதிவாக்யங்களாலே—க. †தர்மபூதஞான விஷயீகாரமில்லாதபோது—க.

வ்யாப்தி இல்லாதபோது அங்குற்ற ஸுகது:கா நுபவம் கூடாமையாலே ச்ருதி சொன்ன ப்ரகாச த்தை இசைந்தாலும் தர்மபூதஜ்ஞாநவ்யாப்திவிசேஷ த்தாலே அவ்வோ சரீராவயவங்களில் ஸுகது:கா நுபவத்திற்கு அநுபபத்தியில்லை. 11.

ஆனாலும் ஸௌபர்யாதிகளான யோகிகளும் முக்தரும் நித்யரும் ஒருக்காலே பல சரீரத்தை அதிஷ்டிக் குமிடத்தில், அந்தந் சரீரங்கள் எல்லாவற்றிலும் ஸ்வரூபஸந்நிதியில்லாதபோது போக்யவிஷயங்களில் ஜ்ஞாநவ்யாப்தி பிறந்ததாய் அவ்வோ தேசங் களில் அஹம்பாவம் கூடாதொழியாதோ வென்னில்; ஒரு சரீரத்திலே பல அவயவங்களை அதிஷ்டிக்கிறபோது எங்குற்றைக்குமாக ஒரு அஹம்பாவமாயிருக்கிறாப்போ லே, ஒருக்காலே பல சரீரங்களை அதிஷ்டித்தாலும் தன் ஸ்வரூபஸந்நிதியுள்ள ‡இடத்தில் அஹம்பாவமொன்று மே உள்ளது. அதுதன்னாலே தனக்கு அதிஷ்டேய மான பல சரீரத்தில் நான் என்கிற வ்யவஹாரத்திற்கு விரோதமில்லை. 12.

இப்படியானாலும் அணுவான ஜீவன்தானே முக்த தசையில் விகாஸம் என்கிற வசநங்களின் ஸ்வாரஸ்ய த்தாலே இவனுடைய §ஜ்ஞாநம் ஆத்மாச்ரயமாயி யாமத்தனை போக்கி நித்யமாகவற்றோ வென்னில்; ஜ்ஞாநத்தை ஸ்வரூபநிரூபகமாகச் சொல்லுகிற வாக்யம் ப்ரபலமாகையாலும், நிர்விகார ச்ருதிபல த்தாலும், முக்ததசையில் சொல்லுகிற விகாஸமும் அநேகசரீரபரிக்ரஹமும் [1]"ப்ரதீபவதாவேச:" என்

---

[1] சா. ஸூ. 4. 4. 15. ‡ஓர் இடத்தில்—வ. §அணுத்வமும்—ரு.

கிற கட்டளையிலே ஜீவனுக்கு ப்ரகாசகத்வமுமான ஜ்ஞாநத்திநுடைய வ்யாப்தியாலே என்று கொள்ளுகை உசிதம். 13.

ஒருவனுக்கு ஒருகாலே அநேகசரீரபரிக்ரஹம் கூடுமென்றும் தோற்றுகிற வசநங்களில் ஸௌபரிவ்ருத்தத்தைக் குலையாதே ஸகலசரீரங்களும் ஒருவனுக்கே சரீரமாக ப்ராப்தமாகையால் ஸகலஜீவைக்யமும் ப்ரஸக்தமாகாதோ வென்னில்; *இது ஸர்வத்ர ஸுகது:கப்ரதிஸந்தாநாதிகள் இல்லாமையாலே நிரஸ்தம். அநேகசரீரம் ஒருகாலே எடுப்பார்க்கு அப்போது அவ்வோ சரீரங்கள் எல்லாவற்றிலும் உள்ள ஸுகது:காதிகளுக்கு ப்ரதிஸந்தாநமுண்டாயிறே இருப்பது அநேககரணாதி பேதத்தாலே ப்ரதிஸந்தாநம் பிறவாதொழிகிறது என்று காட்டுவதொரு வசநம் இல்லை. †இப்படி நிர்ப்பந்தமாகக் கல்பிக்கப் பார்த்தால், இது தேஹாதிபேதப்ரதிபத்தியாலே நிரஸ்தம். 14.

இப்படி ஏகத்திற்கு உபாதிபேதத்தாலே ப்ரதிஸந்தாநாபாவம் கூடாதாகில், அவதாரங்களில் [1]"பவாந் நாராயணோ தேவ:" என்றும், [2]"ஆத்மாநம் மாநுஷம் மந்யே" என்றும் இக்கட்டளையில் வசநங்களாலே ப்ரதிஸந்தாநம் இல்லை என்று தோற்றுகையாலே அவதாரந்தோறும் ஆத்மபேதம் கொள்ளவேண்டி, ராமக்ருஷ்ணாதிரூபங்களெல்லாம் ஒரு ஈச்வரனுடைய அவதாரம் என்கிற அர்த்தம் விருத்தமாகாதோ என்னில்;

[1] ரா. யு. 120. 13. [2] ரா. யு. 120. 11. *'இது ஸர்வத்ர' இதி ந—க. †'இப்படி' இதி ந.க.

இது ஸ்வதந்த்ரனான ‡ஈச்வரன் அஜ்ஞாநது:கித்வகர்மவச்ய த்வாதிகளை தன் லீலாதிகளாலே அபிநயிக்கிறான் என்று சொல்லுகிற ¹"தேந வஞ்சயதே லோகாந்", ²"சோகமயிஷ்யா ஜகத் ஸர்வம்" இத்யாதிவசநங்களாலே ஸித்தம். 'ஸ்வதந்த்ரனாய் காரணனாயிருக்கிற ஈச்வரன் தன் குணத்தாலே அவதாரங்களிலே அஜ்ஞாநது:காதிகளை உண்டாக்கிக்கொள்ளுகிறான்" என்கிற பக்ஷம் ஹோராஹோராதிசதங்கள் போலே ஸித்ராஜம். ஸர்வகர்த்தாவாய் ஸர்வஜ்ஞனாய் ஸர்வஸாக்ஷியான ஈச்வரன் தானே ஸம்ஸாரத்தை உத்பாதித்து, அதுகண்டு தானே சோகிக்கிறான் என்றால், இது ³'ஜரத்கவாதி' வாக்யதுல்யமாம். 15.

இப்படி ஈச்வரன் கர்மவச்யத்வாபிநயம் பண்ணுகிறானாகில், ஆவேசாவதாரங்கள் என்று சில கொள்ள வேண்டுமோ? எல்லாம் ஸாக்ஷாதவதாரமாய், அங்குள்ள கர்மவச்யத்வாதி ப்ரதிபாஸமும் ஈச்வரன் அநுஷ்டித்துக் காட்டினதாக அமையாதோ? இப்படியானன்றோ ஆவேசாவதாரங்களுக்கும் ப்ரதிஷ்டாபநாதிகளைச் சொல்லுகிற சாஸ்த்ரம் கூடுவது என்னில்;

---

¹பார. உத். 17. 25. (யாநஸந்தி) ²பார. மௌ. 8. 26

³ஜரத்கவம் கம்பலபாதுகாப்யாம் த்வாரி ஸ்திதோ காயதி மத்ரகாணி । தம் ப்ராஹ்மணீ ப்ருச்சதி புத்ரகாமா ராஜந் ருமாயாம் லசுநஸ்ய கோऽர்த்த: ॥ என்று அர்த்தமில்லாத ச்லோகம்.

‡ஈச்வரன் 'தேநவஞ்சயதே லோகாந் மாயாயோகேந கேசவ:' 'சோகமயிஷ்யா ஜகத் ஸர்வம்' இத்யாதிகளிற்படியே அஜ்ஞாநகர்மவச்யத்வாதிகளை லீலார்த்தகளாலே நடத்துகிறான் என்று தோற்றுகையாலே விருத்தம்-வ.

இதுவும் ¹"ஸ்ருஷ்டிம் தத: கரிஷ்யாமி த்வாமாவிஸ்ய ப்ரஜாபதே" என்றும் ²"அநுப்ரவிஸ்ய கார்யாணி ப்ரஜ லோகம் ஸங்கல்பம்" என்றும், ³"ஆவிஷ்டமாத்ராஸ்தே வாவெட:" என் இப்படிகளில் வசனங்களாலே ப்ரஸித்தம். வ ஸ்ருஷ்டிகள் ஸ்வாவதாரத்தில் த்தா அகப்பட்ட உக்தமாயிறே இருப்பது. ஆவே சாவதாரங்களில் ஸ்ருஷ்டி ப்ரஜாபதிகளெல்லாம் ஸ்ருஷ்டப்ரஜாபதிகளின் ந்யாயத்தாலே அவ்வோ வ விஸிஷ்டவாஸநாதிவிஷயங்களாதல், அவ்வோ ஜீவர்களை *ஆவேசிக்கும் அதற்குத் தாத்காலிகமான ஸாக்ஷாதவதாரவிஷயங்களாதலாம். இப்படி ஆவேஸாவதாரம் கொள்ளுமிடத்தில், விஸிஷ்டந்யாயத்திலே சொன்னவையெல்லாம் ஸாக்ஷாதவதாரங்களாகக் கொள்ளப் ப்ரஸக்திக்கும். 16.

ஸம்ஸாராவதாரங்களில் தோற்றின அஜ்ஞாநாதிகளெல்லாம் அபிநயமாத்ரமாறுபோலன்றிக்கே வாஸ்தவமாக அஜ்ஞராய், ப்ராந்திகளாய், கர்மவஸ்யராயிருக்கிற ஸம்ஸாரிகளுக்கு ஜ்ஞாந-ஸக்தி-ஸௌஸீல்யாதிகள் நித்யவிருத்தங்களாகக் கூடுமோ என்னில்; ஸ்வரூபம் ப்ரகாஸிக்கையும், வேறே சில ப்ரகாஸியாதொழிகையும், ஸ்வரூபம் அநாவ்ருதமாயிருக்கையும் வேறே சில ஆவ்ருதமாயிருக்கையும், ஸ்வரூபத்தில் விகாராதிகளுங்கள் அற்றிருக்கையும், ஸ்வாபாவத்தாலே ஸம்பஸ்ருஷ்டவிஷயமாய் அதின் ஸங்களை அநுபவிக்கையும் விருத்தமன்று. 17.

1 2 வி. தர்மம். 108. 50. 3 * ஆவேசிக்குமதுக்குத் துல்யகாலமான—க.

திவ்யஸூரிகளோடு ஸஜாதீயனாய் அவதரிப்பதா கநினைத்த போதும், 1இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ: ஸுத்த ஸத்த்வமான தேஜோமயமான ஸ்வரூபத்தை ஸ்வீகரித்து என்று சொல்லுகையாலும் அந்த இச்சையாலே தேஜோமயங்கள் ஸம்ஸாரி ஜனங்களுக்கு ஸகல நயனங்களாமத்தனை போக்கி, ஸ்வரூபத்தில் வ்யவஸாயமாகக் கூடுமோ என்னில்; மல்லிகைப்பூவிற்கு கெட்டும் வெறுப்பும் வாராநிற்கச் செய்தே ஒன்று கர்மோபாதியாய், ஒன்று ஸ்வாபாவிகமாய் இருக்கிறப்போலே, இங்கு ‡ஸ்வபாவஜ்ஞாநவிகாஸவிஷயங்களான தேஹாதிகள் உபாயிகங்களாய், உபாயிகழிந்தால் $ஸஜாதீயங்களோடொக்க ஸ்வாபாவிகமான ஆகாரம் § உண்டாகக் குறையில்லை. தேஹாதிகளைப் ப்ராக்ருதியங்கள் என்கிற விடம் ப்ராக்ருதிஸம்ஸர்க்க ப்ரயோஜநங்கள் என்றபடி. 18.

ஸ்வரூபஜ்ஞாநமில்லாமையாலே அநாதியாக க்ஷேத்ரஜ்ஞர்களுக்கு *தேஹாத்மாபிமாநாதிகள் நடவாநிற்க, ஸ்வாத்மஸ்வரூபம் ஸ்வயம் ப்ரகாஸிக்கிறது என்கை கூடுமோ என்னில்; அயிஷ்டாநமான ஸ்வரூபம் ப்ரகாஸிக்கையும், அதில் கிடக்கிற †விஸேஷாகாரங்கள் தோற்றாமையாலே. வேறொன்றை அதிலே ஆரோபிக்கையும் ஸகலருக்கும் பொதுவாகையாலே, இங்கும் ஆத்மஸ்வரூபம் ‡ப்ரகாஸிக்கைக்கும். தேஹாதிகளிற்

1 வி. பு. 6. 7. 22.   ‡ தர்மபூதஜ்ஞாநவிகாஸவிஷயங்களான —க.
$ ஸஜாதீயரோடொக்க—வ.   § உண்டாக்க—க.
* தேஹாத்மாபிமாநாதிகள்—க.   †விஸேஷங்களாகிற ஸேஷங்கள்—க.
† ப்ரகாஸிப்பிக்கைக்கும்—க.

காட்டில் ஹேதுமான யஜ்ஞங்கள் தோற்றாமையாலே தேஹாத்மப்ரமாதிகள் நடக்கைக்கும் விரோதமில்லை. 19.

ஆத்மா ஜ்ஞாநஸ்வரூபனாய் ஸ்வயம்ப்ரகாசனாய் இருக்கிறான் என்று கொள்ளில், ஸுஷுப்த்யாதிகளிலும் தோற்றவேண்டாவோ? ஸுஷுப்தியில் தன்னையும் தான் அறியாதிருக்கிறான் என்றன்றோ சாஸ்த்ரம் சொல்லுகிறது? ஆகையாலே ஜ்ஞாநஸ்வரூபனாய் ஸ்வயம்ப்ரகாசனாய் இருக்கக்கூடா தென்கிற விடம்; தர்மபூதஜ்ஞாநத்தாலே தனக்குத் தான் தோற்றுகையாலே உபசரித்ததாமத்தனையன்றோ என்னில்; இது ஜ்ஞாநஸ்வரூபனுமாய் ஜ்ஞாநகுணகனுமாய் இருக்கிறான் என்று பிரியச் சொல்லுகிற ச்ருத்யாதிவாக்யங்களாலே பரிஹ்ருதம். ஸுஷுப்த்யாதிகளிலும் ஸ்வரூபம் ப்ரகாசியாநிற்க ஆகாராந்தரவிசிஷ்டமாய்த் தோற்றாமையாலே வைசத்யம் இல்லாதவளவே யுள்ளது. அவ்வளவாலே அப்போது தன்னையும் § அறிகிறிலன் என்கிற வாக்யங்களுக்கும் விரோதமில்லை. 20.

இப்படி ஜ்ஞாநஸ்வரூபனாகில் ஜ்ஞாநாச்ரயத்வம் சொன்னவிடம், 'ஞானம் அறியாநின்றது', 'கண் காணாநின்றது' என்கிற இடங்களிற் போலே உபசாரமாகாதோ? ஜ்ஞாநத்திற்கு ஜ்ஞாநாச்ரயத்வம் இல்லை என்னுமிடம் தர்மபூதஜ்ஞாநத்திலே கண்டிலோமோ யென்னில், இது உபஸம்ஹாரஸூத்ரத்தாலும் அந்யதாஸித்தி சொல்லவொண்ணாத ச்ருத்யாதிவாக்யங்களாலும் தத்தோத்தரம். ஸஜாதீயங்களுக்கு தர்மதர்மிபாவம் கூடுமோ என்கிறதுவும் தத்தோத்தரம். எங்கும் தர்மதர்மி

§ அறிகிலேன் — க.

கருக்கு ஓர் ஆகாரத்தாலே ஸஜாதீயத்வமும் ஓர் ஆகாரத்தாலே வைஜாத்யமும் உண்டாயிறே இருப்பது. தர்மபூதஜ்ஞாநத்திற்கு ஜ்ஞாத்ருத்வம் இல்லை என்னுமிடம் கண்டபடி கொண்டோம். 21.

[1]"நாஹம் தேவோ ந நர:" "நாயம் தேவோ ந ஸ்திதப்ரா வா:" இத்யாதிகளின்படியே ஜ்ஞாத்ருத்வாதிகளாலே தேஹாதிவிலக்ஷணனாக தன்னைத் தெளிந்தவனுக்கு பின்னையொரு கர்த்தவ்யமும் உண்டோ? சில ஜாத்யாதிகளை முன்னிட்டுக் கொண்டன்றோ கர்த்தவ்யங்களை ஶாஸ்த்ரங்கள் விதிக்கின்றன. ஆனால் தன் ஸ்வரூபத்தில் வர்ணாஶ்ரமாதிகள் ஒன்றுமில்லை என்று தெளிந்தால், அவ்வோகர்மங்களில் அதிகாரியாம்படி எங்ஙனேயென்னில், தன் ஸ்வபாவத்தை தேஹாதிவிலக்ஷணம் என்று தெளியாதவனுக்கே வர்ணாஶ்ரமாதிகளுக்குப் போலே ஶாஸ்த்ராதிகாரம் இல்லையாவது; தெளிந்தவனுக்கு தன்னிற்காட்டில் பிரியத்தோற்றின புத்ரக்ஷேத்ராதிகளோடு உண்டான ஸம்பந்தத்தாலே ராஜாஜ்ஞாதிகளால் வரும் தேவைகள் போலே இங்கு தன்னில் பிரியத் தோற்றின ஶரீராதிகளோடே தனக்கு உண்டான ஸம்பந்தவிஶேஷத்தாலே, [3]"ராஜாதிராஜ: ஸர்வேஷாம் விஷ்ணுர்ப்ரஹ்மமயோ மஹாந் । ஈஶ்வரம் தம் விஜாநீமஸ் ஸ பிதா ஸ ப்ரஜாபதி:" என்கிறபடியே ஸர்வருக்கும் ராஜாதிராஜனான ஸர்வேஶ்வரனுடைய ஶாஸநவிஶேஷங்கள் அடியாகக் கர்த்தவ்யவிஶேஷங்கள் உண்டாகக் குறை இல்லை. 22.

---

1 [2]வி. பு. 2. 13. 98. [3]பார. ஆஶ்வ. 43. 13.

ஆனாலும், [1]"யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாதாத்மத்ருப்தஶ்ச மாநவ: । ஆத்மந்யேவ ச ஸந்துஷ்டஸ் தஸ்ய கார்யம் ந வித்யதே" இத்யாதிகளிற்படியே ஆத்மாநுபவத்ருப்தனுக்குக் கர்த்தவ்யமுண்டோ வென்னில், இப்படி ஶாஸ்த்ரீயமான கர்த்தவ்யநிஷேதம் பண்ணுகிற வசநங்கள் யோகதஶையிலும் மோக்ஷதஶையிலுமாகக் கடவன என்று ஶாஸ்த்ரங்கள்தானே நியமித்தன. இங்ஙனல்லாதபோது ஜ்ஞாநிக்கு போஜநாதிகர்த்தவ்யங்களும் தவிரப் ப்ரஸஜிக்கும். அவற்றைத் தவிர்ந்தால், துக்கங்கள் வரக்காணா நின்றோமென்னில், *தனக்கடுத்த ஶாஸ்த்ரங்களை ஸமாதிவ்யதிரிக்ததஶையில் தவிர்ந்தாலும், தன் அதிகாராநுகுணமாகத் துக்கங்கள் வரும் என்னுமிடம் ஶாஸ்த்ரங்களாலே காணா நின்றோம். 23.

இப்படி ஸ்வரூபஜ்ஞாநமுடையவனுக்கும் ஸமாதியொழிந்த †தஶையில் கர்த்தவ்யாந்தரம் உண்டானாலும் ஸமதர்ஶநத்யாகப்ரஸக்தனாகத் தன்னைத் தெளிந்தவனுக்கு அநர்த்தகம் வரும்படியான இந்த்ராதிஸமாராதநங்கள் கர்த்தவ்யங்களாமோ? இவன் தேவதாஜீவிகளைப்போலே யாஜயாஜியாக வன்றோ ‡ப்ராப்தன் என்னில்; ஸாமாந்யவிஶேஷஜ்ஞாநமுடைய பரனைக் காங்க்ஷிக்கும் தன் அதிகாரவிஶேஷத்தாலே இந்த்ராதிஶப்தங்களைக்கொண்டு யஜித்தாலும், த்ரைவர்ணிக ஶரீரகனாகப் பரமாத்மாவை உபாஸிக்குமிடத்தில், அவ்வோ அசித்துக்கள் நின்ற மாத்ரம்; இந்த்ராதி

[1] கீதை. 3. 17. *தனக்கடுத்தஶாஸ்த்ரார்த்தங்களை—வ.
†தசையிலும்—க. ‡ப்ராப்தம்—ம.

ஶரீரகனான பரமாத்மாவை உத்தேசித்துப் ப்ரவ்ருத்தி க்ரமவனுக்கு இவ்விஶேஷணங்கள் காலாகாராதிங்களாய் ஆராத்யங்களாக உத்தேஶ்யமல்லாமையாலும் சில இடங்களில் அநந்யஸாதாரணஜீவலிங்கங்கள் §இல்லாத போது [1]"ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:" என்கிற கட்டளையிலே அக்நீந்த்ராதிஶப்தங்கள் தானே வ்யுத்பத்திவிஶேஷத்தாலே பகவதஸாதாரணங்களான திருநாமங்கள் போலே ஸாக்ஷாத் பகவத்வாசகங்களாகையாலும், இப்ப்ரதிபத்திவிஶேஷமுடையவனுக்கு எங்கும் ஸ்வயாஜ்யத்வமேயாகையால், அந்யயஜநதோஷமில்லை. சில காமநாவிஶேஷத்தாலே பகவத்விஶேஷணமான நிலையைப் பாராதே தேவதாந்தரங்களைப் பற்றுவார்க்கு அந்யயஜநதோஷம் வரும். 24.

ஜ்ஞாநஸ்வரூபனுமாய் ஜ்ஞாதாவுமான இவ்வாத்மாவினுடைய தர்மபூதஜ்ஞாநத்திற்கு உத்பத்திநாஶாதிகள் ப்ரத்யக்ஷாதிஸகலப்ரமாணங்களாலும் காணநிற்க, இவனுடைய தர்மபூதஜ்ஞாநம் நித்யம் என்னப் போமோ? இப்படிச் சொன்ன இடங்கள் ஸ்வரூபஜ்ஞாநவிஷயமாமத்தனையன்றோ என்னில்; இது [2]"யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாளநாந்மணே:" இத்யாதிவசநங்களாலே ஜீவனுடைய ஜ்ஞாநம் நித்யமாய் கர்மவிஶேஷத்தாலே ஒருக்கால் திரோஹிதமாய், ஒருக்கால் ப்ரகாஶிக்கிறது என்கையாலே ஸித்தம். இப்படி நித்யம் என்று ப்ரமாணஸித்தமான தர்மபூதஜ்ஞாநத்திற்கு அவஸ்தாபேதத்தாலே உத்பத்திநாஶாதிவ்யவஹாரம் உபபந்நம். 25.

[1] ப்ர. ஸூ. 1. 2. 29. [2] வி. தர். 104. 55. § இல்லாதவிடத்தில்—க.

ஆனாலும் ஸ்வயம்ப்ரகாசஸ்வபாவமான ஜ்ஞானம் ஒன்றாலே திரோஹிதமாய் ப்ரகாசியாதே கிடக்கிறது என்றால், §காஷ்டாதிகள் சொல்லுங்கட்டளையாகாதோ? ஆனபின்பு ¶ப்ரகாசியாதபோதே ஜ்ஞானம் இல்லையாக வேண்டாவோ என்னில்; தர்மபூதஜ்ஞானத்தினுடைய நித்யத்வவசநத்தைக் குலையாமைக்காக இது *விஷயப்ரகாசகாலத்திலே ஜ்ஞானாந்தரநிரபேக்ஷமாக ப்ரகாசிக்கும் என்று இப்படியே இதினுடைய †ஸ்வயம்ப்ரகாசத்வத்தை நியமித்தபடியாலே, ப்ரகாசியாதகாலத்திலும் ‡தர்மபூதஜ்ஞானஸத்பாவத்திற்கு விரோதமில்லை. 26.

ஜ்ஞானமாவது புருஷனுடைய தர்மவிசேஷமாக வன்றோ ப்ரத்யக்ஷாதிகளால் தோற்றுகிறது. இப்படியானால் ஆத்மஸ்வரூபத்தை ஜ்ஞானம் என்கை விரோதமன்றோ வென்னில்; தர்மபூதமான ஜ்ஞானமும் தர்மியான ஜ்ஞானமும் வேறாகையால் விரோதமில்லை. தர்மியையும் [1]"ஜ்ஞானஸ்வரூபமத்யந்தநிர்மலம்", [2]"ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா" என்கிறபடியே ஸ்வஸ்மை ப்ரகாசமாகையாலே ஜ்ஞானமென்னக் குறையில்லை. ஆத்மஸ்வரூபத்தினுடைய ஸ்வஸ்மைத்வம் ஸாதாரணம். கர்மவச்யருடைய தர்மபூதஜ்ஞானத்திற்கு ஸ்வஸ்மைத்வம் ப்ரதிகர்மவ்யவஸ்தையாலும்

[1] வி. பு. 1. 2 6. [2]   §காஷ்டாதிகள் சொல்லும்—க.
¶ப்ரகாசியாதபோது—க. *விஷயப்ரகாசத்திலே—க.
†ஸ்வயம்ப்ரகாசத்வம் நியமித்தபடியாகையாலே—க.
‡தர்மபூதஜ்ஞானத்திற்கு—க.

உதாஸீநதையாலும் இடையிடப்பட்டு நாநா ப்ரகாரமாயிருக்கும். 27.

இப்படி ஆத்மஸ்வரூபமும் நித்யமாக ப்ரகாஶிக்கிறதாகில் திரோஹிதமாய்க் கிடந்து ஸம்ஸாரதஶையிலும் முக்ததஶையிலும் ப்ரகாஶிக்கிறது என்கை விரோதமன்றோ என்னில்; தர்மமான ஜ்ஞாநமும் நிர்விகார ஸ்வரூப ப்ரகாஶத்தாலே எப்போதும் தோற்றி தீவ்ரமான அஜ்ஞாநமும் அநாதிகர்மப்ரவாஹ வாஸநாருசிவிஶேஷத்தாலே திரோஹிதமாய், பின்பு ஸாதநதஶைகளிலே ஶாஸ்த்ரஜந்யஜ்ஞாநத்தாலே அநுஸந்தேயமாகிறது. ஆகையாலே ப்ரகாஶதிரோதாநங்கள் பிந்நவிஷயமாகையாலே விரோதமில்லை. 28.

இப்படியானால் தர்மமான ஜ்ஞாநமும் நித்யாநுபவமாய் நின்றது; முக்ததஶையில் அநுபவிக்கும் தீவ்ரமான ஸ்வரூபாநுபவமும் திரோதாயகங்களான ஸர்வகர்மங்களும் கழிகையாலே பரமாத்மாநுபவாநந்தத்தோடேகூட நிற்கவேண்டி §இருந்தது; ஸம்ஸாரதஶையில் ஸ்வரூபாநுபவமும் உபாயகோடியிலே சொருகி நின்றது. இப்படி இருக்க ஶப்தாதிவிஷயாநுபவத்தோடும் பகவதநுபவத்தோடும் கூடாத ஸ்வரூபாநுபவம் என்று ஒரு புருஷார்த்தத்தை போகமோக்ஷங்களோடொக்க $பிரிய எண்ணுகை யுக்தமோ என்னில்; ஸம்ஸாரதஶையிலே ஆத்மாவினுடைய தீவ்ராநுபவத்தைக் கண்டாதல், முன்பே கேட்டாதல், கர்மவிஶேஷவஶத்தாலே *அவ்

§இருந்து—க. $பிரியவேண்டுமென்கை—ங *அநுபவாநுவ்ருத்தியிலே—க

ப்ரஸாதநாவ்ருத்தியிலே ஆசையுடையனாய், அதுக்கீடான உபாயாநுஷ்டாநம் பண்ணி, அப்படி ¶அநுபவிக்கையில் விரோதமில்லை. *இவ்வளவு அநுபவமுடையவனை முக்தனென்ற விடம் [1]"யஸ்யாஸக்தம் மநஸ:" இத்யாதிகளிற் போலே உபசாரம். 29.

[2]"கைவல்யம் ஸமவாப்தம் ச ஸாயுஜ்யம் ஸாயுஜ்யதி" என்று ஸ்வாத்மாநுபவத்தைக் கைவல்யம் என்கையாலும், [3]"முக்தி: கைவல்யநிர்வாணஶ்ரேயோ நி:ஶ்ரேயஸாம்ருதா:" என்று பர்யாயங்களாகப் படிக்கையாலே கைவல்யசப்தமும் முக்திவாசகசப்தமாகையாலும், ந்யாயஸித்தாஞ்ஜநாதிசப்தங்களிற்போலே ஸ்வாத்மாநுபவமே மோக்ஷமாய், பகவதநுபவம் இவ்வாத்மாநுபவஸித்திக்கு உபாயமாதல், ஸ்ரீவிஷ்ணுதர்மாதிகளிலே மோக்ஷவிஷயமாதல் ஆனாலோ என்னில், இது †முக்தனுக்குப் பரமாத்மாவை ப்ராப்யன் என்று சொல்லுகிற ஶ்ருதி - ஸ்ம்ருதி - இதிஹாஸ - புராணங்களாலும் விருத்தம். இப்படி பகவதநுபவபரித்யாகத்திலே கைவல்யசப்தம் பதவிரோதிகளும் கழிகையாலே உபபந்நம். ஆத்மாநுபவமாத்ரத்தில் கைவல்யசப்தம் கேவலாத்மாநுபவவிவக்ஷையாலே ப்ரயோகிக்கப்படுகிறது. 30.

[4]"யே து ஶிஷ்டாஸ்த்ரயோ பக்தா: பலகாமா ஹி தே மதா: । ஸர்வே ச்யவநதர்மாண: ப்ரதிபுத்தஸ்து மோக்ஷபாக்" என்கையாலே ஐஶ்வர்யம் போலே

[1] கீதை 5. 2. 8. [2] பைங்க. உப. ஸ்ரு. 3. 40. [3] அமர. 10. 146.
[4] பார. சா. 350. 35 ¶ அநுபவிக்கவிரோதமில்லை — க.
* இவ்வநுபவமுடையவனை — வ. † முக்தனுக்கும் — க.

இங்கு 'வ்ரஜ' என்று ப்ரபத்தியை உபாயமாக விதியாநிற்க, 'ஏகம் ஶரணம்' என்றும், ¹"த்வமேவோபாயதா யாச்ஞா" என்றும், ²"த்வமேவோபாயபூதோ மே" என்றும் சொல்லுகை கடிக்குமோ என்னில், ப்ரதாநமான ஸித்தோபாயம் ஸஹஜகாருண்யாதிவிஶிஷ்டனாய்க் கொண்டு ஸர்வஸ்வீகாரம் பண்ணி நிற்கிறவன் ஒருவனுமேயாகையாலும், அவனுடைய வஶீகரணார்த்தமாக விதிக்கப்படுகிற வ்யாஜமாத்ரமான ஸாத்யோபாயத்தில் ப்ராதாந்யவிவக்ஷை பண்ணுகை உசிதமல்லாமையாலும் இப்படி வ்யபதேஶிக்க விரோதமில்லை. 92.

சரமஶ்லோகத்தில் விதிக்கப்படுகிற ப்ரபத்தியைப் ப்ரஸ்துதமான பக்தியோகத்திற்கு விரோதிபாபநிவர்த்தகமாக பாஷ்யாதிகளிலே நிர்வஹியாநிற்க, இதுதானே நிரபேக்ஷமாக ஸமஸ்தப்ராப்த்யர்த்தம் என்று நிர்வஹிக்கை ஸித்தாந்தவிருத்தமாகாதோ என்னில், ப்ரபத்திரூபோபாயம் ஸகலபலஸாதநமாக பஹுப்ரமாணஸித்தமாகையாலே அதிகாராநுகுணமாக அங்கரூபத்தாலும் ஸ்வதந்த்ரரூபத்தாலும் நிற்கும் நிலையை பாஷ்யாதிகளிலும் *ஸூத்ராதிகளிலும் அருளிச்செய்கையாலே அங்கமாக யோஜித்தவிடம் உபலக்ஷணமாகையால், 'ப்ரபத்தி ஸாக்ஷாந்மோக்ஷஸாதநம்' என்று நிர்வஹித்தால் ஸித்தாந்தவிரோதமில்லை. 93.

ப்ரபத்தியை பாபநிவ்ருத்திஸாதநமாக இவ்வாக்யம் சொல்லாநின்றால் இது ப்ராயஶ்சித்தவிஶேஷமாமத்தனையன்றோ? பக்தியோகம்போலே ஸமஸ்தப்ராப்திக்கு

¹பரதமுனி. ²அஹிர். ஸம். 37-31. *ஸூத்ரங்களிலும்—க.

ஸாக்ஷாத்ஸாதநமாம்படி யென்னென்னில், ஸர்வபாப நிவ்ருத்தியொழிய ப4க்தியோக3த்திற்கும் ஸாத்4யமில்லாமையாலும், இங்கும் அது சொல்லுகையாலும், ஸர்வபாப நிவ்ருத்தியில் ப4க3வத3நுப4வம் ஸ்வத:ஸித்3த4மாகையாலும், ப4க்தியைப் போலே ப்ரபத்தியையும் ப4க3வத்ப்ராப்திக்கு ஸாக்ஷாத் ஸாத4நம் என்னக் குறையில்லை. 94.

'மோக்ஷோபாய நிஷ்டனுக்கு உத்தராவதி4 ஶேஷம் ப்ராரப்3த4விஷயம்' †என்று ஶ்ருதிஸூத்ரஸித்3தா4ந்தங்களைக் கொண்டு பா4ஷ்யாதி3களிலே ஸாதி4யா நிற்க, இங்கு 'ஸர்வபாபேப்4யோ மோக்ஷயிஷ்யாமி' என்கிற இது ஸமஞ்ஜஸமாக நிர்வஹிக்கும்படி யென்னென்னில், இவ்விடத்திலும் 'ஸர்வஶப்3த3ம் ப்ரகரணவஶத்தாலே பூர்வாக4 ப்ரதிப3ந்த4கவிஷயமானால் விரோதமில்லை; பூர்வாக4த்தையும் ப்ரஸ்வீகரித்தாலும், ஈஶ்வரன் அவ்வோ ப்ரபந்நருடைய ஆர்த்தி - ருசி - ப்ரக்ருத்யநுஸாரமாக, [1]"ப்ராயஶ்சித்திரியம் ஸாத்ர யத் புந: ஶரணம் வ்ரஜேத்" இத்யாதிகளிற்படியே யதா2தி4காரம் ப்ராயஶ்சித்தத்திலே மூட்டியாதல், ராஜபுத்ராபராத4த்திற் போலே ஶ்ருதிவிஶேஷங்களில் சொல்லுகிற ந்யாயத்தாலே ஸ்வல்பங்களான அநிஷ்டங்களாலேயாதல், பூர்வோத்தராக4த்திற்கும் செலவு செய்கையாலே, அவற்றையும் பற்ற 'மோக்ஷயிஷ்யாமி' ‡என்கையிலும் விரோதமில்லை. [2]"திருமறுமார்வ" என்கிறபாட்டில், [2]"அருவினைப் பயனதுய்யார்" என்றதுவும் ஸர்வபாபநிவ்ருத்தி

---

[1] ல.த. 17. 92. [2] திருமாலை, 40. † என்கிற-க ‡ என்கையாலும்-க

லும், உத்தராகங்களில் *ப்ராமாதிகத்திலும் புத்திபூர்வோத்தராகத்தில் ப்ராயச்சித்தாதிமுகத்தாலே அக நிவ்ருத்திகளும் ப்ரமாணாநுகுணமாகச் சொன்ன கட்டளையிலே கண்டு கொள்வது. 95.

இப்படி ஸகலபாபத்திற்கு ஸங்க்ஷயமில்லாதபடி கொள்ளில், ப்ராரப்தகர்மமும் நிஶ்ஶேஷமாகக் கழிந்து ப்ரபந்நரெல்லாரும் அந்த க்ஷணத்திலே முக்தராக வேண்டாவோ என்னில், இங்கு 'ஸர்வபாப:' என்கிற வாக்யஸாமர்த்யத்தாலே ஶோகவிஷயமானவை யெல்லாம் கழிகையிலே †தாத்பர்யமாகையாலே, தீவ்ர ஸம்வேகம் இல்லாதார்க்கு [1]"ப்ராரப்தாத்ருஷ்டஹேதுகவிஷ ஸாங்கோபாங்யாக:" இத்யாதிகளிற்படியே ‡ப்ராரப்தஶரீராதிகள் நிற்கக் குறையில்லை. 96.

இப்படி ப்ரபந்நனுக்கு ப்ராரப்தகர்மம் கழியாதாகில், உபாஸகனுக்குப் போலே §இவனுக்கும் ப்ராரப்தகர்மாவஸாநத்திலே மோக்ஷமாகவேண்டாவோ என்னில், $இதற்கும் "ஸர்வபாப:" என்கிற இத்தாலே பரிஹாரம்; எங்ஙனேயென்னில், இவனுக்கு கர்ப்பவாஸாதிகளில் ¶உதேஶஸம்பவத்தாலே ப்ராரப்தத்தில் ஜந்மாந்தராதிஹேதுவான அம்சம் கழியும்; இஶ்ஶரீ

1 *ப்ராமாதிகத்தாலும் நேராகிற்கும் புத்திபூர்வோத்தராகத்தில் ப்ராமாணுகுணமாக ப்ராயச்சித்தாதி முகத்தாலே-க. †தாத்பர்யம். ஆகையாலே—க ‡ப்ராரப்தசரீராதிகளுக்கிடாகக் குறையில்லை-க. சரீராதிகள் கிடக்க—வ. §இவருக்கும்—க. $இங்கு ஸர்வபாப: என்கிறத்தாலே பரிஹாரம். இவனுக்கு கர்ப்பவாஸாதிகளில்—க. ¶உதேஶாதிப்ராயத்தாலே—வ.

ரம் தன்னிலும், இவனுடைய உபேக்ஷைத்தளவுக்கீடாக ||காருண்யமெல்லாம் வழிக்கும். 97.

இப்படி ப்ரபத்திவஶீக்ருதனான ஈஶ்வரன் அநிஷ்டமெல்லாம் கழிக்கிறானாகில், ப்ராரப்தஶரீரத்தில் து:க்கஹேதுவான பாபாம்ஶம் கழியவேண்டாவோ என்னில், இவன் அவ்வம்சத்தையும் பற்ற உதாஸீநனாய் ப்ரபத்தி பண்ணுமையாலும், அவ்வளவில் இவன் ஸம்ஸாரதோஷம் மறவாமைக்காகவும், ஶிக்ஷார்த்தமாகவும், ப்ராரப்தத்தில் பாபாம்ஶஸாத்யமான க்லேஶங்களை ஹிதபரனான ஈஶ்வரன் அநுபவிப்பிக்கிறான்.
[1] "ஹரிர்து:க்காநி பக்தேப்யோ ஹிதபுத்த்யா கரோதி ஹி । ஶஸ்த்ரக்ஷாராக்நிகர்மாணி ஸ்வபுத்ராய யதா பிதா ॥" இத்யாதிகளுக்கும் இஶ்ஶரீரத்தில் ப்ராரப்த பாபஸாத்யமான து:க்கங்களிலே தாத்பர்யம். 98.

இப்படியானாலும் *இஶ்ஶரீராநுபந்தியான க்லேஶமெல்லாம் ஶமிக்கவேண்டும் என்று ப்ரபத்தி பண்ணினவனுக்கு முக்தருக்குப்போலே ஸர்வக்லேஶ நிவ்ருத்தி உண்டாகவேண்டாவோ என்னில், †இங்ஙன் ப்ரபத்திபண்ணுகை கூடாது: சரீரம் இருக்கவேண்டும் என்று நினைக்கிறபோதே ஶரீராநுபந்தியான து:க்கங்களுக்கு ஹேதுவான ஊணும் உறக்கமும் ஶத்ருஜயாதிகளும் இஷ்டங்களாகையாலே, [2]"அநேந ஶீதேந தோயேந த்ருஷா ஹந்யதே க்ஷுதா । க்ரியதே ஸ்வேதக்ருச்ச்ரம் தஸ்மிந்நோஷ்ணே பவேதிதி" இத்யாதிகளிற்படியே க்ஷுத்பிபாஸாதிகளையொழிய இவ்

1 [2]வி. பு. 1. 17. 64. ||காலவ்யவஸ்தை—க.
*இச்சரீரா நுபந்தியுமான—க. †இங்கிவன்—க.

ஸாதநங்கள் ஸித்தியாமையாலே, சரீரத்தோடே இருக்க இசைந்த காலம் ஸ்வவ்யாபாரநிவ்ருத்தியைக் கணிசிக்கக் கூடாது. விசேஷித்து ப்ராயஶ்சித்தாதிக்ருத்யங்களைப் பற்ற அஶக்த-ஶக்த-ஸாதாரணமாக ப்ரபத்தி பண்ணினால், அவை ஶமிக்கக் காணாநின்றோம். 99.

ப்ரபந்நனைப் பற்ற 'மா ஶுச:' என்று சொன்னால், இவன் ஏதேனும் ஒன்றைப் பற்ற ஶோகிக்கில் தன் நிஷ்டைக்கு விருத்தமாகாதோ? வ்யாஸவஸிஷ்டாதிகளான மஹாயோகிகளும் கூட ஓரளவிலே ஶோகிக்கக் காணாநிற்க, சரீரத்தோடிருப்பானொருவனுக்கு ஸர்வஶோகங்களையும் விட்டிருக்கை அஶக்யமன்றோ என்னில், இவ்விடத்தில் ஸர்வஜ்ஞத்வஶக்த்யாதிபூர்ணனாயிருக்கிற தனக்கு உபாயாந்தரங்களில் அநர்ஹதையாலே பிறந்த ஶோகத்தையும் கோலின ஃபலத்தையும் பற்ற கர்தவ்யஶேஷம் உண்டோ என்று இப்புடைகளில் உள்ள ஶோகங்களையும் கழிக்கிறதாகையாலே, லௌகிகஶோகங்களுக்கும் ஸம்பந்திஜநவிஶ்லேஷாதிகளால் வரும் ஶோகங்களுக்கும் ப்ரபத்திநிஷ்டையோடு விரோதமில்லை. 100.

இதி ஶீதோக்தஶமோபேதே விஶேஷாநுவிஶேஷணம் ।
ஶங்காதத்பரிஹாராணாம் ஸரணி: ஸங்க்ஷேபத: க்ருதா ॥

இதி விரோதபரிஹாரே
சரமோபாயாதிகார: த்ருதீய: ॥

திருமந்த்ரமும் த்வயமும் மந்த்ரங்களானபடியாலே ஸம்ரக்ஷணீயமாக உபதேசிக்கவேண்டுகையாலே இவற்றை ரஹஸ்யங்கள் என்னப் ப்ராப்தம்; [1]"ஶ்ராவயேச் சதுரோ வர்ணாந் க்ருத்வா ப்ராஹ்மணமக்ரத:" என்று திரளிலே கேட்பிக்கலான இதிஹாஸத்திலே *ஏற்பட்டுக் கிடக்கிற சரமஶ்லோகத்தைக் கூட்டி 'ரஹஸ்யத்ரயம்' என்று உபதேசிக்கைக்கு அடியென்னென்னில், திருமந்த்ரமும் த்வயமும் ஶப்தார்த்தங்கள் இரண்டாலும் ரஹஸ்யங்களாயிருக்கும்; சரமஶ்லோகம் ஶப்தம் ப்ரகாசமாய்ச் சொல்லலாமாகிலும், அதிரஹஸ்யமான அர்த்தவிஶேஷத்தாலே ரஹஸ்யமாயிருக்கும். ஆகையால் இவை மூன்றும் முமுக்ஷுக்களுக்குப் ப்ரதானோபஜீவ்யங்களான ரஹஸ்யங்களாகையால், 'ரஹஸ்யத்ரயம்' என்று ஆதரிக்கப்படுகிறது. 101.

இப்படி இவை மூன்றும் ஆதரணீயங்களாக வேண்டுமோ? சரமஶ்லோகத்தில் உபாயவிஶேஷத்தை விளங்கக் கண்டு, த்வயத்தைக் கொண்டு அநுஷ்டித்து க்ருதக்ருத்யனாய் விடலாயிருக்க, முமுக்ஷுவாய் ப்ரபத்தி பண்ணுகிற அதிகாரிக்கு திருமந்த்ரத்தாலே ப்ரயோஜநமென்னென்னில், இவ்வதிகாரிக்கு அநந்யார்ஹஶேஷத்வ பாரதந்த்ர்யாதிகள் தெளியவேண்டுகையால் அதற்காக யதாதிகாரம் வைதிகதர்ஶனக் கட்டளையிலே திருமந்த்ரார்த்தாநுஸந்தானம் உபஜீவ்யமாகையால், திருமந்த்ரம் அவஶ்யாபேக்ஷிதம். 102.

*ஏற்றப்பட்டு—க. ஓதப்பட்டு—ங.

இப்படியாகில் திருமந்த்ரம் தன்னாலே ஆத்ம ஸமர்ப்பணமும் ஸாங்கமாயிருக்கையால், த்வயத்தால் அபேக்ஷையென்னென்னில், திருமந்த்ரத்தால் ஆத்மஸமர்ப்பணம் ஸித்தமேயாகிலும், விதாநஸந்தாநம் ஸித்தமன்று; ஆகையால் பூர்வோக்த நித்யயோகாதிகளையும், விசிஷ்டமான ஸித்தோபாயத்தையும், விசிஷ்டமான ப்ராப்யத்தையும், ப்ராப்யனான ஈச்வரன் தானே ப்ராபகனாய் நிற்கிற நிலையையும், ஸௌசீல்யமான வசீகரண விசேஷத்தையும், தெளிய ப்ரகாசிப்பிக்கிற த்வயம் ஸ்வரக்ஷாபரஸமர்ப்பண உபதேசத்தில் அநுஷ்டாநவிளம்பத்தால் அவகாசம். 103.

இப்படியானாலும் திருமந்த்ரத்தாலே சேஷத்வபாரதந்த்ர்யாதிகளை அநுஸந்தித்து, மற்றும் அபேக்ஷிதங்களையும் த்வயத்தாலே தெளிந்து, பூர்வோக்தபூர்வஸாரஸமுதாய விசிஷ்ட ப்ரபத்தி பண்ணி, நிர்ப்பரனாய் வேறொன்றால் அபேக்ஷையற்று, [1]"அயமர்த்தாநுஸந்தாநே ஸஹ ஸதைவம் வக்தா" என்கிறபடி இதுவே காலக்ஷேபமாயிருக்கிற அதிகாரிக்கு சரமச்லோகத்தாலே அபேக்ஷையென்னென்னில், அகிஞ்சநனாய் ஸ்வரக்ஷாபரஸமர்ப்பணம் பண்ணுகிறவனுடைய அதிகாரவிசேஷமும், இவ்வதிகாரிக்கு ஸர்வோபாயஸ்தாநத்திலே ஏகோபாயம் நிற்கிற *நிலையும், அதினுடைய நிரபேக்ஷமும் சுணையுடைமையும், ஸாத்யஸ்வரூபமும், ஸாத்யாதிக்யத்தாலே ஸர்வாநிஷ்டநிவ்ருத்தியானமையும், இவ்வுபாயம் ப்ராரப்தத்தையும் கழிக்கவற்றானபடியும், இவனுக்குக் கோலின ஸுகத்தைப்

[1] சரணா. கத். *நிலையையும் — க.

பற்றத் தான் நிர்பரனாய் நிரதிசயப்ரீதியோடே இருக்கலான நிலையும், எல்லாம் சரமச்லோகத்தில் விசதமாக அநுஸந்திக்கலாமாகையாலே, ஸகலப்ரணா நுஷ்டாநத்திற்கு முன்பே ஸகலப்ரணவிஷயகமான இச்சரமச்லோகம் அவச்யாநுஸந்தேயம். 104.

இப்படியாகில் ,*'ஜிதம் தே', ச்லோகத்வயம் முதலான வற்றையுமெல்லாம் ரஹஸ்யங்களாகச் சேர்த்து அநு ஸந்திக்கத் தட்டென்னென்னில், விஸ்தாரவிசேஷ உள்ளபோது அவையும் உபஜீவ்யங்களாகிலும், அவற்றிலுள்ளவையெல்லாம் இவற்றில் உண்டாகை யாலும், ச்ருதிவத்ஸம்ப்ரதாயப்ராதிசயத்தாலும், இவை மூன்றையும் ப்ரதானங்களாக பூர்வர்கள் அநுஸந்தி த்தார்கள். ஆகையால் இவை மூன்றும் அர்த்தவிஷய ஸம்ப்ரதாயத்தில் †ஸாரதமம் என்னும் அர்த்தத்தை ரஹ ஸ்யத்ரயஸாரத்தில் ஸாரநிஷ்கர்ஷாதிகாரத்திலே ஸமர்த்தித்தோம். 105.

ஒரு முமுக்ஷுவுக்கு இப்படி ரஹஸ்யத்ரயசிக்ஷை வேண்டுமாகில் [1]"விஜயஶ்ரீ ஜமகஸத்திம் ஸாரஸ்ய ஸ்வாஹா ஸ்வரூபிணம் । நிர்த்வாஸதயா ஜுக்தம் மதாஸந்நா மோ க்ஷகாங்க்ஷா" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே எட்டும் இரண்டும் அறியாத இடைச்சிகள் மோக்ஷம் பெற்ற படி எங்ஙனேயென்னில், அவர்களும் பூர்வஜன்மங் களிலே அபேக்ஷிதசிக்ஷை பண்ணி, ஒரு உபாய விசேஷத்திலே துவக்குண்டு, ப்ராரப்தகர்மவிசேஷ ங்களாலே சில ஜன்மங்களுண்டாய், அந்திமசரீரத்தில்

[1] வி. பு. 5. *ஜிதந்தையில் ச்லோகத்வயம்—க.

†ஸாரதமங்களாக ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரத்திலே—க.

ஒருபரீக்ஷை இல்லையேயாகிலும், ஸத்ஸஹவாஸநாதிகள் உபகரித்து ஸம்ப்ரதாயஶ்ரவணமுண்டாய் ஸாரதமார்த்த விஷயமும் பெறுகிறார்களாகையாலே ஏதேனுமொரு ஜந்மத்திலே அபேக்ஷிதமான ஜ்ஞாநத்தாலே எல்லாரும் ஈடேறுவார்கள் என்னுமிடம் ஸித்தம். 106.

இப்படி சிலஜ்ஞாநஸம்ஸ்காராதிகள் உபகரிக்க அநுகூலஸ்வபாவராய்ப்பிறந்து முக்தராகப் ப்ராப்தராலும் ஜ்ஞாநங்களிலும் ப்ரதிகூலராய், அஜ்ஞாநத்திலும் தான் படுமளவும் எதிரம்புகோத்து நின்ற ஶிஶுபாலனுக்கு [1]"ப்ரதிபவமபராத்துர்முக்த ஸாயுஜ்யதோऽபூ:" என்கிறபடியே மோக்ஷம் கொடுத்தபடியென்னென்னில், அடியிலே ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே த்வாரபாலத்வமும் பெற்றார் இரண்டு க்ஷேத்ரஜ்ஞர் பாகவதாபசாரவிஶேஷத்தாலே மூன்று ஜந்மம் ப்ரதிகூலராய்ப் பிறந்து, அவ்வபசார ஶமநத்திலே பழைய பதமும் பெற்று க்ருதார்த்தராய் நின்றார்கள் என்று புராணஸித்தமாகையாலே இப்படிப்பட்ட விஷயங்களிலும் முன்புற்றை ஸுக்ருதவிஶேஷயடியாக மோக்ஷம் என்னுமிடம் ஸித்தம். 107.

இப்படி *ரஹஸ்யத்ரயவிஷயமாக வரும் சங்கைகளுக்குப் பரிஹாரங்கள் உதாஹரித்தாலும், ந்யாயாபாஸாதி ஸித்தாந்தங்களாலே மயங்கின ஸந்தேஹாதிகளுடைய மதிபேதத்தாலே வரும் சங்கைகளுக்கு எல்லையுண்டோ? அவை எல்லாம் பரிஹரித்து ஒருவனுக்கு விஶதஜ்ஞாநம் தேடக் கடைப்படுமோ என்னில், உபகாரத்தாலே

1 ஸ்தோ. ர. 63. †முக்தராக ப்ராப்தமானால்—க. முக்தராக ப்ராப்தம். ஜந்மாந்தரங்களில்—அ. *ரஹஸ்யவிஷயமாக- -க.

வ்யாக்யாநம் தெளிந்தால், இக்காலே மற்று முள்ள சங்கைகளுக்கெல்லாம் பரிஹாரங்கள் பல ஶாஸ்த்ரங்களிலும் ஸ்ரீஸூக்திகளிலும் †ஸ்பஷ்டமாய், [1]"திருந்தக் கண்டு எனக்கொன்று உரையாய்" என்னும்படி நிற்கிற தெளிவுடைய விஜ்ஞரோடே சேவித்துத் ||தெளியக் கண்டு கொள்ளலாம். 108.

வ்யாக்யாநமல்லாத அம்சத்தில் தெளிவு இல்லாத போதும் வ்யாக்யாநம் தெளிகையாலே ஸமஸ்ரீ உண்டாம். 109.

அலர்ந்தவம்புயத்திருந்து தேனருந்தி யின்னகல்
அல்குலாரசைந்தடைந்த நடைகொளாததனமென்னே
நலம்தவிர்ந்ததாலதென்கொல் நாவின்வீறிழந்ததால்
நாவணங்குநாதர்தந்த நாவின் *வீறிழந்ததென்
சலம்தவிர்ந்துவாதுசெய்து சாடிமூண்டமிண்டரைச்
சருவிலாரெனக்கனைத் துரைத்த ¶வேதிராசர்தம்
வலம்தரும்கைநாயனார் வளைக்கிசைந்த கீர்த்தியால்
‡வாரிவாலதாமதென்று மாசில்வாழிவாழியே. 33.

ஸ்ரீஶைலேஶ நாயகேந ஸஹ தா
ஶேஷாதிவாஜ்ஞாம் ஸதாம்
ஶேஷாஶீவிஷதஸ்வஜ க்ஷிஸ்வஷ்டா
ஸத்ராயதஃ ஸ்ரீயா ।

[1]6. 1. 8. †ப்ராப்தஜ்ஞாநாய்—வ ||தெரிய—க
*வீறழிந்ததென்—வ. ¶எதிராசர்தம்—வ. ‡வாரிபாலதாம்—க

சுயஸ்ராரோவிததத்தக்ஷகமுத்ரோ
  ரயஸ்ராத்முவ்யாத்நாம்
ஶ்ருங்காநாம் வஶிஹாரரவஜதிரியம்
  ஶ்ரீஜாத்ருதொ ஊஶிடுதா ॥

ஶ்ரோத்ரம் ஶ்ரீதஊஸஊக்ஷி-
  ஊயவா ஶொஜம் ஸஊஞ்ஜம் ஜமசு
கிம் நஶிஞஊநஞஷிஞநரஶெ
  ஸஶெஷ ஸவம் தஷஷாம் ।
ஶிஷ்ராஶிக்ஷிதவாஜய:
  ஶ்ருதிவயெ யெஷாம் வயம் யெ வ ந:
தத்ஞொஷஸஊவடுணக்ஷஊஷிஊம்
  ஸாஜம்பரெ: கிம் வரெ: ॥

$சடையன் திறலவர் கள்பெரு
  ஞானக் கடலதனை
இடையமி ழாதுகடக்கினும்
  ஈதள வென்றறியார்
விடையுட னேழன் றடர்த்தவன்
  மெய்யருள் பெற்றநல்லோர்
அடைய அறிந்துரைக்க
  அடியோமுமறிந்தனமே.

இதி ஶ்ரீரங்கநாயிகாஸ்தவ: ஸமாப்த: ।

$இந்தப் பாசுரம் முந்தின இரண்டு ச்லோகங்களுக்கும் முன்னால் 33-வது பாசுரத்திற்குப் பிறகு அச்சிடப்பட்டிருக்கிறது—கி.

𑌇𑌤𑌿 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑌿𑌷𑍁
𑌵𑌿𑌰𑍋𑌧𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑌃 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌃 ॥

ஸ்ரீ: ॥

ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த ரஹஸ்யங்களில் 28-வது ரஹஸ்யமான

முநிவாஹநபோகம்.

ஸ்வாதிஸ்வாஸதி ஸக்த்யா விரக்த-
தோஷாய வேங்கடேஶகவி: ।
†ஸூசித ஸூக்ஷ்மவிவேக-
முநிவாஹநஸூக்திவிஸ்ருதிம் ஶாஸ்தி ॥

$பாவளரும் தமிழ்மறையின் பயனே கொண்ட
பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தில்
காவலனும் கணவனுமாய்க் கலந்து நின்ற
காரணனைக் ‡கருத்துறநாம் கண்ட பின்பு
கோவலனும் கோமானும் ஆன வந்நாள்
குரவைபுணர் கோவியர்தம் குறிப்பே கொண்டு
சேவலுடன் பிரியாத பெடைபோல் சேர்ந்து [மே.35.
தீவினையோர் தனிமையெல்லாம் தீர்ந்தோம் நா

காரணவிசேஷம் இன்னது என்று அறுதியிட அரிதாயிருப்பதொரு பகவத்கடாக்ஷத்தாலே ஸ்வயத்ந ஶூந்யமான ஸாத்த்வ - ஸாத்த்விக - ஸாத்த்விகோபாஸ்ய விவேகத்தை உடையராய், அநாதிகாலப்ரவ்ருத்தங்களான

---

*ப்ரணதிம் வேங்கடேஶஸ்ய பத்யோவிதநுதே ஹரி। யதீந்த்ராக்ரஸ்ய ராமாநுஜாநாம் ரஸாயநம் ॥ என்று அதிகமாக ஒருசுலோகம்—வ. [ஶாஸ்தி ॥ —க.

†ஸூக்ஷ்மவிவேகநஸூசித முநிவாஹநஸூக்திவஶ்சக்தி

$இந்தப் பாசுரம் 37வதாகவும், அது 35வதாகவும் மாறியிருக்கிறது—வ. ‡கருத்துற நான்—க.

க்ஷேத்ரவாஸாதிகளையும், க்ஷேத்ரவாஸ வ்ருத்தாதிகளையும், க்ஷேத்ரவாஸ ப்ரவ்ருத்திகளையும் தப்பின தம்முடைய கரணத்ரயமும் இப்போது ஸ்ராவ்யமான ஸகலவிஷயத்திலே அநந்யப்ரயோஜநா நுகூலவ்ருத்தியை யுடைத்தானபடியைக் கண்டு ஸந்தோஷயுக்தரான திருப்பாணாழ்வார் பின்பு பரமபதத்திலே பெறும் பேற்றை இங்கே பெரியபெருமாள் $திருவடிகளிலேபெற்று, இப்பேற்றை அடிதொடங்கி, 'அமலன் ஆதி பிரான்' முதலான பத்துப் பாட்டாலே அநுபவ பரீவாஹமாக அருளிச் செய்கிறார்.

இப்ப்ரபந்தம் அதிவிஸ்தரம், அதிஸங்க்ஷேபம், *அர்த்தாதிகாரகம், உபக்ரமகம், உபஸம்ஹாரகம், ஸம்பாதிஜநகம், †விரஸக்லேசம், உத்தரேஷணம், வரோஸஷம், வாசகநிரஸநம் என்றாற்போலே மற்றுள்ள அந்யப்ரபந்தங்களில் உள்ளவையொன்றுமின்றிக்கே ‡அநுபவ ஸாரஸமாயிருக்கிறது முதற்பாட்டான 'அமலனாதி பிரான்' தொடங்கி, 'கொண்டல்வண்ணனை' என்கிற ||தலைக் கட்டும் பாட்டளவும்.

இதில் முதற்பட்ட மூன்றுபாட்டுக்கு முதலான §அக்ஷரங்கள் மூலமாகிய ஒற்றை எழுத்தின் முதல் நடுவிறுதியானவை. இதில் முதற்பாட்டு திருமந்த்ரத்

$திருவருளாலே—க. *அநர்த்தாதிகாரகம்—க.
†விரஸக்லேசவஹுலகம், உத்தரேஷண ஸாஷணா நிதகம், வரோஸஷாநுவகம், வாசகநிராஸாநிதகம் என்றாற்போலே—ஙு. ‡பகவதநுபவ—ஙு. §அக்ஷரம்—க
||தலைக்கட்டு—க.

திலும் த்வயத்திலும் முமுக்ஷுவுக்கு ஸ்வரூபாநு
ஸந்தேயங்களான அர்த்தங்களை ஸூசிப்பிக்கிறது. ¶

அமலனாதி பிரான்
அடியார்க்கு என்னையாட்படுத்த
விமலன் விண்ணவர்கோன்
விரையார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன்
நீள்மதிளரங்கத்தம்மான் திருக்
கமலபாதம் வந்து என்கண்ணின்
உள்ளன வொக்கின்றதே. 1.

¶ 'இந்த ரஹஸ்யத்திற்கு மூலப்ரபந்தம்' என்று அதிகம்—க.

அமலன்—ஸகல தோஷங்களுக்கும் எதிர்த்தட்டானவனாய் (அதாவது பிறருடைய ஸம்ஸாரமாகிற தோஷத்தைப் போக்கி மோக்ஷத்தை அளிப்பவனாய்), ஆதி—ஸர்வ ஜகத்காரணனாய், பிரான்—ஸர்வோபகாரகனாய், அடியார்க்கு—அவனுடைய தாஸர்களுக்கு, என்னை, ஆட்படுத்த—தாஸனாம்படி செய்த, விமலன்—ஒருவித குற்றமற்றவனாய், விண்ணவர் கோன்—நித்யஸூரிகளுக்கெல்லாம் அதிபதியாய், விரை ஆர் பொழில் வேங்கடவன்—வாஸனை நிறைந்த சோலைகளையுடைய திருமலையிலே நிற்கிறவனாய், நிமலன்—(அணுகவொட்டாமை என்னும்) தோஷமற்றவனாய், நின்மலன்—(தன் அடியார்களின் தோஷத்தைக் காணுதல் என்னும்) குற்றமற்றவனாய், நீதிவானவன்—(ஸ்வாமி, தாஸன் என்கிற) முறைதப்பாத பரமபதத்திலே நித்யவாஸம் பண்ணுகிறவனாய், நீள்மதிள்—உயர்ந்த மதிள்களையுடைய, அரங்கத்து அம்மான்—ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற ஸர்வ ஸ்வாமியானவனுடைய, திருக்கமலபாதம்—அழகிய செந்தாமரை போன்ற திருவடிகள், வந்து—(தானாகவே) வந்து, என் கண்ணின் உள்ளன ஒக்கின்றவே—என்னுடைய கண்ணுக்கு உள்ளே இருப்பதுபோல் இருக்கின்றன.

(அமலன்) என்றது ஹேயப்ரதிபடன் என்றபடி; இத்தால் போக்யத்வமும் சொல்லிற்றாயிற்று. இது ப்ரதானமான லக்ஷணமாகையாலே பிரியப் பேசப்படுகிறது. (ஆதி)- §“ஏஷ கர்த்தா ந க்ரியதே” இத்யாதிகளிற்படியே ஸர்வஜகதேககாரணபூதன். இத்தால் ‘காரணமே *ஶரண்யம்’ என்கிறபடியே முமுக்ஷுவுக்கு சரணமாகப் பற்றப்படுமவன் என்று ஸூசிதம்: இக்காரணத்வமும் போக்யத்வமும் ஸத்ருவாசரங்கள் போலே ஸர்வலோகசரண்யனுக்கு விசேஷசிஹ்நங்கள். (பிரான்)— †“காருண்யாத் ஸர்வ வர்ஷே” இத்யாதிகளிற்படியே ‡ஸர்வோபகாரகன். இங்கு ஆத்மாக்களுடைய §ஸத்தாஸ்திதி முதலாக, வரிவஸ்யா நிரதிசயப்ரயோஜனபர்யந்தமாக ப்ரத்யுபகாராதி நிரபேக்ஷனானவனுடைய ஸ்வாபாவிக உபகாரங்களெல்லாம் ஸாமாந்யேந சொல்லப்படுகிறது. இதெல்லாம் ப்ரபத்த்யுபயோகியான லக்ஷணஸமூஹம்; இவை தம்மளவில் பர்யவஸித்தபடியிலே இம்மூன்று பதத்திற்கும் தாத்பர்யம். இது மேல் பாசுரங்களிலும் காணலாம்.

(அடியார்க்கு என்னை ஆட்படுத்த) என்கிற இடத்தில் ‘அடியார்’ என்கிற இத்தாலே த்ருதீயாக்ஷரத்திலே சொன்ன ஜீவபேதமும், ஜீவர்களுக்கு ஈஶ்வரனைக் காட்டில் வேறுபாடும், அந்யோந்யம் பிரிவும் காட்டப்படுகிறது. ‘அடியார்’ என்றால் ஸாமாந்யமாக சதுர்த்தியில் சொன்ன தாஸ்யவான்களையெல்லாம்

§ஏஷ கர்த்தா ந க்ரியதெ-வ. *சரணம்-க. †காருண்யாம் ஸர்வ ஸாக்ஷி—வ. ‡ஸர்வோபகாரணம்-க. §ஸத்தாஸ்திதிப்ரவ்ருத்தி-க.

காட்டிற்றேயாகிலும், இங்கு 'அடியார்' என்கிறது "யொ ஹெ ந்ரம வாஸஷம வெ தெவா ஸவி ந தம விஃ" என்னும்படி ஸவரிஷெஹாத்ரான ஶேஷஸ்ஜ்ஞா நரவிகரை. இப்படி 'அடியார்க்கு' என்று விஶேஷோவா தாநம் பண்ணுகையாலே ஶயூஹாக்ஷரத்தின் படியே நிரவாயிகஶேஷிகள் வேறு இல்லாதபடியும் ஸஹெகாவாயிகஶேஷிகளோடு தமக்குத் துவக்கற்றபடியும் சொல்லிற்றாயிற்று. ஸர்வஶேஷியாகையாலே ஸர்வத்தையும் யதெஷ்டமாக விநியோகிக்கப் ப்ராப்தனாய், நிரங்குஶஸ்வதந்த்ரனாகையாலே ஸர்வத்தையும் யதேஷ்டமாக விநியோகிக்க ஶக்தனுமான ஸர்வேஶ்வரன் ஸந ந்ய ப்ரயொஜநரான ஆஶ்ரிதர்க்கு ஸர்வமும் ஶேஷமாகக் கடவது என்கிற விநியோகவிஶேஷத்தாலே ஸர்வருக்கும் பாகவதஶேஷத்வம் நித்யஸித்தமானால், ஸநந்யப்ரயொஜநரான ஆஶ்ரிதர்க்கு பாகவதஶேஷத்வம் ஈஶ்வரன் தன்னையும் *பாகவதரையு மொழிந்த அந்யரைப்பற்ற †ஶேஷத்வமில்லாதபடி வருகிறதாய், இதின் ஃலமான கைங்கர்யமும் இப்படி வருகிறதாகையாலே 'என்னை அடியார்க்கே ஆட்படுத்தினான்' ‡என்கிற ஸவயாரணம் இங்கே விவக்ஷிதம். [1]"மற்றுமோர் தெய்வம் உளதென்றிருப்பாரோடுற்றிலேன்" என்றிறே இவர்களுடைய பாசுரம். (என்னை ஆட்படுத்த) [2]"யஃ யவிந்த்ரியக்ஞரா:" என்னும்படி ஜிதேந்த்ரியக்ஞானாய் வைத்து அதற்குமேலே [3]"ஶாரஶொஹம" என்று இருக்கக்கடவ

---

[1] தி. மொ. 8. 10. 3. [2] [3] கீதை. 16. 14. *பாகவதரை யொழிந்த—க. ‡என்ற-க. †சேஷத்வப்ரஸங்கமில்லாதபடி வருகிறதாயிற்று- -வ.

என்னை [1]“அதோஹமபி தே தாஸ:” என்னப் பண்ணின உபகாரத்திற் காட்டிலும் [2]“உற்றதும் உன்னடியார்க்கு அடிமை” என்னப் பண்ணின இதற்கு மேலொரு உபகாரமுண்டோ என்று இப்பரமோபகாரத்தையும் பிரியப் பேசுகிறார். இது நமஸ்ஸின் தாத்பர்யமும்.

கீழ்ச் சொன்ன §கர்த்ருத்வாதிகளிலே [3]“எருத்துக் கொடியுடையான்” முதலான ஸுராஸுரங்களுக்குப் போலே அஜ்ஞாநாதிதோஷங்கள் இவனுக்கு உண்டாகில், இவன் முன்பு சொன்ன ஸாக்ஷாத் மோக்ஷப்ரதாநம் பண்ணவல்லனே என்ன, (விமலன்)— நிதாந்த நிர்தோஷன். இத்தால் ஸகலேதரவிலக்ஷணன் என்றதாயிற்று. இவ்வளவு ஸூரிகளுக்கும் இல்லையோ என்ன, (விண்ணவர் கோன்)- ஸ்வாதீநஸாம்யயோகத்தையுடையரான ஸூரிகளைக் காட்டில் வேறுபட்டவன்; இத்தாலே ஸூரிஸேவ்யமான ஸ்வாமித்வமும் தோன்றுகிறது. இப்படி எட்டாநிலத்திலே இருக்குமிருப்பு இங்குள்ளார்க்கு நிலமன்றே என்ன, (விரையார்பொழில் வேங்கடவன்). பரிமளம் வடிவு கொண்டாற்போலே இருக்கிற திருச்சோலைகளையுடைய திருமலையிலே [4]“கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு’ என்கிறபடியே எல்லாருக்கும் ஆஶ்ரயிக்கவும் அநுபவிக்கவுமாம்படி [5]“இருள்தருமாஞாலத்துள் குன்றத்திட்ட விளக்காய் $நிற்கிறவன். அந்தமில் பேரின்பத்துள்வாருடைய

---

[1] மந்த்ரராஜபதம். [2] தி. மொ. 8. 10. 3. [3] பெரி. தி. 5. 3. 6.
[4] 1. 8. 3. [5] 10.6.1. §கர்த்ருத்வாதிகளாலே—அ $நிற்கிறவன்-க.

ஆதோஷத்தைக் காட்டில் [1]"எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனுமாவேனே" என்னும்படி பிறந்த ஸ்தாவரங்களுடைய ஆதோஷம் அதிஶயிதமாயிருக்கும். இப்படி ஸர்வஸுலபனானாலும், [2]"அவ்வண்ணத்தவர் நிலைமை கண்டும் தோழீ அவரை நாம் தேவரென்று அஞ்சினோமே" என்னும்படி நிற்குமோவென்ன, (நிமலன்)- *ப்ரஹ்மருத்ராதிகளும் அஞ்சி அருளப்பாடு முன்னாக அணுகவேண்டும்படியான ஐஶ்வர்யத்திலே †குறும்பறுத்த நம்பிக்குக் கூசாதே நிரந்தர ஸம்ஶ்லேஷம் பண்ணலாம்படி தன் ஈஶ்வரத்வமாகிற ஆஶ்ரயண விரோதிதோஷத்தை மறைத்து, [3]"ஸர்வகவராயநா

[1]பெரு. தி. 4.10. [2]தி. நெடு. 21. [3]ஶ்ரீரங்க. ஸ்த. 2.
*ப்ரஹ்மருத்ராதிகள் அஞ்சி—க †குறும்பற்றநம்பி—க.

†குறும்பறுத்தநம்பி—முக்குறும்புகளையும் (குலம், தொழில், ஐச்வர்யம் என்றவற்றால் வரும் கர்வங்களை) நீக்கின பெரியார். குயவர் வகுப்பில் பிறந்தவரான ஒரு பக்தர் குறும்பறுத்த நம்பி எனப்படுவர். இவர் மண்ணாலே திருவேங்கடமுடையானுக்குத் திருமேனி ஏற்படுத்தி, அவருக்கடிமை செய்துகொண்டு வந்தார். தினமும் தன் தொழிலான மண் பாண்டங்கள் செய்வது முடியுமளவில், கையில் ஒட்டிய மண்ணைக் கழுவி, ஒரு புஷ்பமாகச் செய்து, அப்பெருமான் திருமுடியில் அதைப் பரமபக்தியுடன் சாத்திவருவார். அக்காலத்தில் ஒரு ராஜபுத்திரன் ஸ்வர்ண புஷ்பங்களால் மாலைசெய்து திருவேங்கடமுடையானுக்குச் சாத்துவித்தான். அவன் முக்குறும்புள்ளவனாகையால், அது திருமுடியில் தங்கவில்லை. ஆவேசமுகத்தாலே 'குறும்பறுத்த நம்பி இடும்பூ நமக்கு உண்டு' என்று நியமனமாயிற்று. இப்படி குறும்பறுத்த நம்பி என்பவர் தம் ஜாதிவ்ருத்த நிகர்ஷத்தைப் பாராதே திருமுடிக்குப் பூ இட்டார் என்கிற சரித்திரம் இங்கே குறிப்பிடப்பட்டது. (காமம், வெகுளி, மயக்கம் என்பவைகளையும் முக்குறும்பு என்பர்.)

அவிஜ்ஞாதவிதி:" என்கிறபடியே ஆஸ்ரிதவாத்ஸல்யத்தை ‡வெளியிட்டுநிற்குமவன். இப்படி ஸௌஶீல்யஸௌலப்யங்கள் உண்டானாலும், ஆஸ்ரிததோஷத்தைக் காணுமாகில் அணுகக் கூசார்களோ என்னில், (நின்மலன்)- [1]"அவிஜ்ஞாதா" என்றும், [2]"என்னடியார் அது செய்யார்" என்றும் சொல்லுகிறபடியே ஆஸ்ரிதருடைய தோஷதர்ஶநரூபமாகிற மாலிந்யதோஷமில்லாதவன். ஸர்வஜ்ஞனாயிருக்கச் செய்தே ஆஸ்ரிததோஷத்தைக் காணான் என்றது, §காணுமதுவும் இவர்களுடைய தோஷத்தைக் கழிக்கைக் குறுப்பாம் என்றபடி.

'விமலன்' என்று தொடங்கி இவ்வஞ்சுபதங்களாலே நாராயணஶப்தத்தில் உபாயத்வப்ராப்யத்வங்களுக்கு உபயுக்தமான உபயலிங்கத்வமும் உபயவிபூதிநிர்வாஹகத்வமும் சொல்லிற்றாயிற்று; மேல் இவன் ஸ்வப்ராப்ய ப்ராப்யௌஜ்ஜ்வல்யபர்யந்தமான $நீதியிலே நிரதரான நித்யஸூரிகளுக்கு போக்யனானாப்போலே நமக்கும் போக்யனும் என்று வக்தவ்யத்தில் ¶கருத்தாலே ஔஜ்ஜ்வல்ய ப்ரதிஸம்பந்தித்வத்தை அநுஸந்திக்கிறார் (நீதிவானவன்). இங்கு 'வான்' என்கிற சப்தம் ஸூரிஸஹிதமான பரமபதத்தைச்சொல்லுகிறது. 'நீதியை நடத்துவிக்கும் வானிலே வர்த்திக்குமவன்' என்னவுமாம். [3]"தேந வஞ்சயதே லோகாந் மாயாயோகேந கேஶவ:" என்கிறபடியே கலக்குவாரும், [4]"அவஜாநந்தி மாம் மூடா:" என்கிறபடியே கலங்குவாருமில்லாத தேச

---

[1] ஸஹஸ்ரநாம. [2] பெரி. தி. 4 9.2. [3] பார. உத். 67. 15.
[4] கீதை. 9. 11. ‡வெளியிடாநிற்குமவன்—வ.
§காணுமென்றதுவும்—க. $நீதியிலே—க. ¶கருத்தான-வ.

மாகையாலே [1]"ஆவஹ்ஸேயஸ்யோமேந ஜ்ஞாதீநாம் வ கஸோஸ்ஹம்" என்றும், [2]"வஸேஸ்வஸம்ஜ்ஞாஃஜ்ஞ கிஃநேந்ய ஃயுவஷ்தே" என்றும் இங்கு பிறக்கும் ஸம்ஸ்லிஷ்டத்வத்தின் மாருட்டமில்லாத பரமபதத்திலே நித்யவாஸம் *பண்ணுகிறவன் என்றதாயிற்று.

இப்படி ஸர்வஸேவ்யனை †ஸர்வஶேஷி [3]"விபீடணற்கு வேருக நல்லான்" என்கிறபடியே தமக்கு இப்போது விசேஷித்து அநுபவிக்கலானபடியைப் பேசுகிருர்: (நீள்மதிளரங்கத்தம்மான்): 'அயோத்ய' என்றும், 'அவராஜிதே' என்றும் சொல்லுகிற கலங்காப் பெருநகரத்தின்படியை கொடியணி நெடுமதிள்களாலே ஸாரக்ஷிதமான ‡ஸ்தலவிஶேஷத்திலே காட்டி அயர்வறுமமரர்களுக்கும் அதிபதியான தன்படியை [4]"செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார" ஆகாரவிஶேஷத்தாலே அறிவித்துக்கொண்டு, ஶேஷித்வத்தின் எல்லையிலே தான் நின்றாற்போலே §ஶேஷத்வத்தின் எல்லையிலே என்னை நிறுத்தின ஸ்வதந்த்ரர். 'அரங்கத்து அம்மான்'— நீர்மைக்கும் மேன்மைக்கும் எல்லையானவன்.

இவனுடைய உபாயத்வப்ராப்யத்வங்களில் உறப்புண்டான திருவடிகளை அநுபவிக்கிருர்: (திருக்கமலபாதம்). பாவநத்வபோக்யத்வங்களாலே ஸாஹ்ருதயங்களான திருவடிகள்; திருவுக்கு லீலாகமலம் போலே

---

1 [2]வி. பு. 1 17. 23. [3]தி. மொ. 6 10. 4. [4]நா. தி. 11. 3.
*பண்ணுகிறவிமலன் என்றதாயிற்று—வ. † ஸர்வசேஷித்வேந செல்வ விபீடணற்கு—வ. 'விபீடணற்கு நல்லான்' என்று பிரபந்த பாடம். ‡ஸ்தல விசேஷத்தாலே அயர்வறுமமரர்களுக்கு அதிபதியானபடியை—க. §சேஷத்வநிலையிலே நிறுத்தின—க.

இருக்கிற பாதம் என்னவுமாம். (வந்து)- 'வந்து' $என்கிற இத்தாலே ஓடின தம்மைத் தொடர்ந்தபடியும் அயத்நஸாத்யங்களானபடியும் தோன்றுகிறது. இத்திருவடிகளில் வைத்த கண் வாங்க வொண்ணாதபடியான ஸௌந்தர்யாதிஶயத்தை ஒரு உத்ப்ரேக்ஷையாலே அருளிச் செய்கிறார் (என் கண்ணினுள்ளன ஒக்கின்றவே). தேவாதிகளில் தலைவரான ப்ரஹ்மாதிகளுடையவும், ஸநகாதிகளான யோகிகளுடையவும் திவ்யசக்ஷுஸ்ஸுக்களுக்குங்கூட தூரமாயிருக்கக்கடவவை மநுஷ்யமாத்ரனான என்னுடைய மாம்ஸசக்ஷுஸ்ஸுக்களுக்கும் ஸுத்ருஶ்யமாயிரா நின்றன என்று ஆஶ்சர்யப்படுகிறார். 'நீள்மதிளரங்கத்தம்மான் திருக்கமலபாதம்' என்று த்வயத்தில் பூர்வகண்டார்த்த நாராயணஶப்தார்த்தத்தையும் சரணஶப்தார்த்தத்தையும் அநுஸந்தித்தபடி.

இப்பாட்டால், ரக்ஷகத்வமும், *ஜகத்காரணத்வமும், ஶரண்யத்வமும், மற்றும் ஸர்வப்ரகாரோபகாரகத்வமும், க்ருபாவிஶேஷவத்த்வமும், ஸ்வாதந்த்ர்யமும், அவற்றில் ஸாரதமமான உபகாரவிஶேஷமும், நித்யநிர்தோஷத்வமும், நித்யஸூரிநிர்வாஹகத்வமும், நித்யவிக்ரஹவத்த்வமும், ஸர்வஸுலபத்வமும், ஸௌஶீல்யமும், வாத்ஸல்யமும், கைங்கர்யோத்தேஶ்யத்வமும், †கைங்கர்யஸ்தாநவிஶேஷவத்த்வமும், ஸர்வஸ்வாமித்வமும், திருவடிகளினுடைய பாவநத்வமும், ஸௌந்தர்யத்வ

$ என்கிற இடத்திலே ஓடிவந்தெம்மைத் தொடர்ந்த—க.

*ஜகத்காரணத்வமும் மற்றும் ஸர்வப்ரகாரோபகாரகத்வமும், அவற்றின் ஸாரதமமான உபகார விசேஷத்தையும்—க,

†கைங்கர்யஸ்தான விசேஷமும்—வ, விசேஷத்வமும்—க.

மும், அவற்றைத் தான் அநாயாஸமாக ‡அநந்யத்ருஷ்டிகளாகக் கொண்டு அநுபவிக்கப் பெற்றபடியையும் $முன்னிட்டுக்கொண்டு ஸ்ரீயஃபதியினுடைய ¶பர காஷ்டாபந்நங்களான குணவ்ருக்ஷங்களை அநுபவித்தார்.

அவற்றில் ஸம்ஸாரநிவர்த்தகத்வகாஷ்டையாவது– களையற்ற கைங்கர்யத்தைக் கொடுக்கை; *காரணத்வகாஷ்டையாவது— காரணாந்தரங்களெல்லாம் தான் இட்ட வழக்காய், தனக்காதல், தன்னுடைய ஜ்ஞாநசக்த்யாதிகளுக்காதல், ஒரு காரணஸாபேக்ஷதையன்றிக்கே இருக்கை; சரண்யத்வகாஷ்டையாவது—தன்னை ரக்ஷகனாகப் பற்றினார்க்குத் தன்னையொழிய மற்றொருவரை ரக்ஷகராகப் பற்ற வேண்டாதபடி இருக்கை. †உபகாரகத்வகாஷ்டையாவது— ஒரு க்ஷுத்ரவ்யாஜத்தை அவலம்பித்து, உபயவிபூதிவிசிஷ்டனான தன்னை அநந்யஸாத்யனாகக் கொடுத்தும், அதற்குமேல் கொடுக்கலாவது இல்லாமையாலே நித்யருணியாயிருக்கை; க்ருபாகாஷ்டையாவது— சத்ருவினுடைய ஸம்பந்திகளும்கூட த்யாஜ்யம் ‡என்ற பரிவர் முன்னே 'சத்ருதானும் இசையில் ஸ்வீகரிப்பேன்' என்று எதிர்பேசும்படியான இரக்கத்தையுடையனாய், §அவர்கள் தாங்களும் இவனைக் கைக்கொள்ளும்படி பண்ணுகை; ஸ்வாதந்த்ர்யகாஷ்டையாவது- தன்னையும் பிறரையும் தான்

‡அநந்யத்ருஷ்டியாக? $முன்னிட்டு ஸ்ரீய:பதியினுடைய—க.
¶பராகாஷ்டாபந்நகுணவ்ருக்ஷங்களை—க.
*காரணகாஷ்டையாவது—க. †உபகாரத்வகாஷ்டையாவது—க.
‡என்றும் பரிவார்—க. §அவர்தாங்களும்—க.

நினைத்த நிலைகளிலே நிறுத்தும்போது விலக்கவல்லா ரன்றிக்கே யிருக்கை; நிர்தோஷத்வகாஷ்டையாவது— தோஷயோக்யங்களான ஸஹவாஸங்களோடு உண்டான ஸம்ஸர்க்கத்தாலும், பிறர்க்கு ஜ்ஞாநஸங்கோசஹேதுக்களானவற்றைத் தான் அநுஷ்டித்தாலும், தனக்கு ஜ்ஞாநஸங்கோசங்கள் வாராதிருக்கை; ஸ்வாமித்வகாஷ்டையாவது- விபூதிகளையெல்லாம் தனக்கு விபூதியாக உடையனாயிருக்கை; ஸௌலப்யகாஷ்டையாவது— அகல நினைப்பார்க்கும் அகலவொண்ணாதபடி அணுக நிற்கை; ஸௌசீல்யகாஷ்டையாவது- தன் பக்கல் ஸாம்ஸாஸ்வத்தை ஶங்கிப்பார்க்கும் வெளியிடுவார்க்கும் தானே மறுமாற்றம் சொல்லி, மேலும் தன்னைத் தாழவிட்டுப் பரிமாறுகை; வாத்ஸல்யகாஷ்டையாவது— $அந்தரங்கரா யிருப்பாரும் ஆச்ரிதவிஷயத்தில் ஆயிரங்கோடி குற்றம் காட்டிலும் அநாதரம் பிறப்பிக்க வொண்ணாதிருக்கை; ஹார்யகாஷ்டையாவது— தன் விசேஷணமாக வல்லது மற்றொரு ஹார்யமில்லாதிருக்கை; ஆஶ்ரிதபக்ஷபாதித்வகாஷ்டையாவது- *ஸர்வஸமனான தான் ஆஶ்ரிதஸங்கல்பத்தோடே விரோதித்த தன் ஸாமான்ய ஸங்கல்பத்தை அஸஃபலமாக்கி, அநிதரஸாதாரணமான ஆஶிஷ்ட்யத்தைப் பண்ணுகை; போக்யத்வகாஷ்டையாவது— தன் ஸ்வரூபத்தை அநுபவித்தால் தன் விசேஷணமாக ஸர்வத்தையும் அநுபவிக்குமது அதின் நிலையோடு ஒத்திருக்கை; ஸ்வயம்போக்யத்வ

$அந்தரங்கராயிருப்பார்க்கு ஆச்ரயவிஷயத்தில் ஆயிரங்கோடி குற்றம் காணிலும் அநாதரம்—க. *ஸர்வவர்ண ஸமனான—க.

ஸாபேக்ஷையாவது— *ஸஹாயாந்தரமான ஸாதநாந்தரமும் வேண்டாதபடி தென்றலும் பரிமளமும் வந்தாற்போலே வந்து விலக்கவொண்ணாதபடி ஸந்நிஹிதனாயிருக்கை. இவையெல்லாம் இப்பதங்களில் அடைவே ஆழ்வார் அநுபவித்தபடியை ஸங்க்ரஹிப்பது. 1.

இவன் திருவடிகளில் சிவப்புக்கு நிகரான திருப்பீதாம்பரம் தன் சிந்தைக்கு விஷயமாகிறதென்கிறார்:

உவந்தவுள்ளத்தனாய்
  உலகமளந்தண்டமுற
†நிவந்த நீண்முடியன்
  அன்று நேர்ந்த நிசாசரரைக்
கவர்ந்தவெங்கணைக் காகுத்தன்
  கடியார் பொழில் அரங்கத்தம்மான் அரைச்
சிவந்த ஆடையின் மேல்
  சென்றதாம் என் சிந்தனையே 2.

---

*ஸஹாயாந்தரமாக—க. †நிவிர்ந்த; நிமிர்ந்த.

உவந்த உள்ளத்தனாய்—ஸந்தோஷங்கொண்ட மனத்தை யுடையவனாய், உலகமளந்து—எல்லா லோகங்களையும் (தன் திருவடிகளாலே) அளந்து, அண்டம் உற—அண்டகடாஹத்திலே இடிக்கும்படி, நிவர்ந்த—நிமிர்ந்த, நீள்முடியன்—பெரிய கிரீடத்தையுடையவனாய், அன்று—(ஸகல ஸாதுக்களுக்கும் துன்பம் நேர்ந்த) அன்று, நேர்ந்த—எதிர்த்துவந்த, நிசாசரரை—(தாடகை முதல் ராவணன் வரையிலுள்ள) ராக்ஷஸர்களை, கவர்ந்த—விழுங்கின (கொன்ற), வெங்கணை—மிகக்குரூரமான பாணங்களையுடைய, காகுத்தன்—ஸ்ரீராமனாய், கடி ஆர்—பரிமளம் நிறைந்த பொழில்—சோலைகள் சூழ்ந்த ஸ்ரீரங்கத்திற்குள்ளே கண்வளர்ந்தருளுகிற ஸர்வஸ்வாமியான பெரிய பெருமாளுடைய, அரை—திருவரையில் சாத்திய, சிவந்த ஆடையின்மேல்—திருப்பீதாம்பரத்தின்மேலே, என் சிந்தனை—என்னுடைய மனது (கூட) சென்றது ஆம்—சென்றதே! (என்று ஆச்சர்யப்படுகிறார்).

(உவந்த உள்ளத்தனாய்)- மஹாபலியாலே அபஹ்ருதமான ராஜ்யத்தை மீட்டுத்தரவேண்டும் என்று இந்த்ராதிகள் இரக்க, [1]"உதாரா: ஸர்வ ஏவைதே" என்கிறபடி இவர்கள் பக்கலிலே ப்ரீதமான திருவுள்ளத்தையுடையனாய், அஸுரனேயாகிலும் *ப்ரஹ்லாதனோடு உண்டான குடல்துவக்குப் பாவித்து, ஆநுகூல்யஜ்ஞன மஹாபலியை அழியச் செய்ய நினையாதே அவனுடைய ஔதார்யத்திற்கு அநுகுணமாகத் தான் இரப்பாளனாய்ச் சென்று அவன் கொடுக்க வாங்குகையாலே அவனளவிலும் அநுக்ரஹயுக்தனாய், ஸாபேக்ஷநிரபேக்ஷமாக எல்லார் †தலையிலும் தன் திருவடிகளை வைக்க, விலக்காதவளவாலும் ஸர்வவிஷயத்திலும் உவந்தவுள்ளத்தனாய், (உலகமளந்து)— ‡'அளவுபடக் கொடுத்தோம்' என்றிருக்கிற அஸுரன் முன்னே எல்லா லோகங்களையும் தன் திருவடிகளாலே அளவுபடுத்தி (அண்டம் உற நிமிர்ந்த நீள் முடியன்)- மேலே கவிற்ற கடாஹத்தும் போலே இருக்கிற §ப்ரஹ்மாண்டபித்தியிலே கிட்டும்படி விஜ்ரும்பித்த பெரிய திருவபிஷேகத்தையுடையவன்; அவன்தன்னைப் போலே திருவபிஷேகத்திற்கும் அவனோடொக்க வளருகைக்கீடான ஶக்தி உண்டு. கர்மவஶ்யதை தோற்றும்படி பிறவி தொடக்கமாகச் சடையும் குண்டிகையும் சுமந்து திரிகிற ||பரிச்சிந்நேஶ்வரர் பார்த்து நிற்க இப்படி

[1] கீதை 7. 18. *ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானோடு உண்டான—வ. குடல்துவக்குப் பாவித்து—க குடல்துவக்கால் ஆநுகூல்ய—வ. †தலையிலும் திருவடிகளை—க. ‡அளவுபட்டுக்கொடுத்தோமென்றிருக்கிற—க. §ப்ரஹ்மாண்டத்தில்—க. ||பரிச்சின்னேச்வரன்பார்த்து—க.

முடிசூடி நிற்கையாலே உஜ்ஜ்வலதிவ்யாகுத்வமும் அபிவ்யக்தமாகிறது. இத்திருவிக்ரமாவதாரம் சொன்ன இத்தாலே ஸம்ஸ்ருஷ்டவிஸ்லேஷவிஷயரான ப்ரஹ்மாதிகள் இரப்பாளரானபடியும், [1]“குறைகொண்டு நான்முகன்” ப்ரஹ்மாதிகளிற்படியே ப்ரஹ்மா திருவடி விளக்கி க்ருதார்த்த னானபடியும், ருத்ரன் தீர்த்தஸ்பர்சம் பெற்று வந்த னானபடியும் சொல்லித்தாயிற்று. இத்தால் †முன் பாட்டில் சொன்ன ஐஷ்வர்யத்தையும் உதாஹரித்த தாய், இனி அநிஷ்டநிவர்த்தகத்தையும் உதாஹரிக் கிறார்: (அன்று நேர்ந்த நிசாசரரைக் கவர்ந்த வெங்க ணைக் காகுத்தன்). ‡தேவர்களும் ரிஷிகளும் கூடக் குடி யிருக்கவொண்ணாதபடி த்ரைலோக்யக்ஷோபம் பிறந்து தேவர்கள் சரணாகதரானவன்று சக்ரவர்த்தித் திருமக னாய் அவதரித்து, தாடகா - தாடகேய - விராத - கபந்த-வாலி-ராவணாதிகளை நிராகரித்து, லங்கைக்குப் பரிகையான லவணார்ணவத்தை பர்வதங்களாலே பண்பு செய்து, கொம்பிலே தத்தித் திரியும் குரங்குப் படையைக் கொண்டு லங்கையை அடைமதிள்படுத் தினவன்றும் பெருமாளுடைய ப்ரபாவம் அறியாதே §விளக்குவிட்டில் போலே வந்து எதிர்ந்த ¶பகல்போர் அறியாத கடியோயிகளையெல்லாம் ‘எனக்கு எனக்கு’ என்று இரையாகக் கைக்கொண்ட தீவ்யாவகஸ்ஸாரங் களான திருச்சரங்களையுடையனாய், [2]“வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்” நின்றவன்; (காகுத்தன்)—

1 4. அ.9. 2பெரு. தி. 10. 1. *சங்காவிஷபமான—க.
†முன் பாட்டினில்........ உதாஹரித்ததாய், அநிஷ்ட-க. ‡தேவர் களுக்கும் ரிஷிகளுக்கும் கூடியிருக்க—க. குடியிருக்க—வ.
§விளக்குவீட்டில் போலே—க. ¶பகல்போது அறியாத—வ.

மாயாவிகளான ராக்ஷஸரும் கூட மோஹிக்கும்படி உத்க்ருஷ்டஸ்வபாவத்தை முன்னிட்டு *நின்றவன். (கடியார் பொழில் அரங்கத்தம்மான்)— ஸூரிகள் முதலாக ஸ்தாவரஜங்கமங்களைக்கொண்டு நித்யாராதகராய் நிற்கிற ஆராமங்களாலே சூழப்பட்ட கோயிலாழ்வாருக்குள்ளே ப்ரஹ்மாதிகள் ஆராதிக்க, ஸர்வஸ்வாமித்வம் தோற்றக் கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளுடைய. (அரைச் சிவந்த ஆடையின்மேல்)— [1]"படிச்சோதி யாடையொடும் பல்கலனாய் நின்பைம்பொற்கடிச் சோதி கலந்ததுவோ" என்னும்படி திகழாநின்ற திருவரையிலே ஸந்த்யாகாலஸூர்யகிரணபடலத்தாலே போல பாடலமாய் ஸாந்த்ரதமிஸ்ரவேளையிலே பாலாதபம் பரந்தாற் போலே †இருக்கிற திருப்பீதாம்பரவிஷயமாக. (சென்றதாம் என் சிந்தனையே)— அநாதிகாலம் அநுசித விஷயங்களிலே ஓடி, அவர்கள் ‡ஆடையிலே கட்டுண்ட என்சிந்தை இவன்திருவடிகளைப் பற்றின என்னுலும் மீட்கவொண்ணாதபடி திருப்பீதாம்பரத்திலே சென்று துவக்குண்டது. 'என் சிந்தனை சென்றதாம்' என்கையாலே ஆஶ்சர்யம் தோற்றுகிறது. 'சென்றது'- §நான் ப்ரேரிக்கப் போந்ததன்று; விஷயவைலக்ஷண்யத்தாலே ஆக்ருஷ்டமாயிற்று. 2.

இப்படி இரண்டு பாட்டாலே ஸர்வசேஷித்வவ்யவஸ்தாபநத்தையும் அந்யசேஷத்வநிவ்ருத்தியையும் அநுஸந்தித்து, அநந்தரம் சேஷபூதமான சேதநாசேதந

[1]3. 1. 1. *நின்றவன் காகுத்தன்—க. †இருக்கிற பீதாம்பர-க, ‡அவர்களாளுடையிரல-க; அவர்கள் இடையிலே—ஸ. §நாம்—க.

ஸமஷ்டிஸ்ருஷ்டிவாசகமான த்ருதீயாக்ஷரம் முதலான த்ருதீயமாமெய்யாலே சேஷத்வஜ்ஞாநஹீநராயும், விசேஷமில்லாத சேஷத்வஜ்ஞாநமுடையராயும், காதாசித்க சேஷத்வஜ்ஞாநவான்களாயுமுள்ள ஜீவர்களெல்லாம் தந்தாமுடைய ஜ்ஞாநாநுரூபமாக ஸ்ருஷ்டிக்ரமாநுக்ர மொஹ்யவிஷயஸ்வ்ருத்திகளிலே நிற்கிற நிலையை உதாஹரித்துக் கொண்டு, ஸமவசநாநுபவத்தில் தமக்கிடையிலே பெற்றதொரு ப்ராவண்யத்தை அநுஸந்தித்துப் ப்ரீதராகிறார்.

மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள்
சந்திசெய்ய நின்றான் அரங்கத்தரவினணையான்
அந்திபோல் நிறத்தாடையும் அதன்மேல்
அயனைப் படைத்ததோர் எழில்
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே. 3.

மந்தி—ஆண் குரங்குகள், பாய்—(ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளையில் இடைவிடாமல்) பாய்ந்தபடியே யிருப்பதாய், வட—(தமிழுக்கு) வடவெல்லையும், வேங்கடம்—வேங்கடாத்ரி என்னும் பெயரையுடையதுமான, மாமலை—பெரியமலையிலே, வானவர்கள்—முக்தரும் நித்யரும் (தேசத்திற்குத் தக்க சரீரங்களோடு), சந்தி செய்ய நின்றான்—(புஷ்பங்களைக் கொண்டு) ஆராதிக்க நின்றவனாய், அரங்கத்து—ஸ்ரீரங்கத்திலே, அரவின் அணையான்—ஆதிசேஷனாகிற மெத்தையிலே கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமாளுடைய, அந்திபோல் நிறத்தாடையும்—செவ்வானம்போன்ற நிறத்தையுடைய பீதாம்பரமும், அதன் மேல், அயனைப்படைத்தது—ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்த, ஓர் எழில்—ஒப்பற்ற அழகையுடைய, உந்திமேலதன்றோ—திருநாபி கமலத்தின்மேலல்லவா இருக்கின்றது, அடியேன் உள்ளத்து—அடியேன் மனஸ்ஸில் பிரகாசிக்கிற, இன் உயிர்—இனிதான ஆத்மஸ்வரூபம்.

(மந்திபாய் வடவேங்கடமாமலை)— ஸகலரான ஸம்ஸாரிகளுக்கு நிஶ்ரயமான வாஸஸ்தலமும் *நாநாஶாகையிலுள்ள க்ஷுத்ரபலங்களைப் புஜிப்பதாக [1]"கதாகதம் காமகாமா லபந்தே" என்கிறபடியே ஒன்றைவிட்டு ஒன்றிலே பாய்ந்து திரிகைக்கு நிலமாய், கலியுகத்தில் ஸாத்விகஸத்பாவனையுடைத்தாக புராணஸித்தமாகையாலே ஆழ்வார்கள் அவதரிக்கப்பெற்ற த்ரமிடதேஶத்திற்கு †உத்தராவதியாயிருந்து புராணப்ரஸித்தமாய், ஈஶ்வரன் தன்னைப் போலே ஸ்லாகமாண விஸ்ருதிஹாஸங்களால் உண்டான ஸத்த்வத்தை யுடைத்தான திருமலையிலே. (வானவர்கள் சந்திசெய்ய நின்றான்) பரமபதத்திலே கைங்கர்ய ஸாம்ராஜ்யத்திற்கு அபிஷிக்தரான முக்தரும் நித்யரும் தேஶோசிதமான வேஷங்களைக்கொண்டு உசிதமான கைங்கர்யத்தைப் பண்ணி, இவர்கள் ஆஶ்ரயிக்கைக்கு உத்தேஶ்யனாய் நின்றான்.

(அரங்கத்தரவினணையான்)- ஏற்றமுள்ளவளவும் ஏறவேண்டும்படியான திருமலையாழ்வாரும் பரமபதஸாதநீயம் என்னும்படி எளிதாகக் கிட்டலாம்படியான கோயிலாழ்வாருக்குள்ளே [2]"ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யும்" வானவர்களுக்குப் ‡படிமாவாய், நிஶ்ஶேஷஜகதாதாரபூதனான தன்னை தரிக்கைக்கீடான ஜ்ஞாநபலப்ரகர்ஷத்தை யுடையனாய், ஸௌரபஸௌகுமார்ய§ஶீதளமான திரு

---

[1] கீதை 9. 21. [2] 3. 3. 1. *நாநாஶாகியிலுள்ள—க.

†உத்தராவதியாயிருந்துள்ள புராணஸித்தமாய்—க.

‡படிமா=ஒப்பு; அதாவது திருஷ்டாந்தம். §ஶீதளமான—க.

வாவணையிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளுடைய (அந்திபோல் நிறத்தாடையும்)-ஆஶ்ரிதருடைய அஜ்ஞாநாந்தகாரத்தைக் கழிக்கவல்ல ஸம்யக்ஜ்ஞாந ஸூர்யோதயத்திற்கு பூர்வஸந்த்யை போலவும், அவர்களுடைய தாபத்ரயங்களைக் கழிக்கைக்கு பஶ்சிமஸந்த்யை போலவும், *புகர்ந்த நிறத்தையுடைத்தான [1] "செவ்வரத்தவுடையாடையும்; இது மேலில் அதிஷ்டாநத்தை அவஷ்டம்பிக்கைக்கு அதிஷ்டாநத்தை †அதிஷ்டித்தபடி. மேல் அதிஷ்டாநம் ஏதென்ன, (அதன்மேல் அயனைப் படைத்ததோர் எழில் உந்தி)- அதிஷ்டிதமான திருப்பீதாம்பரத்திற்கு மேலாய், இதன் நிறத்திற்கு நிகரான சிவந்த தாமரைப் பூவையுடைத்தாய், அதின்மேலே ஸமஷ்டிஸ்ருஷ்டி ஸமயத்திலே முற்பட அயோநிஜனான ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்த அத்விதீயமான அழகையுடைத்தான திருவுந்தி. ப்ரஹ்மாவினுடைய ஸ்ருஜ்யத்வம் சொல்ல, கைமுதிகந்யாயத்தாலே ருத்ரேந்த்ராதிகளுடைய ‡ஸ்ருஜ்யத்வமும் சொல்லிற்றும். இத்தாலே ப்ரதிவாதர்க்கு ஶ்ரிய:பதியை யொழிய ஶரண்யாந்தரமும் ப்ராப்யாந்தரமும் இல்லை யென்றதாயிற்று. இங்கு ப்ரஹ்மாவைச் சொன்னது முமுக்ஷுக்களை ஸ்ருஷ்டித்த உபகாரத்திற்கு உதாஹரணமுமாகிறது. (மேலதன்றோ) என்றது இத்திருவுந்தியையே அதிஷ்டாநமாகக் கொண்டன்றோ இருக்கிறது என்னவுமாம். §இதனுடைய அநுபவம் இது இட்ட வழக்

---

[1] தி. மொ. 8. 1. 7. 1 சிவந்தநிறத்தையுடைய ஆடையும்— வ. * புகர்த்த— க. † அநுபவித்தபடி — க. ‡ ஸ்ருஜ்யத்வம்— க. § இவனுடைய அநுபவமிட்ட வழக்காய்— க.

காயிருக்கிறது என்னவுமாம். (அடியேன் உள்ளத்தின்னுயிரே)- ¹“ஶ்ருத்வாஸ்யம் ஹரேஶ் ஸாத்ம்யம் *ஸ்வாஹாவம் ச ஸதா ஸ்மர” என்கிறபடியே பரமகாருணிககடாக்ஷத்தாலே ஸ்வஹாவஹாஸ்வப்ரதிபோதமுடையேனான என்னுடைய ஸசேஷாத்ரமான மநஸ்ஸிலே ப்ரகாசிக்கிற ஸ்வாதந்த்ர்யமான என் ஆத்மஸ்வரூபம். ‘உள்ளம்’ என்று ஹ்ருதயப்ரதேசத்தைச் சொல்லவுமாம். ‘இன்னுயிர்’ என்று ஸமவாநாஸத்திற்கு அநுரூபமாகையாலே †இனிதான ப்ராணாதிகளைச் சொல்லவுமாம். ²“ஜ்ஞாநீ து பரமைகாந்தீ ததாயத்தாத்மஜீவந:” ³“மச்சித்தா மத்கதப்ராணா:” இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது.

இரண்டாம் ‡பாட்டாலும் மூன்றாம் ‡பாட்டாலும் ப்ரஹ்மருத்ராதிகளுடைய §ஸ்ருஷ்ட்யாதிகாரித்வமும் ஸ்ருஷ்ட்யுஜ்ஜீவநாதிகளும் சொல்லித்தாயிற்று. நாலாம் பாட்டாலே ப்ரஹ்மருத்ராதிகள் வரம்கொடுத்து வாழ்வித்த இராவணனை நிராகரித்த வ்ருத்தாந்தத்தாலும் தேவதாந்தரங்களுடைய க்ஷுத்ரத்வத்தை. ⁴“ப்ரஹ்மா ஸ்வயம்பூஶ்சதுராநநோ வா ருத்ரஸ்த்ரிநேத்ர:” இத்யாதிகளிற்படியே அவர்களுடைய அஶக்தத்வத்தையும் அநுஸந்தித்துக்கொண்டு ப்ரஹ்மாதிகளையெல்லாம் ¶அகம்படியிலே வைத்து உய்யக்கொண்ட ஶ்ரீமத்தை உடைத்தான திருவயிற்றினுடைய $சிறுமை பெருமைகளால்

---

1 ²கீதா. ஸங். 24. ³கீதை 10. 9. ⁴ரா. ஸு. 51. 45.
*ஸ்வாஹாவம் வ—க. †இனித் தான் ப்ரமாணங்களை—க.
‡பாட்டிலும்—வ. §கர்மாதிகாரத்வமும்-க. ¶அகம்படியிலே ஏகதேசத்திலே வைத்துக்கொண்ட=க. ¶அகம்படியிலே—உள்ளே.
$சிறுமை பெருமைகளுண்டான—க. சீர்மை—வ.

உண்டான ஸௌபரிதவட-நாயகர்க்கு அடையவளைந்தான் போலே இருக்கிற *உதரபந்தம் நம்முடைய சிறிய †திருவுள்ளத்திற்குள்ளே வெளியிற்போலே இடம் கொண்டு உலாவா நின்றது; இது ஒரு ஆஶ்சர்யம் என்கிறார்.

கீழ் மூன்று பாட்டாலும் ஶ்ரீயஃபதித்வமும் ஶ்ரியஃபதித்வமும் ஶ்ருதி ஷிதமாய், நாலாம் பாட்டாலே [1]"ந நமேயம் து கஸ்யசித்" என்ற வணங்கலிலரக்கனைத் தலைசாய்த்து [2]"நமோ நம நமம" என்கிறபடியே முமுக்ஷுக்களுடைய மநஸ்ஸை அஹங்காரமமகாரதூஷிதமாகாதபடி பண்ணிக்கொடுக்கிற சக்ரவர்த்தித் திருமகனுடைய சரித்திரத்தை முன்னிட்டு 'நானும் என்னுடையதன்று; மற்றும் என்னுடையதாவன ஒன்றுமில்லை என்கிற நமஸ்ஸில் அர்த்தத்தை மறைபொருளாக அநுஸந்திக்கிறாராகவுமாம்.

சதிரமாமதிள் சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்(து)
உதிரவோட்டி ஓர் வெங்கணைஉய்த்தவன் ஓதவண்ணன்
மதுரமாவண்டுபாட மாமயில்
ஆடரங்கத்தம்மான் திருவயிற்(று)
உதரபந்தம் என்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே. 4.

---

[1] ரா. யு. 36. 11 [2] ஸாத்வ. ஸ. * திருவுதரபந்தம்—வ.
† திருவுள்ளத்திற்குள்ளே கண்டுவெயிற்போலே—க.

சதிர - வலிமையுள்ள, மாமதிள்சூழ் - உயர்ந்த மதிள்களாலே சூழப்பட்ட, லங்கைக்கு இறைவன் - லங்கைக்கு அதிபதியான ராவணனுடைய, தலைபத்து உதிரவோட்டி - (முதல் நாள் சண்டையில் வீட்டிற்குப் போகும்படி ஓட்டி மறுநாள்) பத்துத் தலைகளும் சேர்ந்தால்போல் உதிரும்படியாக, ஓர் வெங்கணை - கோபத்தை

(சதிரமாமதிள் சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்து உதிர) காவ்யவாக்யங்களைச் *சேர்த்து இசைத்தாற் போலே [1]செறிவும் திண்மையும் உயர்த்தியும் உடைத்தாய், எட்டுத் திக்குகளிலுள்ள திக்பாலர்களுக்கும் எட்டிப் பார்க்கவொண்ணாதிருக்கிற மதிள்களாலே †இத்தவிடம் முறிந்தவிடம் இல்லாதபடி எங்குமொக்க சூழப்பட்டு ஜலதுர்க்க - கிரிதுர்க்க - வநதுர்க்கங்களாலே துர்க்கங்களுக்கெல்லாம் ‡உபமானமாம்படி ப்ரஸித்தமான லங்கைக்கு ஈஶ்வரனாய், துர்க்கபல - ஸைந்யபல - ஐஶ்வர்யபலங்களாலே செருக்கனாய், மால்யவான் அகம்பநன் மாரீசன் முதலான ராக்ஷஸரோடு ஹநுமான் விபீஷணன் முதலான ஸத்வப்ரக்ருதிகளோடு வாசியற [2]ஸவிஶேஷமாகப் பேசப்பட்ட பெருமாள் பெருமையை §அறிந்து வைத்தும் கண்டுமதிகெட்டான்படியே [3]"தேந தேஜஸ்விதா தே

[1]செறிவு=நெருக்கம். திண்மை=உறுதி. [2]ஸவிஶேஷமாக=அபிப்ராயபேதமில்லாமல் [3]ரா. ஸு. 26 21.

*சேர்த்திச் சேர்த்தாற்போலே—க. சேர்த்தாற்போலே—வ.

†இத்திடமுறிந்திடமில்லாதபடி—க. ‡மூப்பாம்படி—வ.

§அறிந்துவைத்துக் கண்டுமதி கேட்டானபடியே—க.

உடைய ஒப்பற்ற பாணதனை, உய்த்தவன் - பரமபாக்யத்தவனுடைய, ஓதவண்ணன் - கடல்போல் ச்யாமளமான திருமேனியையுடையவனும், மதுரமா வண்டு பாட - இனிமையான சிறந்த வண்டுகள் பாட, மாமயில் ஆட - சிறந்தங்களான மயில்கள் ஆட, அரங்கத்து அம்மான் - ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனான பெரியபெருமானுடைய திருவயிற்று உதரபந்தம் - திருவயிற்றின் மேல் அணியப்பட்ட உதரபந்தம் என்னும் அரைப்பட்டிகை, என்னுள்ளத்துள் நின்று - என் மனதினுள்ளேயும் இருந்து, உலாகின்றது - வியாபிக்கின்றது.

யதி ஜீவிதுமிச்சஸி" என்ற தாய் வாய்ச் சொல்லுங்கே ளாதே, [1]"அராக்ஷஸமிமம் லோகம் கர்த்தாஸ்மி நிசிதை: சரை:। ந சேத் சரணமப்யேஷி மாமுபாதாய மைதிலீம்" என்று பெருமாள் அருளிச் செய்துவிட்ட பரம ஹிதமான பாசுரத்தையும் அநாதரித்து *அடைகோட் டைப் பட்டவளவிலும் பூசலுக்குப் புறப்படவிட்ட ஸஹாயரான படை முதலிகள் எல்லாரையும் †படக் கொடுத்து, ‡தான் ஏறிப் பொருதவன்று [2]ஸிம்ஹாஸனஸ்தரான பெருமாள் §சரச் செருக்கு வாட்டி 'நம் முடனே பொருதும்படி இளைப்பாறி நாளை வா' என்று விட, நாணுதே போய், மண்டோதரி முதலான ||பெண் கள் முகத்திலே விழித்து, தன்னிற் பெரிய தம்பியை யும் மகனையும் படக்கொடுத்து, தான் [3]சாவேறாக வந்து ¶ப்ரதிஹதஸர்வாஸ்த்ரனை பின்பும் சினம் தீராதே [4]சேவகப்பிச்சு ஏறி நின்ற ராவணனை, $இனி தலை யறுக்குமதொழிய வேறொரு பரிஹாரமில்லை' என்று திருவுள்ளம் பற்றி, ஒரு தலைவிழ வேறொரு தலை கிளைக்க முன்பு பண்ணின விருத்வயப்ரகாரமன்றிக்கே

[1] ரா. யு. 41. 66. [2] ரா. யு. 50. 56. [3] சாவேறு=பகையரசனைச் சூழ்ந்துகாக்கும் படைமீது ஒருமுகமாய்ப் பாய்ந்து ஊடறுத்துச் செல்லமுயன்று, அங்கிலேயில் உயிர்துறத்தலையே விரதமாகக் கொண்ட வீரர்தொகுதி. [4] சேவகப்பிச்சு=வீரன் என்னும் இறுமாப்பு

*அடைகோட்டை=முற்றுகையிடப்பட்ட கோட்டை.

*அடைகோட்டைப்பட்ட—க. †படைக்கொடுத்து—க.
‡தான் நேரில் பொருதவன்று—வ. §ஸௌர்யச்செருக்கு—வ.
||பெண்டுகள் முகத்திலே விழுத்தி-க. ¶ப்ரதிஹதஸர்வாஸ்த்ரனு மான—க, $இனித்தான் இவனையழிக்குமதொழிய—வ.

ஒருக்காலே பத்துத் தலையும் *உதிரும்படியாக. (ஓட்டி ஓர் வெங்கணை உய்த்தவன்)· 'தானேபோய் ராவணன் தலை பத்தும் கைக் கொள்ளவேணும்' என்று சினமுடைத்தாய் ஸ்வீயமாய் இருப்பதொரு திருச்சரத்தை தகையாதே ஓடவிட்டு †இரைபோர்ந்த இலக்குப் பெறுகையாலே அத்திருச்சரத்தை உய்யப்பண்ணினவன். சரத்தினுடைய ஆஶுகாரித்வத்தாலும் ராவணனுடைய வைவஶ்யத்தாலும் தலைபத்து உதிர்ந்த பின்னும், அவன் உடல் கட்டைப் பனைபோலே சிறிது போது இருந்து நிற்கும்படியாயிருந்தது. 'தலைபத்து உதிர ஓட்டி' என்றது முன்னில் பூசலிலே ராவணனைத் தலை சாய்த்து [1]"கச்சாநுஜாநாமி" என்று துரத்தி விட்டபடியாய், 'ஓர் வெங்கணை உய்த்தவன்' என்றது பின்பு அவனுடைய வ்யாஜமாக ஸ்வீயமான அஸ்த்ரத்தை விட்டவன் என்னவுமாம்.

(ஓதவண்ணன்) கண்டவர்களுடைய பாபத்தையும் தாபத்தையும் ‡கழிக்கவற்றும் ஸமுத்ரம்போலே ஶ்யாமளமான திருமேனியை உடையவன். (மதுரமா வண்டு பாட மாமயிலாடரங்கத்தம்மான்)—ராவணவதம் பண்ணின வீரலக்ஷ்மியுடனே நின்ற அழகைக் கண்டு ப்ரஹ்மாதிகள் ஸ்தோத்ரம் பண்ண, அப்ஸரஸ்ஸுக்கள் ந்ருத்தம் பண்ணினாற்போலே [2]"க்ருத்ஸ்நாம் ஸாநுஷம் ஸதே" என்கிற பெருமாளுடைய

[1] ரா. யு. [2] ரா. யு. 120. 10. *திரும்படியாக—க †இரைபொருந்த விளக்குபெறுகையாலே—க. வில்லுக்கு—வ. ‡கழிக்கவைற்றும்-க.

¹பூமிகைக்கு அநுரூபமாக முக்தரும் ²நித்யரும் ஸ்வாகாரம் கொண்டு வந்தார்கள் என்னலாம்படி அதிஶயங்களாய் ³ஜ்ஞாநாதிகுணஸத்தையுடைய ஸேவ்யமான வண்டுகள் ⁴காலப்பண்கள் பாட, பாட்டுக்கு அநுரூபமாக குணாதிகங்களான நீலகண்டங்கள் நிருத்தம் பண்ண, இக்கிதநிருத்தங்களாலே ⁵லோகோத்தரமான கோயிலொழ்வாருக்குள்ளே ஸர்வஸ்வாமியானபடி தோற்றக் ⁶கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமாளுடைய. (திருவயிற்று உதரபந்தம் என் உள்ளத்துள் நின்று உலாகின்றதே) *"ப்ரஹ்மோதரம் ஜகத்" என்கிறபடியே ஜகத்துக்கு மோக்ஷ ஹேதுவான ப்ரஹ்மோதரத்தை வெளியிடா நின்ற திருவயிற்றில் 'திருவுதர பந்தம்' என்று திருநாமத்தையுடைத்தான திருவாபரணம் அதிக்ஷாத்ரனை என்னுடைய சித்தாநுகூலித மான ஹ்ருதயத்தினுள்ளே அதுவே நிவாஸஸ்தானம் என்னும்படி நின்று அள்வற்ற ஸௌந்தர்ய ⁷ப்ரகாஶந வ்யாபாரங்களைப் பண்ணி நின்றது. ⁸இது திருமந்திரத்திலும் திருமேனியிலும் மத்யத்திலே வரும் அநுபவம். 4.

மேல் இரண்டு பாட்டால் நாராயணஶப்தார்த்தமும் உள்ளீடாக பெரியபிராட்டியாருடைய ¹⁰ நிவாஸத்தால்

---

* ¹ரூபத்தை ரமிக்கைக்கு—வ, ²நித்யரும் கூடிவந்தார்கள்.
³ஞானாதிகுணவத்தையையுடைய—வ. ⁴காலமணங்கள்—க.
⁵லோகோத்தரமான—வ. ⁶கண்வளருகிற—க. ⁷ப்ரகாசவ்யாபாரங்களை—க ⁸ இது திருமேனியிலும் மத்யத்திலே வரும்—க.
⁹பாட்டில்—க ¹⁰நிவாஸத்தாலும் நிகரில்லாத திருமார்வையும்.
¹ பூமிகை = மாறுவேஷம். [அநுபவிக்கிறார்—க.

நிகரில்லாத திருமார்வையும் திருக்கழுத்தையும் அநு பவிக்கிறார்:

பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத் தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி என்னுள்புகுந்
கோரமாதவம் செய்தனன் கொல்
[தான்
அறியேன் அரங்கத்தம்மான் திரு
வார மார்பதன்றே அடியேனை ஆட்கொண்டதே. 5.

(பாரமாய பழவினை பற்றறுத்து)- *காலதத்வமுள்ளதனையும் ப்ராயஸ்சித்தம் பண்ணினாலும் கழிக்கவொண்ணாதபடி [1]உபசிதமாய்க்கொண்டு, அநாதிகாலம் நடக்கிற ஸாம்ஸாரிக து:க்காநுபவத்தை ஸவாஸநமாக என்னுடன் துவக்கறுத்து; (என்னைத் தன் வாரமாக்கி வைத்தான்)— இப்படி து:க்காவஹனாய், இந்த்ரியகிங்கரனாய், தாஸ்யமான ஜந்மாதிகளை எடுத்துச் சுமந்து [2]தனிசு தீராதே பொலிசை இறுத்துத் திரிகிற என்னை ஸவாஸநமாக வாரமாய், †ஸ்வாமித்வத்திற்கு எல்லை

[1]உபசிதமாய்=சேர்க்கப்பட்டதாய்க்கொண்டு.
[2]தனிசு=கடன்; பொலிசை இறுத்தல்=வட்டிசெலுத்துதல்.

பாரமாய - மிகவும் பாரமாய், பழவினை - அநாதிகாலமாய் ஸம்பாதிக்கப்பட்ட பாபங்களை, பற்று அறுத்து - வேரோடு போக்கி, என்னை, தன்வாரமாக்கி வைத்தான் - தன்னிடத்திலே அன்புடையவனாய்ச் செய்தான். வைத்ததன்றி - இப்படி வைத்ததற்கு மேல், என்னுள் புகுந்தான் - என் மனதில் வந்து புகுந்து கொண்டான்; (இப்படி என்னைப் பெறுகைக்கு) கோரமாதவம் - கடுமையான பெரிய தபஸ், செய்தனன்கொல் - செய்தானோ, அறியேன். அரங்கத்து அம்மான் - ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற ஸர்வஸ்வாமியானவனுடைய, திருவாரமார்பதன்றோ-பிராட்டியையும், ஹாரத்தையுமுடைய திருமார்பன்றோ, அடியேனை, ஆட்கொண்டது - அடிமை கொண்டது. *காலதத்வமுள்ளதனையும்—க. †ஸ்வாமித்வத்திற்கு-வ.

நிலமாய், *ஸம்ஸாரியோஹனை தனனுடைய அஸாதா ரண ஸ்ரீகளைப் போலே அந்யர்க்குக் கூறு இல்லாத படி பண்ணி, அஸாதாரணசேஷத்வத்தைத் தந்து மேலொருக்காலத்திலும் மாறுதபடி வைத்தான்.

(வைத்ததன்றி என்னுள் புகுந்தான்)-அநந்யனுக்கு வைத்தவளவன்றிக்கே, முன்பு ப்ரயோஜநாந்தரபரவ ணனுன என்னுடைய ஹ்ருதயத்திலே, அநந்யப்ரயோ ஜநானுபவவிஷயமாய்க்கொண்டு, [1]தஸ்யுவஸிதமான தன் படைவீட்டிலே தஸ்யுக்களை ஓட்டிப் புகுருமாப் போலே புகுந்தான். (கோரமாதவம் செய் தனன் கொல் அறியேன்)— அநாதிகாலம் இழந்த வஸ்துவைப் பெறுகைக்கு அஸாதரணனுன ஈஸ்வரன் தானே அவதாரக்ஷேத்ரமான திருவயோத்யையையும் விட்டு, ஆஸ்ரிதன் இருப்பிடமான லங்கையிலும் போகாதே, [2]'கங்கையில் புனிதமானகாவிரி' நடுவுபாட்டி லே அதிகோரமாய் அதிதீர்க்கமாயிருப்பதொரு தபஸ் ஸைப் பண்ணினுனே அறிகிலேன். இது அதிவாத மமாக உத்ப்ரேக்ஷித்தபடி. ஸவஸம்ஸாரநிவர்த்தக மாய் †அஸாத்யமாயிருப்பதொரு 'ஸோக்ஷயிஷ்யாமி' என்கிற ஸங்கல்பரூபமான தபஸ்ஸைப் ‡பண்ணினுன் என்று தாத்பர்யம். அங்ஙனன்றிக்கே இப்பெரிய பேறு பெறு கைக்குஅயோக்யனை நான் இதற்கு அனுரூபமாய் அஸா த்யமாய் இருப்பதொரு மஹாதபஸ்ஸைப் பண்ணிப்

[1] தஸ்யு=திருடர். படைவீடு=ராஜதானி. [2] திருமாலை 23.

*ஸாந்த்ரபோக்யனை—வ

†ஆமோக்ஷமாயிருப்பது—ம. ‡பண்ணினுன் என்று—வ.

பெற்றேனல்லேன். இதற்கு [1]"ஸ்வயி ஸ்தி தஸ்ரோஸ்ஸி ஸோஸ்ஸம் யதஃ" என்றும், [2]"தவ ஸரோஸஹகாரிஷி யாசி ஸகெ" *என்றும் சொல்லுகிறவிதொழிய, இப்போது நானும் பிறரும் அறியலாவது எனக்கு ஒரு தபல்ஸ காண்கிறிலேன் என்று ஈச்வரனுடைய இரக்கத்தின் ஆயாஸத்திலே தாத்பர்யமாகவுமாம்.

இப்படி க்ஷணேநனை என்திறத்தில் இரங்கினவன் தான் தேறவொண்ணாத திருவில்லாத் தேவரில் ஒருவனல்லன்; [3]"அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறைமார்பன்" என்னுமிடத்தையும், ஸோஷணதனை தமக்கு ஸ்ரீமானே கௌஸ்துபஸ்திஸம் வஹ என்னுமிடத்தையும், திறம்பாத சிந்தைக்கு சிக்கெனக் காட்டிக் கொடுக்கிறார்: (அரங்கத்தம்மான் திருவாரமார்பதன்றே அடியேனை ஆட்கொண்டதே). ஸர்வருக்கும் அனுபவிக்கலாம்படி ஸவஸ்வஸஹிஷ்ணு வாய்க்கொண்டு †கோயிலாழ்வாருக்குள்ளே கண்வளர்ந்தருளுகிற ஸௌஹார்த்தசைலயோடுவிரோதியாத ஸ்ஸாமிதை காசித்தையையுடையரான பெரிய பெருமாளுடைய ஸௌசீல்யத்திக்கு லக்ஷணமான திருவையும், அழகுவெள்ளத்திற்கு அணைகோலினாற்போலே இருக்கிற ஹாரத்தையும் உடைத்தான திருமார்வன்றோ ‡ஸூ ஹாவிகஸௌஷ்யஸ்ஸா ஹவாஸிகளாய், அதற்கு மேலே

[1] ஸ்தோ. ஸ்த. 91. [2] ஸ்ரீரங்க ஸ்த 102. [3] 6. 10, 10

*என்றும் சொல்லுகிறபடியே — க. என்றுமிதொழிய — அ.

†கோயிலாழ்வார்க்குள்ளே ஸைஸப்ய — க. ‡ஸூஹாவிகஸௌஷ்யஸ்ஸா ஹவ — க

[1] ‘ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா’ னுமான என்னை ஸ்வ ரூபாநுரூபமான ஶேஷத்வாதிஶேஷவ்ருத்தியிலே மூட்டி, அதற்கு இலக்காய் நின்றது.

இப்பாட்டில் பதங்களினடையே நாராயணஶப்தத்தில் விவக்ஷிதமான ஸமஸ்தகல்யாணகுணங்களும், உபாயத்திற்கு உபாயமான உள்ளும்புறம்பும் வ்யாபித்து நிற்கும் படியும், நித்யைஶ்வர்யமும், உபாயத்திற்குப் ப்ராப்யமான ஸௌலப்யமும், ப்ராப்யத்திற்குப் ப்ராப்யமான ஸ்வாமித்வமும், ஸர்வபூதஸுஹ்ருத்தான ஸ்ரீயஃபதித்வமும், ஸத்வகுணாதிக்யங்களாக ஸாதநங்களை த்யஜிக்கிற ஶோகாபகமான விரோதிநிவ்ருத்தியும், *நாராயணாயப்ரஹ்மமான ஆத்மாவின் ஸ்வரூபமும், ஆத்மஸ்வரூபமாகப் ப்ராப்திக்கப்படும் கைங்கர்யமும் ஸூசிதம். 5.

“துண்டவெண்பிறையன்” இத்யாதி. கீழ்ப்பாட்டில் ஶேஷப்ராப்தியான தம்முடைய கைங்கர்யவிரோதிகளான நிருபாதிகஸ்வாமித்வாதிஸம்பந்தங்களை யெல்லாம் நிராகரித்தபடியை அருளிச்செய்தார். இப்பாட்டில் ஶௌர்யப்ராப்திகளானவருடைய ஶௌர்யவிரோதியான ஸிக்ஷாதிஶௌர்யத்தைக் கழிக்கும்படியை உதாஹரிக்கிறார்.

துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன் அஞ்சிறைய
வண்டுவாழ்பொழில் சூழ்
அரங்கநகர் மேயவப்பன்

[1] ஶ. கி. 4.12. *நாசப்தார்த்தமான—க.

அண்டரண்ட பகிரண்டத்தொரு
மாநிலம் எழுமால்வரை முற்றும் [டதே. 6
உண்ட கண்டம் கண்டீர் அடியேனை உய்யக்கொண்

(துண்டவெண்பிறையன் துயர் தீர்த்தவன்)—
*ஈஶ்வரன் என்னும் பேரைச் சுமந்த தனக்கும் வைலக்ஷண்யம் இல்லை என்கைக்கு ஜ்ஞாபகம் போலே ஸகலஶாஸ்த்ரமாய்க் கொண்டு ப்ரகாசிக்கிற சந்த்ரகலையைத் தரிக்கிற ருத்ரன் ப்ரஹ்மாவினுடைய புத்ரனாய் வைத்து, பிதாவின் திறத்திலே அபராதம்பண்ணி, அத்தாலே †மஹாபாதகனாய், 'இப்பாதகத்தைத் தீர்க்கவல்லாரார்' என்று ஸாகஸிகவாதனாய்க்

*ஈச்வரன் என்று பேரைச்சுமந்ததனக்கு பூர்ணத்வமில்லை—க.
†மஹாபாதகனாய்—வ.

துண்ட - கலாமாத்ரமாய், வெண் - வெளுப்பாய் ப்ரகாசிக்கிற பிறையன் - சந்திரகலையையுடைய ருத்ரனின், துயர்தீர்த்தவன் - (கையில் கபாலத்தோடு இருக்க வேண்டும்படியான சாபத்தினாலுண்டான) துக்கத்தைத் தீர்த்தவனும், அம்-அழகிய, சிறைய-சிறகுகளை உடைய, வண்டுவாழ் - வண்டுகள் வாழும், பொழில் சூழ் - சோலைகள் சூழ்ந்த, அரங்கநகர்மேய - ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற அப்பன் - ஸர்வலோகபிதாவுமான பெரியபெருமாளுடைய, அண்டர் - ப்ரஹ்மாண்டத்திற்குள்ளே வஸிக்கும் ஸகலசேதனர்களையும், அண்டம் - எல்லா அண்டங்களையும், பகிரண்டம் - அண்டங்களுக்கு வெளிப்பட்ட அண்டாவரணங்களையும், ஒருமாநிலம் - ஒப்பற்று விசாலமான பூமியையும். எழுமால் வரை - எழுகுலபர்வதங்களையும், முற்றும் - ஒன்று விடாதபடி, உண்ட - அமுதுசெய்த, கண்டம் கண்டீர் - திருக்கழுத்தன்றோ, அடியேனை உய்யக்கொண்டது - (தன் ஸ்வரூபத்தை உணர்ந்த) என்னை உஜ்ஜீவிக்கும்படி செய்தது.

கொண்டு *திரிந்து, ஓரளவிலே கெடுமரக்கலம் கரை சேர்ந்தாற்போலே காருணிகனான †ஸர்வேஶ்வரனே வந்து கிட்டி, [1]"என்னெந்தாய் சாபம் தீர்" என்ன, இவனுடைய சாபத்தைத் தீர்க்கவல்லவன். இத்தால் 'ஈஶ்வரன் என்று பேருடைய ருத்ரன் கர்மவஶ்யன்' என்னுமிடமும், தன்னைத் தான் ரக்ஷித்துக்கொள்ள மாட்டாத இவன் வேறொருத்தருக்கு நிரபேக்ஷரக்ஷகனாகமாட்டான்' என்னுமிடமும், 'ஸர்வேஶ்வரனே ஸர்வாநிஷ்டநிவர்த்தகன்' என்னுமிடமும் சொல்லிற்றாயிற்று.

(அஞ்சிறைய வண்டு வாழ் பொழில் சூழ் அரங்க நகர் மேய அப்பன்)— ருசியுடையார் அபேக்ஷித்தால் அவர்களுக்கு ஜ்ஞாநதாநமும் பண்ணுகைக்கும், [2]"மாசின் மலராடிக்கீழ்" அவர்களைச் சேர்க்கைக்கும் ஹேதுவான மதிக்கு ஸாதநங்களாய், ஜ்ஞாநபக்ஷங்களான சிறகுகளையுடைத்தான வண்டுகள் ஜ்ஞாநஸந்தோஷத்தோடே வாழ்கிற உத்யாநங்களாலே சூழப்பட்ட ஸ்ரீரங்கநகரத்திலே நித்யவாஸம் பண்ணுகிற ஸர்வலோகபிதாவானவன். இத்தால் காரணபூதனாய், கரணகளேபரங்களைக் கொடுத்து உபகரித்தவன் கண்ணுக்கிலக்காய் வந்து கண்வளர்ந்து, கரணங்கள் பட்டி புகுராதபடி காக்கிற உபகாராதிஶயத்தை ‡உதாஹரித்ததாகிறது. [3]"நராஜா ஜாதாநி தகவாநி" இத்யாதிகளின் அர்த்தமும் இங்கே அநுஸந்தேயம்.

---

[1] தி. மொ. 1. 5. 8. [2] தி. வி. 54. [3] பாரத. கல். 1. 34.

*திரிந்தோரளவிலே-க. திரிந்தோரளவிலே-ங. †ஸர்வேச்வரனைக் கண்டு என்னெந்தாயென் சாபம்—க. ‡உதாஹரிக்கிறதாகிறது-க.

பாத்மஸம்ஹிதா (பாத்மஸம்.)	253,299,300
ப்ருஹத்ஹாரீதஸ்ம்ருதி (ப்ரு.ஹா.ஸ்ம்ரு.)	268

பகவத்கீதா 256, 264, 263, 271, 275, 283, 285, 288, 289, 299, 301, 307, 312, 313, 329, 332, 338, 342,

பாரதசாந்திக்ருதம் பாஷ்யம்	313
பாகவதம்	301

பாரத. iv. உத்யோகபர்வ–252, 259, 274, 279, 332, 392.
v. ஆநுஶாஸநிகபர்வ—335
xii. ஶாந்திபர்வ–268, 269, 278, 299, 301, 369

𑌭𑌾𑌰𑌤. xiv. 𑌆𑌶𑍍𑌵𑌮𑍇𑌧𑌿𑌕𑌪𑌰𑍍𑌵—263, 293
xvi. 𑌮𑍌𑌸𑌲𑌪𑌰𑍍𑌵—259.
𑌭𑌾𑌷𑍍𑌯𑌕𑌾𑌰𑌨𑌿𑌤𑍍𑌯𑌂—274.
𑌭𑌾𑌷𑍍𑌯𑌕𑌾𑌰𑌾𑌷𑍍𑌟𑌕𑌂—308.
𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑌿—297.
𑌰𑌾𑌮𑌾𑌯𑌣 i. 𑌬𑌾𑌲𑌕𑌾𑌣𑍍𑌡𑌃 (𑌬𑌾.)—252.
(𑌰𑌾.) iv. 𑌕𑌿𑌷𑍍𑌕𑌿𑌨𑍍𑌧𑌾𑌕𑌾𑌣𑍍𑌡𑌃 (𑌕𑌿.)—353.
v. 𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑌃 (𑌸𑍁.)—344.
vi. 𑌯𑍁𑌦𑍍𑌧𑌕𑌾𑌣𑍍𑌡𑌃 (𑌯𑍁.)—258,310,345,347,348
vii. 𑌉𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑌃 (𑌉.)—370.
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 (𑌲.𑌤.)—314
𑌵𑌰𑌦𑌰𑌾𑌜𑌸𑍍𑌤𑌵𑌃 (𑌵𑌰𑌦.𑌸𑍍𑌤.)-252, 291, 295, 352
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌤𑌤𑍍𑌵𑌂 (𑌵𑌿 𑌤𑌤𑍍𑌵𑌂.)—298, 344
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌧𑌰𑍍𑌮𑌂 (𑌵𑌿.𑌧.)—260, 265, 274, 283
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌧𑌰𑍍𑌮𑍋𑌤𑍍𑌤𑌰 (𑌵𑌿.𑌧.𑌉.)—297.
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 (𑌵𑌿.𑌪𑍁.)— 256, 261, 263,266,275
[283, 285, 293, 320, 333
𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑌸𑌂𑌹𑌿𑌤𑌾 (𑌵𑌿𑌷𑍍𑌵.𑌸𑌂.)— 251.
𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌿𑌗𑌦𑍍𑌯𑌂 (𑌶𑌰.𑌗.)—281, 294, 299, 319
𑌶𑌾𑌰𑍀𑌰𑌕𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 (𑌶𑌾𑌰𑍀.𑌸𑍂.)— 253, 256, 257, 265,
[292. 304, 312.
𑌶𑍌𑌨𑌕𑌸𑌂𑌹𑌿𑌤𑌾 (𑌶𑍌.𑌸𑌂.)—306
𑌶𑍍𑌰𑍀𑌗𑍁𑌣𑌰𑌤𑍍𑌨𑌕𑍋𑌶𑌃 (𑌶𑍍𑌰𑍀𑌗𑍁𑌣.)—261, 272, 306
𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌰𑌾𑌜𑌸𑍍𑌤𑌵𑌃 (𑌶𑍍𑌰𑍀𑌰𑌂. 𑌸𑍍𑌤.)—252, 281, 331, 359
𑌷𑌡𑌰𑍍𑌥𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌃— 251, 272
𑌸𑌹𑌸𑍍𑌰𑌨𑌾𑌮— 295, 332
𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌸𑌂𑌹𑌿𑌤𑌾 (𑌸𑌾 𑌸𑌂.)—345
𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌂 (𑌸𑍍𑌤𑍋.𑌰.)-- 270, 281, 321

பிரமாணஸங்கிரஹம் ii— தமிழ்.

அமலனாதிபிரான் (அமல) 269, 327, 337, 341, 345, 350, 353, 357, 260, 363, 365

திருச்சந்த விருத்தம் (தி. ச. வி.)—361

திருநெடுந்தாண்டகம். (தி. நெ.)—331

திருப்பல்லாண்டு (தி. பல்.)—365

திருமாலை—314, 351

*திருவாய்மொழி— 275, 276 330, 333, 340, 342, 352, 357, 359, 361, 364, 365, 369

திருவிருத்தம் (தி. வி.)—280, 355, 366

பெரியதிருமொழி (தி பெ)— 271, 329, 330, 333, 343, 345, 355, 356, 357, 361

பெரியாழ்வார் திருமொழி (பெரி. தி)—270, 295, 330, 332, 359

பெருமாள் திருமொழி (பெரு. தி)— 331, 339

முதல் திருவந்தாதி (1அ)— 307, 363

நாச்சியார் திருமொழி (நா. தி.)— 333

நான்முகன் திருவந்தாதி (4அ.) 290, 291, 292, 339, 352

*கிரந்தத்தின் பெயர் குறிப்பிடாமல் கீழே ஸங்கியை கொடுத்திருப்பதெல்லாம் திருவாய்மொழிப் பாசுரங்கள் என்று ஸங்கேதம்.

ஆகரம் தெரியவேண்டியவை.

𑌅𑌕𑍍𑌷𑍀𑌭𑍍𑌯𑌾𑌂 𑌕𑌰𑍍𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌚𑍇𑌷𑍍𑌟𑌿	275
𑌅𑌮𑍃𑌤𑍇 𑌨 𑌤𑌾𑌯𑌸𑍍𑌯	316
𑌅𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌯 𑌗𑍌𑌰𑌵𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌃	283
𑌅𑌯𑍋𑌧𑍍𑌯𑌾 𑌅𑌪𑌰𑌾𑌜𑌿𑌤𑌾	333
𑌆𑌵𑌿𑌷𑍍𑌟𑌿𑌤𑌾 𑌤𑍍𑌰𑌾𑌵𑍇𑌷𑍍𑌟 𑌸𑌵𑍇𑌨	260
𑌉𑌪𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌂	277
𑌏𑌷 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌨 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇	328
𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌕𑌾𑌪𑌿 𑌪𑌾𑌰𑍍𑌷𑍇	328
𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌷𑍍𑌟𑌂 𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑌂 𑌵𑌾	293
𑌕𑌲𑍌 𑌕𑍋𑌟𑌿𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌷𑍁	299
𑌕𑌾𑌮𑍇 𑌹𑌿 𑌕𑌰𑍍𑌮 𑌵𑍈𑌦𑍍𑌯𑌤𑍇	276
𑌕𑌿𑌂𑌕𑌰𑌤𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍 𑌪𑍍𑌰𑍇𑌷𑌸𑍍𑌯	304
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾	266
𑌦𑌾𑌨𑍋𑌦𑌾𑌰𑌂 𑌬𑌨𑍍𑌧𑌮𑌤𑌂	349
𑌦𑌾𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑍇𑌷𑍍𑌯 𑌯𑍋𑌗𑍇𑌨	252,333
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍋𑌦𑌿𑌤𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿	276
𑌦𑍁𑌰𑍍𑌜𑌨𑌸𑌜𑍍𑌜𑌨𑌂 𑌚𑍇𑌷𑍍𑌟𑌿	275
𑌨𑌾𑌯𑌂 𑌦𑍇𑌵𑍋 𑌨 𑌦𑍈𑌤𑍍𑌯𑌾	263
𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌾𑌤𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍	315
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋'𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌰𑌾𑌜𑌾	275
𑌯𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍋 𑌯𑌤𑍍𑌨𑌃	274
𑌯𑌜𑍍𑌞𑌯𑌵𑌿𑌧𑍍𑌯𑌕𑌿𑌂𑌕𑌰𑌾𑌃	329
𑌯𑍋 𑌵𑍇𑌦𑌨𑌂 𑌪𑌾𑌰𑍍𑌷𑌂 𑌵𑍇𑌦	329
𑌸𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌂	298
𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑍇𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑍋 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍	318
𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌤𑌤𑌃 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿	260
𑌹𑌰𑌿𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌵𑍋𑌪𑍍𑌤𑌿	316

தேசிகனுடைய ஶ்லோகங்கள்.

அகிஞ்சநதுரீணஸ்ய	312
அவாப்ய தாம் தை: ப்ராம்ஶவாம்	309
இதி கவிதார்க்கிககேஸரீ	371
இதி ஸ்ரீ தோதத்ரஶோகே	317
உதிதம் பவத: பாதாப்ஜ	249
தவேவாபாயபாரஶேஷ	305
ப்ரபதநஸமயே விஶ்ராமஹேதோ	249
ஶ்ருதிவாக்யநஹோமோதயம்	371
ஸாத்விஸாத்வதி ஸத்த்வா	325
ஶரணாகதிஸம்ஜ்ஞே ஸதிஞ்ச	311
ஸ்ரீமத்வேங்கடநாயகேந ஸஹிதா	322
ஸ்ரீமந்நாராயண: ஸ்வாமீ	249
ஶ்ரோதும் நிஷ்டுரஸௌரபம்	323

அம்ருதாஸ்வாதிநீ பாசுரங்கள் — ii

33.	அலர்ந்தவம்புயத்திருந்து	322
36.	ஆதிமறையெனவோங்கும்	370
37.	காண்பனவுமுரைப்பனவும்	371
34.	சடையன் திறலவர்கள்	323
32.	பாவும் மறைகளெல்லாம்	249
35.	பாவளரும் தமிழ்மறையின்	325

பெயர்கள்.

அகஸ்த்ய பாஷை 342
அகம்பனன் 346
அநந்யோபாய ஸ்வபாவத்வேஷ 255
அபராஜிதை 333
அப்ருதக்ஸித்தவிசேஷண 307
அப்புள்ளார் 304
அப்ஸரஸ் 348
அஹராவ 303
அயோபாயத்வேஷ 255
அயோத்யை 333
அயோநிஜன் 343
அஸுரன் 338
அஹம்புத்தி 257
ஆசார்யர்கள் 280
ஆவேசாவதாரம் 259, 260
ஆதித்யமண்டலம் 367
இடைச்சி 282, 320, 366
இடையன் 366
இதிஹாஸம் 268
இந்த்ரன் 338
இரணியன் 361
உத்தரகண்டம் 308, 310
ஏகதர் 369
கங்கை 351
கபந்தன் 339
கலியுகம் 274
கபி 306
காகம் 310
காவிரி 351
காத்ருஷ்டி 266
கிம்ப்ராகம் 261
குறளர் 288
குறும்பறுத்தநம்பி 331
கூனர் 288
க்ருதயுகம் 274
க்ருஷ்ண 258, 370
கைடபன் 340
கைவல்யம் 268
கோயிலாழ்வார் 340, 349
க்ஷீரார்ணவம் 359, 367
கரன் 339
ஜந்மம் 294, 313
ஜஹத்ஸ்வாவஸன் 269
ஜாநவதுவித்யா 302
சக்ரவர்த்தித் திருமகன் 339
சரம ஸ்லோகம் 312, 318
சார்வாகர் 263
ஜராஸந்தவாலிவாக்யம் 259
தத்புருஷஸமாஸம் 292
தாடகை 339
தாடகேயர் 339
திருத்துழாய் 284
திருப்பாணாழ்வார் 326
திருமந்த்ரம் 281, 318
திருமலை 330, 342
திருமலையாழ்வார் 342
திருவநந்தாழ்வான் 364
திருவாழியாழ்வான் 358
த்ரிதர் 369
த்ரிவிக்ரம 339

தஸ்யு 351
த்ருஷ்ணா 339
த்ரௌபதீ 310
த்வயம் 312, 318
பூர்வகண்டம் 308
உத்தரகண்டம் 308, 310
த்ருவர் 369
நடன் 304
நம்மாழ்வார் 275
நாரதர் 369
நித்யம் 276
நித்யஸூரிகள் 303
நிர்வசநம் 286
ந்யாயஸித்தாஞ்ஜநம் 268
பத்மயோநி 368
பரமதம் 303
பரமபதம் 300, 326, 342, 359
பரமைகாந்தி தர்மம் 274
பரன் 370
பாஞ்சஜந்யம் 358
புராண் 342
புருஷகாரம் 306
பெரியபிராட்டியார் 349
பெரியபெருமாள் 326,358, 370
பெருமாள் 358, 370
ப்ரணவம் 357
ப்ரதர்தநவித்யா 260
ப்ரதியோகி 303
ப்ராதாந்யம் 307
ப்ரத்வம்ஸாபாவம் 303
ப்ரஹ்லாதன் 338
பஹுவ்ரீஹிஸமாஸ 292
ப்ரஹ்மா 330, 334
ப்ரஹ்மாண்டஸித்தி 338
பக்தியோகம் 313
பகவச்சாஸ்த்ரம் 274
பாரதசாஸ்த்ரம் 289
பாஷ்யகாரர் 274
பாஷ்யார்த்து 308
பேதாபேதவாதி 250, 259
போகவிபூதி 289
மண்டோதரி 347
மது 340
மதுவித்யா 269
மந்த்ரரத்னம் 306
மல்லிகைப் பூ 261
மரகதகிரி 340
மஹர்ஷிகள் 286, 298
மஹாகவி 296
மஹாபலி 338
மஹாமேரு 361
மாயாவாதி 250, 321
மாயாவி 340
மாரீசன் 346
மார்க்கண்டேயன் 363
மால்யவான் 346

மூலமந்த்ரம் 312
ரஹஸ்யத்ரயம் 250
ரஹஸ்யத்ரயஸாரம் 297, 320
ராக்ஷஸர் 340
ராமன் 258, 370
ராவணன் 344
ருத்ரன் 339, 354, 355
லங்கை
லீலாவிபூதி 289
லௌகிகவைதிக 304
வடபத்ரஶயந 370
வஸிஷ்டர் 317
வாமந 370
விபவம் 370
விபீஷணன் 310, 346
விஹஜத்ருயூயம் 260
விராதன் 339
வேதாந்தம் 255, 293
வைநதேயர் 271
வ்யாஸர் 317
வ்யஷ்டி ஸ்ருஷ்டி 343
வ்யூஹம் 290, 370
வ்யூஹாந்தரம் 290
ஶுபவ்யூஹ 357
ஶிஶுபாலன் 321
ஶுத்தயாஜீ 264
ஸ்ரீய:பதி 273, 335, 343
ஸ்ரீபாஷ்யம் 302, 313, 314, [322
ஸ்ரீரங்கநகரம் 355
ஸ்ரீரங்கவிமானம் 359
ஸ்ரீ விஷ்ணுலோகம் 268, 299
ஸ்ரீவைஷ்ணவர்கள் 284
ஶ்ருதிவாக்யம் 256
ஶ்ருதிஸ்ம்ருதி 253, 314
ஶ்வேதத்வீபவாஸி 264, 369
ஸநகாதிகள் 334
ஸாங்க்யர் 284
ஸாமாஜிகன் 302
ஸாமீப்யம், ஸாயுஜ்யம் } 301
ஸாரூப்யம், ஸாலோக்யம் }
ஸாரநிஷ்கர்ஷாதிகாரம் 320
ஷண்முகன் 310
ஸூத்ரம் 256, 304, 314
ஸௌபரி 257
ஸ்தநந்தயம் 370
ஹநுமான் 346
ஹவிஸ் 372

அகம்படி	344	சாவேறு	347
அடைகோட்டை	347	தண்ணீர்த் துரும்பு	250
அடையவளைந்தான்	345	தனிசு	350
ஆழ்வார்	280	த்ரிஸரம்	364
இட்ட வழக்கு	343	பஞ்சஸரம்	364
	361	படைவீடு	351
ஐயப்பாடு	361	படிமா	342
கண்ணை	295	பொலிசை	350
குணுங்கு	366	வாரைமடல்	361
*சன்னவீரம்	364		

* சன்னவீரம் = முகப்புவைத்த முக்தாஹாரம்.

ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்

அருளிச்செய்த

ஸ்ரீபரமபதஸோபாநம்.

A. ஸ்ரீநிவாஸராகவன், M.A.,
புதுக்கோட்டை.

1938.
விலை அணா ஆறு.

விஷயஸூசிகை.

பதிப்புரை iii
முகவுரை v
நித்யவிபூதி வைபவம் xvii
ஸ்ரீபரமபதஸோபாநம்
தனியன்கள் 2
1. விவேகபர்வம் 3
2. நிர்வேதபர்வம் 7
3. விரக்திபர்வம் 14
4. பீதிபர்வம் 29
5. ப்ரஸாதனபர்வம் 35
6. உத்க்ரமணபர்வம் 47
7. அர்ச்சிராதி பர்வம் 55
8. திவ்யதேசப்ராப்தி பர்வம் 63
9. ப்ராப்தி பர்வம் 76
ப்ரமாண ஸூசிகை
i ஸம்ஸ்க்ருதம் 105
ii தமிழ் 110
ப்ரமாண ஸங்க்ரஹம்
i ஸம்ஸ்க்ருதம் 117
ii தமிழ் 119
ஆகரம் தெரியவேண்டியவை 120
பரமபதஸோபாநப் பாசுரங்கள் 121
பதஸூசிகை 122
பெயர் குறிக்கப்பட்ட கிரந்தங்கள் 129
உபாக்யானங்கள்
1 தர்மபுத்ரன் நரகமார்க்கத்தின்
படிகளைக்கேட்டு மூர்ச்சித்தது 129
ii மது கைடபர்களின் வ்ருத்தாந்தம் 131
iii வைதிகன்புத்திரர்களைக் கொண்டுவந்தது 131
iv புண்டரீகன் முக்திபெற்ற ப்ரகாரம் 133

ஸ்ரீ:

பதிப்புரை.

ஸ்ரீபரமபதஸோபாநம் என்ற ரஹஸ்யம் இதற்கு முன் மூன்று நான்கு தடவைகளில் அச்சிடப்பட்டிருந்தாலும், அதன் உபயோகத்தையும் பெருமையையும் உத்தேசித்தே அடியேன் இப்போது பதிப்பிக்கத் துணிந்தேன். ஸ்ரீதேசிகனுடைய முப்பத்திரண்டு ரஹஸ்யங்களையும் கிடைத்தமட்டில் இம்முறையில் நன்றாக சோதித்துப் பதிப்பிக்கவேண்டும் என்ற விருப்பம் இருப்பதாலும் ஸாரஸாரம் முதலான பதினொரு சில்லறை ரஹஸ்யங்களோடு ஹஸ்திகிரி மாஹாத்ம்யத்தைச் சேர்த்தது போல் இதையும் சேர்த்து வெளியிடுகிறேன். பல இடங்களில் சிறந்த பொருளையுடைய மிகவும் ஸரியான புதிய பாடங்கள் கிடைத்ததும் ஒரு காரணம்.

ஸ்ரீதேசிகனுடைய கிரந்தங்கள் அழகாகவும் சுத்தமாகவும் வெளிவந்து உலகில் பரவவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு மாத்ருகையை சோதித்தும், ப்ரமாணங்களுக்கு ஆகரங்களைத் தேடிக்கொடுத்தும், கஷ்டமான இடங்களில் பொருளை விளக்கியும் புஸ்தகம் அச்சானபிறகு பின்னுமொருமுறை சோதித்தும் இப்படிப் பலவாறாக அடியேனுசார்யரான திருக்கோட்டியூர் ஸ்ரீ. உ. வே. ஸௌம்யநாராயணுசார்யஸ்வாமி செய்தருளின உபகாரத்திற்கு அடியேன் க்ருதஜ்ஞதையை ஸப்ரணமம் வெளியிடுவது தவிர செய்யக்கூடியது வேறில்லை.

உபயோகிக்கப்பட்ட கிரந்தங்கள்.

1. திருக்கோட்டியூர் ஸ்ரீஸ்வாமி திருமாளிகையில் இருக்கும் சுத்தப் பிரதியான ஓலையேடு. இதுவே ப்ரதானமாகக் கொண்டு மூலத்தில் போடப்பட்டிருக்கிறது.

2. கும்பகோணம் ஸ்ரீ கோமளாம்பா ப்ரஸ்ஸில் சின்னமுரெ. ஸ்ரீநிவாஸபாட்ராசார்யஸ்வாமியால் அச்சிடப்பட்டது. (1931)—க என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

3. கொ. ஸ்ரீநிவாஸராகவாசார்யஸ்வாமியால் பரிசோதிக்கப்பட்டு சென்னை ஸ்ரீ நிகேதன அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டது. (1897)—வ.

4. மஹாமஹோபாத்யாய சேட்டலூர் ஸ்ரீ நரஸிம்மா சார்யஸ்வாமியால் இயற்றப்பட்ட தமிழ் மொழி பெயர்ப்புடன் கலாரத்னாகரம் முத்ராக்ஷர சாலையில் அச்சிடப்பட்டது (1926)— ரு.

5. ஸ்ரீ பவுண்டரீகபுரம் ஸ்ரீஸ்வாமி ஆச்ரமத்தில் உள்ள ஓலையேடு—வ.

முதலாவது தவிர மற்ற எல்லாவற்றிலும் பாடங்கள் பெரும் பாலும் ஒரேமாதிரியாயிருப்பதால் அவை எல்லாவற்றையும் 'க' என்று காட்டிவிட்டு, அவைகளுக்குள் இருக்கும் பேதங்களை மட்டும் அந்தந்த அக்ஷரங்களால் காட்டியிருக்கிறேன். தவறாக ஏதாவது விடப்பட்டிருப்பின் தேசிக பக்தர்கள் க்ஷமிப்பார் களாக.

முகவுரை எழுதும்போதும் க்ரந்தம் அச்சாகும்போதும் முழுவதும்பார்த்து பல சிறந்த யோசனைகளைக் கூறின ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உ. வே. கோவிந்தாசார்யஸ்வாமிக்கும் ஸுஹ்ருத்தான ஸ்ரீ கோபால அய்யங்கார் ஸ்வாமிக்கும் அடியேன் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகரம் தெரியாத பல சுலோகங்கள் தனியாக எடுத்து அச்சிடப்பட்டிருக்கின்றன. எதற்காவது ஆகரம் தெரியுமானால் அறிஞர்கள் அடியேனுக்கு அறிவித்து உபகரிக்கவேண்டும் என்று ஸவிநயம் ப்ரார்த்திக்கிறேன்.

புதுக்கோட்டை, 14—3—38

ஸ்ரீநிவாஸராகவன்.

ஸ்ரீ:

முகவுரை.

இவ்வுலகில் பரஸ்பரம் அபிப்பிராயபேதமுள்ள பல மதங்கள் இருந்தபோதிலும், 'ஸம்ஸாரத்தில் ஸுகம் அல்பமாயும் துக்கம் மிகுதியாயும் இருப்பதால், இதை விட்டு அளவற்ற ஆநந்தத்தை அடைய முயற்சிப்பதே விவேகியான ஒருவன் செய்யத்தக்கது' என்று நிர்ணயிப்பதில் அவை எல்லாம் ஏகமனதாகவே இருக்கின்றன. ஆனால் அவை கைக்கொண்ட பிரமாணங்களுக்கேற்பப் புருஷார்த்தங்கள் வேறுபட்டிருக்கின்றன. வேதத்தைப் பிரமாணமாகக்கொண்ட வைதிக மதங்களுக்குள்ளேயே இவ்விஷயத்தில் பேதமிருக்கிறது. அத்வைதம் முதலிய மதத்தினர் சில சுருதி வாக்கியங்களைப் பிரதானமாகக்கொண்டு, அவற்றுக்கநுகுணமாக மற்ற வாக்கியங்களை மாற்றி அர்த்தம் செய்தார்கள். விசிஷ்டாத்வைதிகளோவெனில், 'ப்ரஹ்மம் ஒன்றுதான் உள்ளது' என்கிற அபேத சுருதிகளுக்கும், 'ப்ரஹ்மம் வேறு, ஜீவர்கள் வேறு' என்பதுபோன்ற பேதசுருதிகளுக்கும், 'ஸகலசேதநசேதனங்களுக்கும் ஆத்மாவான ப்ரஹ்மம் ஒன்றே' என்கிற கடகசுருதிகளுக்கும், ஒருவித விரோதமும் வராமல், ஸகல வாக்கியங்களுக்கும் முக்யார்த்தத்தையே கொண்டு, வேத தாத்பர்ய நிர்ணயத்தைச் செய்தார்கள். அதனால் மற்ற ஸித்தாந்தங்களைக் காட்டிலும் இந்த ஸித்தாந்தத்திற்கு ஏற்றமுண்டு.

இப்படிப்பட்ட நம் ஸித்தாந்தத்தில் முக்கியமாக ஒருவன் தெரிந்துகொள்ளவேண்டியது தத்வம், ஹிதம், புருஷார்த்தம் என்ற மூன்றுமே. ஸகல சேதநாசேதநங்களையும் சரீரமாகக் கொண்ட ஜகத்காரணமான ஸ்ரிய:பதியான நாராயணனே பரதத்வம்; அவனுக்குப் பிரஸாதகமான பக்தி அல்லது ப்ரபத்தியே பரமஹிதம்; இவ்வுபாயத்தினால் ப்ரஸன்னனான பகவானை அடைந்து உபயவிபூதி விசிஷ்டனான அவனை அநுபவித்து அவனுக்குக் கைங்கர்யம் செய்துகொண்டிருப்பதே பரமபுருஷார்த்தம்.

இந்தப் பரம புருஷார்த்தமான பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் பரமபதம் அல்லது ஸ்ரீவைகுண்டம் என்னும் பெயருடைய தேச விசேஷத்தில் சென்றவனுக்கு உண்டாகிறதென்பதும் சாஸ்திரங்களிலிருந்து கிடைக்கிறது. 1'அது ரஜஸ் என்னும் ப்ரக்ருதிக்கு மேல் உள்ளது' என்றும், 2'தமஸ்ஸுக்கும் அப்பால் இருக்கிறது' என்றும் சுருதிகள் ஓதுகின்றன. அப்படியே 3'அது விஷ்ணுவினுடைய பரமமான பதம்,' 4'விஷ்ணுவினுடையதான அந்தப் பதத்தை ஸூரிகள் எப்போதும் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள்,' 5'அது அக்ஷரமான பரமவ்யோம அல்லது பரமாகாசம்,' 6'அது தேவர்களான நித்யஸூரிகள் நகரமான அயோத்யை,' 7'அது பரப்ரஹ்மத்தின் உலகம்,' இதுமுதலான வாக்கியங்களும் அவ்வுலகையேகூறுகின்றன. வேதார்த்தங்களை வ்யாக்யானம் செய்துவந்த இதிஹாஸபுராணங்களும் அவ்வுலகத்திற்கு 8'வைகுண்டம்' என்று பெயர் என்றும், 9'அது ஸூரியன் அக்நி இவர்களுடைய தேஜஸ்ஸைக் காட்டிலும் மிகவும் ப்ரகாசமானது' என்றும், 10''அவை ஞானநந்தமயமான உலகங்கள் என்றும்,' 11'அதன் பெருமையை அறிந்தவனுக்கு ஸ்வர்க்காதி

---

1 ரஜஸ: பராகே (தை. ஸம். 2. 1. 12.)

2 தமஸ: பரஸ்தாத் (ஶ்வேதாஶ்வதர)

3 தத் விஷ்ணோ: பரமம் பதம் (கடோப)

4 தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய:
(ந்ருஸிம்ஹதாபநீய)

5 தத் அக்ஷரே பரமே வ்யோமந்

6 தேவாநாம் பூரயோத்யா (தை. ஆர. 1. 2. 7.)

7 ப்ரஹ்மலோகே த்ருதீயஸ்யாமிதோ திவி (கௌஷீதகி)
(ப்ரஜாபதேஸ்ஸபாம் வேஶ்ம ஹா.)

8 லோகம் வைகுண்டநாமாநம்

9 அத்யர்க்காநலதீப்தம் தத்

10 ஜ்ஞாநாநந்தமயா லோகா:

11 ஸந்தி வை நிரயாஸ்தத

மேலோகங்கள் எல்லாம் நரகதுல்யங்களாம்' என்றும், 12'அங்கு காலத்தினுல் ஏற்படும் வேறுபாடுகள் ஒன்றும் கிடையாது' என்றும் விரித்து உரைக்கின்றன.

இதை அடைந்தவர்கள் மறுபடியும் ஸம்ஸரிக்கமாட்டார்கள் என்பதும் கூறப்பட்டிருக்கிறது.

பகவதநுக்ரஹத்தால் ஸர்வஜ்ஞர்களான ஆழ்வார்களும் அவற்றை அடியொற்றி இந்நாட்டைப் பற்றி, 'சேணுயர் வானம்,' 'தெளிவிசும்பு,' 'மாக வைகுந்தம்,' 'நலமந்தமில்லதோர் நாடு,' 'கலங்காப் பெருநகரம்,' என்று அருளிச் செய்தார்கள். புநராவ்ருத்தி இல்லை என்பது 'பிணை கொடுக்கிலும் போகவொட்டார்' என்பதால் காட்டப்பட்டது. இவ்விஷயங்களை சுருக்கமாக ஆளவந்தார் பட்டர் முதலான பூர்வாசார்யர்கள் தங்கள் ஸ்தோத்ரங்களிலும், ஸ்ரீ பாஷ்யகாரர் வைகுண்டகத்யத்திலும் அநுஸந்தித்துள்ளார்கள்.

இப்படிப்பட்ட பரமபதம், இதையடையும் வழி, அதைப் பெறும் அதிகாரிக்கு வேண்டிய குணங்கள் இவையே அத்யாத்ம சாஸ்திரங்களில் கூறப்படுகின்றன. ஶாரீரகஸூத்ரம் முதல் இரண்டு அத்யாயங்களால் பரப்ரஹ்மத்தையும், மூன்றாவதால் உபாயமான உபாஸநத்தையும் நான்காவதால் பலத்தையும் கூறிற்று. பகவத்கீதை உபாயமான பக்தியோகத்தை அதன் அங்கங்களோடு கூட விஸ்தாரமாக உபதேசித்து, அதில் சக்தியற்றவனுக்கு சுலபமான ப்ரபத்தி என்னும் மற்றொரு உபாயத்தையும் காட்டிக் கொடுத்தது. பகவச்சாஸ்திரங்கள் இந்தப் பிரபத்தியின் அங்கங்களையும் அது ஸகலபலஸாதனம் என்பதையும் விரித்து உரைத்தன.

இப்படி அநந்தமான அத்யாத்ம சாஸ்திரங்களில் அங்கங்கு சிதறியும் சுருங்கவும் பரக்கவும் கிடக்கும் விஷயங்களையெல்லாம் அளவுபெற்ற பலம், ஞானம், ஆயுள், முதலியவற்றையுடைய நாம் அறியமுடியாததை அறிந்து நம் ஆசார்யச்ரேஷ்டரான ஸ்ரீ வேதாந்ததேசிகன் அவற்றைக் கடைந்து ஸாரமான அர்த்

12 ந காலஸ்தத்ர வை ப்ரபு:

தங்களைத் தன் ரஹஸ்ய க்ரந்தங்களில் நிரூபித்தருளினார். அவை யும் ஸர்வாதிகாரமாக இருக்கவேண்டும் என்று அவற்றை மணி ப்ரவாள நடையில் அருளிச் செய்தார். ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரத் தில் எல்லா விஷயங்களும் விஸ்தாரமாக ப்ரமாணம், உபபத்தி, ஸம்ப்ரதாயம் இவற்றைக்கொண்டு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வர்த்தங்களில் சிலவற்றை ஒரு ரஹஸ்யத்திலும், வேறு சில வற்றை வேறொன்றிலும் ப்ரதானமாகக் காட்டியிருக்கிறார். உதாரணமாக ஸாரஸாரத்தில் முமுக்ஷுவுக்கு உத்தாரகமான மூலமந்த்ரம் முதலான ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தத்தை ஸங்க்ர ஹித்தார். அபயப்ரதானஸாரத்தில் ப்ரபத்தியால் வசம் செய்ய வேண்டிய சரண்யனுடைய வைபவம் கூறப்பட்டது. ரஹஸ்ய சிகாமணியில் ப்ரபன்னர்களுக்கு அந்திமஸ்ம்ருதி ஸ்வயத்நத்தா லேயே அடையவேண்டியதொன்றன்று என்பதும் அஞ்ஜலி வைபவத்தில் ப்ரபத்தி ஸகலபாபத்தையும் போக்கும் என்பதும் காட்டப்பட்டது. பரமபதஸோபானத்தில் உபாயத்தை அநுஷ் டித்தஅதிகாரி இங்கும் பரமபதத்திலும் பெறும் லாபங்கள் விசேஷித்து விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றன.

இந்தப் பரமபதஸோபானத்தில் கூறப்படும் விசேஷங்கள் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களில் பக்தியோகநிஷ்டனுக்கே சொல்லப் பட்டிருந்தாலும், ப்ரஹ்மவித்யைகளில் ஒன்றான ந்யாஸவித்யை யை அனுஷ்டிக்குமவனுக்கும் அவ்விசேஷங்கள் வரும் என்ப தில் ஆக்ஷேபம் இல்லை. ஆனால் இதில் விசேஷித்துக் கூறப்படும் கதிசிந்தநமானது பக்தியோகநிஷ்டனுக்கு உபாயாங்கமாக விதிக்கப்பட்டது. கதிசிந்தனமாவது: ஒரு ஜீவன் ஹ்ருதயத்தி லிருந்து மேலே செல்லும் நாடிகளில் மோக்ஷத்திற்கு வழியான மூர்த்தந்ய நாடியால் சென்று, ப்ரஹ்மரந்த்ரத்தின் வழியாக வெளிக்கிளம்பி ஸூர்யமண்டலத்தைப் பிளந்துகொண்டு அர்ச்சி ராதிகதியால் சென்று, ஸ்ரீவைகுண்டத்தை அடையும் ப்ரகாரத் தையும் அவனுக்கு வழியில் நடக்கும் விசேஷங்களையும் கடைசி சரீரத்தை விடுமளவும் மற்ற நிகழ்ச்சிகளையும் தினமும் சிந்திப்ப தேயாகும். இவ்வர்ச்சிராதிகதியும், இதனால் சென்று அடையும் பரமபதம் என்னும் நாடும், அந்நாட்டிலுள்ள பொருள்களின் ஸ்வரூபஸ்வபாவங்களும் சாந்தோக்யம் ப்ருஹதாரண்யகம்,

கௌஷீதகி முதலான உபநிஷத்துக்களிலும், சாகடாயந ஸம்ஹிதை ஜிதந்தே முதலான பகவச்சாஸ்த்ரங்களிலும் வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. ஆழ்வார்களும், 'சூழ்விசும்பணிமுகில்'என்னும் (பத்தாம்பத்து ஒன்பதாவது திருவாய்மொழி) பதிகத்தில் அவர்களுள் ப்ரதானரான நம்மாழ்வாரும் இந்நாட்டையும் அங்கு செல்லும் முக்தனுக்கு நடக்கும் உபசாரங்களையும் அருளிச் செய்துள்ளார்கள். ஸம்ஸ்க்ருத-த்ராவிட வேதங்களிலும் மற்ற சாஸ்திரங்களிலும் கூறினதைத்தொகுத்து வைகுண்ட கத்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் அநுஸந்தித்தார்.

இப்படி கதிசிந்தன விஷயமாக ஆழ்வார்களும் பூர்வாசார்யர்களும் கூறிய விஷயங்களையெல்லாம் ஸப்ரமாணமாக ஆழ்வார்களினுடைய அருளிச் செயல்களைக் கொண்டே தொடுத்து ஸ்ரீ தேசிகன் பரமபதஸோபாநம் என்னும் ரஹஸ்யமாக வெளியிட்டருளினர். பக்தனுக்குப்போல ப்ரபந்நனுக்கு இந்த கதிசிந்தநம் வித்யைக்கு அங்கமாய் அனுஷ்டிக்கவேண்டும் என்று விதி இல்லாவிட்டாலும்,ப்ரபந்நன் ஸம்ஸாரதோஷத்தைக்கண்டு அதில் வெறுப்படைவதற்காவும் தன்னுடைய அல்ப உபாயத்திற்காக இவ்வளவு பெருமையையும் தந்தருளுகிற பகவானுடைய குணங்களை நினைத்து ஸந்தோஷிக்கவும், உபாயபலமாகத் தான் பெறப் போகும் புருஷார்த்தங்களை நினைத்து பேரானந்தம் அடைவதற்காகவும், அப்பேர்பட்ட எல்லையில் பேரின்பத்தை உடனே பெற வேண்டும் என்று ஆவலும் த்வரையும் ஏற்படுவதற்காகவுமே ப்ரபந்நனுக்கு இது கூறப்படுகிறது.

பட்டர் தன் அந்திம தசையில், "இன்னும் சிறிதுகாலம் இங்கே விட்டுவைத்தாராகில் பரமபதத்திற்குச் சுருளும்படியும் கட்டி வைக்கேனோ?" என்று அருளிச் செய்தாராம். ஸ்ரீ தேசிகன் இதற்கு 'பரமபதஸோபாநம்' என்ற பெயர் வைத்ததையும், விஷயங்களை ஒன்றின்மேல் ஒன்றாக படிகள் போல நிரூபித்திருப்பதையும் பார்த்தால், இந்த ஐதிஹ்யம் மனத்தில் ஓடி பட்டர் திருவுள்ளத்தைப் பூர்த்திசெய்ய நினைத்தே இப்பிரபந்தத்தைச் செய்தருளினர் என்று சொல்லலாம்போலிருக்கிறது. மோக்ஷமென்னும் உயர்ந்த ஸ்தானத்தை கஷ்டமான வழி

களால் அடையமுடியாத அசக்தர்கள் ஒவ்வொரு படியாக எளிதில் ஏறி அதை அடையும் ப்ரகாரத்தையும், முதல்படியில் ஏறினவனே இரண்டாம்படியில் ஏறமுடியும் என்பதையும் இப் பிரபந்தத்தாலும் இதன் பெயராலும் காட்டுகிறார்.

பரமபதஸோபாநம் (அல்லது பரமபதத்தைக் கிட்டுவிக்கும் படிகள்) என்னும் இந்த ரஹஸ்யம் ஒன்பது பர்வங்கள் கொண்டது. இவற்றுள் முதல் நான்கையும் 'அதிகாரபேடிகை' என்று ஒரு வகுப்பாகவும், ஐந்தாவதை 'உபாயபேடிகை' என்றும், கடைசி நான்கையும் 'புருஷார்த்த பேடிகை' என்று ஒரு வகுப்பாகவும் பிரிக்கலாம். அதிகார பேடிகையில் சொன்ன குணங்கள் கொண்டவனே உபாயபேடிகையில் சொன்ன உபாயத்தை அநுஷ்டிக்கலாம்; அவ்வுபாயத்தை அநுஷ்டித்தவனுக்கே புருஷார்த்தபேடிகையில் சொன்ன பயன் கிட்டும். அதாவது ஒரு ஜீவாத்மா விவேகத்தை ஸம்பாதித்து, அதனால் நிர்வேதத்தை அடைந்து, விரக்தியைக் கைக்கொண்டு, பீதியுள்ளவனாய், பகவத்ப்ரஸாதகமான உபாயத்தை அநுஷ்டித்து, சரீராவஸாநத்தில் இச்சரீரத்திலிருந்து உத்க்ராந்தியைச் செய்து, அர்ச்சிராதிகதியாலே சென்று, திவ்யதேச ப்ராப்தி பெற்றவனாய், பராபதி என்னும் பரமபுருஷ லாபத்தைப் பெறும் ப்ரகாரமே இவ்வொன்பது பர்வங்களிலும் நிரூபிக்கப்படுகிறது.

i. இதில் முதல்படி விவேகம்: அசேதனம், சேதனம், ஈச்வரன் என்ற மூன்று தத்வங்களின் ஸ்வரூபஸ்வபாவங்களை அறிந்து 'தானும் பிறரும் தனக்கு சேஷியும் தஞ்சமும் போக்யமும் அன்று' என்று நிச்சயிப்பது.

ii. இரண்டாவது நிர்வேதம்: அதாவது ஸதாசார்யோபதேசத்தால் விவேகம் பெற்றவன் தான் இவ்வளவு நாட்களாக அர்த்தகாமங்களுக்காக மனம்போனபடி செய்த பாபங்களையும் அதன் பலமாக வரும் நரகயாதனைகளையும் சாஸ்த்ரங்களிலே கேட்டு மனம் தளர்ந்து இனி பாபத்தைச் செய்வதில்லை என்று அதிலிருந்து நீங்குவது.

iii மூன்றாவது விரக்தி. ஐச்வர்ய கைவல்யங்களின் தோஷத்தைக் கண்டு அவற்றில் ஆசையை விடுவது. பாபத்

தைச் செய்யாததினால் நரகத்தை ஸம்பாதிக்காமற்போனாலும் அல்பஸாரமுள்ள ஸ்வர்க்காதிகளில் ஆசை ஏற்பட்டால் அதனால் பேரின்பமான மோக்ஷத்திற்கு விக்னமும் விளம்பமும்உண்டாகும். சரீரத்தின் நிலையிலும், சரீரம் படைத்தாருக்கெல்லாம் அதிபர்களான சக்ரவர்த்திகளுடைய பதங்களிலும் அப்படியே தேவதைகள், அவர்களுக்குத் தலைவர்களான லோகபாலகர்கள், அவர்களை வெருட்டியடிக்கும் ராவணன் போல்வார், அவர்களையும் கட்டியடிக்கும் வலிமையுள்ள கார்த்தவீர்யன் முதலானோர், இவர்களையெல்லாம் அழிக்கவல்ல ருத்ரன், அவனுக்கும் தந்தையான ப்ரஹ்மா எல்லாருடைய ஸ்தானங்களிலிருக்கும் ஆபத்து அழிவு முதலான துன்பங்களை உணர்ந்து அவற்றில் ஆசையை விட வேண்டியது இதில் கூறப்படுகிறது.

iv நான்காவது பீதிபர்வம். இப்படி விவேக நிர்வேத விரக்திகளைக் கைக்கொண்டவன் நரகத்தைப் போலவே ஸ்வர்க்கத்தையும் இகழ்ந்து, எங்கும் துக்கத்தைக் கண்டு நடுங்கி மோக்ஷத்தைத் தரக்கூடிய உபாயத்தை அநுஷ்டிக்க ஊக்கமும் பரபரப்பும் உடையவனாவான்.

v. அவ்வுபாயத்தைக் கூறுகிறது ஐந்தாவதான ப்ரஸாதநபர்வம். அந்த உபாயம் பக்தி ப்ரபத்தி என்று இரண்டு. பக்தியை அநுஷ்டிப்பதற்கு ஞானம், சக்தி, ஜாதி முதலிய பல குணங்கள் வேண்டும். பலமும் சீக்கிரத்தில் கிடைக்காது. இதெல்லாம் இல்லாதவர்களுக்கே ப்ரபத்தி அல்லது சரணாகதி என்னும் உபாயம் என்றும், இதைச் செய்வோர்களுடைய நோவுக்குத் தக்கபடி மோக்ஷம் சீக்கிரத்தில் கிடைக்கும் என்றும், இதில் கூறப்படுகிறது.

vi. புருஷார்த்த பேடிகையான அடுத்த நாலில் முதலாவது உத்க்ரமண பர்வம். இதில் தன் கடைசி சரீரத்தை விட்டு ஜீவாத்மா பிரிந்து செல்லும் பிரகாரத்தை நிரூபிக்கிறார். ப்ரபந்நனுக்கு உத்தராயணம் புண்யஸ்தலம் முதலானவற்றில்தான் இறக்கவேண்டும் என்று நியமமில்லை. இவனுடைய புண்ய பாபங்களெல்லாம் இவனுடைய மித்ர சத்ருக்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. கடைசி க்ஷணத்தில் பகவானை ஸ்மரிப்

பது என்னும் அந்திம ஸ்மிருதியை பகவானே செய்துவைத்து பதினொரு இந்திரியங்கள், மனஸ், ப்ராணன் இவற்றை முறையே ஒன்றுசேர்த்து, அத்திரளை ஜீவனிலும், இவற்றோடுகூடின ஜீவனை பஞ்சபூத ஸூக்ஷ்மத்திலும் சேர்த்து, ஹ்ருதயத்திலிருக்கும் தன்னிடம் இளைப்பாற்றுகிறான். பிறகு மேல் நோக்கிச் செல்லும் ஸுஷும்நை என்னும் ப்ரஹ்மநாடியால் ஹ்ருதயத்திலிருக்கும் ஸூக்ஷ்மத்வாரம் வழியாக இவனைக்கொண்டு சென்று ப்ரஹ்மரந்த்ரம் என்ற தலைவாயிலைத் திறந்துகொண்டு புறப்பட்டு வைகுந்தம்புக வழிப்படுத்துகிறான்.

vii. ஏழாவதான அர்ச்சிராதி பர்வத்தில் சரீரத்தைவிட்டுக் கிளம்பின ஜீவாத்மாவுக்கு வைகுண்டத்தை அணுகும்வரையில் நடக்கும் உபசாரங்களை வர்ணிக்கிறார். அர்ச்சிஸ் அல்லது அக்னி, பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம், ஸம்வத்ஸரம், வாயு இந்த தேவதைகளெல்லாரும் இவனை எதிர்கொண்டு க்ரமமாக தம்தம் எல்லையளவும் அழைத்துச் செல்லுகிறார்கள். அதற்கு மேல் ஸூர்யமண்டலத்தைக் கீண்டுபுக்கு சந்திரனைக்கிட்டி அவன் வழிநடத்த அமானவன் துணையாக முறையே வருணன், இந்திரன், ப்ரஜாபதி இவர்கள் அழைத்துச்செல்ல, கடைசியில் அமானவனே இவனை ப்ரஹ்மத்தினிடம் கொண்டு சேர்க்கிறான். இவ்வழியாலே ப்ரக்ருதியைக் கடந்தவனுக்கு மறுபடி பிறவி கிடையாது.

viii. எட்டாவது பாவம திவ்யதேசத்தை அடையும முக்தனுக்கு உண்டாகும் விசேஷங்களை வர்ணிக்கிறது. விரஜையைக் கடந்ததும் ஞானாநந்தமயமான உலகத்தையும் அதிலுள்ள ஆறு, மலை, மாளிகைகள் எல்லாவற்றையும் காண்கிறான். ஐந்நூறு அப்ஸரஸ்ஸுக்கள் எதிர்கொண்டு ப்ரஹ்மாலங்காரத்தால் அலங்கரிக்க, ப்ரஹ்மத்தினுடைய திவ்யகந்தம் ரஜஸ், தேஜஸ் இவனிடம் பிரவேசிக்கும். பிறகு கோபுரவாயிலைக் கடந்து திருவீதியில் நித்யஸூரிகளும் மதிமுகமடந்தையரும் சூழ்ந்து உபசரிக்கச் சென்று, திருமாமணி மண்டபத்தில் முக்தரும் கருடவிஷ்வக்ஸேனாதிகளான நித்யரும் புடைசூழ ஆதிசேஷன்மேல் நாய்ச்சி

மார்களோடு வீற்றிருக்கும் பரமபதநாதனைக்கண்டு வணங்கு கிறான்.

ix. ஒன்பதாவது பர்வம் முக்தன் இப்படி வீற்றிருக்கும் பகவானோடு சேர்வதைக் கூறுகிறது. அந்த பகவானுடைய திருமேனியழகிலும் அவயவசோபையிலும் ஆபரணச் சேர்த்தி யிலும் ஈடுபட்டு ஒவ்வொன்றையும் அநுபவித்து விவிதஸ்தோத் திரங்களைப் பண்ணுகிறான். அப்போது தன் திருவடிகளாலே பகவான் இவனுக்குப் பூமுடி சூட்ட, அத்திருவடிகளையே பற்றி பகவான் எழுந்தருளியிருக்கும் திவ்ய பர்யங்கத்தின்மேல் ஏறி, பகவான் கேட்க, தான் பெற்ற பேற்றையெல்லாம் கூறி மீளா வடிமைப்பணி கொள்ளவேண்டும் என்று பிரார்த்திக்கிறான். பிறகு பரமசேஷி திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்பெற்று பரபக்தி-பரஞான-பரமபக்தியுக்தனாய், அந்த முக்தன் பகவானை வலம்செய்தும், நிழல் போல் அநுஸரித்தும், குடியடிமை செய் தும் சூழ்ந்திருந்து பல்லாண்டேத்தியும், ஸர்வதேசத்திலும் ஸர்வகாலத்திலும் ஸர்வவித கைங்கர்யங்களையும் நித்யஸூரி களோடு கூடத் தானும்செய்து, மீட்சியில்லா வாழ்ச்சியை அநு பவிக்கிறான்.

இப்படி ஒரு ஜீவன் ஆசார்யனைஆச்ரயிப்பது முதல் மோ க்ஷத்தை அடைந்து பரிபூர்ண ப்ரஹ்மானுபவம்செய்யும் வரை யில் நிகழ்வனவற்றைக் கூறும் இப்பிரபந்தத்தை'ஒரு ஜீவாத்மா வின் சரித்திரம்' என்றே சொல்லலாம். இதன் அமைப்பின் சீர் மையையும் அழகையும் கண்டு 'ஸ்வபாவத்தினாலே மிகவும் அழ கானது' (ஸ்வபாவ-சித்ரம்) என்று ஸ்ரீ தேசிகனே ப்ரபந்த மு டிவில் கூறுகிறார். ப்ரமாணங்களை அநுஸரித்து அவை காட்டின முறையில் விஷயங்களை நிரூபித்திருக்கிறபடியால், குயுக்திகளைக் கொண்டு அசைக்க முடியாமல் உறுதியானது என்பதை 'ஸுஸ் தம்' என்று அருளிச் செய்திருக்கிறார்.

இவ்வளவு சிறப்புவாய்ந்த இந்தக் கிரந்தம் ஸ்ரீ தேசிகனு டைய ஆச்சர்யமான பல குணங்களை ஒருங்கே வெளிப்படுத்து கிறது. அநந்தங்களான சுருதிகளிலும் ஸம்ஹிதைகளிலும்அங் கங்கு தனித்தனியே கூறப்பட்ட விஷயங்களையெல்லாம் திரட்டி முமுக்ஷுவான ஒருவனுக்கு அவச்யம் அறியவேண்டியவற்றை

சுருக்கமாக இப்பிரபந்த மூலமாக வெளியிட்டிருப்பது அவர் ஸகல சாஸ்த்ரங்களையும் அறிந்தவர் என்பதையும் பரமகாருணி கர் என்பதையும் காட்டுகிறது. நினைத்தபடி நிர்மாணம் செய்ய வல்லவராயினும் ப்ரமாணங்கள் போனவழியிலே விஷயங்களைக் கூறி, மேற்கோளாக ப்ரமாணவாக்யங்களைக் காட்டியும், அவற் றிலுள்ள சொற்களைக்கொண்டே தன் வாக்யங்களை இசைத்தும் பிரபந்தத்தைச் செய்தருளியிருப்பதைக் கவனிப்பவர்களுக்கு ஸ்ரீ தேசிகன் ப்ரமாணங்களை விட்டு அணுவளவும் விலகாதவர் என்பதும், இவருடைய ஸ்ரீ ஸூக்திகள் ஆப்ததமங்கள் என்பதும் விளங்கும். வேதங்களைப் போலவே ஆழ்வார்களுடைய அரு ளிச் செயல்களைப் பிரமாணமாக உதாஹரிக்கிறபடியால், த்ரமி டோபநிஷத்துக்களென்னும் திவ்யப்பிரபந்தத்திலும் ஆழ்வார்க ளிடத்திலும் இவருக்கு இருக்கும்பக்தி வெளியாகிறது. ஒன்ப தாவது பர்வத்தில் முக்தன் பகவானை அநுபவிக்கும் ப்ரகாரத் தை வர்ணிக்குமிடத்தில், ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளை அழகாக உணர்ச்சிததும்பும் வகையில் இசைத்திருப்பதை ஆராயுமவர்கள், நம் ஆசார்யர் கேவல தார்க்கிகரல்ல, அநு பவம் நிறைந்த இளகிய மனத்தர் என்பதை ஒத்துக்கொள்ளு வார்கள். ஸ்ரீ வைகுண்டகத்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீ வைகுண் டத்தை வர்ணித்த பிறகு பரிவாரங்கள் சூழ ஸர்வாலங்காராலங் க்ருதனாய் (பிராட்டிமார்கள்சூழ எழுந்தருளியிருக்கிற) பகவானை வர்ணித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

உலகையே தன் சொன்வன்மையால் மனதைக் கவரும்படி சித்தரித்துக் காட்டும் கவிகள் போல, ஸ்ரீ தேசிகன் படிப்படி யாக சாஸ்த்ரத்தை அறிந்து அநுஷ்டித்துப் பயனைப் பெறும் மார்க்கத்தை மேல்மேல் செல்லும் படிக்கட்டுகளாக நிரூபித்து, அத்யாத்ம சாஸ்த்ரத்தையே பேரின்பமாளிகையைக் கிட்டுவிக் கும் ஸோபாநமாக அழகாகச் சித்தரித்திருப்பது அவர் 'கவி ஸிம்ஹம்' என்பதை எடுத்துக் காட்டுகிறது. வடமொழியிலும் தென்மொழியிலும் இனிய கவனங்கள் செய்யவல்லவர் என்பது யாவரும் அறிந்ததே.

இப்படி ஸர்வஜ்ஞத்வம், சாஸ்த்ரவரம்புமீறாமை, குருபக்தி, கவியின் திறமை, ஸர்வபூததயை, கவனஸாமர்த்யம் முதலான

பல குணங்கள் நம் ஆசார்யரிடத்தில் இருப்பதாலும் இதுபோல பல கிரந்தங்களை அருளிச்செய்திருப்பதாலும் 'இவர் ஸ்ரீ வேங்கடேசனின் அவதாரம்' என்ற முன்னோர்கள் வார்த்தையும், 'வேதாந்தாசார்யன்,' 'கவிதார்கிகஸிம்ஹம்' என்ற திருநாமங்களும் இவரிடம் பொருந்தி நிற்கின்றன என்பது கூறாமலே விளங்கும்.

இவ்வாறு நம் ஆசார்யச்ரேஷ்டர் 'எல்லோரும் உஜ்ஜீவிக்க வேண்டும்' என்கிற உதாரமனதுடன் கட்டிவைத்த ப்ரபந்த ரூபமான ஸோபாநத்தை உலகத்திற்கு நன்கு வெளிப்படுத்தவே அடியேனுடைய பிரயத்னம். ஸ்ரீ தேசிகனும் அவனடியார்களும் அந்தப் பிரயத்னம் ஸபலமாகவேண்டும் என்று அநுக்ரஹிப்பார்களாக.

இக்கிரந்தத்தைப் பதிப்பிக்கும் விஷயத்திலும் அங்கங்கு பொருள்கூற முயற்சித்திருப்பதிலும் அடியேனுடைய அறிவின்மையாலும் தேர்ச்சிக் குறைவினாலும் ஏற்பட்ட பிழைகளை க்ஷமித்து இதை உகப்புடன் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

புதுக்கோட்டை
25-3-1938

ஸ்ரீநிவாஸராகவன்.

நித்யவிபூதிவைபவம்.

'ஸர்வேச்வரன் உபயவிபூதி நிர்வாஹகன்' என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. லீலா விபூதியும் நித்ய விபூதியுமே உபய விபூதி. லீலா விபூதியிலுள்ள ஜீவர்கள் அவரவர்கள் கர்மாநுகுணமாக தேவ—மநுஷ்ய—ம்ருக—ஸ்தாவர சரீரங்களை எடுத்து விழுந்தும் எழுந்தும் ஈச்வரனுக்கு போகத்தைக் கொடுக்கிறார்கள். போகவிபூதி என்னும் நித்யவிபூதியிலோ நித்யர்களும்முக்தர்களும் பகவானை எப்போதும் ஸாக்ஷாத்கரித்து அனுபவித்துக் கைங்கர்யங்கள்செய்து போகத்தைக் கொடுக்கிறார்கள். ஒரு உபாயத்தைஅநுஷ்டித்து இந்த லீலாவிபூதியிலிருந்து அங்கு சென்ற ஜீவர்களே முக்தர் எனப்படுவர்.

லீலா விபூதியைத்தான் ஸம்ஸாரம் என்பது. இது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணம்கொண்ட பிரகிருதிக்குட்பட்டது. இதற்கே அண்டம் எனவும் பெயர் உண்டு. இதில் அதலம் விதலம் ஸுதலம் ரஸாதலம் தலாதலம் மஹாதலம் பாதாளம் என்று கீழேழு லோகங்களும், பூமி அந்தரிக்ஷம் ஸ்வர்க்கம் மஹஸ் ஜனம் தபஸ் ஸத்யம் என்ற மேலேழு லோகங்களும்

இப்படிப் பதினாலு உலகங்கள் கொண்ட இவ்வண்டத்தைச் சுற்றி ஒன்றைவிட ஒன்று பதின்மடங்கு விஸ்தீர்ணமுள்ள ஜலம், அக்னி, வாயு, ஆகாசம், அஹங்காரம், மஹத், அவ்யக்தம் (அல்லது ப்ரதானம், ப்ரக்ருதி) என்னும் ஏழு ஆவரணங்கள் சூழ்ந்து இருக்கின்றன.

இவற்றிற்கெல்லாம் அப்பால் 'விரஜை' என்னும் அம்ருத நதி பகவத்க்ருபை போலே ஸர்வகாலத்திலும் ஏக ரூபமாகப் பிரவஹிக்கிறது. மோக்ஷத்திற்குச் செல்லும் ஜீவன் தன் ஸங்கல்பத்தால் இந்த விரஜையைத் தாண்டியே ரஜஸ் தமஸ் கலப்பில்லாத சுத்த ஸத்வமயமான நித்யவிபூதியை அடைகிறான். அங்கு அம்ருதமயமான ஸமுத்திரங்களும் நதிகளும், மணி பர்வதங்களும், மாளிகைகளும், உத்யானங்களும் பக்ஷிகளும் உள்ளன.

அவையெல்லாம் ஞானநந்தஸ்வரூபமாய், ஒன்றையொன்று தகையாமலும் மறைக்காமலும் தேஜோமயமாய் விளங்குகின்றன. அங்குள்ள பொருள்களுக்கெல்லாம் காலத்தினால் வேறுபாடு இல்லை. சில நித்யமாய் ஏகரூபமாயும், சில நித்யமுக்தர்களின் ஸங்கல்பத்தை யொட்டி அந்தந்தக் கைங்கர்யத்திற்காக சிறிதுபோது நிற்பவையாயு மிருக்கும். ஆச்சர்யமான இவ்வுலகத்தினுடைய பரிமாணம், ஐச்வர்யம் ஸ்வபாவம் எல்லாம் பரமயோகிகளுடைய வாக்குக்கும் மனதிற்கும் கூட எட்டாதவை.

விரஜையைக் கடந்ததும் 'அரம்' 'ண்யம்' என்ற இரண்டு அம்ருதமயமான ஸமுத்ரங்கள், திவ்யோத்யானங்கள், மணி பர்வதங்கள் எல்லாம் இருக்கின்றன. பிறகு 'ஐரம்மதீயம்' என்னும் அம்ருத ஸரஸ்ஸையும், 'ஸோமஸவநம்' என்னும் அச்வத்த வ்ருக்ஷத்தையும், அதற்கப்பால் திவ்ய வ்ருக்ஷத்தையும், 'ஸாலஜ்யஸம்ஸ்தான அபராஜிதாயதநங்களையும் காணலாம். 'அயோத்யை' என்றும் 'அபராஜிதை' என்றும் கூறப்படும் ஸ்ரீ வைகுண்ட நகரம் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு உயர்ந்த மதிள்களால் சூழப்பட்டதாய் அங்கே விளங்குகிறது. நகரவாயிலுக்கு இந்த்ரன் ப்ரஜாபதி என்பவர் த்வாரபாலகர்கள். நகரத்தின் உள்ளே மணிபர்வதங்களை அடுக்கிவைத்தாற்போல் அழகிய மாளிகைகள் இருபக்கமும் திகழும் வீதிகள் ஸர்வேச்வரன் எழுந்தருளியிருப்பதும் ஆயிரங்கால்களையுடையதும் ஹிரண்யமயமானதுமான திவ்யவிமானத்தை நோக்கிச் செல்கின்றன. இதுவே சாந்தோக்யோபநிஷத்தில் 'ப்ரஜாபதியினுடைய ஸபை' என்று ஓதப்படுகிறது.

இவ்விமானத்தின் எட்டுமூலைகளிலும் குமுதன், குமுதாக்ஷன், புண்டரீகன், வாமனன், சங்குகர்ணன், ஸர்வநேத்ரன், ஸுமுகன், ஸுப்ரதிஷ்டிதன் என்ற எட்டு கணாதிபதிகள் ஆயுதபாணிகளாய் வாஹனரூடராய் பரிவாரங்கள் புடைசூழப் பரிவுடன் ரக்ஷித்துக்கொண்டு நிற்கிறார்கள். நான்குபுறத்திலும் வாயிலுக்கு இருவராக சண்டன் ப்ரசண்டன், பத்ரன் ஸுபத்ரன், ஜயன் விஜயன், தாதா விதாதா என்ற எட்டு த்வாரபாலகர்கள் காத்துவருகிறார்கள். அதற்குள்ளே கஜாநநன், ஜயத்ஸேனன் முதலான பரிவாரங்கள் சூழ்ந்திருக்க, தன்மஹிஷியான ஸூத்ர

வதியோடு ஸேனாதிபதியாழ்வான் என்னும் விஷ்வக்ஸேனர் ஆஸ்தானத்தை நிர்வஹித்து வருகிறார். தன் பத்நிகளான ருத்ரை ஸுகீர்த்தி இருவரோடும் கருடபகவான் எதிரிலும், வாருணீ காந்தி என்ற தன்பார்யைகளோடு திருவநந்தாழ்வான் பின்னும் எழுந்தருளியிருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் ஆசார்யர்களும், இருமருங்கும் அந்தமில்பேரின்பத்து அடியார்களான நித்யரும் முக்தரும் கோஷ்டியாக வீற்றிருக்கின்றனர்.

நடுவில் ஜ்யோதிர்மயமாய் ஸிம்ஹாஸனரூபமான திவ்யபர்யங்கம். அதற்கு அவயவங்களெல்லாம் தத்வங்களின் அபிமானி தேவதைகளே: தர்மம், ஞானம், வைராக்யம், ஐச்வர்யம் என்பவை பாதங்கள்; அதர்ம-அஜ்ஞான-அவைராக்ய-அனைச்வர்யங்களும், ஸத்வ-ரஜஸ்-தமஸ்ஸுக்களும், க்ருத-த்ரேதா-த்வாபர-கலியுகங்களும் குறுக்கும் நெடுக்குமான பலகைகள். இந்தப் பர்யங்கத்தின்மேல் கோடி ஸூர்யப்ரகாசமான ஒரு பெரிய தாமரை திகழ்கிறது. விமலை,உத்கர்ஷிணீ, ஞானம்,க்ரியை, யோகை, ப்ரஹ்வீ, ஸத்யை ஈசானை என்ற எண்மர் அதன் எட்டு இதழ்களிலும், முன்புறத்தில் ஒருஇதழில் அநுக்ரஹையும் நின்று கொண்டு சாமரகைங்கர்யம் செய்துகொண்டிருக்கிறார்கள். சுற்றிலும் ஆயுதாழ்வார்களும் ஆபரணாழ்வார்களும் குவித்த கையுடன் ஆயுதங்களையும் ஆபரணங்களையும் சிரமேல் ஏந்தி நிற்கின்றனர். நடுவிலுள்ள தாமரைக்காயில் திருவநந்தாழ்வான்பேரில் வலது புறத்தில் நீலமேகத்தையணைந்த மின்போன்ற லக்ஷ்மியும், இடதுபக்கத்தில் ச்யாமளவர்ணைகளான பூமி நீளைகளும் எழுந்தருளியிருக்க ஸர்வேச்வரன் சங்க சக்ரபாணியாய், இடது திருவடியைத் தொங்கவிட்டு மற்றதை மடக்கி வீற்றிருந்து, உலகங்களுக்கெல்லாம் அபயமளித்து, ஸூரிகளுக்கும் முக்தர்களுக்கும், தன் அநுபவத்தை அளித்துக்கொண்டிருக்கிறான்.

ஸவ்யம் பாதம் ப்ரஸார்ய ச்ரிதது³ரிதஹரம்

த³க்ஷிணம் குஞ்சயித்வா

ஜாநுந்யாதா⁴ய ஸவ்யேதரமிதரபு⁴ஜம்

நாக³போ⁴கே³ நிதா⁴ய ।

[illegible]
[illegible]
[illegible] 𑌜𑌨𑌯𑌤𑌿 𑌜𑌗𑌤𑌾𑌂
𑌸 𑌤𑍍𑌵𑌂 𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌨𑌾𑌥𑌃 ॥

என்கிற சுலோகத்தில் இவற்றையெல்லாம் ஸங்க்ரஹமாகக் காணலாம். சாந்தோக்யம் கௌஷீதகி முதலான உபநிஷத்துக்களும், பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளும் இவ்விஷயங்களைக் கூறுகின்றன. ஸ்ரீவைகுண்டத்தையும் அவற்றிலுள்ள பொருள்களையும், நித்ய முக்தர்கள் கைங்கர்யம் செய்ய ஸ்ரீபூமி நீளைகளுடன் பகவான் எழுந்தருளியிருப்பதையும் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்த ஸ்ரீவைகுண்டகத்யத்தில் விஸ்தாரமாகக் காணலாம்.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
7	2	உணர்த்தியுடைவன்	உணர்த்தியுடை[யவன்
13	14	நிவேத	நிவேத்ய
15	18	ஸ்நாயுபத்யும்	ஸ்நாயுபத்தம்
22	15	தன்னையும் கொடுத்து	தன்னையும் [கொன்று
24	25	உபாயம்	ப்ராப்யம்
25	23	அறிதானதும்	அரிதானதும்
26	2	"நிரயாஹ்லாத," 17 "தஸ்மாஞ்ஞராயொ ஜெஜெத்ரய"	
	15	நாகங்கள்	நரகங்கள்
32	7	வெள்ளிக்கிடைபட்ட	வெள்ளக்கிடைப்[பட்ட
	8	நரியினம்போலவும், உள்ளம்துளங்கி, ப்ரயோஜந	
	25	நெறுப்பு	நெருப்பு
38	7	உன்திருவருளன்றி	உன் திருவருளா[லன்றி
43	9	ஹ்ரஸஜஜஹவத்தெஷ (பத்மபுராணம் 6 உத்தரகண்டம் 81-133)	
53	18	ஸாக்ஷ்ம	ஸௌக்ஷ்ம
56	28	மத்தளம்	முரசு
			முரசு அல்லது பேரி என்னும் வாத்தியத்தின் அடியில் இருக்கும் மிகச் சிறிய துவாரம் இங்கு 'ஆடம்பரரந்த்ரம்' என்பதால் கொள்ளப்பட்டது.
58	1	என்று	என்றும்
60	3	சண்ணாஞவஷ்ரத்தி	சண்ணாஞவஷ்திஷ

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
60	20	அக்னியும் அதைச் சுற்றி வாயுவும் அதைச் சுற்றி ஆகாசமும்	
61	6	வெகணா	வெகாண
64	19	வாக்கும்	வாக்குக்கும்
	26	9 7. 10. 9	9 9. 7. 5
68	16	20 6. 10. 1.	20 6. 10. 10
71	3	வயூஜத்தை	வயூஜக்தை
	7	என்றூர்போலவும்	என்றூற்போலவும்
	17	34 4. 1. 5	34 4. 5. 1
	18	பூதபவிஷத்	பூதபவிஷ்யத்
73	26	தாளை	தாமரை
74	3	ஹொதுவஷது	ஹொதவவஷது
95	27	கண்டிக்கிறபடியால்	கண்டிருக்கிற (படியால்
102	7	மாதர் போலக்	மாதர்போல
	20	விருப்பத்து	பொருந்தி
103	8	மேதியினில்	மேதினியில்
110	4	(பக்கம்) 46	(பக்கம்) 6
	20	,, 99	,, 66

[* இக்குறியுள்ளது அர்த்தபேதத்தையும்

† இக்குறியுள்ளது பாடபேதத்தையும் காட்டும்.]

பக்கம்	வரி	
5	26	* விபரீதருசி—ஒன்றில் 'தோஷம் உண்மை' என்று தெரிந்திருந்தும் அதில் வரும் ருசி. ஸம்ப்ரதாய வி[illegible]வாஸிகளுக்கு அர்த்தகாம ருசி போன்றவை.
6	6	† ஜீவாத்மாவினுடைய—வ
6	25	* மூவுலகத்தைத்திண்ணிய நிலையுடையதாகத் திருத்தித் தன்னுள் இருத்தி.
10	4	† [illegible]களில் —வ
13	4	† இதுமேலும்—வ.
	22	† வளர்ந்திடுமேறக்கவாறே
15	5	† [illegible]மாய்—வ
15	12	* த்ரிமலம்— மூத்ரம், சுக்லம், புரீஷம் என்ற மூன்று மலங்களையுடையது.
17	7	† அவர்கள் தந்தாம் கதைகளையும்—வ
19	16	† வ்ருஷ்டி வ்ரீஹ்யாதிகளிலே—வ.
20	1	† [illegible]களை அடைந்து-வ
	6	† [illegible]ங்களை அடைந்து-வ.
23	26	* அண்டத்திற்குட்பட்ட உலகங்களை ஸம்ஹரிப்பது 'வ்யஷ்டிஸம்ஹாரம்.'
25	7	† காங்க்ஷிக்கும்படியாம்—வ
27	19	* எல்லோரும் ஸ்வஸ்வ - பலாவஸாநத்தில் அப்பலாநுபவதேசத்திலிருந்து விழுமவர்களாகையால்
30	1	† துல்யராய்த் தோற்றினரை—வ.
30	3	† [illegible]ம் பண்ணுவிப்பார்—வ.
58	1	† சிலர் சொல்லுவார்கள்—வ.
58	4	† [illegible]—வ.
68	20	† [illegible]

78	12	* அவற்றிற்கேற்ற ஸ்வரூபவிபூதிகளோடு
	27	* வலது பக்கத்திற்கு எல்லை
82	12	* கதிர்களையுடைய ஆயிரம் இரவி-
	24	* கோள்-மிடுக்கை (வலிமையை) யுடைய
86	4	† ஸ்மயமாநமுகனுய்க் கொண்டு தோற்றின தொண்டைவாய்ப் பிரானுடைய—வ.
93	24	*தாழ்ச்சி-தாழ்வதை தாழ்ச்சி-ப்ராவண்[யத்தை
101	8	†ப்ரக்ருதிகுணங்களைக் கழற்றுவித்த பகவத்குணங்களிலே—வ.

॥ ஸ்ரீ: ॥



ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த
ரஹஸ்யங்களில் ஒன்ருன

ஸ்ரீ பரமபதஸோபாநம்.

𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌭𑍂𑌷𑌣𑌂
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑍍 ॥*

சீரொன்று தூப்புல் திருவேங்கட முடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்-ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

*𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥 𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌮𑍍
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌮𑍍
என்று அதிகம்.

*ஸ்ரீ பரமபதஸோபாநத் தனியன்கள்.

வ்யாஜீக்ருத்ய விரக்திமல்பமபிமதீ-
ஸோபாந ஸங்க்ரந்தநம்
ஶாரீராண்யவதூஜாத்விஹ யஃ
ப்ராபய்ய ஸம்யக் ஸதாஃ ।
தஸ்மிந் திஷ்டதி வேங்கடேஶ்வரகவௌ
ஶ்ரீஸாஷ்யகாரோதயே
யம் கஞ்சந் பாரமம் ஸ்வாந்ததம்
ஶ்ரேயஸாம் ஸ்வஸ்தி தே ॥
தஸ்மை நமோऽஸ்து குரவே
தார்க்ஷ்யஶிக்ஷாய வேங்கடேஶாய ।
ப்ராபத்யஜ்ஞாநாநாம்
ஸஞ்சய பரமபத ஸோபாநம் ॥

தேனேறு தாமரையாள் திருமார்பன் தன்
திண்ணருளால் அவனடியில் விவேகம்பெற்றுக்
கூனேறு பவக்குழியை வெறுத் ததற்பின்
கூர் விரத்தி யுடன்வினையின் திரளுக் கஞ்சிக்
கூனேறு பிறையிறையோன் சாபம் தீர்த்தான்
குரைகழலே சரணடைந்து குரம்பை விட்டு
வானேறும் வழிப்படிகள் அடைவே கண்ட
வண்புகழ் தூப்புல்வள்ளல் அருள் பெற்றோமே.

*ஆசார்யனை அல்லது அவர் க்ரந்தத்தைப் புகழ்ந்து கூறுவதும், அதனாலேயே க்ரந்தத்தோடு சேராமல் தனித்து நிற்பதுமான சுலோகம், பாசுரம் முதலியவை. 'தனியன்கள்' எனப்படும்.

ப்ரதமம் விவேகபர்வ

ஶேஷம் ஶேஷாஶநாதீஶ்ரீதா விஹிதா ஸ்துதி: ।
ஸாக்ஷஸம்ஶயம் ஹ்ருத்வாநு ஸ்வஸேவ்யம் நேதுமிச்சதா ॥

விவேக - நிர்வேத - விரக்தி - பீதய:
ப்ரஸாதனோத்க்ரமணார்ச்சிராதய: ।
ப்ரக்ருத்யதிக்ராந்திபதாதிரோஹணம்
ஸமாப்திரித்யத்ர து பர்வணாம் க்ரம: ॥

அடற்புள்ளரசிலும் அந்தணர்மாட்டிலும் இன்னமுதக்
கடற்பள்ளிதன்னிலும் *காவிரியுள்ளம் உகந்தபிரான்
இடைப்பிள்ளையாகி உரைத்தது உரைக்கும் எதிவரனார்
மடைப்பள்ளிவந்த மணம் எங்கள் வார்த்தையுள்
[மன்னியதே. 1.

கள்ளமனத்துடன் கண்டுமுயன்ற கடுவினையால்
நள்ளிருளாழியில் நற்சுவை ஐந்தெனநாடியதோர்
அள்ளலில் நாளும் விழுந்தழியாவகையாரண நூல்
வள்ளல் வழங்கிய வான்படியான வழியிதுவே. 2.

அசேஷசித்அசித்வஸ்துசேஷியான ஸ்ரிய:பதிக்கு அநந்யார்ஹநிரவதிகசேஷபூதராய், [1]‘அந்தமில் பேரின்பத்து அடியரோடு’ இருந்து [2]‘அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனைத் தினைத்தனையும் விடாதே’ அனுபவிக்கப் ப்ராப்தரான க்ஷேத்ரஜ்ஞர் அநாத்யவித்யாகர்மப்ரவாஹத்தில் ஒழுகி, கரையேற விரகற்று [3]அலமருகின்றபடியைக் கண்டருளின பரமகாருணிக

1 10. 9 11. 2.6. 7. 10. 3அலமருகின்றபடியை-வருந்துகின்றபடியை. அந்தணர்மாட்டிலும்—பிராமணர்களின் தனமாகிய வேதத்தைக் காட்டிலும். *காவிரியுள்ளூர்—பா.

ஞன பரமேஷ்டி, தானே ஞானக்கை கொடுத்து இவர்களை எடுக்க இடம் பார்த்து; [4]அஜ்ஞாத-யாத்ருச்சிக-ப்ராஸங்கிக-ஆநுஷங்கிக-ஸாமாந்யபுத்தி-மூல ஸுக்ருதவிசேஷங்களை வ்யாஜமாகக்கொண்டு விசேஷகடாக்ஷம் பண்ணி; அத்வேஷ-ஆபிமுக்ய-ஸாத்விகஸம்பாஷணாதிகளை உண்டாக்கி; ஸாதாரண-நிருபாதிக-ஸம்பந்த ஸஹகாரியான * ஆசார்ய-ஸம்பந்தத்திலே அபிஸந்தியை உண்டாக்கி; விசேஷண-விசேஷ்ய-உபயஸ்வரூப-விஷயமாகத் [5]'திருந்தக்கண்டு உரைக்கவல்ல' 'தெளிவுற்ற

[4] அஜ்ஞாதஸுக்ருதம்— அடியுடன் இது ஸுக்ருதம் (நல்ல காரியம்) என்று நாம் அறிந்துகொள்ளாதது; (இதென்னமலை என்று கேட்டவர்களுக்கு, 'திருமாலிருஞ்சோலைமலை' என்று சொல்வது முதலானவை). பகவான் எழுந்தருளியிருக்கும் மலையாதலால், அதன் பெயரைச் சொன்னதும் ஸுக்ருதமாக முடிந்தது.

யாத்ருச்சிக ஸுக்ருதம் – ஸுக்ருதம் என்று தெரிந்தாலும், செய்ய நினைப்பின்றிச் செய்யுமவை. (மாடுகளை ஓட்டும்போது அவற்றைத்தொடர்வதால் நேரும் ஆலயப்ரதக்ஷிணம்முதலானவை).

ஆநுஷங்கிகம்—வேறொரு கார்யத்தின்பொருட்டு பிரவிருத்திக்கும்போது, அப்பிரதானமாகக் கருதிச் செய்யுமவை (ஊருக்குப் போம் வழியில் நேர்ந்த பகவத்பக்தனை வலமாகப் போவது முதலியன).

ப்ராஸங்கிகம்—ப்ரஸக்தி நேர்ந்தால், இதற்கென்றே எண்ணிச் செய்வது. (கடைக்குக் காஞ்சிபுரம் போம்போது, பகவானையும் தொழுவது).

ஸாமாந்ய புத்தி மூலம்—வேறு பயனையாவது மோக்ஷத்தை யாவது விசேஷித்துக் கருதாமல், 'நல்ல கார்யம்' என்று இவ்வளவைக்கொண்டு செய்யும் ஸ்ரீரங்கயாத்திரை முதலியன.

[5] 6. 1. 8; 7. 5. 11.

* ஆசார்ய ஸம்பந்தத்தை அபிஸந்திபண்ணி—க.

சிந்தையனாய்', [6]குலிங்கஸகுநிவ்ருத்தாந்ததைசிகனை தைசிகன் திருவடிகளிலே சேர்த்து; அவன் மநஸ்ஸிலும் வாக்கிலும் கோயில்கொண்டு, [7]'பிரம குருவாகி' நின்று, [8]'தீதில் நன்னெறி காட்ட' ஒருப்பட்டு; ஸத்வோஜ்ஜீவநாபேக்ஷிதங்களான ஸஹஸ்ரோபாயங்களை [9]அஜ்ஞாந-ஸம்சய-விபர்யய-விபரீதருசிகள் புகாதபடி உபதேசிக்க; [10]"உபதேசோ நிரர்த்தக:" என்றபடி [11]'கருவிலே திருவுடையன்' ஆய், ஸர்வஜ்ஞனாய், [12]"சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரப

[6]குலிங்கசகுனி விருத்தாந்தம் — 'ஸாஹஸத்தொழில் செய்யலாகாது' என்று பிறவற்றுக்குப் போதனைசெய்து, சிங்கம் வாயைத் திறக்கும்போது தான் உட்புகுந்து அதன் தொண்டைத் தசையை (அல்லது பற்களின் இடையில் இருக்கும் மாமிசத்தைத்) தின்னும் ஸ்வபாவமுள்ளதாகக் கூறப்படும் 'குலிங்கம்' என்னும் பக்ஷி. (இந்தப் பக்ஷியின் செய்கை இருக்கும் ஊரிலேயே இராதவர்களான ஆசார்யர்கள்.)

[7]பெரி. தி. 5. 2. 8. [8]பெரு. தி. 2. 6.

[9] அஜ்ஞானம்— அடியுடன் தெரியாதிருப்பது; ஸம்சயம்— ஒன்றுக்கொன்று விரோதமுள்ள இரண்டு தர்மங்களை ஓரிடத்தில் ஏற்றி, வஸ்து இதுவோ, மற்றொன்றோ என்று ஸந்தேஹப்படுவது (இருட்டில் தூரத்தில் தெரியும்வஸ்துவை 'அது மரமோ, மனிதனோ' என்று ஸந்தேஹிப்பது முதலானவை); விபர்யயம்—ஒரு வஸ்துவின் உண்மையான தன்மை நிச்சயமாகத் தெரியாதபோதிலும், மாறாக அதை எண்ணுவது (இருட்டில் இருக்கும் மரத்தை மனிதன் என்று நிச்சயிப்பது);

விபரீதருசி — உண்மையான தன்மை தெரிந்தும், அதற்கு விபரீதமாக அதைக் காட்டுவதில் ஏற்படும் ருசி. (ஒரு மனிதன் நல்லவன் என்று தெரிந்தும், ஏதோ காரணத்தால் அவனைக்கெட்டவன் என்றுசொல்வது.)

10 [11]திருமாலை 11. [12]கீதை 2. 7.

ணம்" என்று ‡ செவிதாழ்த்த இச்சேதனன் 13'சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும் பாழில்' எழுந்த 14'மான் ஆங்கார மனங்கள்' முதலான விவிதவிசித்ர வ்ருக்ஷங்களினுடைய ஸஹஸ்ரகார ஸாம்ய ஸக்ஷத்தையும், 13'சூழ்ந்து அதனில் பெரிய பரநன் மலர்ச்சோதி'யான ஜீவாத்மாக்களுடைய ஶரீரகாரா ஸ்ருஷ்டநிவாஸ — நித்ய ஜ்ஞாநாநந்த ஸ்வரூப - ஸ்வபாவங்களையும், 13'சூழ்ந்து அதனில் பெரிய சுடர்ஞான இன்பமான 15'உயர்வற உயர்நலமுடையவன்'படிகளையும் ஸ்வஹிதனாய்க் கேட்டு, 16'உய்வதோர் பொருளால் உணர்வெனும் பெரும் பதம் தெரிந்து' ஸர்வ-ஸார-ஸங்க்ரஹ-ஸம்பந்நமாய் §சேஷசேஷிகளைப் பிரியாதபடி பிணைத்து வணக்கி உஜ்ஜீவிதமாக்குகிற மந்த்ரத்திலே தன்னுடைய ஜ்ஞாத்ருத்வ-கர்த்ருத்வ-போக்த்ருத்வங்களை பரார்த்தங்களாகவும் பராதீநங்களாகவும் பார்த்து. 17'முதல் தனி வித்தாய், 18'திருத்தித் திண்ணிலை மூவுலகும் தன்னுள் இருத்திக் காக்கும் இயல்பினனாய், 19'தனதே உலகென நிற்குமவனாய்' 20'அடைக்கலங் கொண்டு அஞ்சல் என்னப்' ஶரண்யனாய், 21'உலகங்களுக்கெல்லாம் ஓர் உயிராய்' 22'உலகு தன்னோடு ஒன்றி நிற்க வேறு நிற்கு'மவனாய், ஸர்வஶேஷியான ஸர்வேச்வரனை

13. 10. 10. 10. 14 10. 7. 10. 15 1. 1. 1. 16 தி. மொ. 1. 1. 1. 17 10. 10. 9. 18 2. 2. 8. 19 4. 5. 10. 20 தி. ச. வி. 92 21 8. 1. 5. 22. தி. ச. வி. 12.

18 திருத்தி— (லோகங்களை) ஸ்ருஷ்டித்து, திண் – த்ருடமான, நிலை - ஸ்திதியை உடைய, மூவுலகும்-மூன்று லோகங்களையும், தன்னுள் - தனக்குள்ளே, இருத்தி - வைத்து, காக்கும் இயல்பினனாய் - ரக்ஷிக்கும் ஸ்வபாவத்தையுடையவனாய்.

‡செவிதாழ்த்திச் சேதனன்—க. §சேஷசேஷி தத்வங்களை-ம

'ஶ்ரியஃவெதியை உளன் என்று தேறியிருக்கும் உணர்த்தியுடைவன் [23] தானும் உளனும்' என்று தைத்திரீயாஷி ஶ்ருதிகள் *சொல்லலுற்றன.

அருவுருவா னவையனைத்தும் அறிவா ரேலும்
அரும்கலைகள் கற்றுரைக்க வல்லா ரேலும்
தருமவழி †அழியாமல் காப்பா ரேலும்
தனிமறையின் தாத்பரியம் தருவா ரேலும்
இருவினையின் ஒழுக்கத்தால் ஏவ லோரா (து)
இங்கேநாம் சிறையிருந்த ஈனம் தீர்க்கும்
திருமகளார் பிரியாத தேவன் திண்ணம்
தேறாதார் திண்படியில் ஏறாதாரே. 3.

ஊதி வாஉவைஷவொவாநெ ஷுயஉ விவெகவைவ

ஷிதீயம் நிவெடிஉவைவ ॥

மறுத்தார் திருவுடன் மார்பில்
தரித்தவன் வாசகத்தை
மறுத்தார் மயக்கமும்
மற்றதனால் வந்த மாநரகும்
நிறுத்தார் பவத்தில் நெடுநாள்
உழன்றமை கண் (டு) அதனால்
வெறுத் (து) ஆரணநெறியே
வெள்கியோட விரைவர்களே. 4

[23] "ஸுவஷீ ஹஷெதி வெசஃ வெஉ ஸஜெஉநஂ தெதா விஉஃ"—தை. உ.

*சொல்லிற்றன. †தவிராமல்—ரு

இப்படித் தானும் பிறரும் தனக்கு ஶேஷியும் தஞ்ச மும் போக்யமும் அன்று என்று தோன்றும்படி தயா ஸீம-ஸத்தேஶிகோபதேஶஸஹித - ஸத்த்வோத்ரேகஸம்ஸர்க்கத் தாலே ஜிஹாஸுமாநனும்போலே ஸம்ஸார-ஸாகர-வஶீக்ரு தமான *பராவரதத்வ விவேகம் பெற்றவன் தான் முன்பு அநாதிகாலம் [1]அஸமஞ்ஜன்படியே நடக்கை யாலே [2]"ந க்ஷமாமி," [3]"க்ஷிபாமி" என்னும்படி [4]துறப் புண்டு, ஸந்த்யாஸ-விஸ்தாரமான திர்யக்ஸம்ஸாரகாந்தா ரத்திலே [5]அநேகஜந்மஸாஹஸ்ரீயான ஸம்ஸாரபதவி யை அடைந்து, ஸந்நிஹிதவிஷய-ம்ருகத்ருஷ்ணிகாஸ்வாதபர வஶனாய், † அடிதரியாதே ஓடி, வாஸநாரேணுகுண்டி தனாய், விபரீதபரிஶ்ரமனாய், ஒரு விஶ்ரமஸ்தாந மும் பெறாதே க்லாநகாலாதிகள் ‡வந்தாலும்

[1] அஸமஞ்சஸன்—பா. நிர்வேதம்—பாபத்தைச் செய்தால்வரும் நரகத்திலிருந்துபயந்து, அவ்வித பாபத்தைச் செய்யாதிருக்கவேண் டும் என்கிற ஸங்கல்பம்.

அஸமஞ்ஜன்— ஸகரமஹாராஜனுக்கு கேசினியிடம் பிறந்தவன். இவ்வஸமஞ்ஜன் இளம்பிராயத்தில் வீதியில் விளையாடும் சிறு குழந் தைகளையெல்லாம் ஸரயூநதியில் தூக்கி எறிந்து ஜலத்தில் முழுகித் தவித்து இறக்கும் அவற்றைக்கண்டு ஆநந்திப்பது வழக்கம். பட்ட ணத்து ஜனங்கள் முறையிட, ஸகரன் அவனை ராஜ்யத்திலிருந்து வெளியேற்றிவிட்டான். இவன் புதல்வன் அம்சுமான். (ராமாய ணம் பாலகாண்டம் 38. 20-22. பாகவதம் 9. 8.)

[2]வராஹபுராணம். [3]கீதை 16. 19. [4]துறப்புண்டு—தள்ளப்பட்டு

[5]அநேகஜந்மஸாஹஸ்ரீம் ஸம்ஸாரபதவீம் வ்ரஜந் ।
மோஹஶ்ரமம் ப்ரயாதோஸௌ வாஸநாரேணு
குண்டித: ॥ (வி. பு. 6. 7. 79)

*பராபரதத்வ விவேகம்—க † அடிதெரியாதே—க ‡வந்து முன்பு—க.

முன்பு ஸர்வஜ்ஞஸ்ருஷ்டையான ஸ்ருஷ்டியிழந்து மூச்சடங்க ஸ்தப்தனாய், லோகலோகாந்தரப்ரவ்ருத்திகளுக்குச் ஸாதனமில்லாதபடி கரணகளேபரங்களை இழந்து [6]"பக்நபக்ஷ இவாண்டஜ:" என்னும்படியாய், தனக்கு விசேஷித்தொரு பேரிடவொண்ணாதபடி மஹாதமஸ்ஸிலே இரும்புண்ட நீர்போலே இறுகச் சுவறி, ஒரு மூலையிலே [7]"ஸம்ஹாரவிக்ஷேபஸஹஸ்ரகோடீஸ் திஷ்டந்தி ஜீவா:" என்னும்படி ஆயிரம்கோடி ப்ரஹ்மகல்பங்கள் அடைப்புண்டு கிடக்கும்படிகளையும், மீண்டு ஸர்வகாருணிகஸ்ருஷ்டிசேஷி - ஸர்வஜ்ஞவிசேஷநியதகாலம் வந்தால், [7]"ஸ்ரவந்தி யாந்தி" என்னும்படி ஸம்ஸாரிவழியே போந்து, [8]ஸர்வசேஷிபாதநிவேதநார்த்தமான விசித்ரதேஹஸம்பத்தியைப் பெற்றாலும் §ஆக்கையின் வழி உழன்று, 'நீ ஸமவசஜ்ஞன்' என்றால் 'ஓம்' என்று இசையாதே யமகிங்கரர்க்கு இடமாம்படி ஜத்ருயஜ்ஞனாய்ப் போந்தபடிகளையும், [9]'தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும்' பொழுதுபோக்கப் ப்ராப்தமாயிருக்க, [10]'சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து சரிகுழல் மடந்தையர்திறத்துக் காதலே மிகுத்தும், [10]'வென்றி

[6] வங்கிபுரத்துநம்பிகாரிகை (சிறகொடிந்த பக்ஷிபோல) [7] பாரா.சா. [286. 30.
[8] விசித்ரா தேஹஸம்பத்திரீஶ்வராய நிவேதிதும் ।
§3. 2. 1. (ஆக்கை-சரீரம்) [9] 4அ.63. (தெரித்து-தெரிந்துகொண்டு)
§ஆக்கையின்வழியுழல்வேனென்று—க,
[10] தி. மொ. 1. 6. 3; 1. 1. 4; 1. 6. 2.

[10] சூதினைப்பெருக்கி-(பகலில்) பெருக்க சூதாடியும், களவினைத் துணிந்து-(இரவில்) அச்சமின்றித் திருட நிச்சயித்தும், சரிகுழல் மடந்தையர் திறத்து-(அதனால் கிடைத்தபொருளைக்கொண்டு)

யே வேண்டி வீழ்பொருட்கிரங்கி வேற்கணார் கலவியே கருதி [10]புலன்படிந்து உண்ணும் போகமே பெருக்கிப் பொழுதினை வாளாப் போக்கின'படிகளையும்; ஸத்ஸம்ஸர்க்கவிஶேஷாதிகளில் [11]“ஸா ஹாநி:” என்று இழவுபட்டு, ‘ஸம்ஶ்லிஷ்ட’ரைப் போலே கூப்பிட வேண்டியிருக்க, [12]“தாயொருபக்கம் தந்தையொருபக்கம்” இத்யாதிகளிற்படியே ஸுஹ்ருத்விஷயவிஶேஷத்தில் அலற்றும் படிகளையும்; [13]‘நிற்கின்றதெல்லாம் [14]‘உடன்மிசை உயிரெனக் கரந்த’ நெடுமால்’ என்று ஓர்ந்து, [15]‘மித்ராமித்ரகதை’யற்று ‘யஶீஶு: ஶ்லாகீ’ என்கிற ந்யாயத்தாலே ஸர்வபூதஸுஹ்ருத்தாகை

சுருண்ட கூந்தல்களையுடைய மாதர்களிடம், காதலே மிகுத்தும்-மிகுந்த ஆசையைச் செய்தும், வென்றியே வேண்டி - ஜயம் ஒன்றையே விரும்பி, வீழ்பொருட்கு - நாசமடையும் ஸ்வபாவமுள்ள பொருள்களுக்காக, இரங்கி - இரங்கியும், புலன் - இந்திரியங்கள் படிந்து உண்ணும் - மண்டி அநுபவிக்கிற, போகமே பெருக்கி - போகத்தை அதிகப்படுத்தி, பொழுதை வீணே போக்கினேன்.

[11]யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே । ஸா ஹாநிஸ்தந்மஹச்சித்ரம் ஸா ப்ராந்திஸ்ஸா ச விக்ரியா ॥ (கருடபுராணம் பூர்வக. 322. 22)

ஸாகஷ்ஷிஸம்வ்ருதிக்ராமே ஸம்ஹ்ருதே யாநவர்ஜிதே । ஸம்ஶ்லிஷ்டைரேவ யாஸ்யாமீதிவத் ஶ்ருதம் ॥

[12]பெரி. தி. 4. 8. 9. [13]4 அ. 54. [14]1. 1. 7. ஓர்ந்து—ஆராய்ந்து

[15]ஸர்வபூதாத்மகே தாத ஜகந்நாதே ஜகந்மயே ।
பரமாத்மநி கோவிந்தே மித்ராமித்ரகதா குத: ॥
(வி. பு. 1. 19.37.)

உசிதமாயிருக்க, [16]'அறப்பொருளை அறிந்து ஓராதே மறுக்கி வல்வலைப்படுத்திக் குமைத்திட்டுப் பல்லுயிரைக் கொன்று உண்ணும்படிகளையும்; [17]'ஹரி ரிதாக்ஷர அய'த்தை அவமாகவாகிலும் உச்சரித்து, வாஉவஃமஉநத்திற்குப் வரிகாரவஙம் பண்ணுகையே வணிதகூதாமாயிருக்க, வஹகூநியதாநஹவத்திலும் உண்டறுக்கவொண்ணுதபடி ¶அக்ஷயஹெமான அவசாரவமஃத்தை க்ஷணாயஃஊதந்தோறும் நடத்திப் போந்தபடிகளையும்; $இன்னடப்பைப் புரிந்து பார்த்து, [18]"வாடினேன் வாடி." "வாணிலா முறுவல்" "தாயே தந்தை" இத்யாதிகளிற்படியே வஸாதாவநு பிறந்து [19]'பழுதே பல பகலும் போயின' என்று அஞ்சி அழப் ஞாவுமாயிருக்க, ஞகூதிவெதாஹீவர வஸனய், [20]"காருஜெதஜ வாஜவாநு" என்னும்படி

[16]4. 9. 6. அறப்பொருளை - தர்மத்தின் தத்வத்தை, அறிந்து, ஓராதே - ஆராயாமல், மறுக்கி - (பிறர் மனதைக்) கலக்கி, வல்வலைப் படுத்தி - பலமான தங்கள் மோசவலையில் விழச்செய்து, குமைத்திட்டு - ஹிம்ஸை செய்து, பல்லுயிரைக் கொன்று - (அதற்கு மேலும்) பல ஜீவர்களையும் கொன்று, தான் அநுபவித்தபடிகளையும்.

[17]வஸகூஉவரிதம் யெந ஹரிரிதாக்ஷரஅயம் ।
பஜஃ வரிகாரஷெூந ஜொக்ஷாய மஉநம் ஞதி ॥
[ஐதி. வஸஉ.

[18]தி. மொ. 1. 1. 1; 1. 6. 1; 1. 9. 1 (வாள் - ஒளி, நிலா - பொருந்தியிருக்கிற, முறுவல் - மந்தஹாஸத்தையுடைய-ஸ்திரீகள்) (அநித்ய வஸ்துக்களுக்காகவும், மாதர் பொருட்டும், தன் பந்துக்களுக்காகவும், வீணே முயன்று காலத்தைக் கழித்ததை முறையே இம்மூன்று திருமொழிகளிலும் அருளிச்செய்கிறார்.)

[19]1 அ. 16. [20]பார. சாந்தி. 312. 30.

¶அக்ஷயஹெமான-க $முன்னடப்பை—க. (புரிந்து=திரும்பி)

கலங்கிக்*கண்டவா திரிந்தபடிகளையும்கண்டு, [21]"அஹோ ஸ உஹஸதீ யாதா நிஷ்ஷூா ஜநவஸஞதி:" "[22]"யானே என்னை அறியகிலாதே யானே என்தனதே என்றிருந்தேன்." [23]"நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன்," [24]"அருநரகத்தழுந்தும் பயன்படைத்தேன்" [25]"ந ஸஞ்தி தாவஞ்தி ஜநாநி ஜொகெ" [26]"ஸிம்ஹெஷ ஸஶுகா ஸஹவெ உயாஉதா:" இத்யாதிவரிதேவநங்களைப் பண்ணும்படி முன்பு ஸாசுவிகஸம்ஸாஷணாதிகளாலே முகிழ்த்த நிர்வேதம் நசஷுஸு நிஷெயூ நிரூ வணத்தாலே முற்றி, [27]"செய்யாதன செய்யோம்," [28]"நயவேன் பிறர் பொருளை நள்ளேன் கீழாரோடு" என்னும்படி [29]"செய்யேல் தீவினை என்று அருள்செய்

---

[21]வங்கி. காரிகை.[22]2. 9. 9. [23]தி.மொ. 1. 9. 2. [24]தி.மொ. 6. 3. 4

[25]ந ஸஞ்தி தாவஞ்தி ஜநாநி ஜொகெ [ஸவெஷுஷு நாயாவிஷ ஸவஷுகாஜம் । ஷூநூாநி யாவஞ்தி உயாஉ திவொரெ வீதாநி ஸம்ஸாரஉஹாஸஉஜெ ॥]

விஷ்ணுதர்மம் 98 12 (க்ஷத்ரபந்து உபாக்யானம்)

ஹே நாத! பயங்கரமான இந்த ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தில் மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து, ஒவ்வொரு பிறவியிலும் தாயிடம் உண்ட பாலையெல்லாம் சேர்த்துப் பார்த்தால், அநாதிகாலமாக ஸர்வஸமுத்ரத்திலிருந்ததும் இப்போது இருப்பதுமான ஜலமெல்லாம் கூட அதன் அளவு ஆகாது.

[26]ஸிம்ஹெஷ ஸஶுகா ஸஹவெ உயாஉதா: வ்யாவெஷு ண ஸஶுகா ஸஹவெ உயாஉதா:— விஷ்ணுதர்மம் 98.17

சிங்கமாயும் புலியாயும் பிறந்து எவ்வளவோ பூதங்களைக் கொன்று தின்றிருக்கிறேன்.

முகிழ்த்த—துளிர்த்த. வரிதேவந—புலம்பல்

[27]திருப்பாவை 2. [28]1அ. 64. [29]2. 9. 3.

*கண்டவாறு திரிந்தபடிகளையும்—க

யும் கையார்சக்கரக் கண்ணபிரான் அநாதி பண்ணாத வழிகளில் ஸ்வப்நத்திலும் அடியிட நடுங்கும்படியாம்.

ஸாம்ஸ்ப்ருஷ்ட்யாதிகளாலே நிர்வேதம் பிறக்குமாகில், அது மேலும் விபரீதவ்ருத்தங்களிலே கைவளரப் பண்ணும். அநாதிமாயாநித்ரையாலே உறங்கினவனுக்கு உணர்த்தியாலே நிர்வேதம் பிறந்தால், இது ஸம்ஸர்க்காதிகளான ஆஸ்ரவஸ்ராவங்களை அடியறுத்து, ஶாந்த்யாதிகளான ஆத்மகுணங்களோடே அவிநாபூதமாய், அபவர்க்கவ்யவஸாயாதிகாரியாக்கும். ஆனபின்பு அக்ருத்ரிமவ்யவஸாயியான அதத்த்வஜ்ஞஸந்தோஷத்திலும் ஆழங்கால் படாதே, ஸர்வகார்யாவஸாதகமான அதத்த்வஜ்ஞநிர்வேதத்திலும் இழியாதே, ஸாத்விகஶ்ருதியைக் கைப்பிடித்து நிஷித்தவ்யாபாரத்தை விலக்குகை நிஶ்சலவிவேகஜந்ய நிர்வேதமாம்.

வான்பட்ட மன்னிருளில் மயங்குமாறும்
மறித்தொருகால் எனையூழி சென்றால் அன்றோர்
ஊன்பட்ட உடலாழி வினையொழுக்கில்
ஒருகரையும் காணாதே ஒழுகுமாறும்
தேன்பட்ட விடம்போலத் தித்திக்கின்ற
சிறுபயனே உறுபயன் என்றருந்துமாறும்
*தான்பட்ட படியின்றேர் தானே கண்டு
தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமே தக்கவாறே. 5.

இதி ஸ்ரீபரமபதஸோபாநே த்விதீயம் நிர்வேதபர்வ ॥

*தான்பட்டபடியின்றே தானே கண்டு — ம.

த்ருதீயம் விரக்திபர்வ

உலகத்துயர்ந்தவரொன்றும் பயனில் உறுந்துயரும்
அலகிற்படாதவப்போகம் கவர்ந்தெழுமம்புயத்தோன்
கலகத்தொழில் மதுகைடபரால் படும் *கட்டமெண்ணும்
பலகற்ற மெய்யடியார் படியார் இக்கடும்பவத்தே. 6.

இப்படி விவேகநிர்வேதவிரக்தியாலே [1]அபாய ப்ராவண்யமற்றாலும், [2]“ஸத்த்வஸங்கேந பத்நாதி” †என்னும் அளவான ஸத்த்வமடியாக ஐஹிகாமுஷ்மிக ஸத்த்வஸஜ்ஞாநஸங்கத்தாலே ஸௌமஸௌமதாவர்ணங்களாகிற பொன்விலங்குகளைப் பூட்டிக்கொள்ளுமாகில், இவன் முமுக்ஷு அல்லனும். ஆகையால் [3]‘கடையறப் பாசங்கள் விடும்படி’ இதரஸங்கதோஷங்களை யதாவஸ்திதமாக அநுஸந்திக்க வேண்டும். எல்லாருக்கும் ‡தம்தம் ஸங்கங்களை [4]“ஒரு நாயகம்,” [5]“நண்ணாதார் முறுவலிப்ப,” [6]“கொண்டபெண்டிர்” இத்யாதிகளிற்படியே தெளியப்பார்க்குமளவில், இவை நிரஸந

[1]அபாய ப்ராவண்யம் - நிஷித்த கர்மங்களில் ஆசை. [2]கீதை 14. 6 [3]8. 2. 8. (கடையற—வாஸனைகூட இல்லாமல், பாசங்கள் - ஆசைகள், அற்றுப்போம்படி) [4] 4. 1. 1. இந்தத் திருவாய்மொழியில் ஐச்வர்யம், கைவல்யம் இவற்றின் கீழ்மை சொல்லப்பட்டது.

[5] 4. 9. 1. இதில் தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களின் தன்மை சொல்லப்பட்டது. குணபம்—பிணம்.

[6] 9. 1. 1. இதில் பந்துக்களின் தன்மை கூறப்பட்டது.

*கட்டமெண்ணில்—ம. †என்னுமளவாக ஸத்த்வமடியாய்-க. என்னும்படி அளவான ஸத்த்வமடியாக—ம. ‡தத்தம்— க.

ஸ்வாத்மாநுபவாவஸரத்தின் நடுவே §மின்னொளிபோலே தோற்றுவதும் மறைவதுமாம்படி தோற்றும். ¶போக்தாவுக்கு போகஸ்தாநமுமாய் போகோபகரணமுமான ஸ்வசரீரமும் நிர்வாணனுக்குக் கர்ணவாதிவர்ஜியோக்யமாய், சத்ருத்வேஷ்யமாய், சத்ருஹேயமுமாய் தபிவுஜ்ஜீவிதமுமாய் இருக்கும் என்னுமிடம் 7 'ஸப்ததாதுமயம் த்ரிமலம் சுக்லசோணிதஸம்பவம்'' என்றாற்போலே சொல்லுகிற ச்ருதிகளிலும், 8 "அஸ்திஸ்தூணம் ஸ்நாயுயுதம்," 9 "மாம்ஸாஸ்ருக்பூயவிண்மூத்ர,"

7 கர்ப்போபநிஷத்—1. ஸப்ததாதுமயம—(ரஸம், ரக்தம், மாம்ஸம் மேதஸ், எலும்பு, மஜ்ஜை, சுக்ரம் என்னும்) ஏழுவித தாதுக்கள் நிறைந்ததாயும், த்ரிமலம்—(வாதம், பித்தம், கபம் என்னும்) மூன்று மலங்களை உடையதும், சுக்ல—சோணித—ஸம்பவம்—சுக்லம் சோணிதம் இவற்றின் சேர்க்கையால் உண்டாவதுமான (சரீரம்).

8 அஸ்திஸ்தூணம் ஸ்நாயுயுதம் மாம்ஸசோணிதலேபநம் |
சர்மாவநத்தம் துர்கந்தி பூர்ணம் மூத்ரபுரீஷயோ: ||
மநு 6. 76.

அஸ்திஸ்தூணம் - எலும்பைத் தூணாக உடையதும், ஸ்நாயுயுதம் - நரம்புகளால் கட்டப்பட்டதும். (மாம்ஸத்தையும் ரக்தத்தையும் கொண்டு பூசி, தோலினைப் போர்த்து, மல மூத்ரங்களுக்கு இருப்பிடமாய், நாற்றமுடைத்தானதுமான சரீரம்).

9 மாம்ஸாஸ்ருக்பூயவிண்மூத்ர ஸ்நாயுமஜ்ஜாஸ்திஸம்ஹதௌ |
தேஹே சேத் ப்ரீதிமாந் மூடோ பவிதா நரகேऽபி ஸ: ||
வி. பு. 1. 17. 63.

மாம்ஸம், ரக்தம், ஊந்தண்ணீர், விஷ்டை, மூத்ரம், (மேதஸ் மஜ்ஜை, எலும்பு என்ற இவற்றின் சேர்க்கையினுலுண்டான சரீரத்தில் ஒரு முட்டாள் ஆசையை வைப்பானாகில், இதேமாதிரியான) நரகத்திலும் அவன் பிரீதியையே செய்வான். (அதை வெறுக்கமாட்டான். அதனால் நரகத்தில் தள்ளுவது அவனுக்குத் தண்டனையாகாது என்று பொருள்).

§மின்போலே— க. ¶போக்தாவுக்கு ஸ்தானமுமாய்—க.

[10]"அநித்யமஸுகம் லோகம்," [11]"மஹீ ச ஜகதீ நாஶம்," [12]"ஸாரநிஷ்ட *கதலீஸ்தம்பம்," [13]"யாமேவ ராத்ரிம் ப்ரதமாம்," [14]"ப்ருஶஸந்நிதாம் யாதி" [15]"உச்சஸ்தாயிநம் ம்ருத்யும்," [16]"ப்ராதருத்ஸ்ருஷ்ட வர்ஷீஷாஸ்ரம்," [17]"ஊனிடைச் சுவர்வைத்து," [18]"பொல்லாவாக்கை," [19]"புண்

[10]கீதை 9. 33. அழிவுள்ளதும் (இருந்தபோதும்) ஸுகமில்லாததுமான இவ்வுலகத்தை (அடைந்தவனை நீ என்னை ஆச்ரயிப்பாயாக).

[11]ஜகதீ - பூமியே, நாஶம் கச்சதி - அழிவை அடையப் போகிறது; (மற்றும் அதனுள்ளிருக்கும் வஸ்துக்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ ?)

[12]வாழைக்கட்டைபோல் நிஸ்ஸாரமான மனுஷ்யசரீரத்தில்.

[13]யாமேவ ராத்ரிம் ப்ரதமாம் கர்ப்போ விஶதி மாதரம் ।
தாமேவ ராத்ரிம் ப்ரஸ்வாப்ய மரணாய விவர்த்ததே ॥

[பார. சாந்தி. 283. 12.]

எந்த முதல் ராத்ரியில் கர்ப்பமானது தாய் வயிற்றில் பிரவேசிக்கிறதோ, அந்த ராத்திரியிலேயே இவனை இறக்கச் செய்வதற்காக இவனை உறங்கச் செய்து யமனும் பிரவேசிக்கிறான்.

[14] (உதயாஸ்தமனங்கள் ஆக ஆக மரணம்) மிகவும் ஸமீபத்தில் இருக்குந்தன்மையை அடைகிறது.

[15] உச்சந்தலையிலேயே நிற்கிற மிருத்யு தேவதையை (அறி

[16] விடியற்காலையில் விடப்படும் மல மூத்ரங்களாலும், (மத்யாஹ்நத்தில் வெளிவரும் வியர்வை முதலியவற்றாலும், ராத்ரியில் சுக்லசோணிதங்களாலும் சரீரம் அசுசிமயம் என்று அறியலாம்).

[17] ஊன் - மாம்ஸத்தை, இடை - நடுவே நடுவே, சுவர்வைத்து- சுவராக வைத்து.

[18] 3. 2. 3. பொல்லா - மிகவும் கெட்டதான, ஆக்கை-சரீரம்,

[19]தி. மொ. 1. 9. 6. புண்—புண்கள், ஆர்-நிறைந்த, ஆக்கை. (புண்போன்ற சரீரம்): *கதலீஸ்தம்பம்—க.

ஞராக்கை” 20“மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்” 21‘வேதநூற் பிராயம் நூறு” இத்யாதிகளிலும் விளங்கக் காணலாம்.

*யதோத்தராய் வஸுமதீ-பதித்வமும் பெற்றிருந்த 22“நள-ந்ருக-நஹுஷாதிகளுள்பட உத்த-க்ருதகர்ம-ஸஜ்ஜ-நரகாதிவைஷம்யங்களையும் அடைந்து அவர்கள் பட்ட பாடுகளையும், †அவர்கள் தந்தாம் கதைகளும்

*ஆகையால் தர்மோத்தராய்—க. †அவர்கள் சாரங்களும் அநுமாணம் பண்ணிப்போன படிகளையும்—க.

†அவர்கள் இறந்தபோதே அவர்களுடைய கதைகளும் மறைந்த படியால், கதைகள் அநுமாணம் பண்ணின என்கிறார். (‘அவர்கள் தாரங்களும்’ என்று பாடமானால், மௌஸல பர்வத்தில் வஸுதேவருடைய பத்நிகள் அநுமரணம் செய்தது முதலானவையை எடுத்துக்கொள்ள வேண்டும்.)

20 1. 2 2. மன்-ஸ்திரமான, உயிர் - ஜீவாத்மாவினுடைய, ஆக்கைகள் - சரீரங்கள், மின்னில் - மின்னலைக் காட்டிலும் கூட நிலையில - நிலையில்லாதது.

21 திருமாலை 3. வேதநூல் - வேதசாஸ்திரங்களில் சொல்லியபடி, நூறு பிராயம் - நூறு வருஷங்கள் (மனிதர் ஜீவித்திருந்தாலும், பெரும் பகுதி வீணாகக் கழிகின்றன).

22 நளன் - தேவதைகளின் இஷ்டத்திற்கு விரோதமாக, நளன் தமயந்தியை மணந்ததால், கலி அவனுடைய சரீரத்தில் புகுந்து ராஜ்யத்திலிருந்து அவனை வெளியேற்றி, பைத்தியம் பிடித்தவன் போல் அலையச் செய்தான். அந்த நிலைமையே இங்கு விவக்ஷிதம்.

ந்ருகன்—வைவஸ்வதமனுவின் புத்திரன். இவன் கோடிக்கணக்கான பசுக்களை தானம் செய்தான். ஒரு ஸமயம் ஒரு பிராமணனுக்குக் கொடுத்த பசு அரசனுடைய அரண்மனைக்கே திரும்பி வந்துவிட, அது தானம் செய்யப்பட்டது என்றுஅறியாமல், அதை வேறொருவனுக்குத் தானம் செய்தான். அந்த பிராம்மணர்களிருவரும் பரஸ்பரம் சண்டையிட்டுக்கொண்டு, அரசன் உடனே தங்களைக் காணவராததால், ‘நீ ஓணாக் குழியில் வஸிப்பாய்’ என்று சபித்துவிட்டார்கள். பிறகு ஸ்ரீ கிருஷ்ணனுடைய கையினால் அவனுக்கு சாபவிமோசனம் ஏற்பட்டது. (ராமாயணம், உத்தரகாண்டம் 53, 54; பாகவதம் 10. 64.)

அநுமரணம் பண்ணிப் போனபடிகளையும் கேட்டால், [23]"இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" என்னும்படி ராஜ்யாதிஸாவஸஜம் சுநாஷஜியாது.

தன்னோடொக்க [24]ஒழுகு சங்கிலியிலே கோப்புண்டு உழலுகிற தேவர்களுக்கு இறைக்குடிமகனாய் நெடுநேர்த்திகளோடும் நெடும் காயக்லேசங்களோ

நஹுஷன்—ஆயுஸ்ஸின் புத்திரனும் யயாதியின் தந்தையுமான இவன் சந்திரவம்சத்து அரசர்களில் ஒருவன். ஒரு காலத்தில் இந்திரன் ப்ரஹ்மஹத்தி பாபத்தினால் மறைந்திருந்தபோது, நஹுஷன் இந்திரனாக நியமிக்கப்பட்டான். அப்போது இந்திராணியிடம் காதல்கொண்டு, ஸப்தரிஷிகள் தூக்கிச்செல்ல ஒரு பல்லக்கில் அவளுடைய அரண்மனைக்குச் சென்றான். இவனுக்கு இருந்த ஆவலினால், அவர்களை 'செல், செல்' (ஸர்ப்ப, ஸர்ப்ப) என்று விரட்ட, அதனால் கோபம்கொண்ட அகஸ்த்யர் அவனை மலைப்பாம்பாயாகும்படி சபித்தார். உடனே அவன் ஆகாசத்திலிருந்து கீழே விழுந்து அந்த நிலையுடன் வெகுகாலம் இருக்கும்போது, யுதிஷ்டிரனால் அவனுக்கு சாபம் நீங்கிற்று.

ஸோமகன் என்னும் அரசன் தன்பிள்ளையின் சரீரத்தைக் கொண்டு யாகம் செய்ததினால் நரகாவஸ்தையை அனுபவித்ததும் இங்கே கொள்ளவேண்டியது. (மஹாபாரதம் ஆரண்யபர்வம் 128, 129.)

[23]பெரு.தி.4.5. இன்பு-எல்லா போகங்களையும், அமரும் - பூஜிக்கும், செல்வமும் - ஸம்பத்தும், இவ்வரசும் - அதற்குக் காரணமான ராஜ்யமும், நான் வேண்டேன்.

[24] ஒழுகு சங்கிலி-அனேகம் மாடுகளைக் கட்டும்படியாக வயல்களில் கட்டப்படும் நீண்டதான சங்கிலி (அல்லது கயிறு). கோப்புண்டு - கட்டப்பட்டு, இறைக்குடிமகன்-வரிகொடுக்கும் படியாள். நெடுநேர்த்தி - பல பிரார்த்தனைகள்; மிகுந்த சிரத்தை.

டும் நெடுநாள் பண்ணின யஜ்ஞாதிபுண்யாவஸத்திற்குப் ஸமமாக ஸ்தூலசரீரம் விழுந்தால் ஸம்ஸ்லிஷ்டதத்த்வ காரணமான †பூதஸூக்ஷ்மஸமுதாயத்தோடே கூடி ப்ராணபவநவேகவிக்ஷிப்தனாய்க்கொண்டு தூமராத்ரி க்ருஷ்ணபக்ஷதக்ஷிணாயநபித்ருலோகாகாசசந்த்ரக்ரமத்தாலே ஸ்வர்க்கப் பரணிலே ஏறி, அங்கே தேவ ஜாதி என்னும்படி ஒரு தேஹத்தை எடுத்து, எருது பரதேசம்போன கணக்காய் தனக்கு மேலான தேவர்களுக்குப் 'பசு' என்னலாம்படி எடுத்துச் சுமந்து திரிந்து, ஏறவிட்ட கர்மம் விலைசயற்றவளவிலே, [25]"அந்தவத்து பலம் தேஷாம்" [26]"ஆப்ரஹ்மபுவநால்லோகா:" [27]"சுவர்க்கமெய்தியும் மீள்வர்கள்" இத்யாதிகள்படியே தள்ளுண்டு தகரவிழுந்து, அங்கே தைவசரீரத்தையும் இழந்து, அதின் பூதஸூக்ஷ்மஸமுதாயத்தோடேகூட சந்த்ரஸ்தாநத்தினின்றும் ஆகாசவாயுதூமாப்ரமேக வ்ருஷ்டிவ்ரீஹ்யாதிகளாலே §பிரியப்போரிட வொண்ணாத படிகலந்து போந்து, அநுஶயிதனாய்க்கொண்டு புருஷசரீரநரகத்திலே ப்ரவேசித்து, ரேதோரூபபரிணாமத்தாலே ஸ்த்ரீசரீரசோணிதமத்யத்திலே விழு

†பூதஸூக்ஷ்ம ஸமுதாயத்தோடேகூட—ம. §பிரித்துப் பேரிட-ம
[25]கீதை 7. 23. [26]கீதை 8. 16. [27]4. 1. 9.

எருது பரதேசம்போன கணக்காய்-தீனியைப்போட்டு வேலை வாங்கும் எஜமானனை வெறுத்து, 'ஸுகமாக இருக்கவேண்டும்' என்று நினைத்து எருது பரதேசம் சென்றால், அங்கொருவன் அதைப் பிடித்துக் கட்டி வேலை வாங்குவானே யொழிய, அதன் சொந்தக்காரனைப் போலத் தீனி போடமாட்டான். (அதுபோல ஜீவர்கள் ஸ்வர்க்கம் சென்றால் அங்கும் உழைக்க வேண்டியதே.) தகர—சிதறும்படியாக.

ந்து, [28]கலல-புத்புதாத்யவஸ்தைகளையும் அடைந்து ஸ்ராவபாதாதி விபத்துக்களுக்குத் தப்பினுகில் [29]'புண்ணை மறைய வரியுண்டு' ஶக்ருந்மூத்ரஜம்பாலஶாயியாய் *ஸம்பிண்டிதஸர்வகாத்ரனாய், முகம் புதையுண்டு, அதிதீக்ஷ்ணங்களான மாத்ருபோஜநக்லேஶங்களையும் அநுபவித்து, உல்பஸம்வேஷ்டிதனாய், புக்நப்ருஷ்ட†க்ரீவனாய்க்கொண்டு ப்ராஜாபத்யவாயுவாலே தலைகீழாகத் திருப்புண்டு ப்ரஸூதிமாருதவேகத்தாலே யோநியந்த்ரபீடிதனாய்க்கொண்டு மஹாதுக்கத்தோடே [illegible]ங்கள்போலே அஶுசிப்ரஸ்ராவத்திலே விழுந்து பாஹ்யவாயுஸ்பர்ஶத்திலே மோஹிநியான வைஷ்ணவமாயையாலே அவஹ்ருதப்ரஜ்ஞனாய் ஜந்மமரண-[illegible]ஸ்ம்ருதிகளை இழந்து, [30]'ஐவர் திசை திசை வலித்தெற்ற' பாஹ்யாதிவாயுப்ரகாராந்தர

---

*ஸம்பீடிதஸர்வகாத்ரனாய்—க. †ஶிரோக்ரீவனாய்—வ.

[28] கலலம்—பா. [28]கலிலம் (கலலம்)— ஒரு இரவு ஆன கர்ப்பம்; புத்புதம்—ஏழு ராத்திரிகளான கர்ப்பம். (ருதுகாலே ஸம்ப்ரயோகாத் ஏகராத்ரோஷிதம் கலலம், ஸப்தராத்ரோஷிதம் புத்புதம் பவதி)

ஸ்ராவம்—(நான்கு மாதத்திற்குள் ஏற்படும்) ஜலரூபமான கர்ப்ப விநாசம்; பாதம்—(ஐந்தாவது அல்லது ஆறாவது மாதத்தில் வரும் கடினமான கர்ப்பம்) விழுதல்.

[29] 5. 1. 5. (சரீரத்திற்குள் இருக்கும்) புண் முதலான தோஷங்களைக் காணவொண்ணுதபடி, இடைவெளியில்லாமல் கட்டி.

உல்பம்—கர்ப்பப்பை. (உல்பஸம்வேஷ்டிதோ புக்நப்ருஷ்டக்ரீவாஸ்திஸம்ஹதி:— வி. பு. 6. 5. 10. இங்கு சொல்லப்பட்டதையெல்லாம் விஷ்ணுபுராணம் ஆறாவது அம்சம் ஐந்தாவது அத்தியாயத்தில் விஸ்தாரமாகக் காணலாம்.)

[30] 7. 1. 10. (ஐந்து இந்திரியங்களும் திக்குத்தோறும் இழுத்து உதைக்க)

தேஹாவஸாநமெயாலே தத்வனாய், [31]"அநேகாந்தரஸதம் ஸ்ருஷ்ட்யவடாணாம் ப்ரவக்ஷ்யதே" என்கிறபடியே ஏதேனுமொரு வயஸ்ஸிலே மரணவேதனையோடே தலைக் கட்டி பழைய வட்டத்திலே [32]சூறாவளிக்காற்றுபோலே சுழலும்படிகளைக் கேட்டால் ஸ்வமாதி ஸம்ஸாரஸங்க நிவ்ருத்தியுண்டாம்.

[33]ராவணஹிரண்யாத்யாதிகள் *கையிலே இந்த்ராதிகள் படும்பாட்டைக் கேட்டால், †சந்தனக் கழுவோடொத்த ஐச்வர்யாதிகங்களிலும் ஸங்கம் தீரும்.

அவர்களைப் பிடித்த ராவணாதிகள் தாங்களும் [34]கார்த்தவீர்யாதிகள் கையிலே கட்டுண்டும் நெருக்

* கையிலே படும்பாட்டை—ம. †சந்தனக்கழுவோடொத்த—க.

31 [32]சூறாவளிக் காற்று=சுழல் காற்று.

சந்தனக்கழு—குற்றவாளிகளைக்கழுவேற்றிக் கொல்வதற்கான கழுமரத்தைச் சந்தன மரத்தால் செய்தாலும், அதனால் இறப்பவனுக்கு ஸுகமிராது. அதுபோன்றவை இந்திராதிபதங்கள்.

[33]ராவணன், ஹிரண்யன் முதலானோர், இந்திரன், குபேரன் முதலான லோகபாலர்களை ஜயித்து, அவர்களுடைய ராஜ்யம், மனைவி எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு, அவர்களை வெருட்டியும் சிறையிலிட்டும் ஹிம்ஸித்ததையெல்லாம் உணர்ந்தால், அவர்கள் பதவியிலும் ஆசை உண்டாகாது என்று கருத்து.

[34]கார்த்தவீர்யார்ஜுனன் - மாஹிஷ்மதிக்கு அரசனான இவன் தவத்தால் ஆயிரம் கைகளையும் அளவற்ற பலத்தையும் பெற்றான். ஒருநாள் தன் ஆயிரம் கைகளாலும் நதியின் ஜலத்தைத் தேக்கி, தன் பத்தினிகளுடன் ஜலக்ரீடை செய்துகொண்டிருந்தான். அப்போது அந்த இடத்திற்கு மேற்கே ராவணன் ஆற்றுமணலில் பூஜை செய்துகொண்டிருக்க, தேக்கப்பட்ட ஜலம் அந்தப் பூஜையை வெள்ளமிட்டது. ராவணன் கோபங்கொண்டு, கார்த்தவீர்யார்ஜுனனோடு சண்டைக்குவர, அவன் ராவணனை நாண்கயிற்றால் கட்டித் தன் நகரத்திற்குக் கொண்டுபோய்விட்டான். பிறகு புலஸ்தியரின் வேண்டுகோளுக்கிணங்கி ராவணனை விடுவித்தான். (ராமாயணம் உத்தரகாண்டம் 77, 78). அவ்விதமே ராவணன் வாலியால் கண்டுண்டதும் இங்கே நினைக்கத் தக்கது.

குண்டும் முடிவில் ஶ்ருதிஸ்ம்ருத்யாதிகளையும் இழந்து கழுகுநிழலிலே ஜந்துக்கள் கதறக் கிடந்தபடிகளைக் கேட்டால், [35]'திண்கழற்கால் அசுரர்கள்' செல்வங்களிலும் சிந்தை *செல்லாது.

இவர்களுக்கு வரம் கொடுத்து வாழ்விக்கவல்லனாய், [36]ஸர்வமேதயஜ்ஞத்தாலே 'தேவதேவன்' என்று பேர் பெற்றுத் திரிபுரம் எரிக்கும் சேவகமுடையனான ஸ்ருஷ்டிஸம்ஹாராதிகாரிக்கு [37]வ்ருகாஸுராதிவ்ருத்தாந்தங்களில் பிறந்த விசேஷங்களைக் கேட்டால், ஈச்வரத்வத்திலும் ருசி பிறவாது.

---

*சேராது--ம

[35]3. 5. 2. (திண்கழல் – திடமான வீரக்கழல்களணிந்த, கால்களையுடைய அஸுரர்களின் செல்வத்திலும்).

[36]ஸர்வமேதம் – தன்னுடையதெல்லாவற்றையும், கடைசியில் தன்னையும் கொடுத்துச் செய்யும் யாகம்.

பூமி, ஆகாசம், அந்தரிக்ஷம் என்ற மூன்று இடங்களிலும் பொன், வெள்ளி, இரும்பு, என்ற மூன்று உலகங்களால் அஸுரர்களுக்காக மயனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதற்குத் திரிபுரம் என்று பெயர். அந்த அஸுரர்களின் ஹிம்ஸையைப் பொறுக்காத தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, அந்த பட்டணங்களையும் அவ்வஸுரர்களையும் சிவன் எரித்தார்.

[37]வ்ருகாஸுரன் - இந்த அஸுரன் தன் கொடிய தவத்தினால் பரமசிவனை ஸந்தோஷப்படுத்தி, 'நான் எவர் தலையில் கைவைக்கிறேனோ அவர் இறக்கவேண்டும்' என்று வரம் பெற்றான். அதைப் பரீக்ஷிப்பதற்காக சிவன் தலையிலேயே கையை வைக்கும் பொருட்டு அவரைத் தொடர்ந்தான். அதனால் பயந்து சிவன் ஓட, அப்போது விஷ்ணு ஒரு அழகிய சிறுவனாய் அவன் முன்தோன்றி இனிய வார்த்தைகளால் அவன் ஓடும் காரணத்தை விசாரித்தார். அவன் நடந்ததைச் சொல்ல, 'தக்ஷனுடைய சாபத்தால் பிசாசத் தன்மையை அடைந்த சிவனுக்கு இவ்வளவு சக்தி ஏது? நான்

சில ஸ்ருஷ்டிவிசேஷங்களிலே ருத்ரனுக்கு ஜ்யேஷ்ட ப்ராதாவாயும் பிதாவாயும் பிறந்து, ஸர்வேச்வரனுக்கு ஔரஸபுத்ரனுமாய் ஸ்வஹிதசிஷ்யனுமாய்க் கொண்டு, க்ஷேத்ரஜ்ஞருடைய ஆநந்தங்களெல்லாவற்றிலும் மேலான ஆநந்தத்தையுடையனான ப்ரஹ்மாதான் [38]'பெருவிசும்பின்மீது போயிருக்கும் நெடுவெள்

நம்பவில்லை. உன் தலையிலேயே சற்றுக் கையை வைத்துப் பார்' என்று அச்சிறுவன் சொன்னான். மந்தபுத்தியான அவன் அவ்விதமே செய்ய, உடனே இறந்தான். (இது ஸ்ரீபாகவதம் தசம ஸ்கந்தம் 88-வது அத்யாயத்தில் இருக்கிறது.)

அந்தகாஸுரன் - ஒரு ஸமயம் பரமசிவனுக்கும் அந்தகனுக்கும் யுத்தம் நேரிட, சிவனுடைய ஆயுதங்களினால் அடியுண்ட அந்தகனுடைய சரீரத்திலிருந்து பெருகின ரத்தத்தின் திவலைகள் ஒவ்வொன்றும் அவனடைந்த வரபலத்தால் ஓரொரு அந்தகனாகக் கிளம்பி அவர்கள் பரமசிவனைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்போது சிவன் வாஸுதேவனைச் சரணமடைய, அந்த பகவானான விஷ்ணு சுஷ்கரேவதியை (அட்டை என்னும் ஜந்துவை) ஸ்ருஷ்டித்தார். அவையும் அவ்வஸுரனின் ரத்தங்களையெல்லாம் பருகிவிட்டன. (இது மத்ஸ்ய புராணத்திலுள்ளது. இக்கதையை ஆளவந்தாருடைய ஸ்தோத்ரத்தின் 13-வது சுலோக வ்யாக்யானத்தில் ஸ்ரீதேசிகன் எடுத்து உதாஹரித்திருக்கிறார்.)

வ்யஷ்டி ஸம்ஹாராதிகாரி— மஹாப்ரளய காலத்தில் ப்ருதிவீ முதலான பஞ்ச பூதங்களிலிருந்து பிரக்ருதி வரையில் லோகங்களுக்கும் ஏற்படும் ஸம்ஹாரத்திற்கு 'ஸமஷ்டிஸம்ஹாரம்' என்றும், பஞ்ச பூதங்கள் வரையில் ஏற்படும் ஸம்ஹாரத்திற்கு 'வ்யஷ்டி ஸம்ஹாரம்' என்றும் பெயர். இந்த வ்யஷ்டி ஸம்ஹாரம் சிவனுடைய அதிகாரத்திலிருக்கிறபடியால், அவருக்கு வ்யஷ்டி ஸம்ஹாராதிகாரி என்று பெயர். அப்படியே நான்முகனுக்கு வ்யஷ்டிஸ்ருஷ்டி அதிகாரி என்று பெயர்.)

[38] தி. மொ. 11. 6. 6.

ளமெல்லாம் கணைக்காலளவாம்படி' வளர்ந்துவந்த மது-கைடபர்களைக் கண்டு மஹாலயாக்ராணனாய், தனக்குக் கண்களும் தனங்களுமான வேதங்களைப் பறி கொடுத்து, [39]சுருணை சோர்ந்த கணக்கனைப் போலே நீர்க்கடை நிலக்கடை யறியாதே விலாபம் பண்ண, அப்போது கேட்டருளினனொரு பரமகாருணிகனான வன் விரோதிநிராகரணம் பண்ணி வேதங்களையும் மீட்டுக்கொடுக்க, மீண்டும் 'ஜ்ஞாயிவதி' என்று வீற்றிருந்தபடியையும் அநுஸந்தித்து, [40]"ஆப்ரஹ்மஸ்தம்பபர்யந்தா:" [41]"கர்மணாம் பரிணாமித்வாதாவிரிஞ்சாதமங்கலம்"

[39]சுருணை = கணக்கெழுதப்பட்ட ஓலைச்சுருள். நீர்க்கடை - நீர் தங்கும் குளம் முதலியவற்றின் எல்லை; நிலக்கடை - நிலங்களின் அளவு. [39]நீர்க்கிடை நிலக்கிடை—பா.

[40]ஆப்ரஹ்மஸ்தம்பபர்யந்தா: ஜகதந்தர்வ்யவஸ்திதா:।
ப்ராணிந: கர்மஜநிதஸம்ஸாரவசவர்திந: ॥
(வி. பு. 104. 23.)

ப்ரஹ்மா முதல் ஸ்தம்பமென்னும் சிறு புழு வரையிலுள்ள (இவ்வுலகிலுள்ள எல்லாப்பிராணிகளும் புண்யபாபரூபகர்மங்களால் வுற்பட்ட ஸம்ஸாரத்திற்கு அதீனமாய் இருப்பவர்கள்.)

[41]இதி பச்யந் விரக்தஸ்ய வாஸுதேவ: பரா கதி: ॥
என்று உத்தரார்த்தம். (பாகவதம் 11. 19. 18.

அவரவர்களின் கர்மங்களின் பலனாலேயே உண்டானதாகையால் ப்ரஹ்மா வரையிலுள்ள ஸகல ஜீவர்களுடைய நிலைகளும் அமங்களமானது (துக்கரூபமானது) (என்று ஆராய்ந்து அறிந்து அவற்றில் ஆசையை விட்டவனுக்கு வாஸுதேவனே ச்ரேஷ்டமான உபாயம்)

('விபச்சித்நச்வரம் பச்யேத் அத்ருஷ்டமபி த்ருஷ்டவத்')
[என்று ஸ்ரீ பாகவதத்தில் பாடம்.]

42"கங்காயா ஸைகதம் ஏகைக ந வ்யதீதா: பிதாமஹா:," 43"நினைப்பான் புகில் கடலெக்கலின் நுண் மணலில் பலர்" இத்யாதிகளையும் நிரூபித்தால், 44"ந காமயே ப்ரஜாநாதைச்வர்யம்" இத்யாதிகளிற்படியே ஹிரண்யகர்ப்பத்வத்தையும் த்ருணீகரித்து, 45கூட்டரிய துயரறுசுடரடியே கூடலாமாகில், ஒரு கதம்ப ஸ்தாவரஜந்மத்தையே ஆகாங்க்ஷிக்கும்படியாம்.

42வைஷ்ணவ தர்மசாஸ்திரம்.

கங்காயா ஸிகதா தாரா யதா வர்ஷதி வாஸவே

என்று பூர்வார்த்தம்.

(கங்கையின் மணல் போலவும், இந்திரன் வர்ஷிக்கும்போது மழை தாரைகள் போலவும்) இவ்வுலகில் (இருந்து) கழிந்தவர்களான ப்ரஹ்மாக்கள் எண்ணமுடியாதவர்கள்.

43 4. 1. 4. நிரூபிக்கப் புகுந்தால், அலைவாயில் எக்கலில் நுண்ணிய மணலிலும் காட்டில் அதிகரான (ப்ரஹ்மாதிகள் இவ்வுலகங்களை ஆண்டு கழிந்தவர்கள்.)

44ந காமயே ப்ரஜாநாதைச்வர்யம் பசுநாதம் வா ந காமயே।
ஸஹம் கதம்போ ஸ்தாவரம் வா யமுநாதடே ॥

ப்ரஜாபதி, பசுபதி இவர்களின் ஐசுவர்யத்தை நான் ஆசைப்படவில்லை, யமுனைக்கரையில் (கண்ணன் ஏறி விளையாடும்) ஒரு கதம்ப மரமாகவாவது குந்த விருக்ஷமாகவாவது இருக்க விரும்புகிறேன்.

45 4. 9. 9; 1. 1. 1. (சேருவதற்கு அரிதானதும், ஆச்ரயித்தவர்கள் துக்கத்தையெல்லாம் போக்கும் எழிலுள்ள திருவடிகளை அடையலாமாகில்)

*இப்படி பரமபதாநுபவத்தைக் கேட்டவர்களுக்கு 46"ஸந்தி தேவ நி47"தஸ்யாந்தராயோ மைத்ரேய" என்கிறபடியே 48இமையோர் வாழ் தனிமுட்டைக் கோட்டைக்குட்பட்ட குறிச்சிகளெல்லாம் மூவேழு நரகங்களோடொக்க இவையும் ஈரேழு †நரகம் என்று எண்ணலாம்படியிருக்கும். 49"யம் லப்த்வா சாபரம் லாபம் மந்யதே நாதிகம் தத:" என்னும்படியாய் நிர்துக்கமான 50தெரிவரியவளவில்லா ஆநந்தாநுபவமும் ப்ரதிபந்தகவிஶேஷத்தாலே ஸ்வாநந்தாநுபவத்தோடே கூடாதே சிற்றின்பமாய்,

*'இப்படி' இது இல்லை—ம. †நரகம் என்னலாம்படியிருக்கும்-க.

46ஸந்தி தேவ நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந: (பார சா. 196.4).

மற்றத் தேவர்களுடைய இந்த ஸ்தானங்களெல்லாம் பரமாத்மாவின் ஸ்தானத்தோடு ஒப்பிட்டால் நரகங்கள் தான்.

47வாஸுதேவே மநோ யஸ்ய ஜபஹோமார்ச்சநாதிஷு ।
தஸ்யாந்தராயோ மைத்ரேய தேவேந்த்ரத்வாதிகம் பலம் ॥ (வி. பு. 2. 6. 43.)

ஏ மைத்ரேய! ஜபம், ஹோமம், அர்ச்சனை முதலிய காலங்களில் எவனுடைய மனது வாஸுதேவனிடமிருக்கிறதோ, அவனுக்கு தேவேந்திரனுகைகை முதலான பலமெல்லாம் விக்னம்தான்.

484-9-8 (ப்ரஹ்மாதிகளான தேவதைகள் வாழும் ஒப்பற்ற அண்டமாகிற கோட்டைக்குட்பட்ட). குறிச்சி—சிறிய ஊர்.

49கீதை 6. 22. எந்த யோகத்தை அடைந்து, (அதிலிருந்து ஓய்ந்தபோதும்) அதைக் காட்டிலும் மேலான வேறு லாபத்தை எண்ணுகிறதில்லையோ.

504. 9. 10. இந்திரியங்களால் அறியவரிதாயும் அளவற்றதாயும் இருக்கிற.

51"இறுகல் இறப்பென்னும் ஞானிக்கும் ‡அப்பயனில்லையேல்" என்றும், 52"ஸர்வே ச்யவநதர்மாண:" என்றும் சொல்லுகிறபடி கழிப்பானுகையாலே 50'ஒழிந்தேன்' என்று உபேக்ஷாவிஷயமாம். ஸாம்ஸாரிக ஸுகம் போலே ஸ்வர்க்க ஸுகமும் ஸ்வர்க்க ஸுகத்தைக் காட்டில் ஸ்வாநுபவமன்று. 53"மன்னுறில்" என்னும் ஸூக்தியாலும் இவ்வர்த்தம் ஸித்தம்.

இப்படிப் ப்ரயோஜநாந்தரவிரக்தி பிறந்தால், 54"உன்னலல்லால் யாவராலும் ஒன்றும் §குறை வேண்டேன்"

---

‡அப்பயனில்லையேல் என்னும்படி 'ஸர்வே ச்யவநதர்மாண:' என்று சொல்லும்படி—க.

§குறைவேண்டேன் என்றும், உன்னித்து மற்றோர் தெய்வம் தொழாளவனையல்லால் என்னும்படி (என்றும் சொல்லுகிறபடி) பரிமித பலப்ரதமான—க.

51 4. 1. 10. இறுகல்—சுருங்குதல், அதாவது ஆத்மமாத்ராநுபவத்தையே, இறப்பு - மோக்ஷம், என்னும் - என்று சொல்லுகிற ஞானிக்கும், அப்பயனில்லையேல் - அந்த பகவதுபாஸனமில்லையாகில், ஆத்மாநுஸந்தானம் பண்ணவொண்ணாது.)

52பார. சாந்தி. 3.50. 35. (ஐச்வர்யம், ஆத்மாநுபவம் இவற்றை விரும்புகிறவர்களெல்லாரும் பகவானிடமிருந்து புருஷார்த்தத்தைப் பெற்றதும் திரும்புகிறவர்களாகையால்) நழுவுவதையே ஸ்வபாவமாக உடையவர்கள்.

அநுபவிக்கும் ஆத்மா நித்யமாயிருப்பதால், அவனுடைய ஸுகம் நித்யமாக இருக்கவேண்டும் என்று எப்படிச் சொல்லமுடியாதோ, அப்படியே அநுபவிக்கப்படும் வஸ்து நித்யமாயிருப்பதால் ஸுகம் நித்யமாயிருக்கும் என்று சொல்ல முடியாது.

53 1. 2. 5. ஸ்திரமாக இருக்கப் பார்த்தால் (தன்னைப் பற்றினல், 'இன்னமும் அதுக்கு அவ்வருகே ஒரு அநுபவமுண்டு' என்று இருக்க வேண்டாதபடியான நிலை நின்ற புருஷார்த்தத்தை பற்றப் பார்க்கில், ஸர்வேச்வரனைப் பற்று.) 54 5. 8. 3.

என்னும்படி ஸர்வவிதஸஹவாஸமான [55]மற்றொரு தெய்வம் தொழாதே, [56]மற்றுமோர் தெய்வம் உளதென்றிருக்கும் ஸம்ஸாரிவிஜாதீயஜநத்தோடும் நெருங்காதே, [57]"யூயம் யூயம் வயம் வயம்" என்று வேறுபட்டு, [58]"கொள்ளக் குறைவில்லாத வள்ளல் மணிவண்ணன் பக்கலிலும் [59]கூறை சோறு என்றாற்போலே தனக்கு மற்றொரு ப்ரயோஜநாந்தரத்தை அபேக்ஷியாதே, ஸ்வாத்மலாபமான ஸந்யாஸத்தில் உத்தராஶ்ரமத்திலே ஊற்றமுடையனும்.

தந்திரங்கள் அளவிலராய்த் தனத்தால் மிக்க
 தார்வேந்தர் தொழவையம் ஆண்டார் மாண்டார்
சந்திரனும் சூரியனும் வீயும் காலம்
 தாரகையின் வடம் அற்றுத் தனிவான் ஆகும்
இந்திரனும் ஏறுயர்த்த ஈசன் தானும்
 ஈரிரண்டு முகத்தானும் இல்லா வந்நாள்
நம் திருமால் நிலைகண்டார் நாகமெல்லாம்
 நரகென்று நற்பதமே நாடுவாரே. 7

இதி ஸ்ரீபரமபதஸோபாநே த்ருதீயம் விரக்திபர்வ

[55]4. 6. 10. [56]தி. மொ. 8. 10. 3.
[57]அத்ர ப்ருஹதி ஸேநோக்தா யூயம் யூயம் வயம் வயம் |
அர்த்தகாமபரா யூயம் நாராயணபரா வயம் ||
ஏ உலகத்தீரே! இது முதல் நீங்கள் வேறு; நாங்கள் வேறு. நீங்கள் அர்த்தகாமங்களை விரும்பிச் செல்லுகிறீர்கள்; நாங்களோ நாராயணனை நாடிச் செல்லுகிறோம்.
[58]3. 9. 5. [59]பெரி. தி. 5.1.4. (கூறை - வஸ்த்ரம்)

துறவறமே துணிவார் துணுக்கற்ற இளந்துணிவோர்
உறவிலராதலில் நாமுயர்ந்தாருடன் ஒன்றிநின்றோம்
மறவழிமாற்றி எம்மையலைத் தீர்த்தவர் மன்னருளால்
கறவையுகந்தபிரான் கழல் சூடும் கருத்தினமே. 8.

இப்படி விவேக விசேஷத்தாலே தூஷ்டாஹாராதி நிவ்ருத்தியும், [1]நிர்வேதவிசேஷத்தாலே நிஷித்த நிவ்ருத்தியும், விரக்திவிசேஷத்தாலே ஸுககாம்ய நிவ்ருத்தியும் பிறந்தாலும், ஸர்வபூர்வார்ஜிதமுமாய், அநுபுக்தமும் மன்றிக்கே க்ருதப்ராயச்சித்தமுமன்றிக்கே [2]ஆரப்தகார்யமுமாய், அநாரப்தகார்யமுமாய்க் கிடக்கிற ஸஞ்சித பாபத்தைப் பார்த்தால், போகத்தாலேயாதல் ப்ராயச்சித்தத்தாலே யாதல் நிச்சேஷமாகக் கழிக்க அரிதாய் இருக்கிறபடியையும்; இவற்றின் ஸ்வமான அநந்த ஸ்தாவரஜங்கம சரீரங்களைப் பரிக்ரஹித்து ஸநாதநமான ஸம்ஸார ஸாகரத்திலே அழுந்தவேண்டும்படி வரும் கர்ப்ப-ஜந்ம-ஜரா-மரணாதி-சக்ர-ஸம்ஸ்ருதி-ப்ரவாஹத்தையும்,

[1] நரகபயத்தால் பாபத்தைச் செய்யாதிருக்கவேண்டும் என்கிற எண்ணம் நிர்வேதம்; புண்யபலமான ஸ்வர்க்காதிகளின் தோஷத்தைக் கண்டு அவற்றில் ஆசையை விடுதல் வைராக்யம்.

[2] ஒருவனால் செய்யப்பட்ட அளவற்ற பாபங்களில், பலத்தை கொடுக்க ஆரம்பித்திருப்பது ஆரப்தகார்யம்; அந்த பாப பலத்தை அநுபவித்து முடிந்ததும், தங்கள் பலத்தை முறையே கொடுக்கும் பொருட்டு அவ்வநுபகாலத்தின் முடிவை எதிர்பார்த்திருப்பவை அநாரப்த கார்யம்.

[3]உயர ஏறித் துல்யசீலராய்த் தோற்றினாரை ஸத்த்வத்தாலே 'த்வம்ஸ' என்று தகரவிழவிடுவார், [4]ஸ்வவிஷயவ்ருத்திகளை உத்க்ருஷ்டாம்ஸலக்ஷணத்திற்கு மதாமதம் பண்ணிவைப்பார், [5]ஹ்ருத்ஸ்வமுண்மாரை அவிநீதராக்கிக்கொ

---

3 இது இந்திரனைப் பற்றிய கதை. சந்திரவம்சத்து அரசனான யயாதி என்பவன் மஹாதபஸ்ஸைச் செய்து ஸ்வர்க்கம் சென்று அங்கு தேவேந்திரன் போலவே ஸகலஸுகங்களையும் அனுபவிக்க ஆரம்பித்தான். அதைக் கண்டு இந்திரன் 'தவத்தால் உனக்கு ஸமானமானவர் இருக்கிறரா?' என்று கேட்க, யயாதி 'என்னைப் போல் உலகில் எவரும் தவம் செய்ததில்லை' என்று தான் செய்த தவத்தைப் புகழ்ந்து கூறினன். 'தான் செய்த தவத்தைக் கண்டு ஆச்சர்யப்பட்டால், தவம் குறைந்துவிடும்' என்பதைச் சொல்லி இந்திரன் யயாதியைக் கீழே தள்ளிவிட்டான். (பாரதம் ஆதிபர்வம் 82.)

4 ஸ்வவிஷய விருத்திகளை— தன் தேசத்தில் இருப்பவர்களை, மனுஷ்ய மாம்ஸத்தைத் தின்னும் பொருட்டு பூலோகத்திற்குப் போய் வரும்படி செய்பவர். இது பிரஹ்மாவைப்பற்றின உபாக்யானம்.

விதர்ப்பதேசாதிபனான ச்வேதன் என்பவன் ஆஹாராதிகளைத் தள்ளி கொடிய தவத்தைச்செய்து பிரஹ்மலோகம் சென்றான். அங்கு அவனுக்குக் கடும்பசியும் தாகமும் உண்டாயிற்று. 'அது ஏன்' என்று ப்ரஹ்மாவைக் கேட்க,, அதிதிபூஜை செய்யாமலும் சரீர ஸுகமொன்றையே கருதி நீ தவம் செய்தாயாதலால், பசி தாகமில்லாத என் உலகிலும் உனக்குப் பசி உண்டாயிருக்கிறது. அது நீங்குவதற்கு நீ தவம் செய்த குளத்தில் தினமும் காலையில் புஷ்டியான உன் பிணம் மிதக்கும்; அதை நீ தினம் தின்றுவருவாயாக' என்று ப்ரஹ்மா சொன்னர். பிறகு அவனுக்கு அகஸ்த்யரால் விமோசனம். (ராமாயணம் உத்தரகாண்டம் 77, 78).

5 வேலைக்காரர்கள் போல் தனக்கு பூஜை முதலான வேலைகளைச் செய்துகொண்டிருக்க வேண்டியவர்களை தான் கொடுத்த வரத்தாலேயே கர்வமடையும்படி செய்து, அவனுக்குத் துன்பம் விளைவிப்பார். இது ருத்ரனைப்பற்றிய உபாக்யானம்.

ண்டு ஆள்வாரான தேவதாந்தரங்களினுடைய ஆராதி யில் தோஷங்களையும்; 6"நமன்தமர்பாசம் விட்டால் அலைப்பூணுண்ணும் அவ்வல்லல்களை'யும்; 7"வெஞ் சொலாளரான நமன்தமர் செய்யும் வேதனைகளையும்; யீரனை தர்மபுத்ரன் கேட்டு மோஹித்து விழும்படி யான நரகஜாமத்தின்படிகளையும்; அதிக்ரூரஸஹ- அநந்த-நரகயாதநைகளையும் 8தாபத்ரயாத்யாயாதி

பலிசக்ரவர்த்தியின் புத்திரனை பாணாஸுரன் பரமசிவனைக் குறித்துக் கொடிய தவத்தைச் செய்து, அவரிடமிருந்து ஆயிரம் கைகளையும் அதிக பலத்தையும் பெற்றான். அந்த ருத்ரனையே தன் பட்டணக் காவலாளியாகவும் இருக்கச்செய்தான். பிறகு ஒரு ஸமயம் ருத்ரனை அடைந்து 'நீர் கொடுத்த ஆயிரம் கைகளும் சுமையாகவே இருக்கின்றன. இம்மூவுலகிலும் உம்மைத் தவிர ஸமமாக என்னுடன் சண்டை போடுவாரில்லை. என்னைக் கண்டு எல்லாரும் அஞ்சி ஓடுகிறார்கள்,' என்றான். (பிறகு ஸ்ரீ கிருஷ்ண னால் அவனுக்குத் தோல்வியுண்டாயிற்று.) (ஸ்ரீமத்பாகவதம் தசம ஸ்கந்தம்—62.) 6 3. 2. 10. நமன் தமர்—யமகிங்கரர்கள் பாசம் விட்டால்-பாசத்தை வீசினால், அலைப்பூணுண்ணும்-(ஆசை இங்கும், பாசம் அங்கும்) இழுப்பதால் படும், அவ்வல்லல்களையும் கோரமான கஷ்டங்களையும். 7 தி. மொ. 5. 8. 4. (வெஞ்சொலா ளர்—க்ரூரமான வார்த்தைகளையுடைய)

8 தாபத்ரயாத்யாயம்—விஷ்ணுபுராணம் ஆறாவது அம்சம் ஐந் தாவது அத்யாயம். இதில் ஒரு ஜீவனுக்கு வரும் ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்கிற மூன்று விதமான தாபங் கள் விரிவாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஆத்யாத்மிகமாவது— சரீரம் மனது இவற்றையொட்டி வரும் வியாதி, துன்பம் முதலி யன; ஆதிபௌதிகமாவது— பூதங்களினால் ஏற்படுவது; மனிதன் பசு, பக்ஷி முதலிய மற்ற ஜீவர்களால் ஒருவனுக்கு நேரும் துன்பங் கள்; ஆதிதைவிகமாவது— தைவத்தினால் உண்டாவது; உஷ்ணம், குளிர், வெள்ளம், காற்று முதலியவற்றால் ஏற்படும் கஷ்டங்கள்.

களிலே பரக்கக் கேட்டு, [9]"சுஷம் ஹ்ருஷீகேச," [10]"தெளி தொறும் நன்றும் அஞ்சுவன் நரகம் நான் அடைதல்" என்னும் திவ்யஸூக்தியாலே [11]"காற்றத்திடைப்பட்ட கலவர் மனம் போலேயும், [12]"ஆற்றங்கரை வாழ் மரம்" போலவும் [13]"இருபாடெரிகொள்ளியினுள் எறும்பு போலவும், [14]"பாம்போடு ஒரு கூரையிலே பயின்றாற் போலவும், [15]"வெள்ளத்திடைப்பட்ட நரியினம் போல வும், *ப்ரயோஜநாந்தரபரனாதல், தத்ப்ரயோஜ நனாதல், உபயஸாதாரணனாதல், கேவலப்ரயோஜநனாதல்

*ப்ரயோஜநாந்தரபரனாதல்—க.

[9]சுஷம் ஹ்ருஷீகேச ஸௌம்ய ஸம்ஸாரேஹ்ருஷீகேசாஹ்யா வஹே । பாஹி மாம் புண்டரீகாக்ஷ ந ஜாநே சரணம் பரம் ॥ (ஜிதந்தே. 8)

தேவர்களுக்குத் தலைவனே! பயங்கரமான இந்த ஸம்ஸாரத்தில், நான் அஞ்சிக் கிடக்கிறேன்; செந்தாமரைக் கண்ணனே! என்னை ரக்ஷித்தருள்வாயாக; உன்னையொழிய வேறொரு புகலை அறிகிலேன்.

[10]8. 1. 9. (நான் உனக்கு சேஷபூதன் என்கிற) ஞானம் பிறக்கப் பிறக்க, ஸம்ஸாரமாகிற நரகத்தைக் கிட்டுகையை நான் மிகவும் அஞ்சுகிறேன்.

[11]தி. மொ. 11. 8. 2. காற்றத்திடைப்பட்ட—பெருங்காற்றிலே அகப்பட்ட, கலவர்—மரக்கலத்தினுள்ளே இருப்பவர்களுடைய மனம் போலவும். [12]தி. மொ. 11-8-1

[13]தி. மொ. 11. 8. 4. இருபாடு=இரண்டு பக்கத்திலும், எரி—நெருப்புப்பற்றி எரிந்துகொண்டிருக்கிற, கொள்ளியின் உள்—கொள்ளிக் கட்டையின் உள்ளே அகப்பட்ட எறும்பு போல.

[14]தி. மொ. 11-8-3 பாம்போடு, ஒரு கூரையிலே—ஒரு வீட்டிலே, பயின்றாற்போலே—வஸித்தாற் போலவும்.

[15]தி. மொ. 11-8. 5. மஹாப்ரவாஹத்தில் அகப்பட்ட நரிக் கூட்டம் போலவும். உள்ளம் துளங்கி=மனம் தளர்ந்து.

அன்றிக்கே மோக்ஷைகஹேதுவானவன் *ஸர்வப்ராயச்சித்தமுமாய் 16இட்டபடை கற்படையாய், விஶ்வாஸஸஹிதமான ப்ரவ்ருத்தியத்நத்திலே 17"மாநுஷ்யம் ப்ராப்ய," 18"மஹதா புண்யபண்யேந," 19"கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம்" இத்யாதிகள்படியே †விலக்கற்ற விரைதலுடையனும்.

*ஸர்வப்ராயச்சித்தமுமாய்—ம.

†விலக்கத்தவிர்த்தலுடையனும்—ம.

16இட்டபடை கல்படை—கல்லினால் அஸ்திவாரம் போட்டு விட்டால், பிறகு வெகுகாலம் கழித்து கட்டடம் கட்டுவதானாலும் முன்விட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்கலாம்; செய்தவரையில் வீண் இல்லை. அது போல.

17மாநுஷ்யம் ப்ராப்ய லோகேऽஸ்மிந் மூகோ பதிர ஏவ வா ।
நாபக்ராமதி ஸம்ஸாராத் ஸ கலு ப்ரஹ்மஹா பவேத் ॥

இவ்வுலகில் மனுஷ்ய சரீரத்தை அடைந்து, ஊமை அல்லது செவிடாக இருந்தபோதிலும் கூட, ஸம்ஸாரத்தை எவன் தாண்டுவதில்லையோ (தாண்டவேண்டிய உபாயத்தைச் செய்யவில்லையோ) அவன் ப்ரஹ்மஹத்தி செய்தவனுவானல்லவோ.

18மஹதா புண்யபண்யேந க்ரீதேயம் காயநௌஸ்த்வயா ।
பாரம் து:கோததேர் கந்தும் தர யாவந்ந பித்யதே ॥
(வராஹ பு)

இந்த சரீரமென்னும் தெப்பமானது மிகுந்த புண்யமாகிற விலையினால் வாங்கப்பட்டிருக்கிறது. அது உடைவதற்கு முன்னமேயே ஸம்ஸாரமென்னும் துக்க ஸமுத்ரத்தைத் தாண்ட விரைவாயாக.

19 2. 10. 1. கிளர்— விருத்தியடைகிற, ஒளியையுடைய யௌவனம் கழிவதற்கு முன்பே.

வந்தனபோல் வருவனவும் அநந்த மாகி
மாளாத துயர்தரு வல்வினை நெருப்புக் (கு)
இந்தனமாய் எண்ணிறந்த காலம் எல்லாம்
இன்னமுமிப் பவக்குழிக்கே இழியா வண்ணம்
வெந்ததொரு குழவியைநற் குமரன் ஆக்கும்
வெறித்துளவ வித்தகனார் *விதியே கொண்டார்
பந்தனமாம் அவையனைத்தும் பாறுகைக்குப்
பழமறையின் †பதமொன்றே பயிலுவாரே.

இதி
ஸ்ரீ பரமபதஸோபாநே
சதுர்த்தம் பீதிபர்வ ||

*விதியே கொண்டு—பா.
†பரமநெறி, தர்மநெறி—பா.

கருமாலையில்வரும் கட்டங் கழிக்கும் கருத்துடையார்
ஒருமால் பெருகிய யோகின் முயன்று மதன்றியும் நம்
திருமாலடியிணை திண் சரணுமென வரித்தும்
தருமால் இனியவை தானே யெனத் தகவெண்ணு
[வரே. 10.

இப்படிப் பரிபூர்ணவிவேக-நிர்வேத-விரக்தி-பீதிகள் பிறந்தவனுடைய ஸாதநாவஸ்தோபாயவிசேஷங்களுக்கெல்லாம் [1]"எருத்துக் கொடியுடையானும் பிரமனும் இந்திரனும் *மற்றும் ஒருத்தரும் மருந்தறியாதிருக்க மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணன்," [2]"பஜஸ்வ மாம்" என்றும் [3]"மாமேகம் சரணம் வ்ரஜ" என்றும் விதித்த பேஷஜங்கள் இரண்டில், பக்தியோகம் கர்மயோகாதிகளை முன்னிட்டுக்கொண்டு மேலும் ஸஹகாரியந்தரங்களை அபேக்ஷித்து, ஆரம்பத்திலும் அந்தராயாவஸரங்களிலும் ப்ரபத்தியைக் [4]கை

[1]பெரி. தி. 5. 3. 6. (எருத்துக் கொடியுடையான் — வ்ருஷபத்வஜனான ருத்ரன். மருத்துவன் - வைத்தியன்.)

*மற்றுமொருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு மருந்தறியாதிருக்க—க.

[2]கீதை 9. 33. என்னைக்குறித்து, பக்தி செய்; அதாவது பக்தியோகத்தை அனுஷ்டிப்பாயாக.

[3]கீதை 18. 16. (செய்யவரிதான மற்ற உபாயங்களையெல்லாம் விட்டு) என்னை ஒருவனைச் சரணமாகப்பற்று.

[4]கைதொடுமானம்—உதவி. (குயவன் மண்பாண்டங்களைச் செய்யும்போது அடிக்கடி தண்ணீரைக் கையால் தொட்டு வேலைசெய்வது போல்) பக்தியோகம்அநுஷ்டிப்பவர்களுக்கு ப்ரபத்தியை ஆரம்பத்திலும் இடையிலும் அநுஷ்டிக்க வேண்டியிருக்கிறது (அந்தராயாவஸரம் - விக்னங்கள் நேரும் ஸமயம்).

தொடுமானமாகக்கொண்டு ப்ரவ்ருத்தமாய், அநுத்யாநம்
போலே [5]அவிச்சிந்நஸ்ம்ருதிஸந்தாநரூபமாய், 'த்யாயீத'
'உபாஸீத' ஶப்தங்களாலே சொல்லும்படியான
[6]வெளிச்சிறப்பையுடைத்தாய், ஶ்ரவணாதிவிஹிதஸாத்ய
மாய்க் கொண்டு ஸாகாரார்த்தாநந்தகுணகோசரங்களி
லே அநந்தம் அநந்தவிதமாக்க வளர்ந்து வருவதாய்,
அதிஶ்ரத்தாலப்யமாய் இருக்கும். இது [7]"நாநா ஶப்தாதி
பேதாத்" என்கிறபடியே அனேகவிதமாயிருக்கும்.
இவற்றில் அநந்யப்ரயோஜநனுக்கு ஸங்கோசாவகாஶமில்
லாமையாலே யதேஷ்டம் விகல்பம். [8]"நாஹம் த்யக்ஷ்யே
கோவிந்தாதந்யமாராதயாமி ஶக்ர:" என்கிறபடியே அவனை
யல்லால் [9]'மற்றொரு தெய்வம் தொழாதே' [10]"ப்ராண

---

[5] அவிச்சின்ன - இடைவிடாத, ஸ்மிருதிஸந்தான - நினைவின் தொடர்ச்சி.

[6] வெளிச் சிறப்பு - ஞானத்தின் தெளிவு அல்லது ப்ரகாசம்.

[7] ஶாரீ. ஸூ. 3. 3. 56. சப்தம் முதலியவை வேறுவேறாக இருப்பதால், ப்ரஹ்மவித்யைகள் வேறு வேறு.

[8] வி. தர்மம் 2. 28. அமபரீஷோபாக்யானம். ஸ காமம் ப்ரஹர வா மா வா வஜ்ரம் வாஸவ என்று முன் பாதி (ஏ இந்திரா! நீ வஜ்ரத்தினால் என்னை அடித்தாலும் ஸரி, அடிக்காவிட்டாலும் ஸரி.) நான் கோவிந்தனைத் தவிர வேறொருவரை ஆராதிப்பதில்லை.

[9] 4. 6. 10.

[10] "த்ரவந்தி தைத்யா: ப்ரணமந்தி தேவதா: நஶ்யந்தி ரக்ஷாம்ஸி அபயாந்தி சாரய: । யத்கீர்த்தநாத் ஸோऽத்புதரூபகேஸரீ மமாஸ்து மாங்கல்யவிவ்ருத்தயே ஹரி: ॥

வி. தர்மம் 43-28. (மாங்கல்யஸ்தவம்)

எவருடைய பெயரைச் சொன்னமாத்திரத்திலேயே அஸுரர்கள் ஓடிவிடுகிறார்களோ, தேவதைகளெல்லாம் வணங்குகிறார்களோ,

ரந்தி தேவதா:” என்னும்படியே அவர்கள் தொழ நிற்குமவன் அநந்யஸக்தன். ப்ரயோஜநாந்தரபரனுடைய ஸம்பந்தம் கணிகாதாம்பத்யம்; அநந்ய ப்ரயோஜநனுடைய ஸம்பந்தம் பதிவ்ரதாதாம்பத்யம். [11]‘ஆத்மகுணங்கள் இல்லாதவனுக்கு ஸம்ஸ்காரங்களெல்லாமுண்டானாலும் முக்தியில்லை’ என்றும், ‘ஆத்மகுணவத்தை உடையவன் ஸம்ஸ்காரங்களில் பெற்றதுகொண்டு முக்தனும்’ என்றும் கௌதம ரிஷிகள்சொன்ன குணங்களில் [12]“மயி சாநந்யயோகேந

ராக்ஷஸர்கள் மறைகிறார்களோ, சத்ருக்கள் விலகிப்போகிறார்களோ, அப்பேர்ப்பட்ட ஆச்சர்யமான (ஸிம்மரூபியான ஹரி) நரஸிம்ஹ ரூபியான பகவான் என்னுடைய மங்களங்களின் அபிவிருத்தியின் பொருட்டு ஆகட்டும் (மங்களாபிவிருத்தியைச் செய்யட்டும்.)

[10]‘ப்ரணமந்தி தேவா:’ என்னும்படியே அவர்கள் தொழா நிற்குமிவன்—க.

[11]ஆத்மகுணங்கள்— “தயா ஸர்வபூதேஷு க்ஷாந்திரநஸூயா ஶௌசமநாயாஸோ மங்களமகார்பண்யமஸ்ப்ருஹா இதி அஷ்டா ஆத்மகுணா:”

(கௌதம தர்மஸூத்ரம் முதல் ப்ரச்னம்)

ஸர்வபூததயை, பொறுமை, அஸூயையின்மை, சுத்தி, மனச்சோர்வின்மை, சுபமான எண்ணம் வார்த்தை செயல், தைன்யமற்றமை, பேராசையில்லாமை என்ற இவை எட்டும் ஆத்மகுணங்கள்.

ஸம்ஸ்காரங்கள்— ப்ராஹ்மணஜாதியில் பிறக்கும் ஒருவனுக்கு இருக்கவேண்டிய கர்ப்பாதானம், பும்ஸவனம், முதலான 48 ஸம்ஸ்காரங்கள்.

[12]கீதை 13. 10. ஸர்வேச்வரனை என்னிடத்தில் வேறொருவரோடு ஸம்பந்தப்படாமையினால் வ்யபிசாரமில்லாத (அதாவது ஸ்திரமான பக்தி.)

த்ரவஹ்நிவாரிணீ' என்கிற ஸர்வஸாக்ஷிஸ்வாமிநீயதா ஹேதுபூதவிசேஷம் ஶ்ரேஷ்டம்.

இப்படி ஸவிஸ்தரமான பக்தியோகத்தில் அன்வயிக்கைக்கீடான வித்யாஶக்த்யாதிஞாநஸாமர்த்யாதிகளின்றிக்கே [13]"நின்னருளே புரிந்திருந்தேன்," [14]"துணியேன் இனி நின்னருளல்லது எனக்கு," [15]"உன் திருவருளன்றிக் காப்பரிதால்" என்றிருக்கும் அதிகாரிக்கு அநந்யஸாத்யமான ஶரணவரணம் [16]ஆநுகூல்யஸங்கல்பாதிபஞ்சாங்கயுக்தமாய் [17]"அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே"

[13]பெரி. தி. 5. 4. 1. (உன் கிருபையையே விரும்பி எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன்.

[14]தி. மொ. 11. 8. 8. (உன்னுடைய க்ருபையல்லது மற்றொன்றை எனக்கு (தஞ்சமாக) நிச்சயிக்கமாட்டேன்),

[15]தி. வி. 62. உம் நிருபாதிகையான கிருபையாலன்றி ரக்ஷிக்கை சக்யமன்று.

[16]பகவானுக்கு அநுகூலமாக இருப்பேன் என்னும் ஸங்கல்பம், ப்ராதிகூல்யத்தைத் தவிர்தல், நாம் பிரார்த்தித்தால் இதற்குப் பின் நம்முடைய ப்ரயத்னத்தை அபேக்ஷியாமல் ஈச்வரன் நம்மை ரக்ஷிப்பான் என்கிற த்ருடமான நம்பிக்கை (மஹா விச்வாஸம்), நீ ரக்ஷகனாக இருக்கவேண்டும் என்று வேண்டுவது, தன் அசக்தியை நினைத்துக் கொள்வது என்ற ஐந்தும் ப்ரபத்திக்கு அங்கங்கள். ஆத்மாவை ஸமர்ப்பிப்பது என்பதே அங்கி.

[17]அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிஶ்வாஸபூர்வகம்।
ததேகோபாயதா யாச்ஞா ப்ரபத்தி: ஶரணாகதி: ॥

(பரதமுனியின் லக்ஷணவாக்யம்)

(தன்னுடைய விருப்பம் வேறொன்றினால் ஸாதிக்க முடியாத போது, மஹாவிச்வாஸத்தோடு 'அவன் ஒருவனே உபாயமாக வேண்டும்' என்று யாசிப்பது ப்ரபத்தி; அதுதான் சரணாகதி என்பதும்.)

ஐதிஹ்யாதிகள்படியே ஸ்ரீமந்நாதவக்ஷஸ்ஸந்ந்யாஸ ஸுகரமாயிருக்கும். ஸ்வதந்த்ரனுடைய *ஸந்ந்யாஸத்திற்கு அவ்விஷயத்தில் ஸம்பந்தவிஶேஷமில்லை; ஸர்வஶக்தியினுடைய ஸங்கல்பத்திற்கு அவாந்தரவ்யாபாராபேக்ஷா நியமமில்லை; இரண்டும் இப்படி ஸக்ருத்தாயிருக்கும். ஆசார்யனாலே தன்னை ந்யஸிப்பிக்கை அறிந்த ஶிஷ்யன் தான் ந்யாஸம்பண்ணான். இவனுக்குப் மத்யத்தில் ஸம்ஶயாதிகள் வந்தாலும், ஆசார்யனுடைய ந்யாஸம் ஸம்ஶயவிநாஶகம். அவன் தனக்காகப் பண்ணின பரந்யாஸம் தனக்குப் ஹிதமல்லாத போது பரந்யாஸம் பண்ணினால் பூர்வபரந்யாஸம் பலித்தேவிடும்; †பின்பிலது மிகுதியான ஸாஸ்த்ரத்தின் படியாம்.

உயர்ந்த [18]திடர்க்கு அடைத்து ஏற்றலாம்படி, தாழ்ச்சியுடைய விஷயத்தில் தானே ப்ரவஹிக்கும்படியான க்ருபாப்ரவாஹத்தாலே ஸர்வஶேஷி [19]தன் கூறாகவும், தன் பேறாகவும் மேலுள்ள நன்மைகளையெல்லாம் விளைக்கும். இந்தப் ஸூக்தி [20]"தாவதார்த்தி:"

*பரந்யாஸத்திற்கும்—க. †பின்பிலிது—க.

18. திடர் = மேட்டு நிலம்.

19. தன் கூறு = தன் பாகம், தான் செய்யவேண்டிய கார்யம்; தன் பேறு = தன் ப்ரயோஜனம்.

20. தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததா(அ)ஸுகம்।
யாவந்ந யாதி ஶரணம் த்வாமஶேஷாகநாஶநம் ॥
(வி பு. 1. 9 73.)

(ஸகல பாபங்களையும் போக்கடிக்கும் உம்மை சரணமடையாதவரையில்தான் ஒருவனுக்கு இழந்த செல்வத்தை அடைய ஆசையும், புதிய ஐச்வர்யத்தில் ஆசையும், ஆத்மஸ்வரூபத்தை அநுபவிக்காமையும், பகவதநுபவமின்மையும்; உம்மை சரணமடைந்தால் இவையெல்லாம் கிடைக்கும்.)

ஜதாதிகள்படியே அஜ்ஞமாயும் ஸுகரமாயும் நின்று ஸகலஸுலபமாகையாலும், அவிசேஷிதஸிக்குக் [21]கைமுதல் அற்று ப்ரணவாதிவரிஜ்ஞாநமுடையாரெல்லாருக்கும் அதிகரிக்கலாமாகையாலும் தன்னளம் போலே தேசகாலாதிநியமமில்லாமையாலும், ஸவிசிஷ்டமாக ஸக்ருத்கர்த்தவ்யமாகையாலும், ஸாத்யமாகையாலும், [22] "உபாய ஸாத்யஸாத்யாயம் உக்தஸ் ச ஶுதா ஸ" என்னும்படியான வ்யவஸாயமஹத்வத்தை உடைத்தாகையாலும் *ப்ரஹ்மாஸ்த்ரதுல்யமாகையாலும், [23]யஜ்ஞாதிஸாத்யங்களைப் போலே நாஶ்வதிகமாமல்லாமையாலும் [24]ப்ரணவாவநிஷத்துக்களுக்கெல்லாம் ப்ரிதாஸக்ஷணம் என்னும்படி மேலாய் நிற்கையாலும், இதின் ப்ரபாவம்

*ப்ரஹ்மாஸ்த்ரதுல்யதையாலும்—க.

[21]கைமுதல்=ஸாதனம்.

[22]உபாய ஸாத்யஸாத்யாயம் உக்தஸ் ச ஶுதா ஸ ।
ப்ரிஷே நிஷேவ்யதே வொர்யகாமதவே தவெ॥

(ல. த. 17. 104.) இந்தப் பிரபத்தி என்னும் உபாயம் சில விதத்தில் சுலபமானதும் (மஹாவிச்வாஸம் செய்யவேண்டியிருப்பதால்) ஒருவிதத்தில் கஷ்டமானதென்றும் என் அபிப்ராயம். இதுதான் பிரயோஜநங்களால் அடிபடாத மனதையுடைய பெரியோர்களால் அனுஷ்டிக்கப்படுகிறது.

[23]யஜ்ஞாஃ ந்ருதேந க்ஷரதி தவஃ க்ஷரதி விஸ்மயாத் !
ஆயுர்விப்ராவவாதேந தாநம் ச பரிகீர்த்தநாத் ॥

[24]ப்ரரண்யோபநிஷத்துக்கள்— ஸர்வரக்ஷகனை ஸ்ரீ கிருஷ்ணனால் அருளிச் செய்யப்பட்ட உபநிஷத்துக்கள், அதாவது ஸ்ரீ பகவத்கீதை.

25"ஸத்கர்மநிரதா:" இத்யாதிகளாலே பரக்கப் பேசப்பட்டது.

மற்றுள்ள ஶாஸ்த்ரார்த்தங்கள் போலே 26அதிகாரி க்ருத்யமான ந்யாஸத்தில் சிலருடைய 27அதிகாரி

25 ஸத்கர்மநிரதா: ஶுத்தா: ஸாங்க்யயோகவிதஸ்ததா ।
நார்ஹந்தி ஶரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி ॥

(லக்ஷ்மீதந்த்ரம் 17—62) கர்மயோகத்தைச் செய்பவர்களும், ஞானயோகம், பக்தியோகம் இவற்றை அனுஷ்டிப்பவர்களும், சரணாகதி செய்தவனுடைய கோடியில் ஒரு பாகத்திற்கும் தகுதியுள்ளவர்களல்ல (சரணாகதன் பெருமை அதிகம் என்று கருத்து).

26அதிகாரிக்ருத்யம்—ஒரு பலத்தை விரும்பி அதன் ஸாதனத்தை அநுஷ்டிப்பவன் அதிகாரி; அவனனுஷ்டிப்பதே அதிகாரிக்ருத்யம். உதாஹரணமாக, ஸ்வர்க்கத்தைவிரும்பி யாகத்தைச் செய்பவன் அதிகாரி; அவனுடைய யாகாநுஷ்டானமே அதிகாரிக்ருத்யம்.

27அதிகாரிவிசேஷணம்—யாகத்தைப் போல் ஒரு அதிகாரியானவன் செய்து ஸம்பாதிக்கவேண்டியிராமல், அவனிடம் ஏற்கனவே ஸித்தமாய் விசேஷணமாக இருப்பது; உதாஹரணமாக யாகத்தை அநுஷ்டிக்கும் ப்ராஹ்மணனிடம் இருக்கும் ப்ராஹ்மண்யம் என்னும் தன்மை. இது இவனிடம் பிறவிமுதலே இருக்கிறபடியால், இதை ஒருவன் தான் புதிதாகச் செய்துகொள்ளவேண்டியதில்லை.

சிலர் ப்ரபத்தியை ஒரு அதிகாரி செய்யவேண்டிய கார்யம் இல்லை என்றும், ஏற்கனவே அவனிடம் இருக்கும் அதிகாரிவிசேஷணம் என்றும் சொல்லுவதற்கு, ஸ்வர்க்கத்திற்கு யாகம் ஸாதநமாயிருப்பதுபோல, மோக்ஷத்திற்குப் பிரபத்தி பிரதான ஸாதனமில்லை, அப்பிரதானோபாயம் என்று கருத்து.

அப்பிரதானோபாயமான ப்ரபத்தி ஸாத்யோபாயம் (=ஒருவன் அனுஷ்டிக்கவேண்டியதான உபாயம்); ஒருவன் அனுஷ்டிக்கவேண்டாமல் ஏற்கனவே ஸித்தமாயிருக்கும் உபாயமான ஈச்ரவன் ஸித்தோபாயம்.

விஶேஷணாதி ஸந்தேஶம் ஸித்தோபாயத்யாகாநு பவம். [28] ஶ்ருதியில் ந்யாஸ ப்ரஹ்மணஸ்ஸமாநாதி கரணமும் அநுபவம். 'ஸமஸ்த ந்யாஸ ப்ரவிஷ்டஸ்ய னுக்கு ஸமஸ்தவிஹிதமில்லாத விஷயத்தில் பக்தியும் ப்ரபத்தியும் கைங்கர்யமும் ஸ்வரூபவிருத்தம்' என்னாயிருக்க, பக்தியோகத்தை விசேஷித்து ஸ்வரூபவிருத்தம் என்றவர்களுக்கு அதிகாரிவிஶேஷஸ்ய பரவிரோதத்திலே தாத்பர்யம். தேஶகாலாதிகாரயோகாதி ஹேதுத்தாலே ஶாஸ்த்ரார்த்தாதிகளும் ப்ராயஶ்சித்தாதிகள் எல்லாவற்றிலும் ப்ரஸித்தம்.

இப்படி யதாதிகாரம் ஸர்வபாபப்ராயஶ்சித்தமாக விதித்த பக்திப்ரபத்திகளில் ஒரு வழியிலே இழிந்தவனுக்கு அப்போதே உத்தரபூர்வாகாஶ்லேஷ விநாஶங்கள் உண்டாம். உத்தராகாஶ்லேஷம் ப்ராமாதிக விஷயம். விவேகாதிபூர்த்தியுடையாருக்கு புத்தி

[28] ந்யாஸ இதி ப்ரஹ்மா (தை. உப. 49.) ந்யாஸவித்யை என்னும் சரணாகதியே பரமதர்மம் என்று ஸர்வோத்க்ருஷ்டனான ப்ரஹ்மா என்னுகிறார்.

ந்யாஸ இத்யாஹுர்மநீஷிணோ ப்ரஹ்மாணம் தை. உப.

அந்தர்யாமிபர்யந்தமான ப்ரஹ்மா ந்யாஸவித்யையால் அடையத் தக்கவனாகையால், வித்வான்கள் ப்ரஹ்மாவையே 'ந்யாஸம்' என்று சொல்லுகிறார்கள். (கார்யத்தில் காரணோபசாரம்.)

பூர்வாகம்—ப்ரபத்திசெய்வதற்கு முன் செய்த பாபங்கள்; உத்தராகம்—அதற்குப் பின் செய்யப்பட்டவை

அஶ்லேஷம்—ஒட்டாமை. ப்ராமாதிகம்—புத்திபூர்வமாகச் செய்யாதது.

ஸத்வோத்தரராய் ஸந்நாஹத்தில் புகாது; ரஜஸ்தமஸ்ஸுக்களுக்கு மின்னொளி போலே தோற்றிப் ப்ராயச்சித்தாதமாய் மறையும். ராமாதிகளிடமுடையாருக்கு ஸிக்ஷாவிசேஷங்களாலே *பிரிதலுண்டாம். ஸத்வோத்தர விநாசம் ப்ராரப்தத்தின் விஷயம். ஸ்வதந்த்ர ப்ரவ்ருத்திநிஷ்டனை †செய்த வேள்வியனுக்குப் ப்ராரப்தகாலமான கலியுகத்திலும் ஆதியின் அளவுக்கிடாக தேஹாந்தராதிஹேதுவான அம்சம் கழியும். 29"யஸ்ய ப்ரஸாதே ஸகலா:" 30"ப்ரஸந்நஸலக்ஷ தஸ்மிந்" இத்யாதிகளின்படியே இவனளவில் ஸகலரானவர்களெல்லாரும் ஸுப்ரஸந்நராவார்கள். 'ஸம்வத்ஸரம் க்ருஹீதனுக்கு யஜ்ஞாதிகள் இல்லை' என்னு

*பிரித்தலுண்டாம்—க. †செய்தவேள்வியனானவனுக்கு—க.

†5. 7. 5. செய்யப்பட்ட தங்கள் கடமையையுடையவர்கள்; அதாவது க்ருதக்ருத்யர்கள்.

29யஸ்ய ப்ரஸாதே ஸததம் ப்ரஸீதேயுரிமா: ப்ரஜா: ॥
ஸ ராமோ வாநரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாங்க்ஷதே ॥
எவருடைய அனுக்ரஹமிருக்கும்போது இந்த ஸகலப் பிரஜைகளும் ஸந்தோஷத்தை அடையுமோ, அப்பேர்ப்பட்ட ராமன் (தன்னால் அநுக்ரஹிக்கப்படுமவருள் ஒருவரான வாநரராஜனின் அநுக்ரஹத்தை எதிர்பார்த்து நிற்கிறார்.)

30ப்ரஸந்நஸலக்ஷ தஸ்மிந் ப்ரஸந்நாய மராமரம் ।
ப்ரஸந்நே தேவதேவேசே கேசவே ஸக்தவத்ஸலே ॥
தேவதேவனும் பக்தர்களிடம் பிரியமுள்ளவனுமான கேசவன் அவனிடத்தில் ப்ரஸந்நமாயிருக்கும்போது, தெளிந்த மனமுடைய அவனிடத்தில் ஸகல சராசரங்களும் ப்ரஸந்நமாக ஆயின.

மிடம் 31"பரிஹர மதுஸூதநப்ரபந்நாந்," 32"தேவம் சார்ங்கதரம் விஷ்ணும்", 33"நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை," 34"நமன் கூறு செய்துகொண்டிறந்த குற்றமெண்ண வல்லனே" 35"நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள்

31ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம்
வததி யம: கில தஸ்ய கர்ணமூலே ।
பரிஹர மதுஸூதநப்ரபந்நாந்
ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் ॥

கையில் பாசத்தை ஏந்திய தன் தூதனைப் பார்த்து யமன் அவன் காதோடு (ரஹஸ்யமாகச்) சொல்லுகிறான், 'பகவானை ஆச்ரயித்தவர்கள் பக்கம் செல்லாதே; நான் மற்ற மனிதர்களுக்கு ஸ்வாமியேயொழிய, வைஷ்ணவர்களுக்கு அல்ல' என்று.

32தேவம் சார்ங்கதரம் விஷ்ணும் யே ப்ரபந்நா: பராயணம் ।
ந தேஷாம் யமஸாலோக்யம் ந ச தே நரகௌகஸ: ॥

சார்ங்கவில்லைத் தரித்தவரும், எல்லோருக்கும் சிறந்த பயனும் தேவனுமான விஷ்ணுவை எவர் சரணமடைந்திருக்கிறார்களோ அவர்களுக்கு யமனிருக்கும் உலகத்தில் இருப்புமில்லை, நரகவாஸமும் கிடையாது.

335. 2. 1. நலியும் = துன்புறுத்தும், நரகமும், நைந்த = நிலை கெட்டது; யமனுக்கும் இப்பூவுலகில் ஒரு வேலையுமில்லை.

34தி. ச. வி. 116. நமன் = யமன், கூறுசெய்துகொண்டு = பெருமாளோடு கூடின என்னைப் பிரித்து, இறந்த குற்றம் = கழிந்த பாபத்தை, எண்ண வல்லனே = எண்ண சக்தியுடையவனோ?

35திருமாலை 1. நமன்தமர் தலைகள்மீதே = யமனுடையவும் யமகிங்கரர்களுடையவும் தலைகள் மீது, நாவலிட்டு = 'நாவல்' என்று ஜயித்தார் சொல்லும் சப்தத்தைக் கூறிக்கொண்டு, உழிதருகின்றோம் = ஸஞ்சரிக்கிறோம்.

மீதே," [36]"நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி" இத்யாதிகளாலே அறியலாம். ஆகையால் இப்படி நிஷ்ஸம்ஶயனான இவன் [37]"ஆள்கின்றான் ஆழியான் ஆரால் குறைவுடையம்," [38]"எத்தினால் இடர்க் கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே," [39]"திருமால் தலைக் கொண்ட நங்கட்கெங்கே வரும் தீவினையே" இத்யாதிகளின்படியே நிரபேக்ஷனாய், நிர்ப்பரனாய், ‡நிர்ப்பயனும். மங்கும் அவஸ்தையில்லாதபோது மடலூரும்

---

‡நிர்ப்பயனும். அங்கும் அவ்வவஸ்தையில்லாதபோது—க.

நிர்ப்பயனாய் நிஸ்ஸம்சயனுமாம்—ம.

மங்கும் அவஸ்தையில்லாதபோது=பகவானைவிட்டுப் பிரிவினால் உண்டான தளர்ச்சி அதிகமாய், அதனால் மூர்ச்சித்துக் கிடக்கும் நிலைமையில்லாதபோது, மடலூருமவஸ்தையாய்=வழியல்லாவழியாலாவது அடைய விரும்பி மடல் எடுத்து, பகவானை நிர்ப்பந்தப்படுத்திப் பெறும் நிலைமையாய்; இப்படி ஸ்ரீ வைகுண்டத்தைக் காண்பதற்கு நெஞ்சு ஒரே மாதிரியாக எண்ணிக்கொண்டே இருக்கும்.

[36]திருமாலை 12. நரகமே=(யமனும் முத்கலனும் பகவந்நாமத்தைப்பற்றிப் பேச, அப்போது நரகத்திலுள்ளவர்கள் அதைக் கேட்க அத்தாலே) அந்த நரகமே, சுவர்க்கமாகும்=போக பூமியாக நினைக்கத்தக்க, நாமங்களுடைய=திருநாமங்களையுடைய, நம்பி=பரிபூர்ணனே.

[37]10. 4. 3. ஆழியான்=திருவாழியைக் கையில் கொண்ட ஸர்வேச்வரன், ஆள்கின்றான்=விரோதிகளைப் போக்கி ரக்ஷிக்கிறான். ஆரால் குறைவுடையம்=ஒருவராலும் ஒரு குறையையுடையோமல்லோம்.

[38]தி. ச. வி. 115. ஏழை நெஞ்சமே=அறிவற்ற நெஞ்சே! (ஸர்வேச்வரன் தன் மேன்மை பாராதே தாழநின்று உபகரிக்குமவனாயிருக்க) எத்தினால்=எதனாலே, இடர்க்கடல்=துக்க ஸாகரத்திலே, கிடத்தி=கிடக்கிறாய்.

[39]தி. வி. 88. திருமால்=சிறந்த ஸம்பத்துப் போன்ற பகவானிடத்தில் மோஹமென்னும் பக்தியின், தலைக்கொண்ட=மேலெல்லையிலிருக்கிற, நங்கட்கு=எங்களுக்கு, தீவினை எங்கே வரும்=(பழி முதலிய) பாபங்கள் எங்கே வரும்.

அவஸ்தையாய், [40]மாக வைகுந்தம் காண்பதற்கு மனம் ஏகம் எண்ணியிருக்கும்.

முன் செய்த வினைத்திரளில் முளைத்த தன்றி
மற்றுள்ள முதலரிந்து முளைத்த கூற்றில்
தன் செய்ய திருவருளால் இசைவு பார்த்துத்
தழல் சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்துப்
பின் செய்யும் வினையில் நினைவொன்றா தொன்றும்
பிழைபொறுத்து வேறுளது விரகால் மாற்றும்
என்செய்ய தாமரைக்கட் பெருமான் எண்ணம்
எண்ணாதார் எட்டிரண்டும் எண்ணாதாரே. 11.

ஶ்ரீபரமபதஸோபாநே
பஞ்சமம் ப்ரஸாதநபர்வ ||

[40] 9.3.7.

உறையிட்டவாளென ஊனுளுறைகின்ற யோகிகளை*
†நறுமட்டொழிவற்ற நற்றுளவேந்திய நாயகனார்
திறைமட்டிலாத நெடும்பயன்காட்ட நினைத்துடலச்
சிறைவெட்டி வழிப்படுத்தும் வகை செப்புவமே. 12.

இப்படி முன்பு பண்ணின ஸம்ஸர்க்கங்களுக்கெல்லாம் தத்த்வாதிகாராநுகுணமாக ப்ரவத்த்யாதிப்ராயஸ்சித்தம் பண்ணி. மேல் ஸம்ஸர்க்கங்களில் முயலாதபடி [1]'உள்ளம் உரை செயல் உள்ள இம்மூன்றையும் உள்ளிக் கெடுத்து' [2]'குன்றமெடுத்த பிரானடியாரொடும் ஒன்றி நின்று, [3]'நாட்டாரோடு இயல்வொழிந்து,' ஸூரி ஸுலபமான பரிபூர்ணாநுபவம் பெறுமையாலே, வாய்க் கட்டுண்டு திருப்பாற்கடலிலே முழுகினவனைப் போலே, தன் ஸ்வவிஷயையைக் கண்டு [4]'இரக்கமனத்

*யோ —வ. †நறுமட்டெழிவற்ற—வ.

[1] 1. 2. 8. உள்ளம் உரை செயல்=மனது, வாக்கு, காயம் ஆகிய, உள்ள=(நம்மிடமே) யிருக்கும், இம் மூன்றையும், உள்ளி=(இவற்றின்பிரயோஜனத்தை) ஆராய்ந்து, கெடுத்து= (மற்ற விஷயங்களில் செல்வதைத்) தவிர்த்து.

[2] 7. 4. 11. கோவர்த்தன பர்வதத்தைத்தூக்கி உபகாரம் செய்த கிருஷ்ணனுடைய அடியாரோடு, ஒன்றி நின்று=ஒன்றாய்க் கலந்து நின்று.

[3] 10. 6. 2. நாட்டாரோடு=(அந்நபாநாதிகளை விரும்பி ஓடும்) ஸாமாந்ய ஜநங்களோடு, இயல்வு=ஸஹவாஸத்தை, ஒழிந்து= விட்டு.

[4] 2. 4. 3. இரக்கமனத்தோடு= (துக்கத்தினால்) தளர்ந்த நெஞ்சோடு, எரியணை=அக்நிக்கு ஸமீபத்தில் இருக்கும் அரக்கும், மெழுகும், ஒத்து=போல் இருந்து; அவைபோல் உருகி என்றபடி.

தோடு எரியணை அரக்குமெழுகுமொத்து' [5]கரியநாழிகை ஊழியில் பெரியதாய், [6]'கங்குலும் பகலும் கண்துயில் அறியாதே' [7]'என் சொல்லி உய்வன் இங்கு அவனை விட்டு' என்னும்படி ஸம்ஸாரத்தில் *அடிதரியாதே, [8]'மருளொழி' [9]'மங்கவொட்டு உன் மாமாயை' [10]'மாயம் செய்யேல்' என்று வளைத்து, ஸ்ரீவந்திவாக்யார்ணவமே ஸ்ரீஸாந்த்யஜ்வநாசமாம்படி [11]'அவாவற்று வீடுபெறும்' அதிகாரிக்கு [12]'வைத்தநாள் வரை எல்லை குறுகி' யொமஸாஸ்த்ரங்களில் சொல்லும் †ஆயாஸவஸாநலிங்கங்களாலும் அதிஸந்தோஷத்தையுண்டாக்கி [13]'ஒன்பதுவாசல் தானுடைக் குரம்பை

---

*அடிதெரியாதே—க. (தரியாதே=ஸம்ஸாரதுக்கம் பொறுக்கமாட்டாமையால் அடிதரிக்கவில்லை.)

†ஆயுரவஸாநங்களாலும்—க.

5 தி. மொ. 8. 5. 6. கரிய=கொடிய (அல்லது கறுத்த ராத்ரியின்), நாழிகையானது, ஊழியில்=கல்பகாலங்களைக் காட்டிலும் பெரியதாய்.

6 7. 2. 1. இரவும் பகலும் (ஒரு ஸமயத்திலாவது) கண்கள் துயிலவேண்டுமென்று அறியாள்.

7 9. 9. 10. இவ்வுலகில் (ஹிம்ஸிக்கும் பொருள்களுக்கு நடுவே இருந்து) அவனையொழிய, எதைச் சொல்லி உஜ்ஜீவிப்பேன்.?

8 10. 6. 1. அஜ்ஞாநத்தை விடு.

9 10. 7. 10. உன் மாமாயை-உன்னுடைய ஆச்சர்யமான இந்த ப்ரக்ருதியை (சரீரத்தை), மங்கவொட்டு - நசிக்கும்படி செய்.

10 10. 10. 2.

11 10. 10. 11. (ஆசைகள் தீர்ந்து மோக்ஷத்தைப் பெறும்.)

12 3. 3. 10. வைத்த - ஈச்வரன் நியமித்துவைத்த, நாள்வரை - ஆயுஸ்ஸினுடைய முடிவான, எல்லை குறுகி - எல்லை அணுகி.

13 தி. மொ. 1. 6. 9. நவத்வாரங்களையுடையதான இந்த சரீரத்தை விட்டுப்பிரியும் காலத்தில். (குரம்பை - சிறுகுடில், சரீரம்.)

பிரியும்போது’ உத்தராயணம், தக்ஷிணாயநம், பூர்வ பக்ஷம், அபரபக்ஷம், பகல், இரவு, வ்ருத்திஹ்ராஸ தேஶவிஶேஷ நிமித்தவிஶேஷங்கள் என்கிற வாசியறச் [14]‘சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம், மரணமானால்’ [15]‘இருள்தருமா ஞாலத்துள் இனிப்பிறவி வேண்டாதபடி’ [14]‘வைகுந்தம் கொடுக்கும்பிரான், இவனுக்கு அடியிலே ஸுஹ்ருத்விநாஶவஸ்துதேஶவிஷயங்களாய்க்கொண்டு, மாற நினைப்பிட்டுக் கிடந்த உத்க்ருஷ்டாபக்ருஷ்டவர்ணாவாவங்களை மாற்றி, [16]“ப்ரியேஷு ஸ்வேஷு ஸுக்ருதம் அப்ரியேஷு ச துஷ்க்ருதம்” இத்யாதிகளின்படியே [17]“நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்

---

[14] 9. 10. 5. தனதாள் அடைந்தார்க்கெல்லாம் - தன் திருவடிகளையே உபாயமாகப் பற்றினார்க்கெல்லாம், சரணமாகும் - ரக்ஷகனாகும்; மரணமானால் - அவர்கள் இறந்ததுமே, வைகுந்தம் கொடுக்கும் பிரான் - பரமபதத்தைக் கொடுக்கும் உபகாரகன்.

[15] 10. 6. 1. இருள் தரும் - இருக்க இருக்க அஜ்ஞானத்தையே தருகிற, மாஞாலத்துள் - பெரியதான ஸம்ஸாரத்தில், இனியும் ஓர் பிறவி வேண்டாதபடி.

[16] ‘விஸ்ருஜ்ய த்யாநயோகேந ப்ரஹ்மாப்யேதி ஸநாதநம்’ என்று உத்தரார்த்தம்,

(மனு 6. 79) தனக்குப் பிரியமானவர்களிடத்தில் தன் புண்யத்தையும், தன்னை த்வேஷித்தவர்களிடத்தில் தன்பாபத்தையும் விட்டு விட்டு, பக்தியோகத்தின் பலனாக, நித்யமான பரப்ரஹ்மத்தை அடைகிறான்.

[17] பெரி. 5. 4. 3. இவ்வுலகிலுள்ள பாபங்களெல்லாம் (சும்மெனாதே - ‘சும்’ என்ற சப்தத்தைக்கூடச் செய்யாமல்) மூச்சு விடாதே முன்பிருந்தவிடத்தைக் கைவிட்டு ‘தொடர்கிறார்களோ’ என்று பயந்து ஓடி, தூறுகள் பாய்ந்தனவே - புதரிலேபோய் விழுந்து ஒளிந்தன.

(தூறு - பகவத்கிருபை போகாத இடம்; இங்கு ஸம்ஸாரிகள்)

மெனுதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே" என்னும்படி அநுகூல ப்ரதிகூலருடைய *ஆநுகூல்ய-ப்ராதிகூல்யங்களுக்குப் ஸமமாகக் கொடுத்து, [18]"சாமிடத்து என்னைக் குறிக்கொள் கண்டாய்," [18]"அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்" †என்றவன் கர்மவிசேஷத்தாலே [19]"யம் யோகிநஃ ப்ராணவியோககாலே யத்நேந சித்தே விநிவேசயந்தி"

*ஆநுகூல்யப் பிராதிகூல்யங்களுக்கும் பலம் கொடுத்து—க.

†அவன் கர்ம விசேஷத்தாலே—க. என்னும் இவன்—வ.

(என்ற ப்ரபந்நன், செய்த ப்ரபத்தி என்னும் உபாயத்தின் பெருமையாலே.)

[18]பெரி. தி: 4. 10. 2; 4. 10. 1. மரணம் அடையும் ஸமயத்தில் (உன்னை நினைக்கமுடியாதவனான) என்னை நீ திருவுள்ளம்பற்றி அருளவேணும். அப்போதைக்கு - சக்தியில்லாமலிருக்கும் மரணதசையில் ரக்ஷிப்பதற்காக, இப்போதே - (சரீரம் இந்திரியம் முதலியவை இளைப்பற்றுத் தெளிந்திருக்கிற) இப்போதே, சொல்லிவைத்தேன்.

[19]பார. சா. 46. 139. 'ஸ தம் வ்யாஸக்த ஹ்ருஷீகேசக்ஷண: ப்ராணாந் ஜஹௌ ப்ராக்ஞோ ஹரிம் வீக்ஷந்' என்று உத்தரார்த்தம்.

உயிரைவிடும் காலத்தில் யோகிகளெல்லாம் மிகுந்த ப்ரயத்னத்தால் எந்த பரமாத்மாவை மனதில் தியானம் செய்கிறார்களோ, (தம் எதிரில் இருந்த அவரைக் கண்களால் பார்த்துக்கொண்டே பீஷ்மர் உயிரைவிட்டார். பெறாப் பேற்றைப் பெற்றவரல்லவோ பீஷ்மர்.)

என்னுமவஸ்தை இல்லையாய், [20]'காஷ்டபாஷாணஸந்நிப'னாய்க் கிடக்கிலும் [20]"அஹம் ஸ்மராமி" என்கிறபடியே தன் நினைவை இவனுக்கு நினைவாக்கி, [21]'கேவலம் மதீயயைவ தயயாऽதிப்ரபுத்த:' என்கிறபடியே ஸ்வயத்நமாக ஸ்வவிஷயத்தில்வெளிச்சிறப்பாலே [22]அப்ரச்யுத பூர்வஸம்ஸ்கார மநோரதனாம்படி பண்ணி ப்ரஹ்மருத்ராதிகளுக்குப் போலே யமகிங்கர நிரபேக்ஷமாகத் தானே உத்க்ரமண நிவ்ருத்தமாக நின்று,

[23]வாகாதீந்த்ரியங்கள் பத்தையும் மநஸ்ஸிலும், இவற்றோடே கூடின மநஸ்ஸைப் பிராணவாயுவிலும், இந்திரியங்கள் பதினொன்றோடும் கூடின ப்ராணனை ஜீவாத்

---

[20]ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்டபாஷாணஸந்நிபம் ।
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் ॥
(என்னிடம் ப்ரபத்தி செய்தவனை) என் பக்தன் மரண காலத்தில் கட்டையும் கல்லும் போல் இருந்தாலும், நான் அவனை நினைத்து உயர்ந்த பதமான் பரமபதத்திற்கு அழைத்துச் செல்லுவேன்.

[21]சரணாகதிகத்யம். வேறொன்றை எதிர்பாராமல் என்னுடைய தயையினாலேயே மிகவும் தெளிவான ஞானத்தையுடையவனாய். (வெளிச்சிறப்பு - தெளிவான ஞானம்.)

[22]சரணாகதிகத்யம் 'பகவானே பரமப்ராப்யம்' என்ற சாஸ்த்திரத்தினால் உண்டான ஸம்ஸ்காரத்தாலே ஏற்பட்ட மநோரதம் நீங்காதவனாகச் செய்து.

[22]அப்ரச்யுத பூர்வஸம்ஸ்காரமநோரதனாம்படி ப்ரஹ்மருத்ர—க உத்க்ரமணம் - வெளிப்புறப்படுதல்.

[23]வாக்கு, கை, கால், பாயு, உபஸ்தம் என்று கர்மேந்திரியங்கள் ஐந்து. (பாயு மலமூத்ரங்களை விடுவதற்கும், உபஸ்தம் ஆநந்தாநுபவத்திற்கும் ஆனது); காது, த்வக், கண், மூக்கு, நாக்கு என்று ஞானேந்திரியங்கள் ஐந்து.

மாவிலும், இப்படிச் *சேர்ந்த திரளை இஸ்ஸரீரைக தேஶமான ஸூக்ஷ்மபஞ்ச பூதங்களிலும், இவை எல்லாவற்றையும் கூட ஹ்ருதயஸ்தனான தன் பக்கலிலே சேர்த்து, இவனை இளைப்பாற்றி;

இப்படிப் பொதுவான உத்க்ராந்தியும் நடந்தால் முமுக்ஷுவான இவனை †லோகாந்தரங்களுக்கு வழிகளான ஹ்ருதயநாடீ நூற்றிலும் ப்ரவேசிப்பியாதே, 'ஸுஷும்நை' என்றும், 'ப்ரஹ்மநாடீ' என்றும், 'மூர்த்தந்யநாடீ' என்றும் பேர்பெற்ற ஹ்ருதயஶதைகநாடியில் அதிஶோபமாநமான ரூபம் [24]வெளிச் செறிக்கப் பண்ணி, அதிலே ப்ராணவாயுஸஹாயமாக ஸூர்யரஶ்மியோடே கூடப் ப்ரவேசிப்பித்து, [25]பத்மகோஶஸ்தநப்ரதீகாஶஹ்ருதயாந்தர்கதமாய்க்கொண்டு $அவலம்பிக்கிற ஹ்ருதயஸ்தாநத்திலே [26]ஸூக்ஷ்ம ஸுஷிரத்தினின்றும் மேலே கொண்டேறி, [27]ஏகாதச

*சேர்ந்த—ம. †லோகாந்தரங்களுக்கும் வழிகளான—க $லம்பிக்கிற—வ

[25] பத்மகோசம் - தாமரை மொட்டு; ("பத்மகோஶப்ரதீகாஶம் ஹ்ருதயம் சாப்யதோமுகம்"; ஸ்தநம் - 'ய ஏஷ ஸ்தந இவாவலம்பதே'— தைத்திரீய உபநிஷத் 1. 6.

[26] ஸூக்ஷ்மஸுஷிரம் - மிகவும் சிறிய த்வாரம்.

[27] ஏகாதசத்வாரமான - பதினொருத்வாரங்களையுடையதான இரண்டு கண், இரண்டு காது, இரண்டு மூக்கு, வாய், குதம், சிச்நம், நாபீ, ப்ரஹ்மரந்த்ரம் என்று பதினொன்று என்பர். ஆனால் கீழே 'ஹ்ருத்புண்டரீக மத்தியத்திலே ஸூக்ஷ்ம ஸுஷிரத்தினின்றும் மேலே கொண்டேறி' என்று வாக்யமிருப்பதால், நாபியைச் சேர்க்காமல், இந்த த்வாரத்தைச்சேர்த்துப் பதினொன்று என்று ஸ்ரீ ஸ்வாமியின் நிர்வாஹம்.

ஆகாரமான 'ப்ரஹ்மபுரம்' என்று பேர் பெற்ற ஸ்தூல ஶரீரத்தில் 'ப்ரஹ்மரந்த்ரம்' என்கிற தலைவாசலைத் திறந்துகொண்டு புறப்பட்டு, நாடிகளோடே சங்கிலித் துவக்குப் போலே *பிணைத்துவைத்த ஸூக்ஷ்ம ஸூர்ய கிரணங்களை அவலம்பமாக்கி வைகுந்தம் புக வழிப்படுத்தும்.

முன்கருவி யீரைந்தும் மனத்தில் கூட்டி
முக்கியமாம் மருத்திலவை சேர்த்த தெல்லாம்
நன்குணரும் உயிரில்சேர்த் தைம்பூ தத்தை
நண்ணுவித்துத் தான்தன்பால் வைக்கும் நாதர்
ஒன்றுடன் வாசலிரண் டுடைத்தாய் உள்ளே
ஒருகோடி துயர்விளைக்கும் உடம்பாய் ஒன்றும்
வன்சிறையின் தலைவாசல் திறந்து நம்மை
வானேறும் வழிப்படுத்த மனமுற் றனே. 13.

இதி
ஸ்ரீ பரமபதஸோபாநே
ஷஷ்டம் உத்க்ரமணபர்வம் ||

*பிணைத்துவைத்து ஸூக்ஷ்ம— க.

தெருளார் பிரமபுரத்திறை *சேர்ந்திடர் தீர்ந்தவர்தாம்
†இருளார் பிரமபுரச் சிறைதீர்ந்தபின் வந்தெதிர்கொண்
அருளாலமரர் நடத்த இம்மாயை கடந்ததற் பின் [டு
சுருளார் பவநரகச் சுழலாற்றின் ‡ சூழ்ச்சியிலே. 14.

இப்படிப் புண்யபாபங்களாகிற பொன்னும் இரும்பு
மான விலங்குகளைக் § கழித்து, ஸூக்ஷ்மசரீரமாகிற
சிறையினின்றும் ஸஹாதேவஸஹஜனை ஸாதேஷன்
நயிப்பிக்கப் புறப்பட்டவனை பண்டு இறைகொண்ட
தேவர்கள் பரவசராய், சதிஷீதராய் ஆணதிவராய்,
காணிக்கையிட்டுக் காணமுறப்பட; 'அர்சிஷஸ' என்
றும் 'அர்சி' என்றும் பெயரையுடைய ஆதிவாஹிகன்
வந்தெதிர்கொண்டு தன் வைபவமெல்லாவற்றையும்
ஸமர்ப்பித்து, [1]சூழ்விசும்பணிமுகிலில் சொன்ன ஸத்
காரத்தோடே தனக்கடைத்த எல்லை நடத்தும்.

அநந்தரம் பகலும் சுக்லபக்ஷமும் உத்தராயண
மும் ஸம்வத்ஸரமும் அடைவே எதிர்கொண்டு வழி
நடத்துவார்கள். காலவாசி ஶப்தங்கள் இங்கு காலாபி
மாநிதேவதைகளைச் சொல்லுகின்றன. ஶாகடாயந
ஸம்ஹிதையில் [2]"அர்சிஷோஷஸ் களாஹ்நீம் ஶுக்ல
பக்ஷம்" என்று பகலுக்கும் சுக்லபக்ஷத்திற்கும் நடுவே
'களாஹ்நீம்' என்று ஒன்றைச் சொன்னது ஶ்ருதிவிரு

*சேர்ந்திட வந்தவர்—வ †அருளால்பிரம—க ‡சுழற்சியிலே-க.
§கழற்றி—ம. கழித்து ஸ்தூல சரீரங்களாகிற—க.

[1]10. 9.இத்திருவாய்மொழியில் முக்தனுக்குச் செய்யப்படும் உப
சாரங்கள் சொல்லப்படுகின்றன. [2]ஶாகடாயநஸம்ஹிதை.

மான ஶ்ருதத்திற்கு அநுகுணமாக ஸூக்ஷ்மபக்ஷாஜமாகக் கொள்ளலாம். ஸாமாந்யவிஶேஷந்யாயாதிகளுக்கும் அநேகஸமாதாநமாக நிர்வாஹம் கண்டு கொள்வது.

ஸம்வத்ஸரதேவதைக்கு அநந்தரம் வாயுதேவதை வந்து எதிர்கொண்டு வழிநடத்தும். இந்த வாயு தன்னை தேவர்களுக்கு இருப்பிடமாகையாலே ஶாஸ்த்ரங்கள் தேவலோகஶப்தத்தாலும் வாயுலோகஶப்தத்தாலும் சொல்லும். வாயுவுக்கு அநந்தரம் ரதசக்ரரந்த்ரம்போலே இருப்பதொரு வழியாலே மேலேபோய் ஆதித்யனைக் கிட்டும். [3]“தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு” என்றும், [4]“மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள் அன்னதோர் இல்லியினூடு போய்” என்றும், [5]“சண்டமண்டலத்தினூடு சென்று” என்றும் [6]“இருளகற்றும் எறிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றிவைத்து” என்றும்

---

[3] சிறியதிருமடல்-7. தேரார் -தேரையுடையனாய், நிறைகதிரோன் மண்டலத்தை = பூர்ணகிரணங்களையுடையனான ஸூர்யனுடைய மண்டலத்தை, கீண்டு புக்கு=பிளந்து (கொண்டுபோய் பரமபதத்தைப்) பிரவேசித்து.

[4] பெரியதிருமடல்—16. மன்னும் - நித்யமான, கடும்கதிரோன் மண்டலத்தின் நல் நடுவுள் - (அணையவொண்ணுதபடி) கொடிதானகிரணங்களுடைய ஸூர்யமண்டலத்தின் மத்தியில், அன்னது ஓர் - அப்படிப்பட்ட ஒரு, இல்லியின் ஊடு-சிறுவழியின் நடுவே சென்று.

[5] தி. ச. வி. 67. சண்ட - கடிதான, மண்டலத்தின் - ஆதித்ய மண்டலத்தின், ஊடு சென்று - நடுவே போய்.

[6] பெரி. தி. 4. 9. 3. இருள் அகற்றும் - இருட்டைப் போக்கிக் கொண்டு, எறிகதிரோன் - வீசுகிற கிரணங்களையுடையனான ஆதித்யனுடைய, மண்டலத்தூடே - மண்டலத்தின் வழியாக ஏற்றிவைத்து.

[7]"சுசிர்த்வா ஆரோசுவுஷு" என்றும், [8]"யோ நிஸ்வா ஸூர்யமண்டலம்" என்றும், [9]"ஸபித்வா மண்டலம் ஸிநா" என்றும் சொல்லுகிற ஸூர்யமண்டலபேதாதிகள் வ்ரா க்ருதலு்ருதயாதிகளில் அண்டாதிபதி முதலானோர் முக்த ராம்போது கூடாருவுதங்களாகையாலே, இவை இங்குள்ளார்க்கு ஆகக் கடவன. 'ஸூர்யத்வாரத்தா லே போவார்கள்' என்றது ஶாஸ்த்ரங்களிலே [10]"ஆடம்பரத்தினுடைய ஶப்தம்போலே" என்று விஶேஷிதமாயிற்று.

அவ்வழியாலே ஆதித்யன் நடத்தப் போய், சந் திரனைக் கிட்டும். யஜ்ஞாதிகார்யத்தில் சொன்ன வஸ்து ப்ராப்தி ஸ்வர்க்கத்தில் ஶரீரவிஶேஷப்ராப்திக்காகச் சொல்லிற்று. தக்ஷிணாயநஸ்தனை முமுக்ஷுவுக்கு ந்யாஸவித்யையில் சொன்ன வஸ்துஸாயுஜ்யம் உத்தரா யணஸ்தனுடைய ஸூர்யஸாயுஜ்யம் போலே விஶேஷ விஶேஷாயம். இங்கு ஆதிவாஹிகரில் ஒருவனை சந்த்ரனுடைய ப்ராப்தியைச் சொல்லுகிறது.

சந்த்ரன் வழிநடத்த ஶங்கநிஸ்வநம்போலே இருப்பதொரு வழியாலே மேலே போமளவில், வித்யு தபிமாநிதேவதை வந்து எதிர்கொண்டு வழிநடத்தும்.

---

[7]பார. சா. 354. 13.

தேஷாம் வை க்ஷேமயாநம் மஹதாம் அஜஸதஸ ।
ஸர்வலோகே தமோஹந்தா சுசிர்த்வா ஆரோசுவுஷு ॥

க்ஷேமமான மார்க்கத்தில் செல்லுகிற அவர்களுக்கு ஸகல லோகத்திலும் இருட்டைப் போக்கிக்கொண்டு ப்ரகாசிக்கிற ஸூர்யன் த்வாரமாக (வழியாக)ச் சொல்லப்படுகிறான்.

[8]யாஜ்ஞ. 4. 167. [9]

[10]ஆடம்பரம் - (மத்தளம் போன்ற) ஒருவகை வாத்யம்.

வைத்யுதனை தன்னையே *'அமானவன்' என்றும், அவன்தானே ப்ரஹ்மத்தை ப்ராபிக்கும் என்றும் ஶ்ருதிகள் சொல்லுகையாலே, வித்யுத்தோடுண்டான அவக்கையும் அதனுடைய ஸம்பந்தத்தையும் இடமாகக் கொண்டுவந்த வருணனும், அவன் பின்னே அடையுண்ட இந்திரனும் ப்ரஜாபதியும், அமானவன் நடத்துகிற வழியில் தந்தாமெல்லையளவே ஸஹகாரிகளாய்க்கொண்டு வழி நடத்துவார்கள்.

11 'அமானவனுடைய ப்ரயிதுத்வம் வாயுவஸாநஹம்' என்கிற ஸாஷ்யம் 12 'வருணாதிகள் அநுக்ராஹகர்' என்கையாலே அநுக்ராஹகாநயாத்திலே தத்பரம். 13 ஒரு ஶ்ருதியிலே 'அமானவன்' என்றும், வேறொரு ஶ்ருதியில் 'மாநஸன்' என்றும் சொல்லப்பட்டவர்களில் 'முற்பட அமானவனும் பிற்பட மாநஸனும் வழிநடத்துவார்கள்' என்றும் சிலர் சொல்லுவார்கள். ஶ்ருதியார்த்தம் சொல்லுமாகையாலே, 'விகல்பமாதல் ஸமுச்சயம்

*அமானவன் என்றும், மானஸன் என்றும்—வ.

11 தத்ர அமாநவஸ்ய ப்ரயிதுத்வம் வாயுவஸாநஹமித்யுக்தம் (ஶ்ரீபாஷ்யம் 4. 3. 3. வருணாதிகரணம்.)

12 வருணாதயஸ்ஸ அநுக்ராஹகா இதி தேஷாமேவாதிவாஹிகத்வநாநயோ விருத்த ஏவ

(ஶ்ரீபாஷ்யம் 4. 3. 4. வாஹிகாதிகரணம்).

13 தத்புருஷோऽமாநவஸ்ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி—

அமானவன் என்னும் புருஷன் அவர்களைப் பிரஹ்மத்தினிடம் சேர்ப்பிக்கிறான். (சாந்தோக்யம்.)

தாந் வைத்யுதாத் புருஷோ மாநஸ ஏத்ய ப்ரஹ்மலோகாந் கமயதி (ப்ருஹதாரண்யகே 8. 2. 15.)

மானஸனென்ற புருஷன் வந்து வைத்யுதன் பக்கலினின்றும் ப்ரஹ்மலோகமேறக் கொண்டுபோம்.

மாதல்' என்று சிலர் கொள்ளப் பார்ப்பார்கள். விகல்ப கோஷாதிகளைப் பார்த்து 'ஒருவருக்கு இரண்டு பேர்' என்று சிலர் சொல்லுவார்கள். இங்கே ஸாஹசர்யாதிகளையும் [14]"அர்சிரஹ: ஶுக்லபக்ஷ," [15]"[illegible] யோஶ்ச," [16]"ஆதிவாஹிகாஸ்தல்லிங்காத்" இத்யாதிகளான அதிகரணஸூத்ரங்களையும் அநுஸந்திப்பது. 'மாநவனான புருஷன் வந்து வைத்யுதன் பக்கலி னின்றும் ப்ரஹ்மலோகமேறக் கொண்டுபோம்' என்று ஶ்ருதி சொன்னது [17]"வைத்யுதேநைவ ததஸ்தச்ச்ருதே:" என்கிற ஸூத்ராநுஸாரமாக [illegible]

[14]அர்ச்சி: = அக்னி, அஹ: - பகல், சுக்லபக்ஷம்.

[15][illegible]
[illegible]
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

(இந்த சுலோகம் தத்வமுக்தாகலாபத்தில் ஜீவஸரம் 60-வது சுலோக வ்யாக்யானத்தில் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது)

[16]ஆதிவாஹிகாஸ்தல்லிங்காத் [illegible]
[illegible] । [illegible]
[illegible] ॥ (தத்வஸாரம் 102)

[17]ப்ர. ஸூ. 4. 3. 5. தத: - வித்யுத்தேவதைக்கு மேல், வைத்யுதேநைவ - (அமாநவனென்னும்) வைத்யுதனாலேயே (உபாஸகர்கள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்; தச்ச்ருதே: - அப்படியே சுருதி சொல்லுகிறபடியால்)

களாலே நிர்வஹிக்கலாம். இதனால் அக்கரையில் அமானவனைச் சொன்ன ஸம்ஹிதைக்கும் விரோதமில்லை.

இவ்வர்ச்சிராதி தேவதைகளெல்லாம், 'கர்ம விசேஷங்களாலே வசம் பெற்ற ஆதிவாஹிகதேவதைகள்' என்றும், 'அமானவனை நித்யஸூரிகளிலே *ஒருவனாக இசைந்து, கீழுள்ளாரைக் கர்மவச்யர்' என்றும், 'இவர்களெல்லாரும் அமானவனைப் போலே ஸமவஸ்திதராய் அர்ச்சிராதிஸ்தானங்களுக்கு அபிமானிதேவதைகளான சில நித்யஸூரிகள்' என்றும் பக்ஷங்கள் நடக்கும். இவ்வர்ச்சிராதிகதி அண்டந்தோறும் உண்டாயிருக்கும்.

முமுக்ஷுவுக்கு [18]ப்ரஹ்மகாய நிஷேவணாதிகள் சொல்லுமிடங்கள் உபாஸநாந்யாயத்தாலே விசேஷ விஷயம். வஸுவருணாதிகளுக்கு ஸாலோக்யம் சொல்லுமிடங்களுக்கும், [19]சிசுபாலாயோத்யாவாஸிகாதிகளுக்கு முக்தி சொன்னதற்கும் இதுவே நிர்வாஹம்.

---

* ஒருவனாக இசைத்து—க.

[18]ப்ரஹ்ம-காய-நிஷேவணாதிகள்— ப்ரஹ்மலோகம் சென்று ப்ரஹ்மாவின் சரீரத்தில் புகுந்து, அவர் அநுபவிக்கும் ஸுகங்களையெல்லாம் அவரோடொக்க அநுபவித்தல் முதலானவை. அந்த ஸுகத்தை அநுபவித்துப் பிறகு மோக்ஷத்தையடைய விரும்புவோருக்கு இந்த மார்க்கம். மதுவித்யையை அநுஷ்டிப்பவர்களும் அதேமாதிரி அந்த உபாஸநத்தின் மஹிமையினால் அஷ்டவஸுக்களில் ஒருவனாகி அவர்கள் போகத்தையெல்லாம் அநுபவித்து பிறகு அங்கேயிருந்தே மோக்ஷத்தைப் பெறுவார்கள்.

[19]சிசுபாலனுக்கு அங்கேயே ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திருவடிகளில் லயித்து முக்தி உண்டாயிற்று; அயோத்யாவாஸிகளுக்கு ஸாந்தாநிகலோகம் போய் அங்கிருந்து மோக்ஷம். சிசுபாலனுக்கு அவ்விதம் கிடைத்ததும் அயோத்யாவாஸிகளுக்குக் கிடைத்ததும் விசேஷவிஷயமேயல்லது, பொதுவானதல்ல.

‘நிவ்ருத்தியஸ்தவாரன் பஞ்சபூதங்களையும் அதிக்ரமிக்கும்’ என்று மநு சொன்னது, ‘ஶீக்ஷகவாதும் முதலாகத் தொடங்கி ஜ்ஞாநவ்ருத்திஸாதநங்களையும் 20அண்டகடாஹத்தையும், தஶகுணோத்தரங்களான ஆவரணஸப்தகங்களையும், இவையெல்லாம் உள்ளாம்படி பரந்த தமஸ்-தத்வத்தையும் ஹேதிக்கும்’ என்று ஶ்ருதிகள் சொன்ன தத்வாந்தரங்களுக்கும் உபலக்ஷணம்.

‘இவ்வர்ச்சிராதிகதியாகப் போனவர்கள் ஆவர்த்தியார்கள்’ என்கிறது 21ஸர்வலோகாநுஸஞ்சரண ஸாமர்த்யத்தாலே ‘ஸம்ஸாரியார்கள்’ என்றதாமத்தனை. 22வைதிகஸ்புத்ராதிகள் இவ்வர்ச்சிராதிகதியாலே தேச

ஆவரணங்களையும் இவையெல்லாம் உள்ளாம்படியான பரந்த-

20அண்டகடாஹம் = ப்ரஹ்மாண்டத்தினுடைய மேல் ஓடு. தசகுணிதோத்தரங்களான = ஒன்றைவிட ஒன்று பத்துமடங்கு அதிகமாக இருக்கிற. ஆவரண ஸப்தகங்கள் = ஆடை போல் ஒன்றின்மேல் ஒன்றாக சுற்றியிருக்கும் ஏழு ஆவரணங்கள். அண்டத்தைச் சுற்றி அதைப்போல் பதின் மடங்கு விஸ்தாரமுள்ள ஜலமும், அதைச்சுற்றி அதைப்போல் பதின் மடங்கான அக்னியும், அதைச்சுற்றி ஆகாசமும், அதைச் சுற்றி அஹங்காரமும், அதைச்சுற்றி பதின்மடங்கு அதிகமான மஹத்தத்வமும், அதைச்சுற்றி ப்ரதானமும் ஆவரணங்களாக இருக்கின்றன.

21ஸ இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந் । தனக்கு இஷ்டமான ரூபத்துடன் வேண்டிய போகங்களை அநுபவித்துக்கொண்டு ஸகல லோகங்களிலும் பகவானுடன் ஸஞ்சரிக்கிறான்.

22ஸ்ரீ வைகுண்டநாதனான பகவான், பூமியில் அவதரித்திருக்கும் நரநாராயணர்களான அர்ஜுனன் க்ருஷ்ணன் இருவரையும் தன் நாட்டிற்கு வரவழைத்துப் பார்க்க விரும்பி, ஒரு

விஶேஷஜ்ஞாநம் பெற்றவர்களல்லாமையாலே அவர்களை மீட்டது விரோதமன்று.

இவ்வழியாலே [23]த்ரிகுணஸம்ஸாரகாந்தாரத்தைக் கடந்தவன் *பகவத்க்ருபயாபோலே ஸர்வகாலத்திலும் ஏகரூபமாகப்பிரவஹிக்கிற 'விரஜை' என்கிற அம்ருதநதியைக்கிட்டும். [24]"வைகுண்டஸீம்நி விரஜாம் ஸ்ரோதஸாம் உத்தமாம் நதீம்" என்கையாலும், [25]"மநஸாஸௌ விரஜாம் விதூதஸ்தநாம் ஸமக்ஷாம்" என்று அபியுக்தர் ஸங்க்ரஹிக்கையாலும், விரஜையைச் சிலர் த்ரிகுண-ஸாம்யவஸ்துக்களுக்கு எல்லையெனப் பார்ப்பார்கள். வைகுண்ட

உபாயம் செய்தார். த்வாரவதியிலுள்ள ஒரு பிராமணனின் குழந்தைகளையெல்லாம் அவை பிறந்தவுடனேயே தன் லோகத்திற்கு எடுத்துக்கொண்டு வரும்படி செய்துவிட்டார். அந்தப்பிராமணன் கிருஷ்ணனிடம் முறையிட, பக்கத்திலிருந்த அர்ஜுனன் தான் இனிப் பிறக்கும் குழந்தையை ரக்ஷித்துத் தருவதாகவும், தவறில் அக்னியில் விழுந்து இறப்பதாகவும் பிரதிக்ஞை செய்தான். ஆனால் பத்தாவது குழந்தை பிறந்ததும் மறைந்துவிட்டது. ஸகல லோகங்களிலும் தேடியும் அதைக் காணாதவாறே அர்ஜுனன் உயிரைவிட எத்தனிக்க, ஸ்ரீ கிருஷ்ணன் அவனையும் கூட்டிக்கொண்டு ஸ்ரீ வைகுண்டம் சென்று, தன் அபரரூபமான பரவாஸுதேவனை வணங்கி, அவரால் பூஜிக்கப்பட்டவராய், வைதிகனுடைய பிள்ளைகளையும் பெற்று, அந்தப் பிராமணனிடம் சேர்த்தார்.

(ஸ்ரீ பாகவதம் தசமஸ்கந்தம். 89.)

*பகவத்க்ருபையாலே—க.

23த்ரிகுணம் = ஸத்வம், ரஜஸ், தமஸ், என்ற மூன்று குணங்களை உடைய பிரகிருதி என்னும், மருகாந்தாரம் = பாலைவனம்.

24வைகுண்டத்தின் எல்லையில் ப்ரவஹிக்கிற விரஜை என்னும் மஹாநதியை.

25அபியுக்தாஸ் பூர்வாசார்யா: ஸ்ரீஸம்வத்ஸரம் வாயும் ஸோமம் ஸாக்ஷாத் விஷ்ணுவாஸ்யம்

ப்ராஜாநாம் பதி:

ஸாம்யம் *பொதுவாகையாலும், 'ப்ரஹ்மலோகத்தில் ஆரம் ஹ்ரதத்தை தாண்டிகளுக்கு ஸங்கல்பமாத்ரத்தாலே விரஜையைக் †கிட்டும்' என்று ஸ்ருதி சொல்லுகையாலும், விரஜாநதிக்கு எல்லை என்றும் சிலர் சொல்லுவார்கள். 'விரஜையை மநஸ்ஸாலே கடக்கும்' என்றது 'தன் ஸங்கல்பத்தாலே கடக்கும்' என்றபடி. 'ஸ மநஸாலே ஸர்வகாமங்களையும் கண்டு அநுபவிக்கும்' ¶என்பதற்கும் இதுவே நிர்வாஹம்.

விழியல்லால் வேலில்லை விண்ணின் மாதர்
மேனியல்லால் வில்லில்லை மீன வர்க்கு
மொழியல்லால் அமுதில்லை என்று முன்னாள்
முத்திவழி முனிந்தடைந்த மோகம் தீர்ந்தோம்
கழியல்லால் கடலில்லை என்பார் போலக்
காரியமே காரணமென் றுரைப்பார் காட்டும்
வழியல்லா வழியெல்லாம் கடந்தோம் மற்றும்
வானேறும் வழிகண்டோம் மகிழ்ந்திட் டோமே.

[15.

ஆ
அவரஜவஜமெஸாவாமெந
ஸஷ்டிம் அபிப்ராயிவவ ॥

மநவாஜயொ விரஜாம் விஜாவ்ய வ தநம் ஸங்க்ஷாம்
தமெதாஜாநவ.
ஸஸப்ராக க்ஷாலிதவாஸநாஸங்க்ரதிமெநா முஞ்சதி
விஷ்ணோ: பதம் ॥ [கில்

(தத்வமுக்தாகலாபம்-ஜீவஸரம்-60-வது சுலோக வியாக்யானத்
மநவா யொ விரஜாம்—க. மநவாஜதொ விரஜாம்—ம.

*பொதுவாகையாலே ப்ரஹ்மலோகத்தில் அரம் என்கிற ஹ்ரதாதிகளுக்கு—க. †கிட்டும் என்றும் சுருதி—க.
¶என்பதற்கு இதுவே—க.

வன்பற்றுடன் மயல் பூண்டு மற்றோர் கதியாலினநாள்
என் பெற்றது பெறுந்தானமும் எத்தனை போதுளதாம்
நன்பற்ற தன் துணிவால் துயர்தீர்க்கும் துழாய்
[முடியான்
இன்புற்ற *நல்வழியால் ஏற்றும் நற்பதம் எண்ணுவ
[மே. 16.

இப்படி அநாதிகாலம் அநாதிதவஸ்துஷ்டாய ஸஞ்ஜத்தாலே அடிக்கடியும் அநந்தக்லேசவைசித்ர்யமான ஸம்ஸாரமண்டலியிலே ஓடின விடாயெல்லாம் தீர அத்யந்தமாதேயமான அர்ச்சிராதிமண்டலியில் [1]'அமரரோடு உயர்வில் சென்று, விரஜா ஸ்நாந ஸம்பந்தமான விரஜாப்ரவாஹத்தை அவகாஹித்து அழுக்கற்று, வைத்யுதமாணவனான அமாநவனுடைய கரஸ்பர்சத்தாலே வாஸநாசேஷம் கழிந்தவன்
திவ்யதேசப்ராப்தியாலே ஸர்வேச்வரனோடு ஸலோகனாய், அப்ராக்ருத அப்ராக்ருததேஹ விலக்ஷண விக்ரஹயோகத்தாலே ஸரூபனாய்;
கீழ்ச் சொன்ன யோக்யதைகளில்லாதார்க்கு [2]"ந தத்ர சக்ஷு: ஸ்வஷ்டி" இத்யாதிகளின்படியே கிட்டவரிதாய்,

*நல்வழியால் நற்பதம்—பா.

1. 3. 11. ஆதிவாஹிகர்களோடு பரமபதத்தில் ('விரஜையிலே') போய்.

2. ந தத்ர சக்ஷு: ஸ்வஷ்டி வாஸுஷா விஷயாத்மகா: ।
தம்ப லோப மஹாக்ரோத த்ரோஹ மோஹைரபிப்லுதா: ॥ பார. வந. 262-39)

('ந தத்ர விப்ர' என்றும் பாடம்)

வைதிகோத்தமரான பரமைகாந்திகளுக்கும் ப்ராப்யமாய், அயர்வறும் அமரர்களுக்கு ஸதாவாஸஸ்தாநமாய், [3]அகாலகால்யமாய், [4]அத்யந்தாநந்தோதயமாய், அநந்தவைகுண்டாக்யமாய், [5]வாசோயோகிவாங்மந அகோசரமான நித்யநிரவத்யநிரதிசயஸௌந்தர்யாதி ப்ரகர்ஷத்தையுடையதாய், [6]ஸாத்த்வ ஸுமயமாய், [7]"கொழுஞ்சோதி உயரம்" என்றும், [8]"சேணுயர் வானம்" என்றும், [9]"தெளிவிசும்பு" என்றும் சொல்லப்படுகிற [10]"நலமந்தமில்லதோர் நாட்டுக்"குள்ளே சென்று;

(டம்பம், ஆசை, பெருங்கோபம், அஜ்ஞானம், த்ரோஹம் என்கிற குணங்கள் நிரம்பினவர்களும், விஷயஸுகங்களிலே யே படிந்த மனத்தையுடையவர்களும்) அறிவீனர்களுமான புருஷர்கள் அங்கு (அந்த விஷ்ணுவின் லோகத்திற்குச்) செல்லமாட்டார்கள். (அவர்களுக்கு அங்கு போகமுடியாது.)

[3]காலத்தால் அழிவில்லாததாய்.

[4]அத்யந்தாநந்தோதயம் தச்ச ஸ்தாநம் விஷ்ணுஸம்ஜ்ஞிதம் ।
ப்ராப்யைவ ப்ரஹ்மா ராஜேந்த்ர பூர்வைர் தைவதாநவைஃ ॥

[5]சரணாகதிகத்யம் (பரமயோகிகளுடைய வாக்கும் மனஸ்ஸும் கூட எட்டாத)

[6]ரஜஸ்ஸும் தமஸ்ஸும் சேராத விலக்ஷணமான ஸத்வம் - சுத்தஸத்வம்.

[7]4. 9. 8. அளவற்ற தேஜோரூபமாயும் (சுத்தஸத்வமாயும் ப்ரகிருதிக்கும்) மேலிருப்பதுமான பரமபதம்.

[8]5. 3. 9. மிகவும் உயர்ந்ததான பரமபதம்.

[9]7. 10. 9. (ஸ்வரூப ப்ரகாசம் பிறக்கும்படி) தெளிவையுடைத்தான பரமாகாசம் என்னும் பரமபதம்.

[10]2. 8. 4. நன்மைக்கு (அல்லது ஆநந்தத்திற்கு) முடிவில்லாததான ஒப்பற்ற நாட்டுக்குள்ளே.

அங்கே 'அரம்' என்றும் 'ண்யம்' என்றும் பேருடைய அம்ருதமயஸாகரங்களையும், திவ்யோத்யாந-மணிமண்டப-ஸரித்-தடாகாதிவிஶேஷங்கள் எல்லாவற்றையும் [11]உபநிஷத்துக்களிலும் பகவச்சாஸ்த்ர-ஸம்ஹிதைகளிலும் ஸ்ரீ வைகுண்டகத்யாதிகளிலும் பண்டு பரக்க அநுஸந்தித்தபடியே ஸப்ரகாரமாக ஸாக்ஷாத்கரித்து,

அந்தமில்பேரின்பத்தில் ஆநந்தவெள்ளம் சூழ்ந்தாற்போலே இருக்கிற 'ஐரம்மதீயம்' என்கிற அம்ருத ஸரஸ்ஸைக் கிட்டும்.

அநந்தரம் ஸர்வஶரீரியினுடைய ஸ்வாவதாரம் போலே ஸாம்யமாய் ஸரிஸேவ்யமான 'ஸோமஸவநம்' என்கிற அஶ்வத்தத்தை அணுகும்.

இவனை 'அபராஜிதை'யான திவ்யநகரியினின்றும் ஸ்ரீ வைகுண்டநாதன் எதிர்கொள்ள வரவிட்ட ஐந்நூறு திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் நூறு நூறாக ஒரு திரளாய், திவ்யங்களான [12]மால்ய-அஞ்ஜந-சூர்ண-வாஸ-

[11]சாந்தோக்யம், கௌஷீதகி முதலான உபநிஷத்துக்கள்.
சா. 8 5. 3. '...............அரஶ்ச ஹ வை ண்யஶ்ச அர்ணவௌ ப்ரஹ்மலோகே த்ருதீயஸ்யாமிதோ திவி; ததைரம்மதீயம் ஸர:; ததஶ்வத்த: ஸோமஸவந:; ததபராஜிதா பூ: ப்ரஹ்மண:; ப்ரபுவிமிதம் ஹிரண்மயம் ॥'
கௌஷீத 1. 22. தஸ்ய அரோ ஹ்ரத:, ஆமுஹூர்த்தா யஷ்டிஹா: ।

[12]மாலை, மை, வாஸனைப்பொடி, பீதாம்பரங்கள், ஆபரணங்கள், இவற்றைக் கையில் கொண்டவர்களாய்.

வாஸஸ்ஸ்ரகாதிகளை ஏந்திக்கொண்டு 13"காளங்கள் வலம்புரி கலந்து *எங்கும் இசைக்க' வந்து, 13"ஆண்மின்கள் வானகம் ஆழியான்தமர்" என்று உஜ்ஜூஷாவஸநம்பண்ணி, ஸாவரூஹஸ்ஸ்ரகாரனை ராஜமஹிஷீ பரிஜநங்கள் எதிர்கொண்டு உபசரிக்குமாப்போலே, ஸ்ரீ வைகுண்டநாதனை ஸேவிப்பார்க்கு நிகராக 14"உடுத்துக் களைந்த" இத்யாதிகளின்படியே பஹுப்ரகாரமான ஸ்ருஹாமுஜ்ஜாரத்தாலே அலங்கரிப்பார்கள்.

அநந்தரம் திவ்ய வ்ருக்ஷ-ஸாமுத்ர ஸம்ஸ்தாந-அபராஜித ஆயதநங்களை †அணுகினவளவிலே, ஸர்வகந்தனாய் ஸர்வரஸனாய்ச் 15சிறந்த வான்சுடரான ஸ்ரீ வைகுண்டநாதனுடைய திவ்யகந்த-ரஸ-தேஜஸ்ஸுக்கள் வந்து ப்ரவேசிக்க, பாரிஜாதபரிமளமும் அம்ருதமும் ஆதித்யனும் உருகி ஒன்றினாற்போலே ‡உஜ்ஜ்வலித விக்ரஹ குணனாய்க் கொண்டு; ஆமோத-ப்ரமோத-ஸம்மோத யோகங்களைக்காட்டில் அதிசயித வைபவமாய், 16"யாऽயோத்யேத்யபராஜிதேதி

* எங்கும் இசைக்க வந்தனர்—க. எங்கும் இசைத்தனர்—வ.
‡ உல்லஸித விக்ரஹ குணமாய்க் கொண்டு—க.
13 10. 9. 6. காளங்கள்=ஊதுகொம்புகளும், வலம்புரி=வலம்புரியான சங்கங்களும், எங்கும் கலந்து=மாறிமாறி எங்குமொக்க, இசைக்க=சப்திக்கும்படியாக; ஆழியான்தமர்=ஸர்வேச்வரனுக்கு அடியார்களான நீங்கள், வானகம்=இவ்வுலகையே, ஆண்மின்கள்=ஆளுவீர்களாக.
† அணுகினவளவே—க. 14 திருப்பல். 9.
15 5. 10. 1. சிறந்த=தகுதியாய், வான்=அளவற்றதான, சுடர்=தேஜஸ்ஸையுடையவன்.
16 ஸ்ரீ குண. கோ. 23.

விஹிதா" என்கிறபடியுள்ள வைகுண்ட நகரத்தை அணுகி, [17]"குடியடியார் இவர் கோவிந்தன் தனக்கு என்று முடியுடைவானவர் முறைமுறை எதிர் கொள்ள கொடியணிநெடுமதிள் கோபுரம்" குறுகி,

[18]'இந்திரன்' என்றும் 'ப்ரஜாபதி' என்றும் பேருடைய 'வாசலில் வானவ'ரைச் சென்று கிட்ட, §அவர்களும் இடைய நின்று [18]"வைகுந்தன்தமர் எமர் எமதிடம் புகுது" என்ன ஆஶ்ரிதருக்கு நித்யாவஶ்யமான ஸ்ரீவைகுண்டநகரத்வாரகவாடத்தைக் கடந்து புக்கு; ¶இரண்டு சிறகும் மணிபர்வதங்களை நிரைத்தாற்போலே இருக்கிற மாளிகைப் பெருந்திருவீதியின் நடுவே செல்லும்.

அப்போது [19]"விதிவகை புகுந்தனர் என்று நல்வேதியர் பதியினில் பாங்கினில் பாதங்கள்" கழுவ; [19]"நிதியும் நற்சுண்ணமும் *நிறைகுடவிளக்கமும் மதிமுகமடந்தையர் ஏந்தி" எதிர்கொள்ள, ஹிரண்மய

---

§அவர்களும் வைகுந்தன் தமர்—ம. இடைய நின்று=விலகி வழி விட்டு. ¶இரண்டருகும்—ம. *நிறைகுடவிளக்கம்—க.

[17]10 9. 8. 'இவர் கோவிந்தனுக்கு ஸபரிகரமாக தாஸபூதர்கள்' என்று (கைங்கர்யம் செய்ய) முடி சூடியிருக்கும் நித்யஸூரிகள் முறைப்படி எதிர்கொள்ள, கொடிகளாலே அலங்கரிக்கப்பட்டதும் உயர்ந்த மதிளையுடையதுமான கோபுரத்தைக் குறுகி.

[18]10 9. 9. ஸ்ரீ வைகுண்டநாதனைச் சேர்ந்தார் எங்களுக்கு ஸ்வாமிகள்; (ஆகையால் நீங்கள்) எங்கள் பகவத்கைங்கர்ய ரூபமான) பதத்தை ஏற்றுக் கொள்ளவேணும்.

[19]10. 9. 10. விதிவகை=நம் பாக்யத்தாலேயே, இங்கே புகுந்தனர் என்று, நல்வேதியர்=உபநிஷத்துக்களால் கூறப்படுகிற நித்யஸூரிகள், பதியினில்=தங்கள் மாளிகைகளிலே, பாங்கினில்=முறைப்படி, பாதங்கள் கழுவ=திருவடிகளை விளக்க, மதிமுகமடந்தையர்=(இவர்களைக்கண்ட ஸந்தோஷத்தி

மான திவ்யவிமாநத்தைக் கிட்டினவளவிலே †ப்ரஹ்ம யசஸ்ஸு வந்து பிரவேசிக்க, [20]'நிகரில் புகழா'னுக்கு நிகர் என்னலாம்படியாய் [21]'ப்ரஜாபதியினுடைய ஸபை' என்ற வாக்யத்திலும், [22]"ஸர்வாத்மஸாதாரண' என்கிற ஶ்லோகத்திலும், நித்யத்திலும் சொல்லுகிற ஆநந்தமயமான திருமாமணிமண்டபத்தைச் சேர்ந்து;

னல்) பரிபூர்ண சந்திரனைப் போன்ற முகத்தையுடைய பெரிய பிராட்டியும், ஸ்ரீ பூமிப் பிராட்டியும், நப்பின்னைப் பிராட்டியும், தங்களுடைய திவ்யபரிசாரிகைகளோடே கூட, நிதியும்-(தங்களுக்குப்) பரமதநமான ஸ்ரீ சடகோபனையும், நற்சுண்ணமும்=திருச்சுண்ணப்பிரஸாதத்தையும், நிறைகுட விளக்கமும்=பூர்ணகும்பங்கள், மங்கள தீபங்கள், முதலியவற்றையும், (கைகளில்) ஏந்திக்கொண்டு.

†ப்ரஹ்மயசஸ்ஸுக்கள்—க.

206. 10. 1. [21]ப்ரஜாபதேஸ்ஸபாம். சா. 8. 14 1.

[22]ஸர்வாத்மஸாதாரணநாயகோரஸ்-
வக்ஷஸ்தலஸ்பர்தி யஶ: ப்ரகாஶம் ।
ஆஸ்தாநமாநந்தமயம் ஸஹஸ்ர-
ஸ்தூணாதிநாதம் ததவாப்நவாநி ॥

(ஸ்ரீரங்கராஜஸ்தவம் 1-38). ஸகலஜீவர்களுக்கும் பொதுவான பெருமாளுடைய திருவோலக்கத்தாலும் நிரம்பாத இடத்தை உடையதும், 'ஆயிரக்கால் மண்டபம்' முதலான திருநாமங்களையுடையதும், ஆனந்தமயமானதுமான ஆஸ்தானத்தை நானும் அடைவேனாகவும்.

அங்கே [23]குமுதாதிகளான திவ்யபார்ஷதேஶ்வரர்களும்; [24]சண்டாதிகளான திவ்யத்வாரபாலர்களும் ஸஸம்ப்ரம ஸபஹுமாநாவலோகநம் பண்ண, அநீகேஶ்வரநியோகஸ்தரான ஸேநாநிவ்யூஹநாயகர் அருளப்பாட்ட, அடிக்கடியும் தொழுவதெழுவதாய்க் கொண்டு திருமாமணி மண்டபத்தின் முகப்பிலே சென்றேறி;

அங்கே சிறகுடைய மஹாமேருவைப் போலே சிறந்த திருமேனியுடையனாய் [25]த்ரயீமயனாய் [26]'திருமகள் சேர் மார்ப'னுக்குத் திருக்கண்ணாடி போலே ஸந்நிஹிதனாய் நிற்கிற [27]'காலார்ந்தகதிக் கருட'னைக் கண்டு கழல் பணிந்து;

[28]"பிணங்கி அமரர் பிதற்றும் குணம்" என்கிறபடியே ஒவ்வொரு ஸ்வாமிகுணத்தைப்பற்றி வாதிப்ரதிவாதி

23 குமுதன், குமுதாக்ஷன், புண்டரீகன், வாமனன், சங்குகர்ணன் ஸர்வநேத்ரன், ஸுமுகன், ஸுப்ரதிஷ்டன், என்று எட்டு கணாதிபதிகள். பார்ஷதேச்வரர்=பரிஷத்திலுள்ளவர்களுக்குத் தலைவர்கள்.

24 சண்டன், ப்ரசண்டன், பத்ரன், ஸுபத்ரன், ஜயன், விஜயன், தாதா, விதாதா என்று ஒரு வாயிலுக்கு இருவராக எட்டுத் த்வாரபாலகர்கள். (அநீகேச்வரர்—விஷ்வக்ஸேனர்; ஸேனைமுதலியார்)

25 த்ரயீமயன் - ஸகலவேதஸ்வரூபனான கருடன்

26 7. 2. 9. 27 பெரு. தி. 1. 8. கால்=காற்றுப் போல், ஆர்ந்த=பொருந்தின, (அதிகமான) கதி=வேகத்தையுடைய, கருடனைக் கண்டு

28 1. 6. 4. நித்யஸூரிகள் (தாம்தாம் சொல்லும் குணத்திற்கே பெருமையைக் கூறி, அப்படி) மாறுபட்டுப் பிதற்றும் குணம். அழகோலக்கம்=அழகுபொருந்திய (ஓலக்கம்) கோஷ்டி.

களைப்போலே வாசிவகுப்பதும், அதிஸ்நேஹத்தாலே அஸ்தாநே பயசங்கையுடையாரைப்போலே மங்களம் பண்ணுவதுமாய்க் கொண்டு ரக்ஷிக்கிற நித்யஸூரிகள் நிரையாக இருக்கின்ற அழகோலக்கத்தின் நடுவே சென்று;

[29]'அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்றுகொலோ' ‡என்கிற ஆசை நிறைந்து, திவ்யபரிஜந-பரிச்சத-ஸ்தாந-ஸ்தாநாழ்வார்கள் ஸ்வாஸாதாரண லக்ஷணவிசிஷ்டவிக்ரஹங்களோடே யதாஸ்தாநம் ஸேவித்து நிற்கிற நிலைகளைக் கண்டு, ஸவ்யஸவ்ய கௌஸ்துபகொலயாயிரஜஞனையைக் கொண்டு கிட்டச் சென்று;

[30]பர்யங்கபரிஸரத்திலே முன்பு தங்களைக் கொண்டு எம்பெருமான் நடத்தின க்ருஷி ஸஃபலித்தது என்று பர்யங்கநிலயரான ஆசார்யர்களைக் கண்டு; [31]'அறியாதன அறிவித்து' [32]'என்னைத் தீமனம் கெடுத்த' [33]'நும்கால்கள் என் தலைமேல் கெழுமீர்' என்று க்ருதஜ்ஞதை தோற்றப் பணிந்து;

29 2. 3. 10. ‡என்று ஆசை நிறைந்து—க.

30பர்யங்கபரிஸரம்=ஸிம்மாஸனத்தின் பக்கம்.

31 2. 3. 2 32 2. 7. 8. (உன்னையும் உகந்து க்ஷுத்ரவிஷயங்களையும் உகக்கும்) என் பொல்லாத நெஞ்சைத் தவிர்த்தாய்.

33 9. 7. 1. (எனக்காக வழிநடந்த) உங்களுடைய திருவடிகளை என் தலைமேல், கெழுமீர்=கொண்டுவந்து சேர்க்கவேண்டும்.

உபயவிபூதி=நித்யவிபூதி, லீலாவிபூதி என்று இரண்டு.

உபயவிபூதியும் 34'தனிக்கோல் செல்ல' 35'வானிள வரசு' மன்னி வீற்றிருக்கிற 'அமிததேஜஸ்'ஸான திவ்ய விஹாரஸ்தானமான திவ்யமண்டபத்தை அணுகி;

விபூதித்வயாந்தர்வர்த்திகளான †தர்மாதிதத்வங்களும் §பர்யங்கவித்யையில் 36'பூத-பவிஷ்யத்-தத்வங்கள்' என்றாற்போலவும்; ஸமஸ்தஶாஸ்த்ரங்களில் 'யுகாயுகாதிகள்' என்றார்போலவும், பரக்கவும் சுருங்கவும் பலவகையாகச் சொல்லுகிற வாக்யம் முதலான அவயவங்களுமெல்லாம் அவ்வபிமாநிதேவதாவிஶேஷங்களாய் இருக்கும்படியைத் தெளியக்காணும்.

இப்படி ஸர்வதத்வங்களையும் ஸாமாந்யமாக ஸாக்ஷாத்கரிக்கிறாற்போலே அத்யத்புதமான திவ்யவிஹாரஸ்தானத்தின் மேலே ஆயிரம்கோடி ஆதித்யர்கள் *உதித்தாற்போலே இருப்பதொரு திவ்யபத்மத்தில் எட்டுத் திக்கிலும் எட்டு தளங்களிலே அடைவே

*சேர்ந்தாற் போலே—வ.

34 4. 1. 5. 35 பெரி. தி. 3. 6. 3. பரமபதத்திற்கு இளவரசாய் உள்ளவன். §பர்யங்கவித்யையில் சொன்ன பூத-பவிஷ்யத்-க.

36 தஸ்ய பூதம் ச பவிஷ்யச்ச பூர்வௌ பாதௌ |
ஶ்ரீஶ்ச இரா சாபரௌ ॥

(கௌஷீதகி. 1. 43.) (இறந்தகாலம், எதிர்காலம், ஐசுவர்யம் 'இரை' என்னும் அம்ருதம், இவற்றின் அபிமானிதேவதைகள் நாலு பாதங்களாக இருக்கிறார்கள். †தர்மா தர்மாதிகள் - தர்மம், ஞானம், வைராக்யம், ஐசுவர்யம் என்ற நான்கும் கால்களாகவும், அதர்மம், அஜ்ஞானம், அவைராக்யம் அநைச்வர்யம் என்ற நான்கும் பலகைகளாகவும் கூறப்பட்டிருக்கின்றன.

[37]விமலாதிகள் எண்மரும், கர்ணிகையின் பூர்வபாகத்திலே அநுக்ரஹையும் *சந்த்ரகலைகளே வடிவுகொண்டு சந்த்ரிகையை வகுத்தெடுத்தாற் போலே சாமரஹஸ்தைகளாய்க்கொண்டு ஸேவித்திருக்கும்படியைக் கண்டு, [38]"சாமரவ்யக்ரஹஸ்தம் மாம் ஏவம் குர்விதி †வக்ஷ்யதி" என்ற மநோரதஸித்தி கைபுகுரும் என்று காணும்.

அப்பத்மத்தின் நடுவிலே கநககிரிஸஹஸ்ரங்களைச் சேர்த்தால் வர்ணைகதேசத்திற்கும் போராது என்னும்படி அதிதேஜஸ்விநியான திவ்யகர்ணிகையின்மேலே ப்ரஹ்மாண்டங்கள்தோறுமுள்ள திருப்பாற்கடல்களையெல்லாம் அடுக்கி விரித்தாற்போலே நிர்மலவிசாலஸுகதமான திவ்யபோகபர்யங்கவிசேஷத்தினுடைய [39]'நிர்மோகம்' என்று சங்கிக்கலாம்படி நிரவத்யனாய், ஸர்வாதாரனானவனையும் நித்யமாகத் தரிக்கும்படி [40]ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந §பலனாய்,

*சந்த்ரகலைகள் வடிவு—க.

†வக்ஷ்யதி என்றும் மநோரதஸித்தி கைபுகுமென்று—க. கை புகுந்ததென்று—ம.

[37]விமலாதிகள்: விமலை, உத்கர்ஷணீ, ஜ்ஞாநை, க்ரியை, யோகை, ப்ரஹ்வீ, ஸத்யை, ஈசானை ஆக எண்மர் எட்டு இதழ்களிலும், தாமரைக்காயின் முன்பாகத்தில் அநுக்ரஹையும் சாமரக் கையுடன் இருக்கிறார்கள்.

[38]"கதா ஸம்ஹ்ருஷ்டயா வாசா ஶ்ரியா யுக்தோ ஜகத்பதி:" என்று பூர்வார்த்தம். (2-ஜிதந்தே. 27) சாமரத்தை வீசும் என்னைப் பார்த்து 'இப்படிச் செய்' என்று எப்போது ஸ்ரீப: பதியான பகவான் நியமிப்பாரோ?

[39]நிர்மோகம்=உறை; அல்லது பாம்பின் சட்டை.

§பலவானாய்—க. [40]ஸ்தோத்ர ரத்னம். 39.

41"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்," 42"நிவாஸஶய்யாஸந" என்கிறபடியே அவஸரோசித ரூபங்களைக் கொண்டு அஶேஷஶேஷவ்ருத்திகளைப்பண்ணுகையாலே 'ஶேஷன்' என்றும், 43த்ரிவிதபரிச்சேத ரஹிதனையும் தன்மடியில் ஏகதேஶத்தில் வைக்கும்படியான வைபவத்தையுடையனாகையாலே 'அநந்தன்' என்றும் திருநாமத்தையுடையவனாய், ஸர்வகந்த வஸ்துவுக்கும் வாஸனையுண்டாம்படியான திவ்யபரிமளத்தையுடையனாய், 44'வேரிமாருத பூமேலிருப்பா'ளோடே ஸாக்ஷாத் ஸாகாரனானவன் மூவுல

41அ.53. (பகவான்) செல்லும்போது குடையாகவும், எழுந்தருளியிருக்கும்போது ஸிம்ஹாஸனமாகவும் ஆதிசேஷன் இருக்கிறார்.

42 நிவாஸஶய்யாஸநபாதுகாம்ஶுகோபதாநவர்ஷாதபவாரணாதிபி:। ஶரீரபேதைஸ்தவ ஶேஷதாம் கதைர்யதோசிதம் ஶேஷ இதீரிதே ஜநை:॥
(ஸ்தோத்ர ரத்னம் 40)

43த்ரிவிதபரிச்சேதரஹிதனாய்=காலம், தேசம், வஸ்து என்ற மூன்றிலும் அளவுபடாதவன். பரமாத்மா நித்யனாதலால், ஒரு காலத்தில் இல்லை என்று காலத்தினால் அளவுபடுத்தமுடியாது; ஸர்வவ்யாபியாதலால், ஒரு இடத்தில் இல்லை என்ன முடியாது; ஸர்வ வஸ்துரூபமாயும் இருப்பதால் இந்த வஸ்து பரமாத்மா இல்லை என்று. (அல்லது இது பரமாத்மாவைக் காட்டிலும் மேற்பட்டது என்று) சொல்லமுடியாது. அதாவது வஸ்து பரிச்சேதம் இல்லை.

44 4. 5. 11. வேரிமாருத - வாஸனை மாறாத, பூமேல் - தாமரையில், இருப்பாள் - நித்யவாஸம் பண்ணுகிற லக்ஷ்மி.

கும் தொழ வீற்றிருக்கும்படி ஸாகாரதஶனாய், ஸஹஸ்ரப்ரவாஹம் சுழியாறுபட்டாற்போலே ஸுவலிதமான போகவேஷ்டநத்தையுடையனாய், ஶ்வேதாத்ரிபர்வதம் போலவும் சந்த்ரமண்டலஸஹஸ்ரங்களை நிறைத்தாற் போலவும் பரந்து உயர்ந்த பணாஸஹஸ்ரத்தின் மணிகிரணகணப்ரதாபத்தாலே 'ஸாஹஸ்ரீகம்' என்னும் பேரையுடைத்தான பரமபதமெல்லாம் உஜ்ஜ்வலிதமாம்படி பண்ணக் கடவனான திருவநந்தாழ்வானைக் கண்டு;

அவனோடொக்க [45]ஒருமிடறாய் அநேகமுகமான போகஸாம்யத்தை ஆசைப்பட்டு, அவனுடைய அம்ருதவர்ஷிகளான இரண்டாயிரம் திருக்கண்களுக்கும் தான் ஏகலக்ஷ்யமாய், அவன் மேலே அமர்ந்திருக்கிற [46]'மேலாத்தேவர்கள் மேவித் தொழும் மாலாரை'க் கண்டு, தானும் அநிமிஷத்ருஷ்டியாய் அத்யந்தஸாமீப்யமும் பெறும்.

பண்டையிரு வினையாற்றில் படிந்து பாரம்
காணதே ஒழுகியநாம் பாக்கியத்தால்
வண்டமரும் மலர்மாது மின்னாய் மன்ன
வைசயந்தி மணிவில்லாய் விளங்க வான்சேர்

---

[45] திருவனந்தாழ்வானுடைய போகம் (- சரீரம்) ஒரு கழுத்தை உடையதும் (ஒரு மிடராய்) பல முகங்களையுடையதுமாயிருக்கும்; இந்த முக்தன் ஆசைப்படும் போகமும் (அநுபவமும்) அதுபோலவே ஒரு மிடறாய் - ஆதிசேஷனோடு ஏக கண்டமாய், அநேகமுகமாய் - பலவிதங்களா இருக்கும் என்றபடி.

[46] 5. 1. 8. ஸர்வவிதத்திலும் உயர்ந்தவர்களான நித்யஸூரிகள் பொருந்தி அடிமை செய்யும், மாலாரை - ஸர்வாதிகனான ஸர்வேச்வரனை.

கொண்டல்அருள் மழைபொழிய வந்த தொப்பாம்
குளிர்ந்துதெளிந் தமுதாய விரசை ஆற்றைக்
கண்டணுகிக் கருத்தாலே கடந்து மீளாக்
கரைகண்டோர் கதியெல்லாம் கதித்திட் டோமே.
[17.

[illegible]
[illegible]

பூவளரும் திருமாது புணர்ந்த நம் புண்ணியனார்
தாவளமான தனித்திவம் சேர்ந்து தமருடனே
நாவளரும் பெருநான் மறையோதிய கீதமெல்லாம்
பாவளரும் தமிழ்ப் பல்லாண்டிசையுடன் பாடுவமே. 18.

இப்படி அதிமநோஹரமான அநங்கோமய்ஜத்திலே ரஜதகிரியின்மேலே மரகதகிரி *இருந்தாற்போலே [1]'ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருந்து' [2]'விண்ணோர் தலைவ'னாய் †குமாரயுவாவாய் [3]"சோதிவெள்ளத்தினுள்ளே எழுவதோருரு" என்னும்படி ஆதித்யஸஹஸ்ரஸங்காஶம் போலே அநவதிகதேஜஸ்ஸையுடையனாய், [4]"விஶ்வாப்யாயநகாந்த்யா பூர்ணேந்த்வயுததுல்யயா" என்னும்படி அநவதிகலாவண்யத்தையுடையனாய்;

ஸர்வசேஷியான தன்னுடைய க்ருபையும் க்ஷமையும் வண்மையும் வடிவுகொண்டாற்போலே இருக்கிற நாச்சி

*சாய்ந்தாற்போலே—க. [1] 4. 5. 1. [2] 1. 5. 6

†ஸகுமாரயுவாவாய்—க.

குமாரயுவா - கௌமாரம் யௌவனம் இரண்டுமில்லாமல், இரண்டிக்கும் நடுவே 'இளகிப் பதித்திருக்கும் நிலை.'

[3] 5. 5. 10. சோதிவெள்ளத்தின் உள்ளே = தேஜோராசியின் மத்தியில், எழுவதான, ஓர் உரு - ஒப்பற்ற விக்ரஹம்.

[4] ஸாத்வதஸம்ஹிதை 2. 70. ஆயிரக்கணக்கான பூர்ணசந்திரனுக்கு ஒப்பான காந்தியினால் ஜகத்தை (போஷித்து) ஸந்தோஷப்படுத்திக்கொண்டு

மார்களில் 5ஷ்வாஹிசத - நித்ய - நிரவத்ய-அநூரூப-ஸ்வ ரூப-ரூபாதிகளை உடையளாய், 6ஷ்வவெபவ-ரூபத்தா லே ஸஹாநூஸவம் பண்ணுநின்றாலும் இன்று அநு பவிக்கத் தொடங்கினாற் போலே ஆஸ்சர்யாவஹமாவதொ யாய், 7"பாஷாநஷ" இத்யாதிகளின்படியே ஸவட

5சரணாகதிகத்யம். ஸ்வாபிமத - தனக்கு விருப்பமானதும், நித்ய - நித்யமானதும், நிரவத்ய - ஒருவித தோஷமற்றதும், அநுரூப- தனக்கேற்றதுமான, ஸ்வரூபம் விக்ரஹம் முதலியவற்றை உடைய (பிராட்டி).

6ஷ்வவெபவ-ரூபெண ஸஹாஸநூஸ-ரூதயாஸவ்ய-ரூபவ வஹிஸயஸாஹயா நயா (ஸ்தோத்ர ரத்னம் 38.)
ஸ்வவைச்வரூப்யத்தாலே - தன்னுடைய உலகத்திற்கெல்லாம் அந்தர்யாமியாயிருக்கும் ரூபத்தாலே.

7சதுச்லோகி. 4.
பாஷாநஷஸஹாவிஸ-ரூதி வபஸம் யஷ்வஹ ரூபம் ஸஹிதஃ
ஸ-ரூதம் ஷ்வஹதஸெதாஸவி தத்யதாபம்
ரூபம் யஷத்ருஷ்தம் ।
யாநாநாநி யஷாஸ்வம் விஹாபதொ
ரூபாணி ஸவடாணி தா-
நாஹஸ் ஷெ ஷ்வநூரூபரூப விஹவெ
மாஷொவமஷாநி தெ ॥

ஒருவித விகாரங்களில்லாததும், சுத்தம் அசுத்தம் என்ற இரண்டு விதமான பெரியவிபூதிகளையுடையதும், ஸர்வோத்க்ருஷ்டமான தும், பெரியதும், பிறருக்கு பெருமையைச் செய்வதுமான யாதொரு ஸ்வரூபம் பகவானுடையது இருக்கிறதோ, அந்த ஸ்வரூபத்தைக்காட்டிலும் (தன் ஸௌந்தர்யாதிகளால்) அவருக் கே அதிகப்ரீதியைத் தருவதும், மிகவும் ஆச்சர்யமானதும், ஆச்ரிதர்களுக்குப் பெருமையை அளிப்பதுமான யாதொரு

ஆகாரஸம்ஶ்லேஷத்தை உடையளாய், [8]'திருமார்வத்து மாலை நங்கை'யாய், [9]'அமுதில் வரும் பெண்ணமு'தாய், [10]'வேரி மாறாத பூமேலிருந்து வினைதீர்க்கு'மவளாய், தன் கடாக்ஷ லேசத்தாலே [illegible] வைபவத்தையும் கொடுக்குமவளாய், [11]"தேவதேவ திவ்யமஹிஷீ" என்னும்படியான மேன்மையும், [12]"கருணாஸ்ராநதமுகீ" என்னும்படியான நீர்மையும் உடையளான பெரியபிராட்டியார் 'தாக்ஷிண்யஸீமா' என்று

திவ்யமங்கள விக்ரஹமுண்டோ, ஸ்வேச்சையாலே அவதரித்து விளையாடுகிற இன்னும் வேறு வேறு எந்த விக்ரஹங்களுண்டோ, அவைகளெல்லாம், ஹே லக்ஷ்மீ, உன்னுடையதான, அவற்றிற்கேற்றரூபம்முதலிய ஸம்பத்துக்களோடு பிரிவின்றிச் சேர்ந்தேயிருக்கின்றன என்று (ச்ருதிஸ்ம்ருதிகள்) கூறுகின்றன.

[8] 10. 10. 2. திருமார்வத்து - திருமார்புக்கு, மாலை - மாலைபோல் அலங்காரமாய், நங்கை - (பெருமாளுக்கும் பெருமையைக் கொடுக்கக்கூடிய) குணம் நிரம்பினவளாய்.

[9] தி. மொ. 6. 1. 2. அமுதில் - தேவதைகள் பெற்ற அம்ருதத்தில் நின்றும், வரும் - (ஸாரபூதமாய்) வரும், பெண் அமுது - பெரிய பிராட்டியார் என்னும் அம்ருதம்.

[10] 4. 5. 11. வேரிமாறாத - வாஸனை மாறாத, பூமேலிருந்து, வினை தீர்க்குமவளாய் - நம் பாபங்களையெல்லாம் போக்குமவளாய்.

[11] சரணாகதிகத்யம். தேவர்க்கெல்லாம் தேவனான பெருமாளுடைய பத்நீகளில் ப்ரதானமானவள்.

[12] லக்ஷ்மீஸஹஸ்ரநாமம். கருணா - தயையினால் (உண்டான) ஆஸ்ர - கண்ணீர் நிரம்பியதும், ஆநத - (ஆச்ரிதர் பக்கல் அன்பினால்) வணங்கியதுமான, முகீ - முகத்தை உடையவள்.
தாக்ஷிண்யஸீமா - தாக்ஷிண்யத்தின் உயர்ந்த நிலை; (தெற்கு திக்கின் எல்லை என்று மற்றொரு அர்த்தம்).

தோற்றும்படி ஓக்ஷிணவாமூத்திலே நீலமேகத்தை அணைந்த நிலமின்போலே ஸேவித்திருந்து, தன்னுடைய ஸெஷிக்ஷ-ஸொரகூக்ஷ-கைஜ்யரூப்ரதிவஸம்வாஙி க்ஷங்களைப் பூரித்துக்கொண்டு, அவிருவரிஜநங்களை அவஸரொசிதா ஸெஷஸெஷவ்ருத்திகளிலும் ஆஜ்ஞாபிக்க, [13]"ஸாவஂஹூதஹூநீஹா நாயக" என்கிறபடியே பெரியபிராட்டியாருடைய ஸமூவாஞரம் என்னலாம்படி அநவரதவஹாஹா நவிஷயெயாய், [14]'பச்சைமாமலை போல் மேனிக்'கும் படிமாவான நிறத்தை உடையளான [15]'பார் என்னும் மடந்தை'யும்;

[16]'அல்லிமலர்மகள் போகமயக்குகள்' அத்யல்பம் என்னும்படி நிதூரவொயம் நின்றவிடம் தெரியாதே [17]"நீஹா தாஜஷூநமிரிதபீவஸவஂ" என்னப்பண்ணுமவளாய், நீரொதுரூமூஷமெயான ஸ்ரீநீளைப்பிராட்டியும்;

அடியார் இடத்திலே ஸேவித்திருக்கும்படி தாங்களும் இடத்திலே ஸேவித்திருக்க;

[13]சரணாகதிகத்யம். (லக்ஷ்மீபோலவே) இப்படியிருக்கிற, பூமி, நீளை இருவருக்கும் நாயகனே ?

[14]திருமாலை 2. (படிமா - உபமானம் ஒப்பு).

[15]2 8 7. பார் என்னும் மடந்தை - ஸ்ரீ பூமிப் பிராட்டி.

[16]3. 10. 8. அல்லிமலர் மகள் - தாமரைப்பூவில் வஸிக்கும் பெரிய பிராட்டியாரோடு, போக - சேர்த்தியாலே (பிறந்த) மயக்குகள்: (ஆச்சர்யமான) மயக்கங்கள், (அல்லது) ஆநந்தங்கள்.

[17]திருப்பாவைத் தனியன் (பட்டர் அருளிச் செய்தது). நீளையினுடைய உன்னதமான ஸ்தனங்களாகிற மலைத் தாழ்வரையில் (சாய்ந்து) உறங்கும் (கிருஷ்ணனை).

அடியார் இடத்திலே-அடியார்கள் தங்களுக்கேற்ற ஸ்தானத்திலே; தாங்களும், இடத்திலே - இடது பக்கத்திலே.

[18]'ஸேவ்ய: ஸ்ரீபூமிநீலாபி:', [19]"உடனமர் காதல்மக ளிர் திருமகள் மண்மகள் ஆயர்மடமகள் என்றிவர் மூவர்" இத்யாதிகளில் சொன்ன சேர்த்தியிலே அடிமை செய்யுமவர்களுக்கு [20]'ரஸம்' என்றும் 'ஆநந்தம்' என்றும் சொல்லும்படியான ‡நிரதிசயபோக்யதையுடையனை நிருபாதிகசேஷியை நிருபாதிகஜ்ஞாநவிகாஸத்தாலே [21]"அவாவறச் சூழ்ந்தாய்" என்னும்படி அநுபவித்து;

---

‡நிரதிசய போக்யத்தையுடையனை—க.

நிருபாதிக - ஒரு காரணத்தைப் பற்றவிராமல், ஸ்வபாவமாகவே (சேஷி) - ஸ்வாமியாக இருப்பவர்.

[18] வைகுண்டே இதி மத்ஸ்யபுராணே (ரஹஸ்யத்ரயஸாரம்)
தேவோ வைகுண்டநாதஸ்து அநந்தாஸநஸம்ஸ்தித: ।
ஸேவ்ய: ஸ்ரீபூமிநீலாபி: த்யாதவ்ய: பரமேஷ்டிநா
வாஸுதேவ: ॥

ஸ்ரீ வைகுண்டநாதனை வாஸுதேவனை திருவனந்தாழ்வான் பேரில் எழுந்தருளியிருப்பவனாகவும், ஸ்ரீ, பூமி, நீளை என்ற மூன்று பிராட்டிமார்களாலும் ஸேவிக்கப்படுகிறவனாகவும் த்யானம் (செய்ய வேண்டும்.)

[19] 1. 9. 4. உடனமர் - (பிரிவை ஸஹிக்கமாட்டாமையால்) கூடவே, அமரவேண்டும்படியான, காதல் - காதலையுடைய, மகளிர் - தேவிகள்; திருமகள் - பெரியபிராட்டியார், மண்மகள் — ஸ்ரீ பூமிப் பிராட்டி, ஆயர்மடமகள் - கோப குலத்தில் பிறந்தவளும் ஆத்மகுணங்கள் நிரம்பினவளுமான நப்பின்னைப்பிராட்டி என்ற இவர் மூவர்.

[20] 'ரஸோ வை ஸ:'; 'ஆநந்தோ ப்ரஹ்ம'— தை. உ.

[21] 10. 10. 10. அவாவற - (எல்லாவற்றையும் காட்டிலும் பெரிதான) என் ஆசையெல்லாம் தீரும்படி; சூழ்ந்தாய் - வந்து (என்னுடன்) கலந்தாய்.

[22]"ததோऽபி தஸ்ய ப்ரியதரம் ரூபம் யதத்புதம்" என்றும், [23]"நால்தோளமுது" என்றும் பேசப்பட்டு, [24]'குன்றாடு கொழுமுகில் போல் குவளைகள் போல் குரைகடல்போல் நின்றாடுகணமயில்போல் நிறமுடைய' [25]'பொன்னின் வண்ணம் மணியின்வண்ணம் புரையும் திருமேனி'யில் அவயவஸௌந்தர்யத்திலும் ஆபரணச் சேர்த்தியழகிலும் ஆழங்கால்பட்டு, ஸம்ஸாரஸாகர பாரகரான முமுக்ஷுக்கள் பண்ணும் ரஞ்ஜகவ்யாபாரங்களைக் கொண்டு [26]"விபந்யவ:" என்கிற ஶ்ருதியின்

---

[22]சதுச்சுலோகி—4. ததோபி - (ஆநந்தமயமான) பகவத்ஸ்வரூபத்தைக் காட்டிலும் கூட, தத்ப்ரியதரம் - (அழகிய அமைப்பினால்) அவருக்கு அதிகப் பிரியமானதும், அத்யத்புதம் - ஆச்சர்யத்தைத் தருவதுமான, யத்ரூபம்-யாதொரு (பரமபதத்திலுள்ள, திவ்யமங்கள விக்ரஹமுண்டோ.

[23]5. 8. 7. நால்தோள் நான்கு தோள்களைப் பெற்றிருக்கும், அமுது - அம்ருதம். (அம்ருதம்போல் போக்யமானவன்).

[24]பெரி. தி. 4. 8. 9. குன்றாடு - மலையின் உச்சியிலே நின்று அசைகிற, கொழுமுகில் போல் - அதிக நீரை முகந்துகொண்டு ப்ரகாசிக்கிற மேகம்போலவும், குவளைகள் போல்-அப்போதலர்ந்த நீலோத்பலங்கள் போலவும், குரை - சப்திக்கிற, கடல் போலவும், நின்று ஆடு - (ஸந்தோஷத்தாலே) நின்று ஆடிக்கொண்டிருக்கிற, கணமயில்போல் - மயில் திரள்போலவும், நிறமுடைய-நிறத்தை (அல்லது அழகையுடைய பெருமாள்).

[25]பொன்னின் வண்ணம் புரையும் திருமேனி—க.

தி. மொ. 4 9. 8. பொன்னின் வண்ணம் - ஸ்வர்ணத்தின் வர்ணத்தையுடைத்தாயிருக்கும்; மணியின் வண்ணம் - நீலரத்னத்தின் வர்ணத்தையுடைத்தாயிருக்கும்; புரையும் - இவற்றோடெல்லாம் பொருந்தின (அல்லது ஒப்பான, திருமேனி) ஆழங்கால் பட்டு - அழுந்தி; ஈடுபட்டு என்று அர்த்தம்.

[26]விபந்யவ: - விவிதமான ஸ்தோத்ரங்களைப் பண்ணுகிறவர்கள்.

படியே விவிதஸ்தோத்ரங்களைப் பண்ணத் தொடங்கி; ஷிவ்ராஜகவஜசக்தியாகிற ராத்ரியோடே ஸவயிதவயநா ஸாஜ்ய—த்தாலே சேர்ந்தது என்னலாம்படி [27]கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீள்முடியைப்பார்த்து, [28]"முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ" என்பது;

[29]வதநாரவிந்த மகரந்தரஸ ஆஸ்வாதத்திற்காக வண்டொழுங்கு படிந்தாற்போலே அசைகிற திருக்குழல்கற்றைகளைப் பார்த்து, [30]"கொள்கின்ற கோளிருளைச் சுகிர்ந்திட்ட கொழுஞ்சுருளின் உள்கொண்ட நீலநன்னூல் தழைகொல்? அன்று, மாயன் குழல்" என்பது;

---

[27]பெரி. தி. 4.1.1. கதிர் ஆயிரம்-ஆயிரம் கிரணங்களையுடைய, இரவி அநேக ஸூர்யன்கள், கலந்து, எரித்தாலொத்த - சேர்ந்து ப்ரகாசித்தாற் போலே இருக்கும், (அல்லது அவர்களை உருக்கி வார்த்தப்ரகாரமோ என்னும்படி), நீள் முடி - (ஸர்வஜகதீச்வரனாயிருக்கும் பெருமையைக் காட்டும்படி) நீண்ட கிரீடம்.

[28]3. 1. 1. உனது முகச்சோதி - உன்னுடைய முகத்தின் ஒளியானது, முடிச்சோதியாய் - கிரீடத்தின் தேஜஸ்ஸாக் மலர்ந்ததுவோ-மேலே கிளம்பிற்றோ?

[29]வதநாரவிந்த - முகமாகிற தாமரையின், மகரந்தரஸ-தேனை, ஆஸ்வாதத்திற்காக - புஜிக்கும்பொருட்டு.

திருக்குழல் கற்றைகள் - அழகிய சுருண்ட தலைமயிர்.

[30]7. 7. 9. கோள்கின்ற - (ப்ரளயகாலத்தில் லோகத்தையெல்லாம் வ்யாபிக்கிற, கோள் - தன்மையையுடைய, இருளை சுகிர்ந்திட்ட - பன்னி (அஸாரமான அம்சமெல்லாம் போம்படி அதைக் கழித்து), கொழும் சுருளின் - அழகியசுருளின், உள்கொண்ட - உள்ளேயிருக்கும், நீல - வயிரமாய் நீலமான நிறத்தையுடைத்தாய், நல் - நன்றாயிருந்துள்ள, நூல் தழை கோல் - நூல் திரளோ? அன்று; மாயன் குழல் - ஆச்சர்யபூதனான பகவானு

அத்திருக்குழல்சேர்த்தியாலே ஒரு மாஸம் இருளோடே சேர்ந்த அஷ்டமீ-சந்த்ரனை அநுகரிக்கிற திருநெற்றியை அநுபவித்து, [31]"நாள் மன்னு வெண்திங்கள் கொல்? நயந்தார்கட்கு நச்சிலை கொல்?" என்பது;

அத்திருநெற்றியில் [32]அழகுக்குக் கீற்றெடுக்கலாம்படியிருக்கிற திருப்புருவங்களை அநுபவித்து, [33]"இன்னு

டைய திருக்குழல். (பருத்தியை பன்னி எடுத்து, பட்டை போட்டு, பட்டையின் மேல்புறத்திலிருக்கும் பஞ்சு அழுக்கும் அஸாரமுமாயிருக்கலாமாதலால், பட்டையின் உட்புறத்திலிருந்து நூல்வரும்படி நூற்ருல், அந்த நூல் எவ்வளவு வெளுப்பாகவும் மெல்லியதாயும் இருக்குமோ, அதுபோல் இருட்டைப் பஞ்சுஸ்தானத்தில் வைத்து அதிலிருந்து நூற்ற நூல் மாதிரி இருக்கலாமோ என்ருல் ஸர்வேச்வரனுடைய திருக்குழல்களின் அழகுக்கு அதுவும் நேர் நில்லாது. நேருக்கு நேர் த்ருஷ்டாந்தமாக ஒரு வஸ்து இல்லாததுமட்டுமல்ல. இவ்வளவு சிக்ஷித்தாலும் ஒன்றும் உபமானமாகப் போதாது என்கிருர்.)

[31] 7. 7. 7. நாள்-(பூர்வபக்ஷத்து அஷ்டமியான) நாளில், மன்னு-ஸ்திரமாக இருந்து, வெண் - (களங்கம் தெரியாதாகையால்) வெளுத்திருக்கும், திங்கள் கோல் - சந்திரனே? (அல்லது) நயந்தார்கட்கு - தன்னை ஆசைப்பட்டார்க்கு, நச்சிலை கோல் - விஷப்பூண்டாயிருப்பதோ? (விரும்பவேண்டாதிருக்கிறதோ)

[32] அழகுக்குக்கீற்றெடுத்தல்-பொன்னின் மாற்றறிவதற்காக உறைப்பது போல் உறைத்துப் பார்த்தல்.

[33] 7. 7. 4. இன்=இனியதான, உயிர்க்கு - ப்ராணனை (அபஹரிக்கைக்காக), ஏழையர்மேல் - (பரமபுருஷனைக் காண ஆசைப்படும்) பெண்கள் மேலே, வளையும் - (தானே) வளைந்து (துன்புறுத்தும்), இணை நீலவிற் கோல் - நீலமான இரண்டு வில்லோ? (அங்ஙனன்றியே), மன்னிய - (சரீரத்தோடு) கூடியவனாய், சீர் - (அழகு முதலான) குணங்களையுடையனான, மதனன் - மன்மதனுடைய, கருப்புச் சிலை கோல் - கரும்புவில்தானே.

யிர்க்கு ஏழையர் மேல் வளையும் இணைநீலவிற்கொல்? மன்னிய சீர்மதனன் கருப்புச் சிலை கொல் ?" என்பது; 34"ஸர்வஸ்யேஶ்வரோऽஹம்" என்று இருப்பாரைத் தோற்பித்து 35"நமஸ்தே" என்று திருவடிகளிலே விழப்பண்ணும் 36"கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய கண்களைக் கண்டு, 37"ஏழையர் ஆவி யுண்ணும் இணைக் கூற்றங்கொலோ? அறியேன்; ஆழியங் கண்ணபிரான் திருக்கண்கள்கொலோ" என்பது;

38ஶ்ருதிஸரஸி நிஶ்வாஸமான திவ்யநாஸாவம்ஶத்தைப் பார்த்து, 39"மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ ? கொழுந்தோ ?" என்பது;

34கீதை - 16. 14. அஹம் - நான், ஈஶ்வர: - ஸ்வதந்த்ரன்.

35ஜிதந்தே 1. 1. (ஏ புண்டரீகாக்ஷ) நமஸ்தே - (உன் கண்ணழுக்குத் தோற்று) உன்னை நமஸ்கரிக்கிறேன்.

36அமல 8. கரியவாகி - கறுத்து, புடைபரந்து - பரவி விசாலமாய் மிளிர்ந்து - சலித்து, செவ்வரி ஓடி - செவ்வரிபடர்ந்து, நீண்ட - (காதளவும்) நீண்ட, அ - அப்படிப்பட்ட, பெரியவாய - பெரியனவான, கண்கள்.

37 7: 7. 1. ஏழையர் - (சபலைகளான) பெண்களுடைய, ஆவி - ப்ராணனை, உண்ணும் - அபஹரிக்கும், இணை - ஒன்றுக்கொன்று சேர்த்தியான) இரண்டு, கூற்றம்கோலோ - ம்ருத்யுவோ, அறியேன் - (அங்ஙனன்றியே), ஆழி - கடல்போல் ச்ரமஹரமானதும், அம் - அழகியதுமான (வடிவையுடைய), கண்ணபிரான் - உபகாரகனை ஸ்ரீ க்ருஷ்ணனுடைய, திருக்கண்கள் கோலோ - கண்கள்தானோ ? அறியேன்.

38சுருதி-வேதங்கள், ஸரஸி - கமழும், நிஶ்வாஸமான - மூச்சுக் காற்றையுடைய, நாஸாவம்ஶம் - அழகிய மூக்கை.
(யஸ்ய நிஶ்வஸிதம் வேதா:)

39 7. 7. 2. மாடு - (கடல்போன்ற கண்களுக்கு) ஸமீபத்திலே, உயர் - (அதையே ஊற்றாகக் கொண்டு) ஓங்கி வளர்ந்த, கற்பகத்தின் வல்லியோ - கற்பகத்தின் கொடியோ; கொழுந்தோ - (எப்போதும் பசுமை மாறாமையாலே) கொழுந்தோ ?

நாச்சிமாருக்கு [40]லீலாமணிதர்ப்பணங்கள்போலேயிருக்கிற திவ்யகபோலங்களைப் பார்த்து, ‘வர்ணிக்கைக்கு நிலமன்று’ என்று, [41]“கண்கள் சிவந்து பெரியவாய், வாயும் சிவந்து கனிந்து, உள்ளே வெண்பல் இலகு சுடர் இலகுவிலகுமகரகுண்டலத்தன்” என்று சுற்றடிக் கொள்வது;

[42]‘செம்பவளத்திரள்’போலே இருக்கிற திவ்யாதரபல்லவத்தைப் பார்த்து, [43]“வாலியதோர் கனிகொல் ? வினையாட்டியேன் வல்வினை கொல் ? கோலம் திரள் பவளக்

40 லீலா - விளையாட்டுக்கான, மணிதர்ப்பணங்கள் - ரத்னமயமான கண்ணாடிகள்.

41 8. 8. 1. கண்கள் சிவந்து பெரியவாய் - விசாலமாய், (அப்படியே) வாயும் சிவந்த - திருவதரங்களும் சிவந்து, கனிந்து - பழுத்து, உள்ளே - உட்புறத்தில், வெண் - வெளுத்த, பல் - பற்களினுடைய, இலகு - விளங்குகிற, சுடர் - ஒளியையும், இலகு - அத்யுஜ்ஜ்வலமாய், விலகு, - அசைந்துகொண்டிருக்கிற, மகரகுண்டலத்தன் - மகர குண்டலங்களையுடையவன்.
சுற்றடிக்கொள்வது - கன்னங்களை நேரில் வர்ணிக்கமுடியாததால், அதைவிட்டு, கண், உதடுகள், பல், காது முதலான சுற்றிலுமுள்ளவற்றை வர்ணிப்பது.

42 3. 5. 4. செம்பவள - சிவந்த பவளத்தின், திரள் - ஸமூஹம் போலே.

43 7, 7. 3. வாலியது - ஸ்திரமாய் (அதாவது பிஞ்சாகி பழுத்து அழுகிப்போதல் முதலான நிலைகளில்லாமல் எப்போதும் ஏகரூபமாய் பக்வமாய்), ஓர் - ஒப்பற்ற - கனிகொல் - பழமோ? வினையாட்டியேன் - (இதை இப்போதே அநுபவிக்கப்பெறாத) பாபத்தையுடையளான என்னுடைய, வல்வினைகோல் - கழிக்க அரிய பாபமோ ? கோலம்திரள் - அழகு திரண்டிருந்துள்ள, பவள - பவளத்தினுடைய, கொழுந்துண்டம்- இளமை பொருந்திய துண்டமோ ?

கொழுந்துண்டம் கொலோ?'' [44]“கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ ? திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ ? '' என்பது;

[45]ஸஸ்மிதாநநனைக் கொண்டு தோற்றின [46]‘தூமுறுவல் தொண்டைவாய்ப் பிரா’னுடைய தூமுறுவலைப் பார்த்து, [47]“என்று நின்றே திகழும் செய்ய வீன் சுடர் வெண் மின்னுக்கொல் ? அன்றி என்னுவி அடும் அணிமுத்தம் கோலோ ?'' என்பது;

காந்திக்கு ஸீமாபூமிகள் போலே இருக்கிற திவ்ய கர்ணபாசங்களைப் பார்த்து, [48]“மகரம் தழைக்கும் தளிர் கொல் ?'' என்பது;

---

[44]நா. தி. 7. 1. திரு - அழகிய, பவளம் - பவளம்போன்று, சேம் - சிவந்த, வாய்தான் - திருவதரமானது, கருப்பூரம் - பச்சைக் கற்பூரம்போல், நாறுமோ - பரிமளிக்குமோ ? கமலப்பூ - செந் தாமரை மலர்போலே, நாறுமோ - பரிமளிக்குமோ ? (அல்லது) தித்தித்திருக்குமோ - இனிதாயிருக்குமோ.

[45]புன்சிரிப்பு தவழும் முகத்தினனாய்
(தாஶரதிர் மஹாபாஹு: ஶ்யாம: ஸஸ்மிதாநநவாந் வாக்மீ:)

[46] 5. 3. 8. தூ - வெண்மையான, முறுவல் - தந்த பங்க்தியை யும், தொண்டைவாய் - தொண்டைக் கனிபோல் சிவந்த அத ரத்தையுமுடையனை, பிரான் - பரமோபகாரகனை (பெருமாள்)

[47] 7. 7. 5. என்றும் - எப்போதும், நின்றே - ஒரேமாதிரியாக நின்று, திகழும் - ப்ரகாசிப்பதாய், செய்யசுடர் - சிவப்பான சுடரை, ஈன் - வெளிவிட்டுக்கொண்டிருக்கிற, வெண்மின்னுக் கோல் - வெளுப்பான மின்னலோ ? அன்றி - அன்றிக்கே, என்னுவி - என் உயிரை, அடும் - ஹிம்ஸிக்கும், அணி - அழ கான, முத்தம்கோலோ - (முத்துப்போன்ற) பற்கள் தானோ ? கர்ணபாசங்கள் - அழகிய காதுகள்.

[48] 7. 7. 6. மகரம் - மகரகுண்டலம், தழைக்கும் - தளிர்க்கிற, தளிர்கோல் - துளிர்தானோ ?

[49]‘சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதிபரந்த’ ஸம்பூர்ண சந்த்ரனும் ‘நேரொவ்வா’ன் என்னும்படியான திருமுகத்தில் அழகைத் திரள அநுபவித்து, [50]“கோளிழைத்தாமரையும் கொடியும் பவளமும் வில்லும் கோளிழைத்தண்முத்தமும் தளிரும் குளிர்வான் பிறையும் கோளிழையாவுடைய கொழுஞ்சோதி வட்டம் கொல் ?” என்பது;

[51]“குருஷ்வ மாமநுசரம்” என்றிருப்பாரைக்கூவிக்கொள்ளும்போது, [52]‘ஸ்நிக்த கம்பீர மதுர’ நாதமாய், நாச்சிமாருடைய வளைத்தழும்போடு வாசியில்லாத ரேகாத்ரயத்

---

[49]பெரி. தி. 1. 4. 3. ஒளிவட்டம் - ஒளியையுடைய மண்டலம், சுற்றும் சூழ்ந்து - பரிபூர்ணமாக ஆகி, சோதிபரந்த - களங்கமில்லாததால் தேஜஸ்ஸாலே வ்யாப்தமாய் இருக்கிற.

[50]7. 7. 8. கோள் - தன் ஒளியை, இழை - தனக்கு ஆபரணமாக உடைய, தாமரையும், கொடியும் - கற்பகக் கொடியும், பவளமும் வில்லும், கோள் - தன் அழகை, இழை - ஆபரணமாக உடைய, தண்முத்தமும் - குளிர்ந்த முத்தமும், தளிரும், குளிர்- சீதளமாய், வான்- சிறந்த, பிறையும் - பிறைச் சந்திரனும், இவற்றையெல்லாம் உடையதாய்), கோள் இழையாவுடைய - தன் ஒளியே தனக்கு ஆபரணமாகவுடைய, கொழும் - பூர்ணமான சோதிவட்டம்கோல் - ஜ்யோதிர்மண்டலமோ ? (இங்கு ‘தாமரை’ என்று திருக்கண்களும், ‘கொடி’ என்று மூக்கும், பவளம்’ என்று அதரமும், ‘வில்’ என்று புருவங்களும், ‘முத்தம்’ என்று பற்களும், ‘தளிர்’ என்று காதுகளும், ‘வான்பிறை’ என்று திருநெற்றியும் கூறப்படுகின்றன.)

[51]ரா. அ. 31. 22. என்னைத்தொடர்ந்து செல்லும் தாஸனுகச் செய்து கொள்ளும்.

[52]வைகுண்டகத்யம். ஸ்நிக்த - அன்பும், கம்பீர - பெருமையும், மதுர - இனிமையும் உடைய, நாதமாய் - சப்தத்தை உடைய.

தை உடைத்தாய், திருமேனி ஒளியாலே பசுத்த ஸ்ரீ பாஞ்சஜந்யம்போலே இருக்கிற திருக்கழுத்தைப் பார்த்து, [53]"முற்றும்உண்ட கண்டம் கண்டீர் அடியேனை உய்யக் கொண்டது" என்பது;

வதாவிஷயவாஷாயங்களையும் வழங்குமளவன்றிக்கே, ஏதேனும் ஒரு கிஞ்சித்காரம் பண்ணினுருக்கு [54]'ஸர்வஸ்வபூத'மான மாஸவரிஷ்ஜத்தைக் கொடுக்கக் கடவவான திருத்தோள்களைப் பார்த்து, [55]"கற்பகக் காவன நற்பல'தோள்'கள் என்பது;

ஜாதகபரிஜாதமஹாஹாரமாய், கௌஸ்துப - ஸ்ரீவத்ஸ - கௌஸ்துப - வநமாலாவிராஜிதமாய், [56]'அலர்மேல்மங்கை இறையும் அகலகில்லேன்' என்று உறையும்படி ஸுதஜ்ஞ ஹோமமான திருமார்பை அநுபவித்து, [57]"ஆரமார் பதன்றே அடியேனை ஆட்கொண்டது!" என்பது;

---

[53]அமல. 6. முற்றும்-(அண்டத்திற்கு உள்ளும் புறம்புமுள்ள) எல்லாவற்றையும், உண்ட - அமுது செய்த, கண்டம் கண்டீர் - திருக்கழுத்தன்றே, அடியேனை உய்யக்கோண்டது-அடியேனை ஸம்ஸாரத்தில் அகப்படாதபடி செய்தது.

[54]ஸர்வஸ்வபூதமான - ஸர்வஸொத்தாயிருக்கும்படியான (ஆலிங்கனம்)

ஸாஷ ஸவஸ்வபூதோ மெ பரிஷ்ஜொ ஹநூமத: (ரா. யு. 1. 13),

[55]6. 6. 6. கற்பகக்கா அண - கற்பகச் சோலைபோலேயாய், நல்- அதிலும் நல்லதாய், பல - பலவான, தோள்கள்.

[56]6. 10. 10. அலர்மேல் மங்கை - தாமரைப்பூவின் மேல் நித்ய வாஸம்பண்ணும், லக்ஷ்மி, இறையும் - க்ஷணம்கூட, அகலகில்லேன் - (உம்மைவிட்டுப்) பிரிந்திருக்க ஸஹிக்கமாட்டேன், (என்று சொல்லிக்கொண்டு எழுந்தருளியிருக்கும்.)

[57]அமல. 6. ஆரமார்பதன்றே - முக்தாஹாரத்தை உடைத்தான மார்பன்றே, அடியேனை ஆட்கோண்டது - என்னை அடிமை கொண்டது.

ப்ரளயாபத்துக்கள் வந்தால் ப்ரபஞ்சத்தையெல்லாம் உள்ளே வைத்து ரக்ஷிக்கும்படியான திருவுதரத்தைப் பார்த்து, [58]"காரேழ் கடலேழ் மலையேழ் உலகுண்டும் ஆராவயிற்றான்" என்பது;

[59]'மரதகக் குன்ற'மொத்த திருமேனியிலே மாணிக்க வொளி சூழ்ந்தாற்போலே பொருந்தின [60]'பொன்னொத்த ஆடையை'ப் பார்த்து, [61]"படிச்சோதி ஆடையொடும் பல்கலனாய் நின் பைம்பொன் கடிச் சோதி கலந்ததுவோ?" என்பது;

[62]ஜநபதவீ ஜங்காலரை முன் ஓடிவந்து விலக்கக் கடவனவான ஜங்காகாண்டங்களைக் கண்டு, [63]கந்தர்ப்ப

58 10. 8. 2. கார் ஏழ் - (புஷ்கலாவர்த்தகாதிகளான) ஏழு மேகங்களையும், கடல் ஏழ் - ஏழு ஸமுத்ரங்களையும், மலை ஏழ் - ஏழு குலபர்வதங்களையும் உடைத்தான, உலகு உண்டும் - லோகத்தையெல்லாம் அமுது செய்தும், ஆராவயிற்றான் - நிறையாத வயிற்றையுடையவனை.

59 2. 5. 4. 60பெரு. தி. 6. 5. பொன்னொத்த ஆடை - பீதாம்பரம்

61 3. 1. 1. பை - பரந்த, பொன் - அழகையுடைய, நின் - உன், கடி - திருவரையின், சோதி - சோதியானது, படி - ஸ்வாபாவிகமான, சோதி - ஒளியையுடைய, ஆடையொடும் - திருப்பீதாம்பரத்தோடே, பல்கலனாய் - பல திவ்யாபரணங்களுமாய், கலந்ததுவோ - கலந்ததோ ?

62ஜநபதவீ-ஸம்ஸாரத்தில், ஜங்காலரான-ஸஞ்சரிப்பதில் தேர்ச்சி பெற்றவர்களான. ஜங்காகாண்டம் - அழகியகணுக் கால்கள்.

63கந்தர்ப்பகாஹளை - மன்மதனுடைய எக்காளம் என்னும் ஊதும் வாத்யம்; களாசீ-காளாஞ்சி என்னும் அடிசிறுத்து, வாயகன்றதான பாத்திரம்; தூணீரம் - அம்புறுத் தூணி; மாத்ருகை - மாதிரி.

கா ஹஉ - கஹாவி தஹணீ ரஊ தூமெக என்னலாம்படி [64]"கணைக்காலிருந்தவா" என்பது;

வேதங்களுக்கெல்லாம் [65]மேல்சாத்தாய், ஸர்வாத்மாக்களுக்கும் [66]ஸாமாந்யதைவதமான [67]பொதுநின்ற பொன்னங்கழல்களைப் *பார்த்து, [68]"ஒருகாலில் சங்கு, ஒருகாலில் சக்கரம்," [69]"பத்துவிரலும் மணிவண்ணன் பாதங்கள் ஒத்திட்டிருந்தவா" என்பது;

திருவடிகளுக்கும் ஆதாரபத்மத்திற்கும் உண்டான சேர்த்தியைப் பார்த்து, [70]"அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ ?" என்பது;

*பார்த்து ஒரு காலில் சக்கரம் பத்துவிரலும்—க.

[64]பெரி தி. 1. 2. 3. கணைக்காலிருந்தவா - கணைக்காலின் அழகு இருந்தபடியென் ?

[65]மேல்சாத்து - மேலே அணியும் ஆபரணம் அல்லது வஸ்த்ரம்.

[66]ஸாமாந்யதைவதம் - பொதுவான தைவம். (ஜிதந்தே 1. தெவாநாம் தாநவாநாம் ச ஸாமாநூமிதெவதம்

[67] 3 அ. 88. பொதுநின்ற - (எல்லோருக்கும் ஆச்ரயிக்க) பொதுவாயிருக்கிற, பொன் அம் கழல் - பொன்போல் அழகிய திருவடிகளை.

[68]பெரி. தி. 1. 7. 6. ஒரு காலில் - ஒரு காலில், சங்கு, - சங்கு வடிவமானதும், ஒரு காலில் - மற்றொரு காலில், சக்கரம் - சக்கரவடிவமானதுமான (ரேகைகளையுடைய)

[69]பெரி. தி. 1. 2. 2. மணிவண்ணன் - நீலரத்னம்போன்ற வடிவை உடையவனுடைய, பாதங்கள் - திருவடிகளில், பத்து விரலும் - பத்துவிரல்களும், ஒத்திட்டிருந்தவா - அநுரூபமாய் இருக்கின்ற அழகு.

ஆதாரபத்மம் - திருவடிகளுக்கு அடியில் ஆதாரமாகவிருக்கும் தாமரைப் பூ.

[70] 3. 1. 1. அடிச்சோதி - திருவடிகளின் தேஜஸ்ஸானது, நீ நின்ற தாமரையாய் — நீ நின்ற ஆஸநபத்மமாய், அலர்ந்ததுவோ - மலர்ந்ததோ ?

இப்படி வராஹராஹணங்களான திவ்யாவயவங்களைப் பேசத்தொடங்கி, [71]"கருமாணிக்கமலைமேல் மணித்தடம் தாமரைக் காடுகள் போல் திருமார்வு வாய் கண் கை உந்தி கால் உடையாடைகள் செய்ய பிரான்" என்பது;

நீலஜீமூதநிபமான திருமேனியிலே நிலைமின்கள்போலே விளங்குகிற ஜம்பூநதநிர்மித ஸூத்ரங்களாகிற திவ்யாபரணங்களைப் பார்த்து,

[72]"அந்தாமத்து அன்புசெய்து என்னாவிசேர் அம்மானுக்கு அந்தாம வாள் முடி சங்கு ஆழி நூல் ஆரமுள" என்பது;

அஞ்ஜநகிரியை அணைந்த சந்த்ராதித்யர்கள் போலே வராஹ - வராஹமத்தை யுடையரான திருக்கையில்

---

